# தமிழரசு

திங்கள் இருமுறை 1972 மே 1, 35 காசு





# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்





செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசிய மானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**

P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.


மலர் : 2.
இதழ் : 21.
1-5-1972
தமிழரசு
தஞ்சை
மாவட்டச்
செய்தித்
தொகுப்பு



# தொழிலாளர் திருநாள்

வான்தழுவும் கோபுரங்கள் விதானம் கட்டி
வளநாட்டில் கல்லணையால் நீரைத் தேக்கி,
மேன்மையுறக் கட்டடநற் கலையைக் கற்போர்
வியந்தாயும் வகையினிலே நாட்டி யுள்ளார் !
கான்பிறந்த சந்தனமும் அகிலும தேக்கும
கடல்பிறந்த பவழமுத்தும உலகின் செல்வம் ;
தேன்தமிழ நாடடகத்தே அமைதி பேணிச்
சிரிலங்கத் தொழில்வளர்ந்த நாளே அந்நாள் !

நெய்வேலி நிலக்கரியும் சேலம் தன்னில்
நிறையிரும்பும் மாங்கனிசு பாக்சைட மற்றும்
துய்யதூத்துக் குடியுப்பும் நிலத்தாய்ச் சூலில்
தொகுத்தபல கனிப்பொருள்கள் வைத்துக்கொண்டு
" செய்திடுவீர் பலதொழில்கள், மேனி எங்கும்
சிரிக்கின்ற புதுப்புதுவாம் நகைகள் போலப்
பெய்துகடும் உழைபபாலே ஆலை வைப்பீர் ! "
பேசாமல் ஊக்குகிறாள் அன்னை இந்நாள் !

பெரம்பூரின் தொடர்வண்டிப பெட்டிச் சாலை,
பெருங்கிண்டித் ' தொலையச்சு ' முதலாம் கூடம்
வரம்பின்றி வளர்திறத்துப் பஞ்சின் ஆலை,
வனப்பான செயற்கைவைரச் சாலை மற்றும
கரும்பினிய சர்க்கரையின் ஆலை யோடு
ககனத்தில் விண்சாடி வாகை சூடும்
பெரும்பெரிய தொழில் வளர்ப்போம் , தமிழ்த்தாய் நன்கு
பிறங்கிமிக எழில்வளர்க்கும் திருநாள் காண்போம் !

சீமையெலாம் தொழில்மயமாய்த் தேன்கூட் டுள்ளே
செயலாற்றும் ஈக்களைப்போல் உழைப்பே மூச்சாய்த்
தீமையின்றிச் செல்வத்தைக் குவிப்பார் என்ற
சேதியினால் சிந்தையெலாம் குளிர்வோம் அன்றோ?
ஊமைகள்போல் அவர்அடங்கிக் கிடக்க வில்லை ;
உழைப்பதற்கு நாட்டிலுள்ளோர் தொகைதான் சொற்பம் ;
ஆமைகளின் நேர்மாறாய் உழைப்பார் ஆங்கே
அதனாலே ஊதியம்தான் அதிகம் சேர்ப்பார் !

நாடடினிலே ஆள்கிடைக்க வில்லை என்று
நாடுகின்ற வகையினிலே தொழில்கள் எங்கும்
நாட்டிடுவோம் ; தொழிலின்றிப் பாதிக் கூலி
நயந்தேற்றே உழைப்பதற்கும் உள்ளோம் என்ற
வாட்டுகின்ற நிலைபோக்க மக்கள் வெள்ளம்
வரம்பின்றிப் பெருகுவதைத் தடுப்போம் ; பின்னர்
பாட்டாளி நிலையுயரும , அந்நாள் மெய்யாய்ப்
பணிசிறந்த தொழிலாளர் திருநாள் அன்றோ !

மனசை ப. கீரன்



# வளர்ச்சிப் பணிக்கு உதவும் மாநிலத் திட்டக் குழு

மாவட்ட அளவில் அமைக்கப்படவிருக்கும் திட்டக் குழுப் பயிற்சியின் தொடக்க நாளான இந்த நாள், தமிழக அரசினுடைய பல்வேறு சாதனைக் கட்டங்களில் மிக முக்கியமான ஒரு நாளாகும்.

இந்தியப் பெருநாட்டில், முதன் முதலில் தமிழ்நாட்டிலேதான் திட்டக்குழு மாநில அளவிலே தொடங்கப் பட்டது. இந்த வகையில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தது தமிழகம்தான்.

திட்டக் குழுவை முதன் முதலில் தொடங்கினோம் என்கின்ற மகிழ்வோடு நின்று விடாமல், எப்படிப்பட்ட சிரமங்களையெல்லாம் ஏற்று நிறைவேற்றி முடித்தோம் என்கின்ற நிம்மதிதான் எனக்குப் பெரிதும் மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது.

இந்த நாட்டில், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. பின்னர் ஓராண்டுத் திட்டங்கள் என்றாகி, இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவுறும் கட்டத்தில் இருக்கிறோம்.

திட்டங்கள் பல இப்படி நிறைவேற்றப் பட்டன என்றாலும், அவைகள் எதிர்பார்த்த பலனை நமக்கு அளித்திடவில்லை.

அந்தத் திட்டங்களைப் போட்டவர்களே உணர்ந்து சொன்ன உண்மை இது. திட்டங்களின் அடிப்படை சரியில்லாத காரணத்தால் உண்டான குறைபாடே இது.

அதையெல்லாம் உணர்ந்துதான், நாம் மாநிலத்திட்டக் குழு அமைத்தோம். அதனை நன்கு ஆராய்ந்த பின்னர்—இந்தக் குழு மாவட்ட அளவிலும் நடைபெற வேண்டுமென்று விரும்பினோம்.

ஒவ்வொரு மாவட்டத்தின் தொழில் வளம், பொருளாதார வளம், கிராமங்களின் முன்னேற்றம் அல்லது பிற்போக்கு இவைகளையெல்லாம் அறிந்து கொள்ள வேண்டிய இன்றியமையாமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

சில திட்டங்கள் தேவை என்பதை மக்கள் விரும்புகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், அணைக்கட்டு தேவை என்று கூறும் ஒரு பகுதியில் 500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். அல்லது ஏற்கெனவே ஒரு 500 ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் நிலை பெறும். ஆகவே, இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொல்லக் கூடிய நேரத்தில் அதிகாரிகள் கலந்து அங்கே அத்திட்டத்தை நிறைவேற்ற மதிப்பீடு என்ன என்பதைப் பார்த்து, அதற்குப் பிறகு—அதனால் பயன் பெறும் நிலங்களின் அளவையும் எடுத்துப் பார்த்து இந்தப் பகுதியில் செலவுக்கேற்ற வருமானம் வராது என்று கைவிடப்பட்ட திட்டங்கள் ஏராளம்.

இவற்றையெல்லாம் நாம் யோசிக்க வேண்டும்.

செலவுக் கேற்ற வருமானத்தை அளிக்காத காரணத்திற்காக ஒரு 500 ஏக்கர் பாசன வசதியைத் தருவதற்கு மறுத்து விடுகிறோம். அதற்கு ஒப்புதல் வழங்க அரசு மறுத்து விடுவதன் மூலம்—பாசன வசதி அளிப்பதை மட்டும் நாம் கைவிடவில்லை. அந்த 500 ஏக்கரை நம்பி வாழும் மக்களையும் கைவிட்டு விடுகிறோம் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

அப்படியொரு நிலை வரும் போது அந்த வருவாயை மற்ற வழிகளிலே சரிக்கட்ட முடியுமா என்பதையும் நாம் ஆராய வேண்டும்.

இந்த மாவட்டத் திட்டக் குழுவின் பணி மகத்தானதாக இருக்க வேண்டும். அந்தந்த மாவட்ட முன்னேற்றத்திற்குத் தகுந்த பல திட்டங்களைத் தீட்டவும், அவை செயல்படுத்தப்படவும் வேண்டும்.

மற்ற நாடுகளோடு பொருளாதாரத் துறையிலும் ஏனைய துறைகளிலும் போட்டி போடுகிற அளவில் தமிழகம் முன்னேறும் வகையில் இந்தத் திட்டக் குழுவினரின் பணி அமைய வேண்டும்.

உலகநாடுகளின்கவனமே கூடத் தமிழகத்தின் பக்கம் திரும்புகிற அளவில், இன்று பயிற்சி தொடங்கும் இந்த மாவட்டத் திட்டக்குழுப் பயிற்சியாளரின் தொண்டு சிறந்திட வாழ்த்துகிறேன்.

(15-4-1972 அன்று மாவட்டங்களில் உள்ள திட்ட அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கும் வகுப்பினைத் தொடங்கிவைத்துத் தமிழக முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை)

**முதல்வர் டாக்டர் கலைஞர்**

இந்த மானியத்தின் மீது பேசிய உறுப்பினர்கள் அனைவரும் அரசின் நடவடிக்கைகளைப் பெரும்பாலும் ஆதரித்துப் பேசியதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஆனால், வழக்கம் போல் நமது அனந்த நாயகி அம்மையார் அவர்கள் சில விவரங்களைத் தெரிந்து கொள்ளாமல் - தெரிந்து கொள்ள வேண்டிய முயற்சி எடுக்காமல் ஸ்டாண்டர்டு கம்பெனியைப் பற்றி இங்கே சொன்னார்கள். அந்த விவரத்தை உங்களிடத்தில் எடுத்துச் சொல்வதாக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பழனிச்சாமி அவர்கள் கூட 600 தொழிலாளர்கள் வேலையின்றி வெளியில் இருப்பதாகச்சொன்னார்கள்.

# தொழிலாளர் நலமும் [illegible] அரசு



ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி மூடப்பட்டபோது அதைப் பற்றிக் காங்கிரஸ் கட்சி கவலைப்படவில்லை. கவலை எடுத்துக் கொண்டது கழக அரசும், முதல்வர் அவர்களும் தான். பெரு முயற்சி எடுத்துக்கொண்டு வேலை வாய்ப்புத் தரும்படியான நிலைமை ஏற்பட்டது. அதிலே வேலையிழந்த மொத்தத் தொழிலாளர்கள் 1,532 பேர். இதுவரை வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டவர்கள் 1,419 பேர். இன்னும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள் 42 பேர். இதுதான் இப்போதுள்ள நிலைமை. அதுமட்டுமல்ல; தொழிற் சங்கத்தைச் சேர்ந்த நிருவாகிகளான சேதுராமனை வேலைக்கு அமர்த்தியாகிவிட்டது. மற்ற இரண்டு நிருவாகிகளான சுப்பிரமணியம், வைத்தியலிங்கம் ஆகிய இரண்டு பேரையும் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள்.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், மற்றும் சில உறுப்பினர்களும், கழகத் தொழிற்சங்கத்தின் மூலமாக அரசாங்கத்திற்கு உதவி என்றும், அரசாங்கத்தின் மூலமாகக் கழகத் தொழிற்சங்கத்தை வலுப்படுத்தி வருவதாகவும் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் நான் பணிவோடு சொல்லிக் கொள்வேன். பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனியில் ஐ.என்.டி.யு.சி. சங்கமும் தி.மு.க. பேரவைச் சங்கமும் இருக்கின்றன. இந்த இரண்டு சங்கங்களில் எது சரியான சங்கம், அதாவது முறையாக அங்கீகரிக்கப்பட வேண்டிய சங்கம் என்ற பிரச்சினை தீவிரமாக வளர்ந்தது.

திராவிட முன்னேற்றக் கழகச் சங்கமானாலும் சரி அல்லது ஐ.என்.டி.யு.சி. ஆனாலும் சரி ஒழுங்காகப் பரிசீலனை செய்து அனுமதி கொடுங்கள் என்று அதிகாரிகளிடம் சொன்னோம். ஐ.என்.டி.யு.சி.-க்கு அங்கீகாரம் தந்திருக்கிறது, முன்னேற்றக் கழகச் சங்கத்திற்குத் தரப்படவில்லை. இப்படிப் பல உதாரணங்களைச் சொல்லமுடியும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் தொழிற்சங்கத்தை வைத்துத் தான் கழகத்தை வளர்க்க வேண்டும் அல்லது கழக ஆட்சியை வளர்க்க வேண்டும் என்ற நிலையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அவ்வளவு பஞ்சத்தோடு எங்களை விட்டுச் செல்லவில்லை. அண்ணா அவர்களது தொழிற்சங்கக் கொள்கை, தொழிலாளர்கள் நமக்கு என்ன செய்கிறார்கள், கட்சிக்கு என்ன செய்கிறார்கள், என்று கேட்கக்கூடாது. தொழிலாளர்களுக்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதே நமது கொள்கையாயிருக்க வேண்டும் என்று கூறினார்கள். அதுதான் இன்றும் கழகத்துத் தொழிற்சங்கங்களின் கொள்கை. அந்தக் கொள்கையைத் தான் கழகமும், கழக அரசும் பின்பற்றி வருகிறது.

வேலை நிறுத்தங்களைப் பற்றி இங்குப் பேசிய உறுப்பினர்கள் சிலர் குறைப்பட்டுக் கொண்டார்கள். பல வேலை நிறுத்தங்களில் ஆரம்பத்திலேயே தலையிட்டு வேலை நிறுத்தங்கள் நடைபெறுவது தடுக்கப்பட்டிருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் 25,000 பேர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்வதாக நோட்டீஸ் கொடுத்திருந்தார்கள். தொழில் அதிபர்களையும், தொழிலாளர்களையும் வரவழைத்துக் கலந்து பேசி வேலை நிறுத்தத்தைத் தடுக்கும் வகையில் அவர்களுக்குச் சம்பள உயர்வு வாங்கித் தந்தோம். பல்வேறு வேலைநிறுத்தங்களை நாங்கள் ஆரம்பத்திலேயே தடுத்திருக்கிறோம்.

வேலை நிறுத்தங்கள் ஏராளமாக நடைபெற்றிருப்பதாகச் சொன்னார்கள். நான் அனந்த நாயகி அம்மையார் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்வேன். மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வேன். காங்கிரஸ் ஆட்சியில் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நம் மதிப்பிற்குரிய திரு காமராஜ் அவர்கள் கூடச் சொல்கிறார்கள். கழக ஆட்சியில் எங்குப் பார்த்தாலும் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகின்றன, ஆலைகளை எல்லாம் மூடுகிறார்கள் என்று சொல்கிறார். திரு காமராஜ் அவர்களுக்குத் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பதில் சொல்கிறார்; கேளுங்கள். 'சென்ற ஆண்டுக்கு இந்த ஆண்டு வேலை நிறுத்தங்கள் அதிகமாகப் போய்விட்டது என்று சர்க்கார் மீது குற்றம் சொல்லப்படுகிறது. என்னைப் பொறுத்த வரையில்

சொல்வேன், வேலை நிறுத்தங்கள் அதிகமாயிருக்கின்றன என்றால் அது தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளை அதிகமாகக் கேட்கிறார்கள் என்று தான் கொள்ள வேண்டுமே தவிர, சர்க்கார் மீது எப்படிக் குற்றமாகும்?' என்று சொல்லியிருக்கிறார்கள். இது 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் 21-ஆம் தேதி இங்குச் சட்டமன்றத்தில் பேசியதாகும். அப்படி அன்று மதிப்பிற்குரிய ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சொல்லியிருக்கும்போது, இன்றைய தினம் இங்குள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் வேலைநிறுத்தங்கள் அதிகமாகியிருக்கின்றன, இது அநீதி அல்லவா என்று கேட்கிறார்கள்.

அது நிச்சயமாக அரசின் தவறு அல்ல, யாருடைய தவறு என்பதை அம்மையார் அவர்கள் உணர்ந்திருப்பார்கள். அனுபவத்தின் மூலம் பெறும் பாடத்தைப் போல் வேறு எந்தப் பாடமும் துணை செய்யாது அவர்களுக்கு.

''கன்சிலியேஷனுக்கு அனுப்பிவிட்டோம். அதோடு எங்கள் கடமை தீர்ந்தது. அதற்குமேல் அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை'' என்று அந்த நாளில் கையை விரித்து விட்டார்கள். நாங்கள் கடைசிவரையில் ஈடுபட்டு வேலை நிறுத்தத்தைத் தடுப்பது என்று மட்டுமல்லாமல் தொழிலாளர்களுக்கு உரிமைகளையும் தேடித் தந்திருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சியில் இவ்வாறு அமைச்சர்களே சொல்லியிருந்தாலும், 'இவற்றையெல்லாம் அவர்கள் சொன்னார்கள்; அதனால் நாங்கள் இப்படிச் செய்கிறோம்' என்பது அல்ல. அந்தக் கொள்கையை மாற்றி இன்றையத்தினம் இந்த அரசு தொழிலாளர்களுக்கு எந்த அளவிற்கு நன்மைகள் செய்ய முடியுமோ அதைச் செய்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் பழனிச்சாமி அவர்கள் கேட்டார்கள், 'இந்த அரசு முதலாளிகள் பக்கம் இருக்கிறதா, தொழிலாளர்கள் பக்கம் இருக்கிறதா' என்று! பண்பட்ட ஒரு தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர், அதிலும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர், நாங்கள் எந்தப் பக்கம் என்பதை இன்னும் புரிந்து கொள்ளாமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவருக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நாங்கள் என்றென்றும் தொழிலாளர்கள் பக்கம் தான் இருப்போம் என்ற உறுதியை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, சந்தேகத்தை விட்டு விட்டுச் சர்க்காரோடு ஒத்துழைத்துத் தொழிலாளர்களுக்கு உரிமைகளைத் தேடித் தருவதில் உறுப்பினர் அவர்கள் தக்க கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். வேஜ் போர்டு அமைக்கப்பட்டு ஆல் இந்தியா லெவலில் இவ்வளவு என்று சம்பளத்தை உயர்த்தியது. அதற்கு மேல் கொடுக்கக் கூடாது. இங்கு வந்திருந்த மத்திய அரசின் மதிப்பிற்குரிய தொழிலாளர் நல அமைச்சர் திரு கடில்கர் அவர்கள், ''எப்படி வேஜ் போர்டைவிட அதிகமாகச் சிபாரிசு செய்தீர்கள்?'' என்று வருத்தத்தோடு கேட்டார்கள். வேஜ் போர்டு 21 ரூபாய் என்று சம்பள உயர்வு தந்தது. அது தொழிலாளர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை என்றார்கள். நாங்கள் எவ்வளவோ காரணங்களை எடுத்துக் கூறினாலும் அவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஆகவே, மேற்கொண்டு பத்து ரூபாய் தரவேண்டுமென்று தொழில் நிருவாகிகளை வற்புறுத்திப் பத்து ரூபாயும் மற்றும் பல கோரிக்கைகளையும் பெற்றுத் தந்திருக்கிறோம்.

மேலும் அவர்களுக்கு இருந்த நீண்ட காலக் குறைகள், கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்றி இன்றையத் தினம் அந்தந்தத் தொழிலாளர்கள் மனநிறைவோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நெல்லிக்குப்பத்தில் விரைவில் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பக்கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆக, வேஜ்போர்டு தெரிவித்த தீர்ப்புக்கு அதிகமாக வாங்கித் தரும் அளவில் இந்த அரசு தன்னுடையகடைமையைச் செய்திருக்கிறது. இது முதலாளிகள் அரசா, தொழிலாளர்கள் அரசா என்பதை நீங்களே புரிந்து கொள்ளுங்கள்; நான் விளக்க வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் வேழவேந்தன் அவர்கள் இங்கே போனஸ் விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டு. கிராஜுயுடி ஸ்கீம் பற்றியும் எடுத்துச்சொன்னார்கள். மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள், ''நமது அரசே சட்டம் செய்யக் கூடாதா?'' என்றுகேட்டார்கள். இப்போதே நாங்கள் மாநில சுயாட்சி கேட்பதைப் பற்றி எங்களைப் பிரிவினைவாதிகள் என்று சொல்கிறார்கள். இப்போது அங்கே நாடாளு மன்றத்திலே அந்தச் சட்டம் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்று, விவாதத்திலே இருக்கிறது. இந்த நேரத்திலே போய் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால், கழகத்தையும் கழக அரசையும் வீணாகப் பிரிவினை வாதிகள் என்று தவறான பிரச்சாரம் செய்பவர்களுக்கு இடமளிப்பதாகும். அப்போது கே. டி. கே. போன்றவர்கள் யார் பக்கம் இருப்பார்கள் என்றும் சொல்ல முடியாது.




முதலமைச்சர் அவர்கள் இந்தப் போனஸ் பற்றிக் கூறிய கருத்தை மீண்டும் சொல்ல விரும்புகிறேன். $8\frac{1}{3}$ சதவீதம் தான் குறைந்தபட்ச போனசாக இருக்க வேண்டுமென்பது இந்த அரசின் கொள்கை. அது போலவே கிராஜுயுடி $\frac{1}{2}$ மாதம் என்று இருப்பதை மாற்றி 1 மாதமாக உயர்த்திட வேண்டும். இது தான் அரசின் கொள்கை. எப்படி

அந்தச் சட்டம் உருவாகிறது என்பதைப் பார்த்துப் பிறகு வேண்டுமானுல் அதுபற்றி விரிவாக விவாதிக்கலாம்.

தொழிற்சங்கத் தலைவர்களைக் கேட்டுக் கொள்வேன், கோஷங்களை அதிகமாகச் செய்வது, தொழிலாளர்களுக்கு அதிகமான வாக்குறுதிகள் தந்து அதை நிறைவேற்ற முடியாத நிலை எய்தி, நீங்களும் தொல்லைக்குள்ளாகி, தொழிலாளர்களும் சம்பளம் இழந்து, நண்பர் கே. டி. கே. சொன்னது போல், பல்வேறு துறைகளில் நஷ்டம் ஏற்பட்டுச் சம்பளம் கூடக் கிடைக்காமல் போகின்ற நிலைமைக்குப் போகாமல் நிதானத்தோடு, ஆனுல் உறுதியோடு தொழிற்சங்கத் துறையில் அவர்கள் கடமையாற்றி வெற்றி பெறுவதற்கு முன்வந்தால் இந்த அரசு அவர்களுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும்.

மற்றும் உறுப்பினர்களெல்லாம் இங்கே தெரிவித்த பல்வேறு கருத்துக்களை நாங்கள் நினைவில் கொண்டு அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஆவன செய்கிறேம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகத்தொழிலாளர் மானியத்தில் நீங்கள் சொன்ன கருத்துக்கள் அனைத்தும் வரவேற்கக் கூடியதாக உள்ள கருத்துக்களே தவிர, அரசாங்கத்தைக் கண்டிக்கத் தக்க கருத்துக்களாக இல்லை.

திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் கைத்தறித் தொழிலாளர்கள் பற்றிக் கூறினர்கள். கைத்தறித் தொழில் குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தில் இடம் பெறுகிற வகையில் அரசின் சார்பில் அறிக்கை வெளியிட்டு அபிப்பிராயம் கூற விரும்புகிறவர்களுக்கு மூன்று மாத காலம் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலம் முடிந்த பிறகு ஊதிய நிர்ணயக் குழு அமைக்கப்படும். கைத்தறி, பீடி, தோல் பதனிடுவோர் போன்ற பாதுகாப்பு இல்லாத தொழிலாளர்களுக்கு வாழ்க்கையில் என்னென்ன வசதிகளைச் செய்யலாம் என்பதைப் பரிசீலிக்க ஒரு தனிக் குழு அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொண்டு உங்களுடைய நல்ல ஆலோசனைகளை நல்ல முறையில் பரிசீலிக்கும் இந்த அரசு, என்றும் தொழிலாளர்கள்பக்கமேநிற்கும் என்பதைக் கூறி அருள் கூர்ந்து வெட்டுப் பிரேரேபணைகளைத் திரும்பப்பெற்று, இந்த மானியக் கோரிக்கையை அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**(சட்டமன்றத்தில் தொழிலாளர் நல அமைச்சர் ஆற்றிய உரையிலிருந்து)**

---

## நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகள்

தமிழ்நாடு அரசு நியமித்திருந்த நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு, தனது பரிந்துரைகளை, 20–4–1972 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைத்தது. குறிப்பாக (ரெவின்யூ போர்டு) வருவாய்த் துறை வாரியத்தை அகற்றிவிடுவது பற்றிய தனது பரிந்துரைகளை இந்தக் குழு அரசுக்குத் தெரிவித்து உள்ளது.

தமிழ்நாடு அரசின் முன்னுள் தலைமைச் செயலாளர் திருடி. ஏ. வர்க்கீஸ் அவர்களைத் தலைவராகவும், திரு கே. எஸ். சிவ சுப்பிரமணியன், திரு ஜே. சிவானந்தம், திரு ஏ. ஆர். சுப்பையா ஆகிய மூவரை உறுப்பினர்களாகவும், திரு சி.வி.எஸ். மணி அவர்களைச் செயலாளராகவும் கொண்டு அமைக்கப்பட்டிருந்த நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் சார்பில் திரு ஏ. ஆர். சுப்பையா எம்.எல்.ஏ. அவர்கள் நிர்வாகச் சீர்திருத்தம் பற்றிய பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை முதலமைச்சரிடம் கொடுத்தார். பிறகு பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்தார்கள்.



**நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் முக்கியமான பரிந்துரைகள் :**

வருவாய்த்துறை வாரியத்தின் செயல்களை, அரசு நேரடியாக நிர்வகிக்க முடியாது. எனவே வாரியத்தை நீக்கிவிட்டு, அதன் பணிகளைத் தனி அதிகாரம் உள்ள ஆணையாளருக்கு (கமிஷனர்கள்) மாற்றலாம்.

வாரியத்தின் பணிகளைத் தனித்தனியான ஐந்து துறைகளாகப்பிரித்து, ஒவ்வொன்றையும் ஓர் ஆணையாளரின்கீழ் வைப்பதே சிறந்த மாற்று ஏற்பாடாகும்.

இந்த மாற்றத்தைச் செய்ய, ஓர் அறிவிப்பை வெளியிட்டாலே போதுமானது என்ருலும், அந்த முறை இங்குப் பரிந்துரைக்கப்படவில்லை. சட்டம் இயற்றுவதே சிறந்த முறை.

உணவு உற்பத்தித்துறை ஆணையாளர் பதவியை அகற்றிவிட்டு, உணவு உற்பத்தித்துறையின் தொடர்பான பணிகளை நில வருவாய்த்துறை அல்லது நிலவரி ஏற்பாட்டுத்துறை ஆணையாளருக்கு மாற்றலாம்.

அமைச்சர்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு உண்டான சந்தர்ப்பங்கள் இல்லாமல் இருப்பதுதான் மேற்படி வாரியத்தின் செல்வாக்குக் குறைந்ததற்குக் கூறப்படும் ஒரே காரணம், இந்த நிலையை அகற்றுவதற்காக, இந்தச் சிரமைப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்று அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.



தஞ்சாவூர் மாவட்டம்
0 5 10 15 கி.மீ
தென் ஆர்க்காடு
சீர்காழி
கொள்ளிடம்
வைத்தீஸ்வரன் கோவில்
மாயூரம்
செம்பனார்கோவில்
குத்தாலம்
கும்பகோணம்
ஆடுதுறை
திருவிடைமருதூர்
நன்னிலம்
பாண்டிச்சேரி
காரைக்கால்
திருமருகல்
பாபநாசம்
திருவையாறு
காவிரி நதி
வலங்கிமான்
குடவாசல்
தஞ்சாவூர்
புதலூர்
அம்மாபேட்டை
நீடாமங்கலம்
கொரடாச்சேரி
திருவாரூர்
கீழ்வேளூர்
நாகப்பட்டினம்
வங்காள விரிகுடா
மன்னார்குடி
ஒரத்தநாடு
கோட்டூர்
திருத்துறைப்பூண்டி
திருவோணம்
மதுக்கூர்
பட்டுக்கோட்டை
முத்துப்பேட்டை
வேதாரண்யம்
கோடிக்கரை
பேராவூரணி
சேதுபாவா சத்திரம்
அறந்தாங்கி
ஆவுடையார் கோவில்
திருச்சிராப்பள்ளி
இராமநாதபுரம்
குறிப்பு

# நெஞ்சை அள்ளும் தஞ்சை!

நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்றது தஞ்சை மாவட்டம். இதன் பெருமையை நம் தமிழ் இலக்கியங்கள் சிறப்பாகப் பேசுகின்றன. 'புனல் நாடு' என்று போற்றப்படும் சோழ நாட்டிற்கு உட்பட்ட பகுதியாகத் தஞ்சை அன்று இருந்தது. இதன் மண் வளத்தைச் சிறப்பிக்கும் வகையில் 'மண்ணாவதும் சோழ மண்டலமே' என்று ஔவையார் பாராட்டினார்.

வற்றாத ஆறும், வளம் கொழிக்கும் வயல்களும் தஞ்சையின் சிறப்புக்குக் காரணமாக அமைந்துள்ளன. வான் பொய்த்தாலும் தான் பொய்யாத காவிரி ஆறு இங்கே பரந்து பாய்ந்து ஓடுகிறது. ஒழுங்கான சாலைகள், சாலையின் இரு புறங்களிலும் வரிசை வரிசையாகத் தென்னை மரங்கள், ஊருக்குள் நுழைந்தால் அழகான வீடுகள், கலையின் நிலை காட்டும் கோயில்கள், வாய்க்கால்கள், வயல்கள் இப்படியாக ஊர்க்காட்சி இருந்தது என்று பதினெட்டாம் நூற்றாண்டு வரலாற்றாசிரியர் ஒருவர் குறிப்பிடுகிறார். இத்தகைய புகழ் மிக்க தஞ்சை மாவட்டம் கிழக்குக் கடற்கரையோரத்தில் அமைந்திருக்கிறது. இந்த மாவட்டத்திற்கு நீண்ட கடற்கரை உண்டு. வடக்கில் கொள்ளிடம் ஆறு, மேற்கில் திருச்சி மாவட்டம், தெற்கில் இராமநாதபுர மாவட்டம், கிழக்கில் வங்காள விரிகுடாவும், பாக் ஜலசந்தியும் எல்லைகளாகும். இந்த மாவட்டத்தின் பரப்பளவு 3,739 சதுர மைல்கள். தஞ்சாவூர், கும்பகோணம், பாபநாசம், நன்னிலம், மாயூரம், சீர்காழி, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, மன்னார்குடி ஆகிய பன்னிரண்டு வட்டங்கள் உள்ளன. இவை ஆறு ரெவின்யூ பிரிவுகளாகப் (கோட்டங்களாக) பிரிக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தின் மக்கள் தொகை சுமார் 32·50 இலட்சமாகும். கடந்த பத்து ஆண்டுகளில் 9 சதவிகிதம் மக்கள் தொகை உயர்ந்திருக்கிறது.

புகழ் மணக்கும் தஞ்சை காவிரிக் கழிமுக வெளியென்றும், மேட்டுப் பகுதியென்றும் இரு பிரிவுகளாக உள்ளது. காவிரிக் கழிமுக வெளியில் வடக்கு வட்டங்களான சீர்காழி, மாயூரம், கும்பகோணம், நன்னிலம், நாகப்பட்டினம் திருத்துறைப் பூண்டி ஆகியவையும், மன்னார்குடி, தஞ்சாவூர் வட்டங்களின் பகுதிகளும் அடங்கும். தஞ்சை மாவட்டத்தின் தென் பகுதியும், பட்டுக்கோட்டை வட்டத்தின் வடமேற்கு, தென் மேற்குப் பகுதிகளும், அறந்தாங்கி வட்டத்தின் பெரும் பகுதியும் மேட்டுப் பகுதியில் அடங்கும். குன்றுகளையோ மலைகளையோ காண இயலாது. எனினும், பச்சைப் பசேல் என்ற நெற் பயிர்களும், சிற்பத் திறனை வெளிப்படுத்தும் கூட கோபுரங்களும், கண்ணையும் கருத்தையும் கவரக் கூடியவை.

காவிரியும், அதன் கிளையாறுகளும், கொள்ளிடமும் தஞ்சையை வளப்படுத்துகின்றன. வெண்ணாறு, குடமுருட்டியாறு, அரசலாறு பாமணியாறு, கோரையாறு, வீரசோழனாறு ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இந்த மாவட்டத்தில் ஆண்டுச் சராசரியாக 1,147·8 மி.மீ. மழை பெய்கிறது. வற்றாத நீர் வளம் உழவர்களுக்குப் பெருந்துணையாக இருக்கிறது. இதனால் தான் ''காவிரியின் புதல்வர்'' என்று வேளாளர் குறிப்பிடப் படுகின்றனர். பழங்காலச் சோழ மன்னன் கரிகாலன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே காவிரியின் குறுக்கே கட்டிய கல்லணை இன்றும் இந்த மாவட்டத்திற்குப் பெரும் பயன் தருகிறது. இந்த மாவட்டத்தின் குறிப்பான தொழில் வேளாண்மையேயாகும். நெல், வாழை, முந்திரி, கரும்பு, மக்காச் சோளம், பருத்தி முதலியன இங்குப் பயிராகின்றன. ஆடுதுறையில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும், பட்டுக்கோட்டையிலும், ஒரத்த நாட்டிலும் ஆராய்ச்சிப் பண்ணைகளும் இருக்கின்றன. எங்குப் பார்க்கினும் தென்னை மரங்களும், மாமரங்களும், புளிய மரங்களும் அழகுக் காட்சியைத் தருகின்றன. தஞ்சை, மன்னார்குடி, பட்டுக்கோட்டை வட்டங்களில் பலா மரங்கள் இருப்பதைக் காணலாம்.

காடுகளும், குன்றுகளும் இல்லாததால், புலி, சிறுத்தை போன்ற விலங்குகள் இப்பகுதியில் இல்லை. கோடிக்கரைக்கு அருகில் மானினமும், காட்டுப் பன்றிகளும் இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் உழவுக்கு உறுதுணையான கால்நடை உம்பளாச்சேரிப் பொலி காளைகளாகும். இந்த மாவட்டத்தில் திருமுல்லைவாசல், தரங்கம்பாடி, நாகப்பட்டினம், கோடிக்கரை, அதிவீரராமன்பட்டினம் முதலிய பல துறைமுகங்கள் இருக்கின்றன. வேதாரணியத்திலுள்ள உப்பளவெளி மிகப் பரந்ததாகும். இதன் அகலம் சுமார் ஐந்து மைல். இதுவே மாநிலத்தின் மிகப் பெரிய உப்பளம். மற்றும் நெய்தவாசல், அதிவீரராமன் பட்டினம், கட்டுமாவடி முதலிய இடங்களிலும் உப்பளங்கள் இருக்கின்றன.

இந்த மாவட்டத்திலுள்ள மக்கள் கலையார்வம் நிறைந்தோராக விளங்குகின்றனர். தொன்றுதொட்டு கலைவளர்க்கு

பணியில் இந்த மாவட்டம் தலை சிறந்து விளங்குகிறது. குறிப்பாக, சோழர் காலத்தில் கலை வளர்க்கும் பெரு நகரராகத் தஞ்சாவூர் விளங்கியது. தஞ்சாவூர் இராசராசேச்சுரமும், மற்றும் 77 திருக்கோயில்களும் சோழர் காலச் சிற்பத் திறனை எடுத்துக் காட்ட வல்லவை. தஞ்சையிலுள்ள சரஸ்வதி மகால் ஒரு சிறந்த கலைக்கூடமாகும். ''பண்டைத் தமிழரின் பண்பாட்டை மக்களின்று, கண்டறிய வந்த கலைக்கூடம்'' என்று கவிமணி தேசிக விநாயகம் பாராட்டுகிறார். தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலுள்ள ஓவியங்கள் கலைச் சிறப்பு மிகுந்தவையாகும். நெற் கதிர்களைக் கொண்டு அழகான மாலைகளை உருவாக்குவது, நெட்டியால் சிறந்த உருவங்களைச் சமைப்பது போன்ற நுட்பமான தொழில்கள் இன்று இந்த மாவட்டத்தில் நடைபெறுகின்றன. இதனால் அவர்களது சிறந்த கலையார்வத்தை உணரலாம்.

இங்குள்ள கோபுரங்களும், சிற்பங்களும், கல்வெட்டுக்களும் தஞ்சை மாவட்டத்தின் வரலாற்றுப் பெருமையை எடுத்துக் காட்ட வல்லவை. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பகுதியை ஆண்ட உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னி, அவன் மகன் கரிகாலன் ஆகியோரின் பெருமைகளை இலக்கியங்களின் மூலம் அறிய முடிகிறது. குடி மக்களின் வாழ்வு வளம் பெறுவதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எண்ணிலடங்காதவை. பிற்காலச் சோழர்களான இராசராசன், இராசேந்திரன் போன்றோரின் திறனைக் கல்வெட்டுக்களால் அறியலாம். இராசராசன் கட்டிய தஞ்சைக் கோயிலைப் பற்றிக் குறிப்பிடும் போது 'இதைவிட நன்றாக நிருமாணிக்கப்பட்ட கோயில் தென்னிந்தியாவிலேயே இல்லை' என்று டாக்டர் ஸ்மித் என்ற ஆங்கில ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாவட்டத்தில் நிலவளம் பெருகியதோடு, அறிவு வளமும் பெருக்கச் சிறந்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஊர் தோறும் பள்ளிகள் நிறுவப் பட்டுள்ளன. இங்கு 17 கல்லூரிகள் இருக்கின்றன. எழுத்தறிவு பெற்றோர் தொகை உயர்ந்திருக்கிறது. தற்போது எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தொகை 33·5 சதவீதமாகும். நகரப் பகுதிகளில் ஐம்பது சதவீதம் எழுத்தறிவு பெற்றோர் தொகையினை உயர்த்திய பெருமை இந்த மாவட்டத்திற்கு உண்டு.

பயிர் வளமும், அறிவு வளமும் பெருகினால் மட்டும் வாழ்க்கை வளம் பெற்று விடாது. தொழில் வளமும் பெருக வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் பெருந் தொழில்களைத் தொடங்குவதற்குரிய வாய்ப்புகள் இல்லையென்றாலும், இயன்ற அளவு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப் பட்டுள்ளன. சிறு தொழில்களை வளர்க்கும் வகையில் தொழிற் பேட்டை ஒன்று கட்டி முடிக்கப் பட்டுள்ளது. நீண்ட காலமாகக் குடிசைத் தொழில்களும் இந்தப் பகுதியில் நடைபெறுகின்றன.

நெட்டி, சரிகை, இலவங்கம், ஏலம் ஆகியவற்றால் மாலைகள் செய்யும் தொழில் குறிப்பிடத் தக்கதாகும். இந்த மாவட்டத்தில் செய்யப்படும் தஞ்சாவூர்ப் பொம்மைகளுக்கும் தனிச் சிறப்பு உண்டு. இத்தகைய கலை நுட்பத் தொழில்களும், வெண்கலத் தொழில், உருவம் அமைக்கும் தொழில்களும் வளர அரசாங்கம் ஆவன செய்திருக்கிறது. இத்தகைய பரம்பரைத் தொழில் செய்யும் வினைஞர் பல் வேறு தொழில்களும் புது முறையில் பயிற்சி பெற வகை செய்யப் பட்டுள்ளது. எடுத்துக்காட்டாகத் திருத்துறைப்பூண்டி சமுதாய வளர்ச்சிப் பகுதியில் நெட்டிப் பொருள்கள் செய்தலை விரிவாக்கும் பொருட்டு ரூ. 15,000 செலவில் ஒரு பயிற்சிக் கூடம் ஏற்படுத்தியதைக் குறிப்பிடலாம். தனியார் துறையில் வடபாதி மங்கலம் சர்க்கரை ஆலையும், தஞ்சையில் உள்ள சைக்கிள் உற்பத்தித் தொழில் நிலையமும் குறிப்பிடத் தக்கவையாகும்.

**பொம்மலாட்டத்திற்கு ஒரு தஞ்சை**

**தமிழ்நாட்டில் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அரிய கலையாகிய பொம்மலாட்டக் கலை தஞ்சை மாவட்டத்தில்தான் இருக்கிறது. 1970ஆம் ஆண்டில் லக்னோவில் நடைபெற்ற அகில இந்தியப் பொம்மலாட்டப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கணநாதர் பொம்மை நாடக சபை மாயூரத்தைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத் தக்கது.**

இந்த மாவட்டத்தின் பெரும் பான்மையான மக்கள் ஈடுபட்டிருக்கும் வேளாண்மைத் துறையில் இருந்த சிக்கல்கள் தீர்க்கப் பட்டன. சிறிது காலமாக நிலத்திற்கு உரிமையாளர், குத்தகைதாரர், பயிரிடுவோர், பண்ணையாட்கள் ஆகியோரிடையே நிலவிய மனவேறுபாடுகள் நீங்க வழி செய்யப்பட்டது. தஞ்சைச் சாகுபடியாளர்-பண்ணையாட்கள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இதன் பயனாக மக்களிடையே நல்லுறவு ஏற்பட்டது. பாட்டாளிகள் நியாயமான பங்கினைப் பெற வழி செய்யப்பட்டது. அண்மையில் இந்த மாவட்டத்தில் அமலாக்கப்பட்ட தீவிரச் சாகுபடித் திட்டத்தால் சிறந்த பயன் விளையும் என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம், துறைதோறும் இந்த மாவட்டம் வளர்ச்சி பெற்று வருகிறது. வாழ்க்கைத் தரம் உயர்ந்து வருகிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து நான்காவது திட்டம் தொடங்கியிருக்கிறது. இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் பல பணிகள் செய்யப் பட்டுவருகின்றன. குறிப்பாக, வேளாண்மைத் துறையில் இந்த மாவட்டத்தில் செய்து முடித்த சாதனைகள் பெருமைக்குரியவையாகும்.

*1799 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஆங்கிலேயர்களின் நேரடி நிர்வாகத்துக்கு வந்த இந்த மாவட்டத்திற்கு இப்போது 173 வயதாகிறது.*

# தமிழ் உணர்ச்சியின் திருவுருவம்

# இராசஇராசன்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, பல்லவப் பேரரசும், சாளுக்கியப் பேரரசும் கொடி கட்டி ஆண்டிருந்த நேரத்தில், சோழப் பேரரசு கண்டு, தமது மொழியையும், தமிழ்ப் பண்பாட்டினையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் கட்டிக் காத்துத் தமிழன் என்றோர் இன முண்டு என்று பெருமையோடு கூறிக் கொள்ளத் தக்க பெருநிலையை உருவாக்கிய மாமன்னன் இராசராச சோழன்.

விண்முட்டும் கோபுரங்கள் நிறைந்த தமிழகம் என்று இன்று பெருமையோடு பேசுகிறோம். கி. பி. 1010-ஆம் ஆண்டு, தஞ்சைத் தரணியிலே தஞ்சைப் பெருங்கோயில் என்று உலகமெல்லாம் போற்றிப் பாராட்டும் பிரகதீசுவரர் ஆலயத்தை எழுப்பிச் சைவத்தையும், தமிழ்க் கலைகளையும் வளர்த்த தன்னேரிலாத தனிப் புகழ் பெற்ற தகைசால் மன்னன் இராசராசன்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழினத்தின் மானங்காத்து, வரலாறு படைத்த அந்த மாமன்னன் எழுப்பிய அந்தப் பெருங் கோயிலில், அந்தச் சரித்திர நாயகனுக்குச் சிலையெடுத்துச் சிறப்புச் செய்ய வேண்டும் என்று விரும்பித் தமிழக அரசு மத்திய அரசிடம் அனுமதி கோரியது. அந்த அனுமதி மறுக்கப்பட்டதன் காரணமாக அந்த மாமன்னனின் சிலையை அந்தத் தஞ்சைத் திருநகரில் அந்த மாமன்னன் எழுப்பிய, அந்தத் திருக்கோயிலுக்கு எதிரிலேயே 13—4—72ல் நான்கு கோடித் தமிழ்ப் பெருமக்களின் இதய வாழ்த்துக்களுடன் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இராசராச சோழன் காலத்துச் சிற்பக் கலையிலிருந்து சிறிதும் மாறுபடாமல் வடித்தெடுக்கப்பட்ட தங்க நிறத்து வெண்கலச் சிலையைத் திறந்து வைக்க ஒரு மாபெரும் விழாக் குழு அமைக்கப் பெற்று, அந்தக் குழுவின் சார்பில், தொடக்கத்தில் தஞ்சை நகர மன்றத் தலைவர் திரு பெத்தண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

தொடர்ந்து வேளாண்மைத் துறை அமைச்சர் திரு மன்னை நாராயணசாமி அவர்கள் தமது வரவேற்புரையில் தஞ்சையில், ''மிகப் பெரிய சோழ அரசை நிறுவியவன் இராச இராசன்; பகைவர் அடியெடுத்து வைக்காத சோழப் பேரரசை நிறுவினான் என்பது மட்டுமல்ல; தமிழ்ப் பண்பை-அந்தப் பண்பு காக்கும் உணர்வை ஏற்படுத்தியவனும் இராச ராசனே. ஆனால், அவனது உருவச் சிலைக்குக் கோயிலுக்குள் இடமில்லை என்று கூறிவிட்டார்கள். எனினும், மனந்தளராது நமது முதல்வர் அவர்கள் இந்தச் சிலையை வைப்பதில் ஊக்கம் காட்டினார்கள்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், அந்த மாமன்னனின் மாண்புகளை விரித்து ஒரு பெரும் போர் முழக்கத்தை எழுப்பினர்.

பின்னர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில்,

''இன்று மத்தியஅரசினர் எந்த இராசராசனின் சிலையைக் கோவிலுக்குள் வைக்கக்கூடாது என்கிறார்களோ, அந்த இராச ராசனின் பிறந்த நாளான சதயத்திருநாள் இந்தக் கோயிலிலே கொண்டாடப்பட்டிருக்கிறது; அவன் காலத்தில் அவன் பிறந்த நாள் இந்தக் கோயிலில் கொண்டாடப் பட்டிருக்கிறது; ஆனால், இன்று அவன் சிலையை வைக்க முடியவில்லை.''

''கலைஞர் நினைத்திருந்தால் இதனைத் தகராறுக்குரிய பிரச்சினையாக ஆக்கியிருக்க முடியும். ''மத்திய மாநில உறவைக் காக்க வேண்டுமென்று தான் தகராறுக்கு இடம் இல்லாமல் சிலையைவெளியே கொண்டு வந்திருக்கிறார் முதலமைச்சர். இது மத்திய அரசுக்கு நாம்காட்டும் உறவுக்கு எடுத்துக் காட்டு.

''அழியாத தெய்வத்திற்கு அழிக்க முடியாத கோயில் கட்டிவைத்தவன் இராசராசன். வாய் படைத்தவர்களெல்லாம் இராசராசனையும் அவன் சிலையை நிறுவிய கலைஞரையும் தமிழக அரசையும் வாழ்த்த வேண்டும்''. என்று குறிப்பிட்டார்.

அறநிலையத் துறை அமைச்சர் திரு மு. கண்ணப்பன் அவர்கள் பேசுகையில், ''நம் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்; தமிழ் உணர்ச்சி நமக்கு ஏற்பட வேண்டும்; இந்தச் சிலை அதற்கு எடுத்துக் காட்டாக அமைய வேண்டும்'' என்றார்.

கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பேசுகையில், ''இராசராசன் அலெக்சாண்டருக்கு ஒப்பானவன்; நெப்போலியனுக்குச் சமமானவன். வீரத்தால் மட்டுமல்ல—விவேகத்தாலும் வரலாறு படைத்தவன்; அவன் கட்டிய மாபெரும் ஆலயம்தான் இந்தப் பிரகதீசுவரர் ஆலயம்.

''இப்போது இவனது சிறப்புக்களைக் கூற இருப்பது இந்த ஒரே ஒரு பெரிய கோயில்தான்'' என்று குறிப்பிட்டார்.

இறுதியாகப் பேசிய முதல்வர் கலைஞர் அவர்கள் கடந்தகால வரலாற்றைநினைவுக்குக் கொண்டு வந்தார்கள்.

''அருள்மொழித்தேவன் என்னும் இயற்பெயர் படைத்த மாமன்னன் இராசராச சோழனின் திருவுருவச் சிலைத் திறப்பு விழா இந்த இடத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால், அந்தமாமன்னன் கட்டிய பெரிய கோயிலுக்குள்ளே அவனது சிலையை வைக்க வேண்டும் என்ற முயற்சியிலே நாம் வெற்றியினைப் பெறாமல்—அவன்

அமைத்த ஆலயத்துக்கு எதிரில் அவனது சிலையை நிறுவியிருக்கிறோம்.

மண்ணில்—அவன் கட்டிய கோவிலுக்குள் அவனது சிலையைத் திறந்து வைக்கக் கூடாது என்று மத்திய அரசு அனுமதிக்க மறுத்து விட்டதற்காக நண்பர்கள் இங்கே வருத்தத்தோடு பேசினார்கள்.

அவர்கள் இராசராசனின் சிலையைக் கோயிலுக்குள் வைக்க அனுமதி மறுத்ததற்குக் காரணங்கள் உண்டு.

சிலம்புச் செல்வர் அவர்கள் என்னைப் பார்த்து, ''லட்சோப லட்சம் மக்கள் திரண்டிருக்கும் இந்தக் காட்சியைச் செய்திப் படப் பிரிவினர் படம் பிடித்தார்களே; அதைப் பிரதமருக்கு அனுப்பி வையுங்கள்'' என்று கூறினார்.

செய்திப் படம் பார்த்துத்தான் லட்சோப லட்சம் மக்கள் கூடியிருக்கிறார்கள் என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டியதில்லை.

அவர்களுக்கு, முன்பே தெரியும்—இந்தச் சிலை திறப்பு விழாவிற்கு லட்சக் கணக்கான மக்கள் வருவார்கள்—என்று.

கோயிலுக்குள் சிலை அமைப்பு விழா நடத்தினால்—இந்த லட்சக் கணக்கான மக்கள் கூட்டம் இடம் கொள்ளாது அவதியுறும் என்ற காரணத்தால் தான்—கோயிலுக்குள் சிலை வேண்டாம்; வெளியே வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார்கள்.




இராசராசன் சிலை திறப்பு விழாவில், தஞ்சை நகர் பூண்டிருந்த மின்னொளி அலங்காரக்காட்சிகளில் ஒன்று.

கன்னித் தமிழ் மன்னன்—களம் பல கண்டவன்—கடாரம் வென்றவன்—அவன் செல்லாத நாடில்லை; வெல்லாத பூமி யில்லை! சோழன் சென்றான்; வென்றான்; ஆட்சியில் நிலைத்து நின்றான்—எனும் பெரும் புகழுக்குரிய பெருமன்னன் சிலை, அவன் கட்டிய பெருவுடையார் கோயிலில் வைக்க அனுமதி கிடைக்கவில்லை என்பது—சாதாரண நிகழ்ச்சி அல்ல!

''ஆலயத்தைக் கட்டியவனுக்கு ஆலயத்தில் இடமில்லை; வெளியே வைத்துக்கொள்'' எனும் ஆணை கேட்டதும் . . . .

''இதற்குக்கூட உரிமை இல்லை யென்றால் . . . . . . நமது மற்ற உரிமைகள் என்ன ஆவது?'' என்ற உணர்ச்சி தமிழர் உள்ளத்திலெல்லாம் அரும்பிடத் தொடங்கியது!

இராசராச சோழன் ஆயிரம் வருடங்களுக்கு முன் தமிழ் உணர்ச்சியின் திருவுருவாகத் திகழ்ந்தான்!

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இன்று சிலையுருவில் இங்கே நின்றிருந்தாலும் அந்த உணர்ச்சியை நமக்கு ஊட்டிக் கொண்டிருக்கிறான்.




தஞ்சையிலே கொழிக்கும் கையகலமுள்ள தளிர் வெற்றிலையும், குடந்தை தரும் நறுமணப் பாக்கும், வேதாரண்யத்தில் விளையும் புகையிலையும் ஒன்றுக் கொன்று உறவாடி, இம்மாவட்ட மக்களை எந்நேரமும் செக்கச்சிவந்த வாயினராய்ச் சிரிக்க வைக்கின்றன.

# முனைப்பு இயக்கத்தைத் துவக்கிய மாவட்டம்

பசுமைப் புரட்சியின் வாயிலாக உணவு உற்பத்தியைப் பெருக்கித் தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப் புகழ் பெற்றுள்ள தஞ்சைத் தரணி, விளைச்சலிலே மட்டும்வெற்றி கண்டால் போதாது எனக் கருதி, வேண்டாத விளைவுகள் உலகில் ஏற்படாமலிருக்க மக்கள் தொகைப் பெருக்கம் குறைய வேண்டும்—இல்லந் தோறும் மக்கள் உற்பத்திப் பெருக்கத்தைக் குறைத்தாக வேண்டும்—குறைத்திடல் தன் கடமை என உணர்ந்து, 1971-ஆம் ஆண்டு மே திங்கள் இருபதாம் நாள் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தைத் தமிழகத்திலேயே முதன் முதலாகத் தொடங்கியது குறிப்பிடத்தக்க செய்தியாகும். 1971, ஜூன் திங்கள் முப்பதாம் நாள்வரை நடந்தேறிய முதல் முனைப்பு இயக்கத்தின் போது, இம்மாவட்டத்தில் தந்தைமார்களும், தாய்மார்களுமாக மொத்தம் 4,591 பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு நிரந்தரக் கருத்தடையை ஏற்றுக் கொண்டனர். 3,438 தாய்மார்கள் கருத்தடை வளையம் (லூப்) பொருத்திக் கொண்டதன் மூலம் குடும்ப நலமுறையை ஏற்றுக் கொண்டனர்.

முன் அனுபவம் ஏதுமின்றி, முதன் முதலாக நடத்திய முனைப்பு இயக்கத்தில், ஏற்றுக் கொண்ட இலக்கத்திற்கும் மீறிய வெற்றியை ஈட்டிய தஞ்சை மாவட்டம்—தமிழகத்தின் பிற மாவட்டங்கள் முனைப்போடு இப்பணியில் ஈடுபட்டு வெற்றி ஈட்ட அடித்தளமாக அமைந்த தஞ்சை மாவட்டம்—தான் நடத்திய முதல் முனைப்பு இயக்கத்தில் பெற்ற அனுபவங்களை அடிப்படையாக வைத்து இரண்டாவது முனைப்பு இயக்கம்நடத்த எண்ணியது. தஞ்சையில் 3—9—1971-ஆம் நாள் நடந்த குடும்ப நலத் திட்டக் கருத்தரங்கில் கலந்து கொண்ட மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் முன்னிலையில் இரண்டாவது முனைப்பு இயக்கம் பற்றி விரிவாக ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன. அந்த முடிவுகளின் படியும், அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களைத் தொடர்ந்து கவனித்துச் சிறப்பான சிகிச்சை யளித்துத் தொல்லை ஏதும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தின் படியும், திருமண மண்டபங்கள், ஒன்றிய அலுவலகங்கள், தனியார் இல்லங்கள் ஆகியவற்றைப் பெற்று, மாவட்டம் முழுவதும் 36 இடங்களில் நல்வாழ்வு நிலையங்கள் திறக்கப்பட்டன. தமிழகத்தில் முனைப்பு இயக்கத்தை முதன் முதலாக நடத்தியது என்ற பெருமை பெற்ற தஞ்சை மாவட்டம், இந்தியாவிலேயே முதன் முதலாக 'நல்வாழ்வு நிலையங்கள்' (Health Resort Centres) அமைத்து முனைப்பு இயக்கம் நடத்திய மாவட்டம் என்ற பெருமையையும் இரண்டாவது இயக்கத்தின் போது பெற்றது.

### நல் வாழ்வு நிலையங்கள்

இந் நல்வாழ்வு நிலையங்களில் மூன்று மருத்துவர்கள், செவிலியர், துணைச் செவிலியர் போன்றோர் எழுவர் பணியாற்றினர். அறுவைச் சிகிச்சைக்கென வந்த தந்தைமார்கள் சிறப்பு விருந்தினராக நடத்தப்பட்டனர். அறுவைச் சிகிச்சைக்குப்பின் ஆறு நாட்கள் நல்வாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டு, கட்டு அவிழ்க்கப்பட்டபின் நல்ல நிலைமையில் அவரவர் இல்லங்களுக்கு அனுப்பப்பட்டனர்.



### உணவு

அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 3·50 செலவில் உணவளிக்கப்பட்டது. இறைச்சி உணவும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. எதிர்பாராத காரணங்களால் அறுவைச்சிகிச்சை செய்து கொண்ட தந்தை எவராவது நல்வாழ்வு நிலையத்தில் ஆறு நாட்களுக்கு மேல் தங்க நேரிட்டுவிட்டால், மேலும் ஒரு நான்கு நாட்களுக்கு உணவளிக்க வசதிகள் செய்யப்பட்டிருந்தன. அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோரின் ஐந்து சதவிகிதத்தினருக்கே இந்த நீடிப்பு ஏற்பாடு அவசியம் எனக் கருதப்பட்டது.

### பொழுது போக்கு ஏற்பாடுகள்

நல்வாழ்வு நிலையங்களில் தங்கியிருந்த தந்தைமார்களின் பொழுது போக்கிற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு நல்ல, உற்சாகமான மனநிலையில் அவர்கள் வைக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு நல்வாழ்வு நிலையத்திலும் வானொலி வசதி செய்யப்பட்டிருந்தது. பரமபதம், தாயம் ஆகிய விளையாட்டுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மாலையில் திரைப்படக் காட்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளின் காரணமாக, சோர்வேதுமின்றி நல்வாழ்வு நிலையங்களில் தந்தைமார்கள் இருந்தார்கள்.

### தந்தைமார்களுக்கான ஈட்டுத்தொகையும் பிறவும்

1. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் முப்பது ரூபாய் (ரூ. 30) ஈட்டுத் தொகையாகத் தரப்பட்டது.

2. விவரம் கூறி, தந்தைமார்களை அழைத்து வந்து அறுவைச் சிகிச்சைக் குள்ளாக்கியோருக்கு ரூ. 10வீதம்ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும் தரப்பட்டது.

3. ஒவ்வொரு தகுதி வாய்ந்த தந்தையின் போக்குவரத்துச் செலவுக்கென ரூ. 3 தரப்பட்டது.

4. நல்வாழ்வு நிலையங்களில் ஊட்டச்சத்து மிகுந்த உணவு அளிக்கப்பட்டது. ஆருவது நாள் இறைச்சி உணவு தரப் பட்டது.

5. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் வேட்டியும் துண்டும் பரிசாக வழங்கப்பட்டன.

6. முப்பது நாட்களுக்குத் தேவையான 'வைட்டமின்' மாத்திரைகள் கொடுக்கப்பட்டன.

7. உடல்நிலை குறித்த முழு விவரங்கள் அடங்கிய அடையாள அட்டை ஒவ்வொருவருக்கும் வழங்கப் பட்டது. குடும்பநல அறுவைச் சிகிச்சை தொடர்பாக ஏற்படும் எந்தக் கோளாறுக்காகவும் இந்த அடையாள அட்டையுடன் இவர்கள் மருத்துவ மனைகளுக்குச் சென்றால், முதலிடம் தந்து தனிக் கவனத்துடன் சிகிச்சை அளிக்கப்படும்.

### தாய்மார்களுக்கான ஈட்டுத்தொகையும் பிறவும்

1. அறுவைச் சிகிச்சைசெய்து கொண்ட ஒவ்வொரு தாய்க்கும் ரூ. 53 (ரூ. 30+ரூ. 20+ரூ. 3) ஈட்டுத் தொகையாக வழங்கப் பட்டது.

2. ஒவ்வொரு தாய்க்கும் சிகிச்சைக்குப்பின் வீடு செல்லும் போது ஒரு சேலை கொடுக்கப் பட்டது.

3. அடையாள அட்டை தரப்பட்டது.

4. ஊட்டச்சத்து மிகுந்த 'வைட்டமின்' மாத்திரைகளும் வழங்கப்பட்டன.

### பரிசுத் திட்டம்

ஒவ்வொரு நல்வாழ்வு நிலையத்திலும் பரிசுத் திட்டம் செயல்படுத்தப் பட்டது. ஒவ்வொரு நிலையத்திலும் 6 குலுக்கல்கள் நடத்தப் பட்டன. முதல் ஐந்து குலுக்கல்கள் ஒவ்வொரு ஆருவது நாளும், இறுதிக் குலுக்கல் 10—1—72 அன்றும் நடத்தப் பட்டன. ஒவ்வொரு குலுக்கலின்போதும் தந்தைமார்களுக்கும், தாய்மார்களுக்கும் கீழ்வரும் பரிசுகள் வழங்கப்பட்டன.

### தந்தைமார்களுக்கு

1. முதல் பரிசு, ரூ. 200 பெறுமானமுள்ள வானொலிப் பெட்டி (Philips two band Transisters.)

2. இரண்டாவது பரிசு, ரூ. 100 பெறுமானமுள்ள கைக் கடிகாரம்(Time star wrist watch)

3. மூன்று மூன்ருவது பரிசுகளாக ரூ. 20 பெறுமானமுள்ள பெட்டிகள். (Three third prizes of suit Cases)

### தாய்மார்களுக்கு

தாய்மார்கள் அறுவைச் சிகிச்சை முகாம்தோறும் ஒவ்வொரு ஆருவது நாளும் ஒரு குலுக்கல் வீதம் ஆறு குலுக்கல்களும், இறுதிக் குலுக்கல்கள் 10—1—1972 அன்று நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப் பட்டன.

1. முதல் பரிசாக ஒரு பவுன் வழங்கப்பட்டது.

2. இரண்டாவது பரிசாக அரைப் பவுன் வழங்கப்பட்டது.

3. ரூ. 20 பெறுமான முள்ள மூன்று மூன்ருவது பரிசுகளாகப் பித்தளைப் பாத்திரங்கள் வழங்கப் பட்டன.

### கலையழகு மிக்க பொருள்கள்

தஞ்சை மாவட்டம் கலையழகு மிக்க பொருள்களுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. அவைகளில் மிகவும் முக்கிய மானவை

1. தஞ்சாவூர் வீணை.
2. தஞ்சாவூர் தட்டு.
3. ஏலக்காய் மாலை.
4. கிராம்பு மாலை.
5. நெல் மாலை.
6. நெட்டி வேலை.
7. கண்ணடிப் பல்லக்கு.
8. முத்து விமானம்.
9. தலையாட்டிப் பொம்மை
10. அழகுமிகு விக்கிரகங்கள்.
11. கண்ணடியில் சித்திர வேலை.
12. தென்னங் கீற்றினல் அமைக்கப் பட்டுள்ள பந்தல்கள்.

### விளம்பரத்தில் புதுமை

தமிழக அரசின் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர், இந்திய களப்பணித்துறை விளம்பர அலுவலர் ஆகியோர் துணையோடு மாவட்டக் குடும்பநல அலுவலர், விளம்பர இயக்கத்தைச் சீரோடும் சிறப்போடும் நடத்தினர். புதுப்புது ரகங்களில் வண்ண வண்ணச் சுவரொட்டிகள், துண்டு வெளியீடுகள் ஆகியவை வெளியிடப்பட்டன. சட்ட மன்ற, மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் — உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள்—உறுப்பினர்கள் ஆகியோர் பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டும், வீடுகளுக்குத் தனித் தனியே சென்றும் சிறுகுடும்ப நெறியினை ஏற்குமாறு கேட்டுக் கொண்டனர். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சிறப்பு வேண்டுகோள் ஒன்றின் மூலம் முனைப்பு இயக்கத்தின் போது தகுதி வாய்ந்தோர் அனைவரும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு 1—12—1971 முதல் 10—1—1972 வரை 41 நாட்கள் சீரும் சிறப்புமாக நடந்தேறிய தஞ்சை மாவட்ட இரண்டாவது முனைப்பு இயக்கத்தின் போது 21,602 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. இரண்டு முனைப்பு இயக்கங்களின்போது தஞ்சை மாவட்டத்தில் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைகள் 26,193 ஆகும். இவை 1970—71-ஆம் ஆண்டு முழுதும் தஞ்சை மாவட்டத்தில் நடந்தேறிய மொத்த அறுவைச் சிகிச்சைகளைப் போல ஆறு மடங்கு அதிகமானதாகும்.

# நிலவள வங்கிகள் வழங்கிடும் நீண்ட காலக் கடனுதவி

—குமார்

தஞ்சை மாவட்டத்தில் 28 நிலவள வங்கிகள் நீண்ட காலக் கடன் கொடுத்து உதவி வருகின்றன. நீண்ட காலக் கடனை 7 முதல் 15 ஆண்டிற்குள் எளிய தவணைகளில் திருப்பிச் செலுத்திவிட வேண்டும். நவீன வேளாண்மைக் கருவிகள், இயந்திரக் கலப்பை (டிராக்டர்) விசை உழவுக் கருவிகள் (பவர் டில்லர்), மின்சாரப் பம்பு செட், எண்ணெய் இயந்திரம் முதலியவை வாங்கவும், புதிதாகக் கிணறு வெட்டவும், நிலச் சீர்திருத்தம் செய்யவும் நீண்ட காலக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

சென்ற 4 ஆண்டுகளில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நில வள வங்கிகளால் பின் கண்ட வாறு கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

புதிய கிணறு வெட்டுவதற்கு வழங்கப்பட்ட கடனுதவி

| ஆண்டு | கடன்கள் எண்ணிக்கை | ரூபாய் |
|---|---|---|
| 1968–69 | 215 | 6,33,124 |
| 1969–70 | 487 | 10,34,882 |
| 1970–71 | 462 | 16,65,465 |
| 1971–72 | 295 | 11,11,728 |

பம்புசெட், எண்ணெய் இயந்திரம் வாங்க வழங்கிய கடனுதவி

| ஆண்டு. | கடன்கள் எண்ணிக்கை | ரூபாய் |
|---|---|---|
| 1968–69 | 1,143 | 45,12,286 |
| 1969–70 | 1,112 | 35,87,741 |
| 1970–71 | 755 | 36,48,694 |
| 1971–72 | 536 | 34,25,194 |

இயந்திரக் கலப்பைகள் மற்றும் இழுவைகள் (Tractors and Trailors) வாங்க வழங்கிய கடனுதவி

| ஆண்டு. | கடன்களின் எண்ணிக்கை | ரூபாய் |
|---|---|---|
| 1968–69 | 117 | 30,10,700 |
| 1969–70 | 91 | 22,17,203 |
| 1970–71 | 92 | 20,15,689 |
| 1971–72 | 85 | 39,38,980 |

நேரடி நிலச்சீர்திருத்தம் செய்ய வழங்கிய கடனுதவி

| ஆண்டு. | கடன்களின் எண்ணிக்கை | ரூபாய் |
|---|---|---|
| 1968–69 | 199 | 8,10,943 |
| 1969–70 | 179 | 5,95,995 |
| 1970–71 | 186 | 5,35,125 |
| 1971–72 | 154 | 5,24,758 |

இதர வேலைகளுக்கு வழங்கிய கடனுதவி

| ஆண்டு. | கடன்களின் எண்ணிக்கை | ரூபாய் |
|---|---|---|
| 1968–69 | 501 | 19,77,142 |
| 1969–70 | 155 | 4,65,474 |
| 1970–71 | 7 | 36,009 |
| 1971–72 | 125 | 3,20,904 |

மேற்கண்டவாறு கடந்த 4 ஆண்டுகளிலும் தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 3,60,68,036 ரூபாய் நீண்ட காலக் கடனை வழங்கப்பட்டுள்ளது. இதனால் தஞ்சை மாவட்டத்தின் நில வளம் பெருகி, விளைச்சலும் பெருகுகிறதென்று கூறலாம்.

தஞ்சை மாவட்டத்தில் 31—3—1972 வரை 4,159 ஊர்களுக்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள சுமார் 1,920 ஊர்களுக்கும் 31—12—1972-க்குள் மின் வசதி செய்து கொடுத்துவிட வேண்டுமென்று தமிழ்நாடு மின்சார வாரியம் திட்டமிட்டுள்ளது. அதுபோலவே தஞ்சை மாவட்டத்தில் உள்ள மின்வசதி பெருத சுமார் 2,530 அரிசனக் குடியிருப்புகளின் தெருக்களிலும் மின் விளக்கு அமைக்கும் வேலையையும் 31—12—1972-க்குள் முடித்துவிடத் தமிழ்நாடு மின்சார வாரியம் திட்டமிட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் 31—3—1972 வரை 8,084 நீரேற்றிகளுக்கு (பம்பு செட்டுகள்) மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் தஞ்சை மாவட்டத்தில் 15—12—1971 வரை 3,846 வடிமுனைக் குழாய்களுக்கு மின்சாரத் தொடர்பு கொடுத்துள்ளது. இன்னும் சுமார் 36,000 கிணறுகளுக்கு மின்சாரக் இணைப்புக் கொடுக்க வேண்டியுள்ளது. நடப்பு ஆண்டில் (1972–73) 1,500 நீரேற்றிகளுக்கு மின்சாரத் தொடர்பு கொடுக்க வேண்டுமென்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



# பட்டா வழங்கினோம் பாமர மக்களின் துயர் துடைத்தோம்

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகிய மூன்று இன்றியமையாத அடிப்படைத் தேவைகளையும் அனைவருக்கும் வழங்கி, சமதர்ம சமுதாயம் அமைத்திட, தமிழ்நாடு அரசு முழு மூச்சுடன் செயலாற்றி வருகிறது. நிலமற்றவர்களுக்கு நிலப்பட்டாவும், வீடின்றி வாடுவோருக்கு வீட்டுமனைப் பட்டாவும் வழங்கிடத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கண்டு, அண்டை மாநிலத்தவரும் அயல் நாட்டவரும் வியந்து பாராட்டுகின்றனர்.

சமதர்மச் சமுதாயம் அமைந்திட வழிகோலும் நில ஒப்படைத் திட்டத்தில், தஞ்சை மாவட்டத்தில் ஒரு தனிப்பெரும் சாதனையே ஏற்பட்டுள்ளது என்றால் மிகையல்ல. தஞ்சை மாவட்டத்தில் நில ஒப்படை செய்வதில் ஏராளமான இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் அவைகளை நன்முறையில் தீர்த்து வைத்து, நிலப்பட்டா, வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் தமிழ்நாடு அரசு வெற்றி நடைபோடுகிறது. இத்திட்டத்தின் கீழ், முதலில் ஆட்சேபணை இல்லாத புறம்போக்கு நிலங்களைச் சாகுபடிக்காகவும், வீட்டு மனைக்காகவும் ஒப்படை செய்வதில் தீவிரக் கவனம் செலுத்தப்பட்டது. அடுத்தாற்போல் வனத்துறை போன்ற அரசுத்துறைகளுக்குத் தேவைப்படாத நிலங்களையும், சாகுபடிக்காக ஒப்படை செய்யப்பட்டு வருகிறது. மேலும் ஆதீன ஒழிப்புச் சட்டத்தின் கீழ், நிலப்பட்டா பெறத் தவறிவிட்ட பல உழவர்களின் நலனைக் கருதி, அவரவர்கள் அனுபவித்து வரும் நிலங்களுக்குப் பட்டா கொடுக்கத் தமிழ்நாடு அரசு பல ஆணைகளைப் பிறப்பித்து வருகிறது. அதன் மூலம் ஆயிரக் கணக்கான உழவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

### சாகுபடிக்கான நில ஒப்படைப்புத் திட்டம்

நிலமற்ற ஏழை உழவர்களுக்குத் தரிசாகக் கிடக்கின்ற புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிட்டுத், தீவிரப் படுத்தியதன் காரணமாக 1969–70-ஆம் ஆண்டில் 11,810 ஏக்கர் சாகுபடி நிலம் 10,007 பேர்களுக்கும், 1970–71-ஆம் ஆண்டில் 15,118 ஏக்கர் நிலம் 14,342 பேர்களுக்கும் ஒப்படை செய்யப்பட்டது. 1971–72-ஆம் ஆண்டில் சாகுபடிக்கென ஒப்படை செய்ய நிலப்பரப்பு குறைவாக இருந்ததால், தஞ்சை மாவட்டத்திற்கு ஒப்படைக் குறியீட்டை 9,000 ஏக்கர் எனத் தமிழ்நாடு அரசு நிர்ணயித்தது. சென்ற ஆண்டில் (1–4–1971 முதல் 31–3–1972 வரை) 9,060 ஏக்கர் 63 சென்ட் நிலம் 9,637 பேர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளிலும் (1967–68 முதல் 1971–72 முடிய) தஞ்சை மாவட்டத்தில் நில ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு, அதற்கு முந்திய 7 ஆண்டுகளிலும் (1960–61 முதல் 1966–67 முடிய) சேர்த்து ஒப்படை செய்ததைப் போல் 18 மடங்கிற்கு மேலாகும். அதே காலத்தில் சாகுபடிக்கான நிலப்பட்டா பெற்றுப் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 23 மடங்கிற்கும் மேலாக உள்ளது.

### வீட்டுமனை ஒப்படைப்புத் திட்டம்

பறவைக்கும் கூடு உண்டு; பாம்புக்கும் புற்று உண்டு; பூச்சிப் பூரான்களுக்கும் பொந்து உண்டு; ஆனால், ஆறறிவு படைத்த மனிதர்களுக்கோ குடியிருக்கச் சொந்த மனை இல்லை. இப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாதென்பதற்காகத் தமிழ்நாடு அரசு கடந்த 5 ஆண்டுக் காலத்தில் தீவிர முயற்சி செய்து வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி வருகிறது.

கடந்த 5, ஆண்டுகளில் தஞ்சை மாவட்டத்தில் 28,653 பேர்களுக்கு 1,127 ஏக்கர் நிலம் வீட்டு மனைப்பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது. அதற்கு முந்திய 7 ஆண்டுகளில் (1960–61 முதல் 1966–67 முடிய) 1,666 பேர்களுக்கு 57 ஏக்கர் நிலம் மட்டுமே வீட்டு மனைப்பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் வீட்டு மனைப்பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கையை, அதற்கு முந்திய 7 ஆண்டுகளில் பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால், கடந்த 5 ஆண்டுகளின் சாதனை அதற்கு முந்திய 7 ஆண்டுச் சாதனையை விட 17 மடங்கு அதிகமாக உள்ளது குறிப்பிடத் தகுந்ததாகும். அது போலவே கடந்த 5 ஆண்டுகளில் வீட்டு மனைக்காக ஒப்படை செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பை, அதற்கு முந்திய 7 ஆண்டுகளில் ஒப்படை செய்யப்பட்டுள்ள பரப்புடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது, 19 மடங்காக உள்ளது என்பதும் குறிப்பிடத் தகுந்த சாதனையாகும்.

### தஞ்சை மாவட்டத்தின் மகத்தான சாதனைகள்

1960–61 முதல் 1971–72 வரையிலும் தரிசு நிலங்கள், வீட்டு மனைகள் ஒப்படை செய்த விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு | சாகுபடி நிலங்கள் ஒப்படை செய்தது | | வீட்டு மனைகள் ஒப்படை செய்தது | |
|---|---|---|---|---|
| | நபர்கள் | பரப்பு ஏக்கர் | நபர்கள் | பரப்பு ஏக்கர் |
| 1960–61 .. | 58 | 86 | 290 | 9 |
| 1961–62 .. | 225 | 378 | 253 | 8 |
| 1962–63 .. | 419 | 509 | 239 | 9 |
| 1963–64 ... | 415 | 473 | 23 | 1 |
| 1964–65 .. | 184 | 251 | 77 | 3 |
| 1965–66 .. | 77 | 172 | 120 | 4 |
| 1966–67 .. | 78 | 102 | 664 | 23 |
| ஏழு ஆண்டு மொத்தம் | 1,456 | 1,971 | 1,666 | 57 |
| 1967–68 | 34 | 40 | 672 | 25 |
| 1968–69 | 374 | 485 | 935 | 38 |
| 1969–70 | 10,007 | 11,810 | 11,236 | 431 |
| 1970–71 | 14,432 | 15,118 | 14,125 | 566 |
| 1971–72 | 9,637 | 9,060 | 1,685 | 67 |
| ஐந்து ஆண்டு மொத்தம், | 34,484 | 36,513 | 28,653 | 1,127 |

### ஆதீன ஒழிப்புச் சட்டத்தின் விதிகளுக்குப் புறம்பாகப் பட்டா வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள ஜமீன்களை (ஆதீனம்) ரயத்துவாரியாக மாற்ற 1948-ஆம் ஆண்டு ஜமீன் ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டு ஜமீன் கிராமங்கள் அரசினரால் எடுத்துக் கொள்ளப்பட்டு, நிலவரித் திட்டமும், அமல் செய்யப்பட்டது. நிலவரித் திட்ட விசாரணையின் போது பல உழவர்கள் விதிமுறைகளை அறியாமையால் காலத்தே பட்டா கோரி மனுச்செய்து கொள்ளத் தவறிவிட்டனர். அத்தகையோருக்கு இருவாரம், மற்றும் குடிக்காணி தன்மையுள்ள நிலங்களை உரிய முறையில் விசாரணை செய்து பட்டா வழங்கவும், நிலத்தின் தன்மையைக் கருத்தில் கொள்ளாமல், எவ்வித நீண்டகால அனுபோகத்தில் இருந்து வருபவர்களுக்கும் பட்டா வழங்கிட அரசு அவ்வப்போது ஆணைகள் பிறப்பித்து வந்துள்ளது.

மேற்படி ஆணைகளின் கீழ் 1960–61 முதல் 1970–71 முடிய 11ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் 8,111 பட்டா மனுக்கள் முடிவு செய்யப்பட்டு 3,027·89 ஏக்கர் நிலத்துக்குப் பட்டா வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீண்ட கால அனுபோகத்தின்படி பட்டா வழங்கிட அனுமதிக்கப்பட்ட 30–4–1971-ஆம் தேதியிட்ட அரசு ஆணை 1300-ன் படி கணிசமான உழவர், பட்டா கோரி மனுக்கள் கொடுத்ததை விசாரணை செய்வதற்கு, கடந்த ஆண்டில் அரசாங்கம் கூடுதலான அலுவலர்கள் நியமனம் செய்ததன் பேரில், 1971–72-ஆம் ஆண்டில் 4,112 மனுக்கள் மீது முடிவெடுக்கப்பட்டு 3760·05 ஏக்கர் நிலத்துக்குப் பட்டா வழங்கப்பட்டது. இன்னும் முடிவு எடுக்கவேண்டிய மனுக்களின் எண்ணிக்கை 958 ஆகும். இவைகளின் மீதும் விரைவில் முடிவெடுக்க ஆவன செய்யப்படுகிறது.

இதுவரை பட்டா வழங்கப்பட்டதன் மூலம் ஆயிரக்கணக்கான உழவர்களுக்குத் தங்கள் நிலங்களையும், குடியிருப்பு மனைகளையும் யாருடைய குறுக்கீடுமில்லாமல் அபிவிருத்தி செய்ய வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதே நேரத்தில் நில ஆக்கிரமிப்புகளைப் பட்டா செய்து கொடுத்ததன் மூலம், கிராம அதிகாரிகள் மற்றும் வருவாய்த்துறை மேல் அதிகாரிகள் இந்த ஆக்கிரமிப்புகளைப் பார்வையிட்டு,மேல் நடவடிக்கை எடுக்கவேண்டிய பணியைக் குறைத்து, இதன் மூலம் செலவு செய்து வந்த நேரத்தைப் பொது மக்களின் நன்மைக்கு உகந்த பல நல்ல காரியங்களில் ஈடுபடுத்திட வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனல் தஞ்சை மாவட்டப் பாமர மக்களின் வாழ்வில் துயர் நீங்கி வருகிறது.



# தொழில் வளர்ச்சி

**வே**ளாண்மையையே முக்கியமாகக் கருதித் தஞ்சை மாவட்ட மக்களில் பெரும் பகுதியினர் ஈடுபட்டதால் பிற தொழில் வளர்ச்சியில் இம் மாவட்டம் பின்தங்கியிருந்தது.

தமிழக அரசின் அறிவுரையால், தொழில் துறையில் முன்னேற்றம் காணும் நல்ல நோக்கோடு 1969-ஆம் ஆண்டில் கும்பகோணம் நகரில் ''தொழிற் பெருக்கு விழா'' ஒன்று நடத்தப் பெற்றது. அதில் மத்திய அரசுச் சிறு தொழில் சேவா நிலையம், தேசியச் சிறு தொழில் நிறுவனம், அரசு வங்கிப் பிரதிநிதிகள், இயந்திரங்கள் உற்பத்தி செய்து வழங்குபவர், மாநில அரசுத் துறைப் பிரதிநிதிகள், தொழில் துவக்கிட ஆர்வமுள்ளவர்கள், தொழில் பிரமுகர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் அவ்விழாவில் பங்கேற்றுத் தொழில் துவங்கப் பல் வகையான வாய்ப்புகளையும் வழிமுறைகளையும் தெரிந்து கொண்டனர். அதன் விளைவாக, இதுவரை, சுமார் 1,300 சிறு தொழில் நிறுவனங்கள் பதியப் பெற்றன; மனுக்களுக்குத் தவணை முறையில் இயந்திரங்கள் வழங்கப் பரிந்துரைக்கப்பட்டன.

இம்மாவட்டத்தில் பதியப் பெற்றுள்ள சிறு தொழில் நிறுவனங்கள் விவரம் வருமாறு:—

| ஆண்டு. | எண்ணிக்கை. |
|---|---|
| 1969 | 642 |
| 1970 | 1,323 |
| 1971 | 1,235 |

இத்தொழிலகங்களில் சுமார், 6,500 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. சிறு தொழில் வளர்ச்சியடையத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் பித்தளை, எவர்சில்வர் பாத்திரங்கள், வாசனைப் புகையிலை, வாசனைப் பவுடர், வாசனைத் திரவியங்கள் அகர்பத்தி, வீணை, கலைத்தட்டு, காகிதப் பொம்மை, சீவல் தயாரிக்கும் தொழில்கள், வார்ப்பட வேலைப்பாடமைந்த சிலைகள் தயாரித்தல் முதலிய தொழில்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

கந்தர்வக் கோட்டையில் முந்திரி பக்குவப்படுத்தப் பெற்று முந்திரிப் பருப்பு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**கயிறு தயாரித்தல்.**

இம்மாவட்டத்தில் தென்னை மரங்கள் ஏராளமாக உள்ளதால் கேரளத்தைப் போன்று தமிழ் நாட்டில் தென்னை நார், கயிறு மற்றும் கயிறு சார்ந்த பொருட்கள் தயாரித்தலுக்கான தொழிலகங்கள் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மன்னார்குடிக்கு அருகில், உள்ள பாமணியில் குறுணை வடிவ இரசாயன உரத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

திருவாரூரில் நவீன அரிசி ஆலை அமைக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றி வருகிறது.

அரசுத் தொழில் வணிகத் துறையில் கீழ்க்காணும் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. பஞ்சலோக விக்கிரகங்கள் உற்பத்தி நிலையம், சுவாமிமலை.
2. உலோகக் கலைப் பொருள் பயிற்சி நிலையம், சுவாமிமலை.
3. உலோகக் கலைத்தட்டுப் பயிற்சி நிலையம், தஞ்சாவூர்.
4. வெண்கல வார்ப்பு மற்றும் பயிற்சி நிலையம் (Bell Training Centre) நாச்சியார் கோவில்.



5. எலக்ட்ரோ மெடிகல் எகியுப்மென்ட் செல், தஞ்சாவூர்.

தமிழ்நாடு சிறு தொழிற் கழகம் லிமிடெட் நிர்வாகத்தின் கீழ், கீழ்க்கண்ட நிலையங்கள் பணியாற்றுகின்றன.

1. டான்சி பொறியியல் தொழில் பட்டறை, தஞ்சாவூர்.
2. டான்சி கருவி சேவா நிலையம், தஞ்சாவூர்.
3. டான்சி பிராஸ்வேர் யூனிட், கும்பகோணம்.
4. டான்சி கார்பன்ட்ரி யூனிட், மன்னார்குடி.
5. டான்சி பொறியியல் தொழில் பட்டறை, மாயூரம்.

இவை தவிரத் தமிழ்நாடு அரசுத் தொழில் வாணிகத் துறை நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் 18 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

**தொழிற்பேட்டைகள்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், கும்பகோணம், நாகைப்பட்டினம் முதலான இடங்களில் தொழிற் பேட்டைகள் தமிழ்நாடு அரசால் நிறுவப் பட்டுத் தொழில் ஆரம்பிக்கச் சகல வசதிகளும் கூடிய தொழிற்கூடங்கள் தனியாருக்கு மாத வாடகைக்கு வழங்கப் படுகின்றன.

திருவாரூர் நகரில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்குரிய வாய்ப்புகள் குறித்து அரசு தீவிரப் பரிசீலனை செய்து வருகிறது.

**சிறு தொழில்களுக்குக் கடனுதவி**

இம் மாவட்டத்தில் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களுக்குப் பின்கண்ட வாறு கடன் தொகை வழங்கப் பட்டுள்ளது.

**வழங்கிய கடன் அளவு.**

| ஆண்டு | ரூபாய். |
|---|---|
| 1967-68 | 1,12,850 |
| 1968-69 | 2,33,200 |
| 1969-70 | 1,48,800 |
| 1770-71 | 1,10,316 |
| 1971-72 | 2,03,291 |

கடன்கள் குறைந்த வட்டியில் நீண்ட காலத் தவணையில் வழங்கப்படுகின்றன.

# கால்நடை மேம்பாடு

தஞ்சை மாவட்டத்தில் கால்நடை வளர்ப்புத் துறை இணை இயக்குநர் அவர்களின் கீழ், 6 கால்நடை உதவி இயக்குநர்களும், 1 கண்காணிப்பாளரும் பணியாற்றுகின்றனர். இம் மாவட்டத்தில் 44 கால்நடை மருந்தகங்கள் ஊராட்சிஒன்றியப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. நகராட்சிப் பகுதிகளில் கால் நடை மருத்துவ நிலையங்கள் 4 செயல்படுகின்றன. இம்மாவட்டத்தில் வெக்கை நோய் தடுப்புப் பணி தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. நோய் பரிசோதனை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இவை தவிர, வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இத்துறை புனரமைப்பின் காரணமாகத் தஞ்சை மாவட்டத்தில் 217 கிளை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் தற்பொழுது 89 கால்நடை உதவி மருத்துவர்களும், 217 கால்நடை விரிவாக்க அலுவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

தஞ்சை மாவட்டத்தில் 16,55,976 வெள்ளையினக் கால்நடைகளும், 3,15,047 கருப்பு இனக் கால்நடைகளும் உள்ளன. இந்த மாவட்டத்தில் 1970–71-ஆம் ஆண்டில் கால் நடை மருந்தகங்களில் செய்யப்பட்டுள்ள சிகிச்சை விவரங்கள்:

சிகிச்சை அளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை. 2,11,397

காயடிக்கப்பட்ட கால் நடைகளின் எண்ணிக்கை 24,574

தடுப்பூசிகள் போடப் பட்டவை 3,23,394

இம்மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவ மனையில் இயற்கைப் பொலிவுக்காக 53 உயரினக் காளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மற்றும் செயற்கைப் பொலிவுக்காக 4 கால்நடை மருத்துவமனைகளில் உயரினக் காளைகள் பராமரிக்கப் பட்டு, வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கால்நடை அபிவிருத்திக்குத் தேவையான பொலி காளைகளை உற்பத்தி செய்து **வளர்த்து, விநியோகம்** செய்வதற்காக இம்மாவட்டத்தில் ஒரத்த நாட்டில் அரசினர் கால் நடைப்பண்ணை நடத்தப்பட்டு வருகிறது.

ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையில் சிந்தி, உப்பளாச்சேரி மற்றும் முர்ரா இனக் காளைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் விந்து சேகரிக்கும் நிலையங்கள் ஏற்படுத்தி அதன் மூலம் செயற்கை முறை இனவிருத்திப் பகுதிகளை விரிவு படுத்தத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

வட்டார வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆட்டுக்கடாக்கள் வாங்கி பாதி விலையில் விநியோகிக்கப் பண ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செங்கிப்பட்டி பசு மடத்திலுள்ள ஆடு வளர்ப்புப் பிரிவை விரிவு படுத்த ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



உணவுக்குப் பயன்படுத்த உயர் ரக யார்க்ஷயர் வெள்ளைப் பன்றிகள் ஒரத்தநாடு பண்ணையில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

மக்களிடையே பன்றி வளர்ப்பைப் பெருக்க வேளாண்மை மானியத் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஆண் பன்றி ஒன்றும், மூன்று பெண் பன்றிகளும் 60 சத சலுகை விலையில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் துறையில் சிறந்த முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. அரசினர் கோழிப் பண்ணைகள் மிகவும் சீரிய முறையில் இயங்குவதால் மொத்தத்தில், கோழி முட்டைகள் உற்பத்தி மிகக் கணிசமான அளவில் அதிகரித்துள்ளன என்பதைப் பின்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

| ஆண்டு. | உற்பத்தியாகிய முட்டைகள். |
|---|---|
| 1969–70 | 1,96,754 |
| 1970–71 | 2,96,713 |
| 1971–72 | 7,66,650 |

இம் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையின் கோழியின விரிவினை நிலையத்திலும், குஞ்சு பொரிக்கும் திட்டம் பிரத்தியேகமாகத் தீட்டப்பட்டு நிறைவேற்றப்படுகின்றது. இவைகளினின்று விநியோகிக்கப்பட்ட குஞ்சுகளின் விவரம்.

| ஆண்டு. | எண்ணிக்கை. |
|---|---|
| 1969–70 | 11,917 |
| 1970–71 | 12,862 |

கூடிய விரைவில் இத் திட்டங்களால் தஞ்சை மாவட்டத்திற்கு நற்பயன் விளையும் என்பது திண்ணம்.

# தமிழகத்தின் நெற்களஞ்சியம்



‘தமிழகத்தின் நெற்களஞ்சியம்,’ என்று தொன்று தொட்டுவழங்கப் பெற்றுவரும் தஞ்சை மாவட்டம், தமிழகத்தில் பசுமைப் புரட்சி தோன்றுவதற்கு வித்திட்ட மாவட்டமாகும். தமிழகத்தில் உற்பத்தியாகும் மொத்த அரிசி உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கை உற்பத்தி செய்து தருவது தஞ்சை மாவட்டமே! காவிரி நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 12.50 இலட்சம் ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெற்றுவரும் தஞ்சை மாவட்டத்தில் ‘‘தீவிரச் சாகுபடித் திட்டம்’’ எனப்படும் மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம் (Intensive Agricultural District programme) 1960-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் நிறைவேற்றப்பெற்று வரும் தீவிரச் சாகுபடித்திட்டத்தின் வெற்றியே தமிழகத்தின் உணவுப் பற்றுக் குறையைத் தீர்த்தது என்று கூறுவதில் தவறில்லை. கடந்த ஐந்தாண்டுகளில் தஞ்சை மாவட்டத்தின் வேளாண்மையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி கண்டு உலகமே வியக்கிறது.

காலம் நமக்குக் கற்றுத்தந்த பாடத்தையும், உழவர் பெருமக்களின் அனுபவத்தையும் அடிப்படையாகக்கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டு வந்த தஞ்சை மர்வட்ட நன்செய் நிலங்களிலே இருபோகச் சாகுபடித் திட்டத்தை (Double Cropping programme) 1967-68-ஆம் ஆண்டிலே செயல்படுத்தத் திட்டமிட்டார்.

தஞ்சை மாவட்ட ஒரு போக சாகுபடி நிலங்களில் இருபோகம் சாகுபடி செய்யும் திட்டத்தை முதன்முதலாகத் துவக்கியது 1967—1968 ஆம் ஆண்டில் தான். இன்றைய முதல்வர்அவர்கள்பொதுப்பணித் துறை அமைச்சராகப் பணியாற்றிய நேரத்திலே, தஞ்சாவூரில் நீர்ப்பாசன மாநாடு கூட்டினார். அந்த மாநாட்டில் விரிவாக விவாதித்து முடிவு எடுக்கப் பட்டதே இருபோக சாகுபடித்திட்டம் திட்டமிட்டபடி இருபோகசாகுபடித் திட்டம் தீவிரமாகச் செயல்பட ஆவன செய்யப்பட்டது.

அதன் பயனாக, எடுத்த எடுப்பிலேயே—முதல் ஆண்டிலேயே (1967-68) தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 2.1 இலட்சம் ஏக்கர் ஒருபோக சம்பா நிலத்தில் இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது. அதன் காரணமாக முதற் போகத்தில் மட்டும் 5,92,000 ஏக்கரில் ஆடுதுறை-27 நெல் பயிரிடப்பட்டது. அதனால் 13.83 கோடி ரூபாய் மதிப்புள்ள 2,88,210 டன் அரிசி அதிகமாக உற்பத்தியாகியது. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு முதல் போகத்தில் மட்டுமே 115.29 இலட்சம் ரூபாய் உபரி வருமானம் கிடைத்தது. இரண்டாவது போகத்தில் ஏறத்தாழ 6 கோடி ரூபாய் அதிகமாக வருமானம் உழவர்களுக்கு கிடைத்தது.

இருபோக சாகுபடித் திட்டத்தின் வெற்றி, உழவியல் சரித்திரத்திலேயே எங்கும், என்றும், கண்டும், கேட்டுமிராத மாபெரும் சாதனையாகும்.

இத்திட்டத்தின் காரணமாக உற்பத்தி பெருகி, அபரிமிதமாக விளைந்த நெல்லை உடனடியாகக் காயவைத்துப் பதப்படுத்திச் சேமித்து வைக்க நெல் உலர்த்தும் ஆலைகள் 30 தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்தப் பட்டது இந்தத் திட்டத்தின் மற்றொரு வெற்றியாகும்.

அதிக உற்பத்தியின் காரணமாக 1967-68-ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 4.5 இலட்சம் டன் அரிசி கொள் முதல் செய்யப்பட்டுத் தமிழ்நாட்டில் நீண்ட நெடுநாட்களாக நிலவியிருந்த உணவுத் தட்டுப்பாடு நீக்கப்பட்டுத் தன்னிறைவு அடைய வழி செய்தது இத்திட்டத்தின் மற்றொருவெற்றியாகும்.

இப்படிப் பல்வேறு பயனை விளைவித்த இத்திட்டத்தை ‘அமைதிப் புரட்சி’ (Silent revolution in Agriculture) என்று அமெரிக்க நாட்டு ‘லுக்’ (Look) என்ற பத்திரிகை—நாளொன்றுக்கு 70 இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் இதழ்—பாராட்டிப் புகழ்ந்தது.

வழக்கமாகத் தஞ்சை மாவட்டத்தில் 1967-68-ஆம் ஆண்டிற்கு முன்புவரை, ஆண்டுதோறும் சுமார் 3 இலட்சம் ஏக்கர்களில் குறுவையும், சுமார் 9 இலட்சம் ஏக்கர்களில் சம்பாவும், 2·70 இலட்சம் ஏக்கர்களில் தாளடியும் ஆக, மொத்தத்தில் 14.70 இலட்சம் ஏக்கர்களில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. தமிழ்நாடு அரசு அளித்துவரும் ஊக்கத்தாலும், உதவியாலும் தூண்டப் பெற்ற இந்த மாவட்ட உழவர்கள் இருபோகச்சாகுபடித் திட்டத்தில் பேரார்வம் காட்டி வருகின்றனர். இருபோகச் சாகுபடித் திட்டத்தின் காரணமாகத் தஞ்சை மாவட்டத்தின் மொத்தச் சாகுபடிப் பரப்பு 1967-68ஆம் ஆண்டு முதல் பின்கண்டவாறு அதிகமாகி வருகிறது.

| ஆண்டு. | | பரப்பு. (இலட்சம் ஏக்கர்.) |
|---|---|---|
| 1967–68 | ... | 15·68 |
| 1968–69 | ... | 15·99 |
| 1969–70 | — | 16·78 |
| 1770–71 | — | 16·73 |
| 1971–72 | — | 16·72 |

தஞ்சை மாவட்டத்தில் உயர் விளைச்சல் நெல் வகைகளின் பரப்பும் கீழ்க் கண்டவாறு அதிகமாகி வருகிறது.

| ஆண்டு. | | பரப்பு. (இலட்சம் ஏக்கர்கள்.) |
|---|---|---|
| 1968–69 | .. | 5·68 |
| 1969–70 | .. | 12·90 |
| 1970–71 | .. | 13·96 |
| 1971–72 | .. | 15·56 |

இரசாயன உரங்கள் கிடைக்காமல், அல்லல் பட்டுக்கொண்டிருந்த தஞ்சை மாவட்ட உழவர்களுக்குத் தேவையான உரத்தை, தேவையான அளவு, தேவையானபொழுது கிடைக்கத் தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாகத் தஞ்சை மாவட்டத்தில் இரசாயன உரங்களின் உபயோகமும் பின்கண்டவாறு கூடி வருகிறது.

தழைச்சத்து உரங்கள்—

(அமோனியம் சல்பேட் அடிப்படையில்.)

| ஆண்டு. | | மெட்ரிக் டன்கள். |
|---|---|---|
| 1967–68 | .. | 89,334 |
| 1968–69 | ... | 94,737 |
| 1969–70 | .. | 1,05,028 |
| 1970–71 | .. | 1,19,755 |
| 1971–72 | ... | 1,37,715 |

மணிச்சத்து உரங்கள்—

(சூப்பர் பாஸ்பேட் அடிப்படையில்.)

| ஆண்டு | | மெட்ரிக் டன்கள். |
|---|---|---|
| 1967–68 | .. | 59,819 |
| 1968–69 | .. | 66,789 |
| 1969–70 | .. | 73,236 |
| 1970–71 | .. | 83,400 |
| 1971–72 | .. | 98,075 |

சாம்பல் சத்து உரங்கள்—

| ஆண்டு. | | மெட்ரிக் டன்கள். |
|---|---|---|
| 1967–68 | .. | 2,379 |
| 1968–69 | .. | 2,710 |
| 1969–70 | .. | 4,965 |
| 1970–71 | .. | 9,381 |
| 1971–72 | .. | 13,585 |




இருபோகச் சாகுபடித் திட்டத்தின் கீழ் விளைந்த ஆடுதுறை 27 அரிசியைத் தனி இரயிலில் அனுப்பும் விழாவை இந்திய அமைச்சர் திரு ஜகஜீவன்ராம் அவர்கள், முன்னாள் தமிழக முதல்வர் அண்ணா அவர்கள் தலைமையில் துவக்கி வைத்த காட்சி.

பூச்சி, பூஞ்சாள மருந்துகளின் உபயோகமும் தஞ்சை மாவட்டத்தில் பெருகி வருகிறது, என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

| ஆண்டு. | | மெட்ரிக் டன்கள். |
|---|---|---|
| 1967–68 | .. | 4,913 |
| 1968–69 | .. | 8,225 |
| 1969–70 | ... | 8,111 |
| 1970–71 | .. | 10,050 |
| 1971–72 | .. | 12,143 |

மும்முரவேளாண்மை மாவட்ட திட்டத்தின்கீழ், தஞ்சை மாவட்ட உழவர்களுக்குவழங்கப்பட்டுள்ள கூட்டுறவுக் கடன் தொகைகளும் கீழ்க் கண்டவாறு அதிகமாகி வருகின்றன.

| ஆண்டு. | | ரூபாய். |
|---|---|---|
| 1967–68 | .. | 3,62,13,227 |
| 1968–69 | .. | 4,51,06,939 |
| 1969–70 | .. | 4,98,94,000 |
| 1970–71 | .. | 5,84,37,921 |
| 1971–72 | .. | 7,62,12,000 |

இவ்வாறு பல்வேறு வகைகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளின் காரணமாக, 1966-67-ஆம் ஆண்டில் 8·77 இலட்சம் டன்னாக இருந்த தஞ்சை மாவட்டத்தின் அரிசி உற்பத்தி கீழ்க்கண்டவாறு ஆண்டிற்காண்டு கூடி வருகிறது.

| ஆண்டு. | | இலட்சம் டன்கள். |
|---|---|---|
| 1967–68 | ... | 9·20 |
| 1968–69 | ... | 11·67 |
| 1969–70 | ... | 12·04 |
| 1970–71 | ... | 13·01 |

வரலாறு காணாத இச் சாதனையை உருவாக்கிய தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்களைப் ‘புதுமை விரும்பும் உழவர்கள்,’ (Innovative Farmers) என்றும், தஞ்சை மாவட்டத்தைப் ‘புதுமை புகுத்தும் மாவட்டம்’ (Innovative District) என்றும், உலகமெங்கும் புகழ்கிறார்கள்.

# நாகைக் கோட்டத்தில் சாலை வளர்ச்சி



நீண்ட நெடுங்காலமாகக் கீழ்த் தஞ்சைப் பகுதியில் நல்ல சாலைகள் இல்லை, என்ற குறை அப்பகுதி வாழ் மக்களிடையே நிலவி வந்தது. அந்தக் குறையைத் தீர்த்திடத் தமிழ்நாடு அரசு சென்ற ஐந்தாண்டுக் காலமாகப் பெரு முயற்சி எடுத்து வருகிறது. அதன் பயனைத் தற்பொழுது நாகைக் கோட்டத்தில் நல்ல சாலைகள் பல உருவாகியுள்ளன. இன்னும் பல உருவாக இருக்கின்றன.

வடிகால் வசதியற்றுத் தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதியும், உவர்—களர் மண் பகுதியும், பிசுபிசுப்பான களிப்பு மண் பகுதியும் நிறைந்த கீழத் தஞ்சைப் பகுதியில் சென்ற 3 ஆண்டுக் காலத்தில் மிகவும் குறிப்பிடத் தகுந்த அளவுக்குச் சாலை மேம்பாட்டு வேலைகள் நடைபெற்றுள்ளன என்றால் மிகையாகாது.

கீழத் தஞ்சைப்பகுதியில் 1969-70, 1970-71 ஆம் ஆண்டுகளில் 46·81 இலட்சம் ரூபாய்க்குச் சாலை மேம்பாடு வேலைகளும், பாலங்கள் மதகுகள் கட்டும் வேலைகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அதன் பயனாய் 5 பாலங்களும், ஒரு மூழ்கு பாலமும், கட்டப்பட்டதுடன், 8 சாலைகளில் மொத்தம் 35 கிலோ மீட்டர் நீளத்திற்குப் புதிதாக அமைக்கப்பட்டும், மேம்பாடு செய்யப்பட்டும் உள்ளன. அவைகளின் விவரம் வருமாறு :—

| | வேலையின் பெயர். | செலவு (இலட்ச ரூபாயில்). |
|---|---|---|
| 1 | மாவூர் — சாட்டியக்குடி சாலையை ஜல்லிக் கல்லிட்டுத் தார் சாலையாக்கி மதகுகளும் கட்டியது மைல் 0/0—4/5. | 4·25 |
| 2 | கருங்கண்ணி-கொளப்பாடு சாலையை மேம்பாடு செய்து தார்போட்டது மைல்0/0—5/0. | 2·55 |
| 3 | வடுகக்குடிகிராமத்தில் அரசலாற்றில் ஒரு மூழ்கு பாலம் கட்டியது | 3·45 |
| 4 | திருக்கடையூர் — மாணிக்கப்பங்கு (வழி) தாழம்பேட்டை சாலை போட்டு ஜல்லிக் கல்லிடல். | 1·65 |
| 5 | ஆக்கூர்—முக்கூட்டு — சின்னங்குடி (வழி) கிடங்கல், களமநல்லூர் சாலை போட்டு ஜல்லிக்கல்லிடல். | 3·30 |
| 6 | புதுப்பட்டினம்—மாதவமேடு சாலை போட்டு ஜல்லிக்கல்லிடல் | 2·00 |
| 7 | திருமுல்லைவாசல்—கூழையார் சாலை போட்டு ஜல்லிக்கல்லிடல் | 4·47 |
| 8 | பெருந்தோட்டம் —நாயக்கர்குப்பம் சாலை போட்டு ஜல்லிக்கல்லிடல் | 3·54 |
| 9 | கோபாலசமுத்திரம் —வாய்மைமேடு சாலை மேல் 6/7ல் வளவனாற்றில் பாலம் கட்டியது. | 4·65 |
| 10 | கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம் எண்கண் அருகே வெட்டாறு, ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டியது. | 5·65 |
| 11 | பூந்தோட்டம்—காரைக்கால் சாலையில் மைல் 4/7—8-ல் அரசலாற்றில் பாலம் கட்டியது. | 4·82 |
| 12 | ஆலங்குடி—தலைஞாயிறு, தாழந்திருவாசல் சாலை மைல் 23/7ல் வேதாரண்யம் கால்வாயில் பாலம் கட்டியது. | 3·30 |
| 13 | தென்னலக்குடி — வைத்தீஸ்வரன் கோயில் சாலையில் மைல் 6-ல் கூப்புடுவனாற்றில் பாலம் கட்டியது. | 3·18 |
| | மொத்தம் | 46·81 |

சென்ற ஆண்டில் (1971-72) 114·83 இலட்ச ரூபாய்க்குச் சாலை மேம்பாட்டு வேலைகளும், பால வேலைகளும், மேம்பால வேலைகளும் கீழக்கண்டவாறு கீழத்தஞ்சைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

| | வேலையின் பெயர். | செலவு (இலட்சம் ரூபாயில்). |
|---|---|---|
| 1 | சிக்கல் — ஓட்டத்தட்டை சாலையில் மைல் 3/7 ல் கடுவையாற்றில் பாலம் கட்டுதல் | 4·90 |
| 2 | பாப்பாகோயில்—கருங்கண்ணி சாலையில் மைல் 7/5 ல் 'வெள்ளையாற்றில் பாலம் கட்டுதல். | 5·00 |

| | | |
|---|---|---|
| 3 | நாகப்பட்டினம் — வேளாங்கண்ணி சாலையிலிருந்து செருதூர் வரையில் சாலை அமைத்து கப்பி போடுதல். | 1·93 |
| 4 | செம்பனார்கோயில்—நல்லாடை சாலையில் நல்லாடையிலிருந்து மாநில எல்லை வரையில் சாலை மேம்பாடு செய்தல். | 1·00 |
| 5 | சீர்காழி—பனங்காட்டான்குடி சாலையில் மைல் 4/8ல் புதுமண்ணியாற்றுக்குப் பாலம் கட்டுதல். | 3·00 |
| 6 | தோப்புத்துறை புகைவண்டி நிலையத்திலிருந்து ஆற்காடு தெரு வரையில் மேம்பாடு செய்தல். | 2·50 |
| 7 | ஆலங்குடி—தலைஞாயிறு சாலையில் மைல் 20/2 ல் அரிச்சந்திரா நதிக்குப் பாலம் கட்டும் வேலை. | 3·60 |
| 8 | எட்டுக்குடி-கீழப்பையூர் நெல்லியாடி சித்தாய்மூர் சாலையில் பாலம் கட்டுதல் | 3·00 |
| 9 | நாகப்பட்டினம் — வேளாங்கண்ணி சாலையில் மைல் 0/2 ல் உப்பனாற்றிற்குப் பாலம் கட்டுதல். | 3·96 |
| 10 | சாட்டியக்குடி-திருக்குவளை சாலையில் தார்ச்சாலையாக்கி மேம்பாடு செய்தல் | 5·40 |
| 11 | பூந்தோட்டம்—காரைக்கால் சாலையில் அரசலாற்றில் கரையை அகலப்படுத்திச் சாலைக் கப்பி போடுதல். | 7·00 |
| 12 | தஞ்சாவூர்—நாகப்பட்டினம் சாலை கி. மீ. 39/0—49/0 அகலப்படுத்தி மேம்பாடு செய்தல். | 6·29 |
| 13 | செங்கதலை பாலத்திலிருந்து தோப்புத்துறை வரை கப்பி போடுதல் | 7·69 |
| 14 | வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலையில் மைல் 15—2ல் பாலம் அமைத்தல் | 5·06 |
| 15 | செங்கதலை பாலத்திலிருந்து வேதாரண்யம் சாலை மேம்பாடு செய்து ஜல்லிக் கல்லில் கி. மீ. 13/2—21/2. | 5·00 |
| 16 | கும்பகோணம் — சீர்காழி சாலை மைல் 20/7ல் இருப்புப் பாதை கடப்புவாயிலுக்கு மேம்பாலம் கட்டுதல் | 44·00 |
| 17 | கொண்டத் தூர்-பாகசாலை கி. மீ. 0/0—5/8 மேம்பாடு செய்தல் | 2·20 |
| 18 | மாயூரம் நகர மன்ற எல்லைக்குள் காவிரி மற்றும் முத்தப்பன் காவிரியின் குறுக்கே பாலங்கள் கட்டுவது. | 3·30 |
| | மொத்தம் | 114·83 |

இத்திட்டத்தால் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களும் கிராம மக்களும் பெரும் பலன் பெறுவர் என்பது உறுதி.

## வெண்பாப் போட்டி 34

முறிப்படி :

சாலை பலவமைத்தார் சார்ந்து.

முடிவு நாள் : 15—5—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை-2.

குறிப்பு :—
நேரிசை வெண்பாக்களே அனுப்பப் படவேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.


## தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்



Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப்பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்திப் புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்
டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.S., A.M.I.H.
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD.) பழனி, S.I.
போன் : 16 தந்தி : சித்தர்

சென்னை கிளை ஆபீஸ் :
41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1
போன்: 21448



# பிறந்த மண்ணுக்குப் பெருமை தேடித் தந்தவர்

தென்னகத்தின் நெற்களஞ்சியமாகவும், சொற்களஞ்சியமாகவும், கலைக் களஞ்சியமாக திகழும் தஞ்சை மாவட்டத்தில் சிற்றூர்கள் ஏராளம்! சின்னஞ் சிறிய ஊர்களென்றாலும், தென்னை சூழ்ந்த சிங்காரச் சோலையாகவே அவை திகழ்கின்றன. அத்தகைய சிற்றூர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாய் விளங்குவது திருக்குவளை.

"தன்னைப் பெற்ற தாய்க்கும், தந்தைக்கும் எப்படி ஒவ்வொருவனும் கடமைப் பட்டிருக்கின்றானே, அப்படித்தான் தன்னைப் பெற்ற மண்ணுக்கும் ஒவ்வொருவனும் கடமைப் பட்டிருக்கிறான்" என்று கூறும் முதலமைச்சர் கலைஞர் "அஞ்சுகம் — முத்துவேலர் தாய்சேய் நலவிடுதி" ஒன்றினை திருக்குவளையில் அவருடைய சொந்தச் செலவில் கட்டிக் கொடுத்துள்ளார்.

குழந்தையாய் இருந்தபோது தவழ்ந்து விளையாடிய பழைய வீடு கடனில் மூழ்கிப் போன நிலையில், தருமபுரம் ஆதீனத்தாரிடம் பணங்கொடுத்து அந்த இல்லத்தை மீட்டுத் தான் பிறந்த மண்ணிற்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ள முதலமைச்சர் அவர்கள் அதைப் புதுப்பித்து முத்துவேலர் நூலகமும் அஞ்சுகம் படிப்பகமும் நிறுவியுள்ளார். திருக்குவளையில் ஒரு உயர் நிலைப் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொண்டுள்ளார். மிக நவீன முறையிலான அக் கட்டடம் வரும் ஜூன் திங்கள் முதல் நாள் தமிழக ஆளுநரால் திறக்கப்படும் நிலையில் இருக்கிறது.

முத்து

# தஞ்சை மாவட்ட

## அடிப்படைப் புள்ளி விவரங்கள்

பரப்பளவு—23,93,974 ஏக்கர் (3,740 சதுர மைல்).

மக்கள் தொகை—

| | |
|---|---|
| 1 கிராமப்புற மக்கள் தொகை | 25,84,407 |
| 2 நகரப்புற மக்கள் தொகை | 6,61,520 |
| 3 மொத்த மக்கள் தொகை | 32,45,927 |
| 4 மக்கள் தொகை நெருக்கம் (1 சதுர மைலுக்கு). | 868 |

தொழில் வாரியாக வேலை செய்யும் மக்கள் தொகை—

| | |
|---|---|
| 1 சாகுபடி வேலை செய்பவர்கள். | 4,94,668 |
| 2 வேளாண்மைக் கூலிகளாக உள்ளவர்கள். | 4,45,975 |
| 3 எல்லாத் தொழிலும் சேர்ந்து வேலை செய்பவர்கள். | 13,63,546 |

| | |
|---|---|
| தனிமனிதனுக்குச் கிடைக்கக்கூடிய சராசரி நிலப்பரப்பு. | 0.74 |
| தனிமனிதனுக்குக் சாகுபடிக்காகக் கிடைக்கக் கூடிய பரப்பு. | 0.45 |
| கிராமங்கள் | 2,406 |
| குக்கிராமங்கள் | 3,785 |
| நகராட்சி மன்றங்கள் | 1,593 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 36 |
| பேரூராட்சி மன்றங்கள் | 43 |
| வட்டங்கள் | 12 |
| கோட்டங்கள் | 6 |

நிலப்பரப்பின் வகைகள்—

| | ஏக்கர். |
|---|---|
| 1 கிராமக்கணக்குகளின் படி நிலப்பரப்பு. | 23,92,585 |
| 2 காடுகள் | 34,870 |
| 3 வேளாண்மைக்குப் பொருத்த மற்ற பரப்பு. | 78,515 |
| 4 வேளாண்மை தவிர வேறு வகைக்குப் பயன்படும் பரப்பு. | 4,79,166 |
| 5 சாகுபடிக் கழிவு நிலங்கள் | 77,215 |
| 6 நிரந்தரமான புல்தரைகளும் மேய்ச்சல் நிலங்களும். | 15,739 |
| 7 பல்வேறு வகை மரங்கள், தோப்புகளின் கீழுள்ள பரப்பு. | 41,935 |
| 8 விதைக்கப்படும் பரப்பு | 15,36,752 |
| 9 ஒரு தடவைக்கு மேல் சாகுபடி யாகும் பரப்புகளையும் சேர்த்து மொத்தம் பயிராகும் பரப்பு. | 21,31,931 |

சாகுபடியாகும் முக்கியப் பயிர்களின் பரப்பு—

| | ஏக்கர். |
|---|---|
| 1 மொத்த நெற்பயிர் பரப்பு | 15,67,698 |
| 2 சோளம் | 1,343 |
| 3 கம்பு | 3,191 |
| 4 கேழ்வரகு | 8,072 |
| 5 வரகு | 32,847 |
| 6 மக்காச்சோளம் | 8,239 |
| நெல் முதலிய தானியப் பயிர்களின் மொத்தப் பரப்பு. | 16,22,730 |
| 7 மொத்தப் பருப்பு வகைப் பயிர்கள் | 76,992 |
| 8 கரும்பு | 12,816 |
| 9 பழங்கள், காய்கறிகள், கிழங்கு வகைப் பயிர்கள். | 42,502 |
| 10 எண்ணெய் வித்துக்க்ள் | 1,59,73 |
| 11 மருந்து மற்றும் போதைப் பயிர்கள். | 3,0581 |

முக்கிய நீர்ப்பாசன ஆதாரங்கள்—

| | |
|---|---|
| 1 அரசினர் வாய்க்கால்கள் | 134 |
| 2 ஊராட்சி ஒனறிய ஏரிகள் | 610 |
| 3 நிலவருவாய் துறை ஏரிகள் | 208 |
| 4 பொதுப்பணித்துறை ஏரிகள் | 267 |
| 5 குழாய்க்கிணறுகள் | 1,15 |
| 6 வடிமுனைக் குழாய்க்கிணறுகள் | 5,939 |
| 7 கிணறுகள் | 36,653 |
| 8 நீர்த் தேக்கங்கள் | 883 |

குடிநீர் வசதிகள் —

| | |
|---|---|
| 1 மேல்நிலை தண்ணீர்த் தொட்டிகள். | 173 |
| 2 குழாய் மூலம் தண்ணீர் வசதிகள். | 92 |
| 3 தானியங்கி அழுத்தத் தொட்டிக்ள். | 101 |
| 4 தரைமட்ட நீர்த் தேக்கம் | 4 |
| 5 கைப்பம்புகள் | 11,168 |
| 6 குழாய்க் கிணறுகள் | 5,958 |
| 7 துளைக் கிணறுகள் | 679 |
| 8 கிணறுகள் | 4,185 |
| 9 ஊருணிகள் | 295 |
| 10 இதர வகைகள் | 34 |

நல்வாழ்வு, துப்புரவு வசதிகள்—

| | |
|---|---|
| 1 மருத்துவ மனைகள் | 35 |
| 2 தொடர்ந்து நடைபெறும் மருந்தகங்கள். | 42 |
| 3 கிராமப்புற மருந்தகங்கள் | 89 |
| 4 தாய்சேய் நல விடுதிகள் | 280 |
| 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 36 |

# வெண்பாப் போட்டி

## 31. களையுயர்த்தும் திட்டமிது காண்

* உச்ச வரம்பென்னும் ஒப்பற்ற திட்டத்தால்
மெச்ச நலங்குவியும் மேதினியில்—அச்சம்
விளைநெஞ்சால் அன்றாடம் வெந்தே அழுவோர்
களையுயர்த்தும் திட்டமிது காண்

—சண்முக. தாயுமானவன், திருச்சி-8.

ஓட்டைக் குடிசைகளில் ஒண்டி யிருப்போரின்
வாட்ட மகற்றுதற்கோர் வாரியத்தைக்—கூட்டித்
துளைக்குடிசை மாற்றத் துணிந்திட்டார் ; ஏழை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—புலவர் இல. கிருட்டிணன், ஈரோடு.

சத்துணவுத் திட்டத்தால் சாதிப்ப தென்னவோ ?
வித்தகரே ! ஓதென்றாய் ! வேல்விழியே !— நித்தம்
இளைஞருடல் பேணி எதிர்கால மன்னர்
களையுயர்த்தும் திட்டமிது காண்

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

கரையெடுத்தான் பொன்னிக் கரிகாலன் ; அண்ணாத்
துரைவழியிற் செல்கலைஞர் சென்னை—வரையிற்
துளைக்குழாயால் வீராணம் நீர்கொணர்தல் நன்மை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—கோ. தாண்டவமூர்த்தி, சொரகுளத்தூர்

நண்பா ! வணக்கமாய் நானெழுதும் செந்தமிழ்
வெண்பா வரவில்லை என்றாலென் ?—பண்பாய்ச்
சளைக்கா தெழுதும், தமிழன்னைப் பித்தர்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—வே. இராமு, அரக்கோணம்.

தங்கச் சிலையே ! தவமணியே ! பொற்கொடியே !
தங்கப் பதக்கத்தை நாம்பெற்றோம்—இங்குத்
தலையாய தம்பதியாம் முற்போக்கு வாதி
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—வே. செ. செபமணி, ரெட்டிப்பட்டி.

கங்கையும் காவிரியும் எங்கும் இணைந்திட்டால்
தங்கும் பெருஞ்செல்வம் தாயகத்தே ! —மங்கா
விளையுள் செழிக்க விளங்கும் கழனி
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—புலவர் கா. கனகரத்தினம், மான்கோட்டைநத்தம்.

கூடும் சனத்தொகைக்கோர் கோடுகட்டி வைத்துவிடில்
நாடும் வளம்கொடுக்கும் நல்லசுகம்—தேடும்
உளமும் மகிழ்வடையும் ஊர்க்கடைசித் தோழர்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—பை. சுந்தரம், திருச்சி-8.

**பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :**

* திரு சண்முக. தாயுமானவன், ஆசிரியர்,
த. செ. மு. உயர்நிலைப்பள்ளி,
வரகனேரி, திருச்சி-8.

வாடும் பயிர்தன்னை வாழ்விக்கும் வான்மழைபோல்
நாடும் பசிப்பிணி நண்ணாமல் —சாடும்
தளைநீக்கி இன்பம் தழைக்கத் தமிழ்மக்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—ச. நமசிவாயம், பி.எஸ்சி., திருச்சி.

துன்பம் களையச் சுடரொளியை நல்குகின்ற
இன்பம் பெருக்கிட இந்நாட்டில்—நன்மை
விளைவிக்கச் சேர்ந்தொன்றாய் மிக்குழைத்தல் நம்மக்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—வி. மு. உலகநாதன், சூளை.

ஏர்முனையில் வெற்றி இனிதாகும் கூட்டுறவுச்
சீர்முனையில் இன்பம் திரண்டுவரும் —சேர்ந்து
விளைவுயர்த்தும் ஒற்றுமையே வெல்க ! எளியோர்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—பூங்குன்றன், வாளவாடி.

மக்கள் குறைகள் மனுநீதித் திட்டத்தால்
தக்க முறையில் தமிழகத்தில்—மிக்கக்
களையப் படுதலைக் காண்! ஏழை களாமெங்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

நாட்டின் நலமோங்கி நல்வாழ்வு நாம்பெறவே
வீட்டின் தொகைசுருக்க வேண்டுமையா—கேட்டைக்
களையும் குடும்பநலத் திட்டமம்மா ! வீடு
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—சம்பு கனியமுதன், சம்புகுட்டப்பட்டி.

வெண்பாப் பயிர்வளர்க்கும் வித்தாம் 'தமிழரசு'
பண்பாய்ச் செழித்திடுக பாரின்கண்—நண்பா !
சளையா உழைப்பிற்குச் சான்றாம் தமிழ்ப்பாக்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—பாரதி சங்குப்பிள்ளை, அமராவதிநகர்.

''ஆன குடும்பத்துக் காணொன்று பெண்ணொன்று
தான்'' என்ற கொள்கை தலையென்ப—தானே
அளவறிந்து பெற்றக்கால் ஆய்வுரையேன் ? நம்மக்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—கே. சுதர்சனம், சென்னை–67.

போட்டி தொறும்வெண்பாப் பன்னூறு போயடைந்தால்
ஏட்டில் வெளியிடத்தான் ஏதிடம் ?—நாட்டீர் !
உளைந்தயர்ந்து போகாதீர், வாரீர் !—கவிஞர்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—த. மு. அகமது, கடையநல்லூர்.

எல்லார்க்குங் கல்வி எளியார்க்கு வீடென்று
நல்லவற்றை நம்மரசு நல்குவதால்—எல்லா !
இளைத்தகுடி என்கின்ற இந்நாட்டி னேழை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—புலவர் சு. முத்துக்கருப்பன், நகரம்.

தளையறுத்து வாழ்வளித்தார் தந்தையாம் காந்தி
களையெடுத்து நீர்பாய்ச்சிக் காத்தோம்—முளைத்துச்
சுளையெடுக்கும் நேரமிதில் சோர்வின்றிப் பார்மக்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு–1.

தாழ்ந்தோர் தலைநிமிரத் தங்கொள்கை ஆட்சிசெய
ஆழ்ந்தமையின் அல்லவரும் ஏற்கவெனச்—சூழ்ந்த
ஒளிவிளக்கும் ஓங்கியபல் உண்மைபுகல் திட்பங்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—புலவர் எம். மண்ணு, செங்கை.

பஞ்சந் தொலையப் பசுமைப் புரட்சியதால்
வஞ்சமிலா ஏழையர்க்கு வாழ்வளித்தே—நெஞ்சில்
வளைவில்லா நேராட்சி வாய்மைத் தமிழ்மக்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

இல்லாரின் இல்லாமைக் கில்லாமை ஆக்கிடவே
சொல்லோடு நில்லாமல் சோர்வகற்றி—நல்லார்
விளைநிலங்கள் ஈயும் வினைதானிவ் வேழை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—சோ. முத்துமாணிக்கம், பி.எஸ்சி., பரமக்குடி.

காக்குங் கடனுடைமை காட்டுகின்ற நம்அரசின்
நோக்கந் தெளியாதார் நொய்தென்பர் ; —நோக்கின்
தளையென்ப தெல்லாந் தகர்த்துத் தமிழ்மக்
களையுயர்த்தும் திட்டமிது காண்

—எஸ். குப்பம்மாள், ஆசிரியை, சோழவரம்.

கண்ணில் விழியிருக்கக் கட்டிமறைத் தாற்போல
எண்ணியதைச் செய்ய இயலாமல்—பண்ணும்
தளையுயர்த்தும் தன்னாட்சி மக்கட்கு நன்மை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—இரா. வேலவன், வெளிப்பட்டணம்.

பிற்பட்டோர் பேணப் பிறப்பித்த சட்டத்தால்
பொற்காலம் ஆக்கிப் புகழ்பெற்றார்—முற்றும்
தளைபட்ட நெஞ்சங்கள் தான்புகழும் ; இல்லார்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—புலவர் வெ. இரா. இராசகோபாலன், காவிரிநகர்.

பாடுபடும் பாட்டாளர் பட்டினிக்கோர் எல்லைகட்டிக்
காடுகளை வெட்டிக் கழனியாக்கும்—நாடு
சளைக்காது போட்டுவரும் சட்டமெல்லாம் ஏழை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—மாலடியான், கோவை-20.

கல்வி இலவசம்; காணிநிலம் அவ்வாறே;
நல்ல தொழில்தொடர நாற்கடன்கள்—எல்லாம்
உழைத்தே உருக்குலைந்(து) ஓடான பஞ்சை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—கு. பாலசுப்பிரமணியம், அருப்புக்கோட்டை.

நீர்ப்பெருக்கம், மின்சாரம், நீள்தொழில்கள், நல்வாழ்க்கை
ஏர்ப்பெருக்கம், கல்விவளம், இல்வாழ்க்கை—சீர்த்தி
கொளும்குடும்பத் திட்டம், குறிப்பதென்ன? ஏழை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

பாடமொழி தாய்மொழியாய்ப் பல்கலையில் நல்லறிவு
கூடமொழி ஆங்கிலமாய்க் கொள்என்றல்—மூடக்
களையழித்த நல்லவயற் காடாய்த் தமிழ்மக்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—அரிமதி. தென்னகன், புதுச்சேரி-1.

ஆணென்றும் பெண்ணென்றும் ஆக இரண்டென்னல்;
காணும் பசுமைப் புரட்சியினால்—வீணைய்க்
களைமுளைத்த காட்டைக் கழனியாக்கல் ஏழை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—ப. அறவாழி, தாராபுரம்.

நல்லவர் நட்பையே நாடி அறிவினில்
வல்லவர் கூட்டினில் வாழ்தலே—நல்லாய்!
நிலையுயர்த்தும்; நீங்காக் கலையுயர்த்தும் எண்ணங்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—க. கிருட்டிணமூர்த்தி, அரிமளம்.

வேலையில்லை என்னுமுங்கள் வெற்றுப்பேச் சாலெனக்குத்
தாலிகட்ட நாளாதல் தானறிந்தேன்—நாளை
விளைந்துவரும், மண்ணிலின்று நீருழைத்தால், நம்மக்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—சு. கிருட்டிணன், திருப்பூர்-1.

ஊற்றுநீர் தோண்டி உதவா நிலம்திருத்தி
ஆற்றுநீர் தேக்கி அணைகட்டி—ஏற்ற
விளைவுயர்த்தும் திட்டமெலாம் வேகமுடன் ஏழை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—புலவர் சோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

பட்டங்கள் பெற்றும் பணியின்றி வாட்டமுறும்
சிட்டுக்கள் நம்மிளைஞர் சீர்பெறத்—திட்டம்
விளைத்திட்டார் நங்கலைஞர்; வெல்க! இளைஞர்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—அ. சொர்ணநாதன், சல்லிப்பட்டி.

வங்கம் கடந்துவாழ் மக்கள் தமிழ்பயிலத்
தங்கள் மொழியில் தமிழினிமை—பொங்க
வளையாடும் கையாரும் வாழ்த்தின் தமிழ்ச்சீர்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—புலவர் குருசிதம்பரம், நெடுங்குளம்.

நாட்டின் நலம்பெருக நம்மோர் நிலையுயரப்
பாட்டின் திறனறிந்து பாங்குடனே—வீட்டின்
தளைநீக்கும் நம்மரசின் தன்னலமில் நன்மை
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—பழ. கந்தசாமி, பி.ஏ., பி.டி., சத்திரப்பட்டி.

தொழுநோய் நிலையம் தொழத்தக்க கோயில்
எழுவேன் அதைத்தொழ வென்றே—மொழிவாய்
களையாக எண்ணேல் 'கடை'மக் களது
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

கண்ணே! மணியே! கற்கண்டே! முத்தே! என்
பொன்னே புகழ்குவிக்கும் பொற்கொடியே!—இன்னல்
களைநீக்கும் எம்மரசின் கொள்கை குடிமக்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—கா. சுப்பிரமணியன், கம்பம்.

ஏட்டிக்குப் போட்டியாய் ஈற்றடியைத் தந்தயெம்
நாட்டுத்' தமிழரசி'ன் நோக்கமெலாம்—பாட்டுக்
களையியற்றும் பல்லார் கருத்தறிய ஆற்றல்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—இராச ஆனந்தன், காட்டுமன்னார் கோயில்.

எந்தக் கவியும் இதுவரை காணமல்
நொந்தேன்! தமிழரசே, நோயுற்றேன்!—செந்தேன்
தளைதட்டாப் 'பா'ப்பரப்பும் செய்கை கவிஞர்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—பசுபதி தில்லைக்கரசன், ஒரத்தூர்.

தொல்லை பலவும் தொடர்ந்திங்கே வந்திடுமாம்
எல்லையில் மக்களை ஈன்றிட்டால்—செல்வங்
களைப்பெருக்கும் இல்லத்துக் கட்டுப்பா டேஉங்
களையுயர்த்தும் திட்டமிது காண்.

—சி. கண்ணப்பன்; அம்மையார்க்குப்பம்.



வெளிநாட்டார் போற்றும்
வியன்பொருள்
கலைக்கூடம்
குறளகம்
கதர் கைத்தொழில் அங்காடி. சென்னை-1
கைவண்ணப் பொருள்களின்
களஞ்சியம்
20461
20462 20463
20464 20465

# தஞ்சை மாவட்டத்தில் மீன்துறையின் பணிகள்



தஞ்சை மாவட்டம் ஏறத்தாழ 160 மைல் நீளம் கடலோரப் பகுதியைக் கொண்டுள்ளது. மேலும், இந்த மாவட்டம், காவிரி மற்றும் அதன் கிளை நதிகளில் டெல்டா பகுதியில் அமைந்துள்ளது ஆகையால் உள்நாட்டு மீன் வளத்தையும், கடல் மீன் வளத்தையும் அதிகப்படுத்துவதற்கான பெரும் வாய்ப்புகள் உள்ளன. மீன் துறை, உள்நாட்டு மீன் வளம், கடல் மீன் வளம் ஆகியவற்றைப் பெருக்குவதற்கும் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும், அவர்கள் தொழில் செய்வதில் இடையூறுகள்–பிரச்சினைகள் இருப்பின் அவற்றைத் தீர்க்கவும், பல அரிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. இப்படி மீன் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வரும் சில முக்கியமான திட்டங்களின் நோக்கங்கள் பற்றியும் சென்ற ஐந்தாண்டுகளில் அடைந்த பலன்கள் பற்றியும் கீழே விவரிக்கப்படுகின்றன.

**(1) தீவிர மீன்குஞ்சு சேகரிப்பும், விநியோகமும்**

குறுகிய காலத்தில் நல்ல வளர்ச்சியடையக்கூடிய கட்லா, சேல், மிர்கால், வெண்கெண்டை முதலிய தரமான மீன் குஞ்சுகளை ஆறுகளிலிருந்து தீவிரமாகச் சேகரித்துத் தமிழ்நாட்டிலுள்ள பெரிய நீர்த்தேக்கங்களிலும், மீன் பண்ணைகளிலும், ஏரிகளிலும் தஞ்சை மாவட்டத்திலுள்ள நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள எல்லாக் குளங்களிலும் இருப்புச் செய்யப்படுகின்றன. இத் திட்டத்தின் நோக்கம் தரமான மீன் வகைகளை வளர்த்து மக்களுக்கு அவை கிடைக்கச் செய்தலே. மீன் குஞ்சுகளைச் சேகரித்து இருப்புச் செய்வதற்குப் புல ஊர்திகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. 1–4–1967 முதல் 31–3–1972 வரை இத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மீன் குஞ்சுகளின் விவரம் கீழே தரப்படுகிறது.

| ஆண்டு | சேகரிக்கப்பட்ட மீன் குஞ்சுகள் |
|---|---|
| 1967–68 .. .. .. | 2,80,00,000 |
| 1968–69 .. .. .. | 2,85,00,000 |
| 1969–70 .. .. .. | 2,82,00,000 |
| 1970–71 .. .. .. | 2,79,76,000 |
| 1971–72 .. .. .. | 2,82,88,486 |

**(2) தூண்டுதல் முறையில் மீன் உற்பத்தித் திட்டம்**

பருவ கால மாற்றங்களாலும் ஆறுகளில் ஆண்டு முழுவதும் தண்ணீர் இல்லாமையாலும், தரமான மீன் குஞ்சுகள் சேகரிக்க வாய்ப்பு இல்லாத நிலைமையிலும், மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், நுண்ணிய பருவத்திலேயே அதிகச் சேதமில்லாமல் தொலை விடங்களுக்கு அனுப்பவும், இயற்கை மூலங்களையே நம்பியிராமல், செயற்கையின் துணை கொண்டு ஓடும் தண்ணீரில் மட்டுமே இனப்பெருக்கம் செய்யக்கூடிய கட்லா, மிர்கால், சேல் முதலிய மீன்களையும், பாங்காக் கண்ணடிக் கெண்டை மீன்களையும், முட்டையிடச் செய்து மீன் உற்பத்தியைப் பெருக்குதலே இத் திட்டத்தின் நோக்கமாகும். இம் மாதிரி உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள 36 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் இதன் மூலம் ஊராட்சி நீர் நிலையங்களில் மீன் வளர்ப்புச் செய்து மக்களுக்குத் தேவையான மீன் உணவை அளிக்க வகை செய்கின்றன. 1–4–1967 முதல் 31–3–1972 வரை கருந்தட்டாங்குடியில் அமைக்கப்பட்டுள்ள தூண்டு முறை மீன் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மீன் குஞ்சுகளின் விவரம் கீழே தரப்படுகிறது.

| ஆண்டு | உற்பத்தி செய்யப்பட்ட நுண் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1967–68 .. .. | 50,00,000 |
| 1968–69 .. .. .. | 1,01,20,000 |
| 1969–70 .. .. .. | 1,29,45,000 |
| 1970–71 .. .. .. | 1,25,05,000 |
| 1971–72 .. .. .. | 1,28,40,000 |

இம் மாவட்டத்திலுள்ள 36 பஞ்சாயத்து யூனியன்களிலும், மீன் வளத்தைப் பெருக்குவதற்காகத் திட்டங்கள் வகுக்கப்பட்டு அப் பணிக்காகக் கணிசமான தொகை துறையினரால் செலவழிக்கப்பட்டு வருகிறது.

**(3) கிராமிய மாதிரி மீன் பண்ணைத் திட்டம்**

இத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு விஞ்ஞான அடிப்படையில் மீன் வளர்ப்புச் செய்வதால் கிடைக்கும் பலன்களும், பயன்களும் விளக்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ், மீன் துறையானது ஊராட்சி, தேவஸ்தானம், நகராட்சிகளுக்குச் சொந்தமான குளங்களை நஷ்ட ஈடு கொடுத்துப் பெற்று, மீன் வளர்ப்பு செய்கிறது. இக் குளங்களில் பிடிக்கப்படும் மீன்கள், மக்களுக்கு மீன் துறையினரால் நிர்ணயிக்கப்படும் விலைக்கு விற்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ்

விற்பனை செய்யப்பட்ட மீன்களின் அளவும், கிடைக்கப் பெற்ற வருவாய் விவரங்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | | மீன்களின் அளவு கி.கி. | கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ. |
|---|---|---|---|
| 1967–68 | .. | 24,016 | 12,560·00 |
| 1968–69 | .. | 31,831 | 18,945·00 |
| 1969–70 | .. | 30,226 | 19,394·00 |
| 1970–71 | .. | 22,643 | 19,522·00 |
| 1971–72 | .. | 18,576·500 | 14,142·90 |

**(4) சங்கு வளம்**

சங்கு வளத்தைக் குத்தகை விடுவதன் மூலம் துறையினருக்குக் கணிசமான வருவாய் கிடைத்து வந்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி வட்டத்திலிருந்து கோடியக்கரை வரையில் உள்ள கடலில் சங்கு பிடிக்கும் உரிமையை 2–9–1967 முதல் 1–9–1970 வரை ஆண்டிற்கு ரூ. 45,111·00 என்று குத்தகைக்கு விடப்பட்டது. கோடியக்கரையிலிருந்து புதுக்குடா வரையிலுள்ள கடலில் சங்கு வளத் துறையினரால் 5–6–1970 வரை பாதுகாக்கப்பட்டு வந்தது. மீனவர்கள் மீன் பிடிக்கும்போது அவர்கள் வலையில் தவறி விழுந்த சங்குகளைச் சம்பந்தப்பட்ட மீனவர்களிடமிருந்து முழுமையாக வளர்ந்த சங்கு ஒன்றுக்கு 12 காசு வீதம் விலை கொடுத்து மீனளத் துறை வாங்கி வந்தது. அழுகிப்போன சங்குகளையும் வளர்ச்சியடையாத சங்குகளையும் இலவசமாகப் பெற்று வந்தது.

கோடியக்கரையிலிருந்து புதுக்குடா வரையிலுள்ள கடலில் சங்கு பிடிக்கும் உரிமையை 6–6–1970 முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டுக் குத்தகை ரூ. 36,786 என்ற அளவில் குத்தகைக்கு விடப்பட்டது.

அரசு ஆணை எண் 1638 (நாள் 28–5–1971)-ன்படி சங்கு குளிக்கும் தொழிலில் சங்கு குளிப்பவர்கள் அதிகப் பயனடைய வேண்டுமென்பதற்காகத் தனி நபருக்குக் குத்தகைக்கு விடும் முறையை நீக்கி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 லைசென்ஸ் பணம் கட்டும் எவரும் சங்கு குளிக்கலாம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. மேற்கண்ட திட்டம் 10–6–1971 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(5) பனிக்கட்டி உற்பத்தி செய்யும் நிலையங்கள் அமைக்கும் திட்டம்**

மீன்கள் வெகு விரைவில் கெட்டுப் போகக் கூடியவை. எனவே, மீன்களை, பிடிக்கப்படும் இடங்களிலிருந்து வெகு தொலைவிலுள்ள விற்பனைக் கூடங்களுக்குக் கெடாமல் நல்ல நிலையில் எடுத்துச் செல்வதற்குப் பனிக்கட்டி மிகவும் இன்றியமையாததாக உள்ளது. இந்தப் பனிக்கட்டி மீனவர்களுக்கு குறைந்த விலையில் முக்கியமான இடங்களில் கிடைப்பதற்கு வசதியாக இத்துறையினரால் பனிக்கட்டி தயாரிக்கும் நிலையங்கள் நிறுவப்படுகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் தற்சமயம் கீழ்க்கண்ட மூன்று இடங்களில் அரசினரால் பனிக்கட்டி உற்பத்தி செய்யும் நிலையங்கள் நிறுவப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன.

(1) **தஞ்சை :** தினசரி இரண்டு டன் எடை அளவுள்ள பனிக்கட்டி உற்பத்தி செய்யும் திறனுடையது. மேலும் ஐந்து டன் எடையுள்ள பொருள்களை ஒரே சமயத்தில் குளிர் அறையில் வைத்துப் பாதுகாக்கும் வசதியும் பெற்றுள்ளது.

(2) **திருமுல்லைவாசல் :** இந் நிலையம் தினசரி மூன்று டன் எடை அளவுள்ள பனிக்கட்டி உற்பத்தி செய்யும் திறனுடையது.

(3) **நாகப்பட்டினம் :** இந் நிலையம் தினசரி இரண்டு டன் அளவுள்ள பனிக்கட்டி உற்பத்தி செய்யும் திறனுடையது.

நாகப்பட்டினம் பனிக்கட்டி உற்பத்தி நிலையத்தைத் தவிர மற்ற நிலையங்களும் தஞ்சை மீன் துறை உதவி இயக்குநர் நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. நாகப்பட்டினம் பனிக்கட்டி உற்பத்தி நிலையம், நாகை மீனவர் பயிற்சி நிலைய உதவி இயக்குநரின் நிருவாகத்திற்குட்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் நிறுவுவதற்கான நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது:—

(1) முத்துப்பேட்டை.

(2) சேதுபாவாசத்திரம்.

(3) அதிராம்பட்டினம்.

## தென்னகத்தின் கேம்பிரிட்ஜ்

இப்போதுள்ள கும்பகோணம் அரசினர் கல்லூரி மிகப் பழமையானதாகும். 1954-ஆம் ஆண்டில், தஞ்சை ராணிகள் நன்கொடை தந்த கட்டடமொன்றில் அரசினரால், இது துவக்கப்பட்டது. அப்போது இதற்குப் பெயர்: 'புரொவின்சியல் ஸ்கூல்', பிறகு இது 1964-ல் கல்லூரியானது. தமிழகத்தில் அரசினரால் தொடங்கப் பெற்ற முதல் கல்லூரியாகப் பெருமை பெற்ற இது, 'தென்னகத்தின் கேம்பிரிட்ஜ்' என்று புகழப்படுகிறது. டாக்டர் உ.வே. சாமிநாதய்யர், மகாவித்துவான் தியாகராசர், போப் போன்றவர்கள் இக்கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பதினேழு ஆண்டுகளுக்கு முன் இக்கல்லூரியின் நூற்றாண்டு விழா நடந்தது.

**(6) மீனவர்களுக்குக் கடனுதவித் திட்டம்.**

மீனவர்கள் மீன் பிடிக்கும் தொழிலுக்குத் தேவையான படகுகள், கட்டு மரங்கள், வலைகள் போன்ற கருவிகளை வாங்குவதற்கும், அவர்கள் இடைத் தரகர்களிடம் வாங்கியிருக்கும் கடன்களை அடைப்பதற்கும், அரசு நீண்டகால, மத்திய கால, குறுகிய காலக் கடன்களைச் சங்கத்தின்மூலம் அவர்களுக்கு அளித்து வருகிறது. மேலும் மீனவர்களுக்குத் தேவையான கிட்டங்கிகள், வீடுகள் முதலியவை கட்டுவதற்கும் அரசு கடனுதவி செய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் 1–4–1967 முதல் 31–3–1972 வரை மீனவர்

களுக்கு அளிக்கப்பட்ட கடன் உதவித் தொகை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | அளிக்கப்பட்ட கடன் தொகை ரூபாய். |
|---|---|
| 1967—68 .. ... .. | 36,300 |
| 1968—69 .. .. .. | 58,700 |
| 1969—70 .. .. .. | 55,700 |
| 1970—71 .. .. | 14,300 |
| 1971—72 .. .. | 32,600 |

**(7) சமூகப் பொருளாதாரத் திட்டங்கள்.**

மீனவர் வாழ்க்கைத்தரம் உயரவும், அன்றாட வாழ்க்கையில் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், புயல், வெள்ளம், பெருந் தீ விபத்து ஆகிய இயற்கை விபத்துக்களால் மீனவர்கள் பாதிக்கப்படும்பொழுது மீனவர்களுக்குக் கஷ்ட நிவாரணம் அளிப்பதற்கும் பல சமூகப் பொருளாதாரத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அம்மாப்பட்டினம் என்ற மீனவர் கிராமத்தில் 200 வீடுகள் கொண்ட ஒரு குடியிருப்பு ஏற்படுத்தித் தருவதற்கு அரசு அங்கீகாரம் அளித்து இத் திட்டத்தை மூன்று கட்டங்களில் செய்து முடிக்க ஒப்புதலும் அளித்திருக்கிறது. கட்டப்படும் ஒவ்வொரு வீட்டின் அடக்க விலை சுமார் ரூ. 3,000 ஆகும். இதில் அரசு ரூ. 2,500-ஐ உதவித் தொகையாக ஏற்றுக்கொள்கின்றது. மீதமுள்ள ரூபாய் 500-ஐ சம்பந்தப்பட்ட மீனவரிடமிருந்து 10 ஆண்டுக் காலத்தில் வட்டியின்றிப் பெறுவதாக ஏற்றுக்கொண்டுள்ளது. 1967—68-ல் முதற் கட்டத்தில் 60 வீடுகள் கட்டுவது ஆரம்பிக்கப்பட்டது. இவ் வீடுகள் 1969-ல் பூர்த்தி செய்யப்பட்டு 60 மீனவர்களுக்கு அளிக்கப்பட்டன. 1970—71-ல் இரண்டாவது கட்டத்தில் 70 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டது. இது விரைவில் பூர்த்தியாகும் நிலையிலுள்ளது.

1967-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட புயலினுல் தஞ்சை மாவட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மீனவர்கள் பாதிக்கப்பட்டனர். அப்பொழுது அரசு, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் பணமாகவும், பொருளாகவும், ரூ. 63,950 நிவாரணத்திற்காக வழங்கியது. இத் தொகையில் ரூ. 24,755 கடனுகவும், ரூ. 39,195 உதவித் தொகையாகவும் அரசு ஏற்றுக்கொண்டது.

மற்றும் மீனவர் கிராமங்களில் நல்ல சாலை வசதிகள் செய்வதற்கு இத் துறையின் மூலம் அரசு உதவுகிறது. 1969—70-ல் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றிய எல்லையில் உள்ள எட்டு மீனவர் கிராமங்களில் இணைப்புச் சாலைகள் அமைத்துத் தரப்பட்டன. இந்தச் சாலைகள் அமைப்பதற்கு ரூ. 1,02,100 செலவாகிறது. இதில் ரூ. 91,675-ஐ உதவித் தொகையாக அளிப்பதென அரசு ஏற்றுக்கொண்டது. மீதித் தொகையை சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியம் தன் பங்குக்கு ஏற்றுக்கொண்டது.

1971—72-ல் பட்டுக்கோட்டையில், ஏரிப்புறக்கரையிலிருந்து கீழத் தோட்டத்திற்கும், ராஜாமடத்திலிருந்து கீழத் தோட்டத்திற்குமாக இணைப்புச் சாலைகள் இரண்டு அமைப்பதற்கு ரூ. 50,000 நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், கடலில் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும்பொழுது இறந்துபோனுல் மேற்படி மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ. 1,000 உதவித் தொகையாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசு அளிக்கிறது. 1967—68 முதல் 1971—72 வரை ரூ. 17,350, இறந்து போன மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**(8) மீனவர்களுக்கு விசைப் படகு வழங்கும் திட்டம்**

இந் நாட்டில் மீனவர்கள் பழைய முறைகளையே கையாண்டு மீன் பிடி தொழிலில் ஈடுபட்டு வந்ததால், நல்ல பயன்களைப் பெற முடியாமல் பின் தங்கியிருந்தனர். ஆனுல் அதே சமயம் மேலை நாடுகளில் நவீன முறையில் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டு நல்ல பலனைப் பெற்று வருகின்றனர். இது சம்பந்தமாக தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்து நம் நாட்டு மீனவர்களும் நல்ல முறையில் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டு நல்ல பலனைப் பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டுமெனத் தீர்மானித்தது. இத் தீர்மானத்தின் அடிப்படையில் மீனவர்களுக்கு விசைப் படகு, தேவையான நைலான் நூல் வலைகளுடன் வழங்கும் திட்டமும் ஒன்றுகும். வழங்கப்படும் விசைப் படகு, நைலான் நூல் வலைகள் இவற்றின் விலையில் ஒரு பகுதியை மானியமாகவும், அரசு ஏற்றுக் கொள்கிறது. மீதியை மீனவர்களிடமிருந்து சுலபமான தவணை முறையில் பெற்றுக் கொள்கிறது.

மீனளத் துறையினரின் பணிகளால், தஞ்சை மாவட்டத்தில் உள்நாட்டு மீன்வளம் பெருகியுள்ளது. மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்களின் வாழ்வு வளமாகி வருகிறது. மேலும் பல திட்டங்களைச் செயல்படுத்த மீனளத் துறை முயன்று வருகிறது.

**கம்பன் பிறந்ததும் தஞ்சை மாவட்டமே!**

''கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்'' என்ற பழமொழி கம்பனின் புலமையை வெளிப்படுத்துவதாக உள்ளது. அத்தகைய புலமைமிக்க கம்பர் பிறந்தது தஞ்சை மாவட்டமே! தஞ்சை மாவட்டத்தில் உள்ள தேரழுந்தூரில் கம்பர் பிறந்தார். அவ்வூரில் உள்ள ஆமருவியப்பன் கோயிலில் கம்பருக்குச் சிலையெடுக்கப்பட்டுள்ளது. அந்த ஊரில் கம்பர் மேடு என்ற பகுதி உள்ளது. அங்கேதான் கம்பர் குடியிருந்ததாகக் கருதப்படுகிறது.

# அனைத்து நாட்டு வளர்ச்சிக்குழுத்திட்டம்

அனைத்து நாட்டு வளர்ச்சிக் குழு, இந்திய அரசு, வேளாண்மை மறு முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு அரசு ஆகியவற்றுடனும் மாநில நிலவள வங்கியுடனும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் மூலம் அனைத்து நாட்டு வளர்ச்சிக் குழுத் திட்டம் (International Development Association Project) 2—11—1971 முதல் தஞ்சை மாவட்டத்தில் நிறைவேற்றப்படுகிறது. துவக்கக் காலத்திலிருந்து (அதாவது 2—11—1971 முதல்) 2½ ஆண்டுகளுக்குள் இத்திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி மூலம் பம்பாயிலுள்ள வேளாண்மை மறு முதலீட்டு நிறுவனம் இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்கும். இந்த நிதி உதவி, உழவர்களுக்கு நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் கீழே குறித்தவாறு இத்திட்டம் செயலாற்ற அனைத்துநாட்டு வளர்ச்சிக் குழு அனுமதித்துள்ளது.

| முதலீடு செய்யும் பணியின் பெயர் | வேளாண்மை மறு முதலீட்டு நிறுவனம் அனுமதித்துள்ள இலக்கு குறியீடு (எண்ணிக்கை) | வேளாண்மை மறு முதலீட்டு நிறுவனம் அனுமதித்துள்ள நிதிக்குறியீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| இறைவை இயந்திரத் துடன் வடிமுனைக் குழாய்க் கிணறு | 7,000 | 415·63 |
| இறைவை இயந்திரத் துடன் குழாய்க் கிணறு | 1,000 | 92·15 |
| இறைவை இயந்திரத் துடன் நடுத்தரக் குழாய்க் கிணறு | 90 | 9·41 |
| இறைவை இயந்திரம் | 4,000 | வடிமுனைக் குழாய் களுக்கான நிதி உதவி யுடன் சேர்க்கப் பட்டுள்ளது. |

ஒவ்வொரு வகையான முதலீட்டுக்கும், வேளாண்மை மறு முதலீட்டு நிறுவனம் அனுமதித்துள்ள செலவுத் தொகை கீழே தரப்பட்டுள்ளது.

| முதலீடு செய்யும் பணியின் பெயர் | கிணறு ரூ. | கொட்டகை ரூ. | இறைவை இயந்திரம். ரூ. | கூடுதல் ரூ. |
|---|---|---|---|---|
| இறைவை இயந்திரத் துடன் கூடிய வடி முனைக் குழாய். | 750 | 1,000 | 2,500 | 4,250 |
| இறைவை இயந்திரத் துடன் கூடிய குழாய்க் கிணறு. | 6,200 | 1,000 | 2,500 | 9,700 |
| இறைவை இயந்திரத் துடன் கூடிய நடுத் தரக் குழாய்க் கிணறு | 7,500 | 1,000 | 2,500 | 11,000 |
| மின்சார மோட்டார் கொட்டகையுடன் | ... | 1,000 | 2,500 | 3,500 |

இத்திட்டம் அறந்தாங்கி வட்டம் தவிர தஞ்சை மாவட்டத்தில் 2½ ஆண்டுக் காலத்திற்குள் செயல்படுத்தப்படும்.

---

தஞ்சை மாவட்டத்தில் 15,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும், 3,600 நடுத்தரக் குழாய்க் கிணறுகளும், 3,600 ஆழ்குழாய்க் கிணறுகளும் தோண்டுவதற்குப் போடப்பட்ட பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாகக் காவேரி ஆற்றுப் பக்க நிலங்களில் துவக்கத் திட்டமாக 2,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு வேளாண்மை மறு முதலீட்டு நிறுவனம் அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1970–71 ஆம் ஆண்டில் 1,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும், 1971–72–ஆம் ஆண்டில் 1,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் தோண்டுவதற்குத் திட்டமிடப்பட்டது. 2—11—1971 முதல், அனைத்து நாட்டு வளர்ச்சிக் குழுத் திட்டம் செயலாக்கப்படுவதால், வேளாண்மை மறு முதலீட்டு நிறுவனம் மூலம் நிறைவேற்றப்படாமல் இருந்த எஞ்சிய பகுதி இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

கீழே குறித்தபடி 1—11—1971 வரை இத்திட்டத்தில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

| | எண் |
|---|---|
| தலைமை நிலவள வங்கிகளால் கடன் அனுமதிக்கப்பட்டது. | 1,355 |
| கடன் வழங்கப்பட்டது .. .. | 841 |
| அரசுத் துறையினரால் தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை. | 643 |
| திட்டத்தின்கீழ் ஏற்கெனவே தோண்டப் பட்ட கிணறுகள். | 270 |
| மின்வாரியத்திடம் மின் இணைப்புக் காக அனுப்பப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை. | 852 |
| மின் கம்பி இணைப்புப் போடப்பட்டது. | 475 |
| மின் இணைப்புகள் வழங்கப்பட்டது .. | 366 |



# வேளாண்மை மறுமுதலீட்டு நிறுவனத்திட்டம்



தலைமை நிலவள வங்கிகளால் 53·40 இலட்சம் ரூபாய் கடன் அனுமதிக்கப்பட்டதில், 30·47 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.




# தமிழ் மணம் கமழும் தஞ்சை மாவட்டம்

**கலைகளின் நிறைபீடம் தஞ்சை!**

தஞ்சையிலுள்ள கலைக்கூடத்தின் முகப்பு இது. இக் கலைக்கூடம் தென்னிந்தியக் கலைகளின் ஒரு கண்காட்சிச் சாலையாக விளங்குகிறது. இங்கு உள்ள பஞ்ச உலோகத்தால் செய்யப்பட்டுள்ள கடவுள் சிலைகளும், கருங்கற் சிலைகளும், வெண்கலச் சிலைகளும் காண்பவர்க்குக் களிப்பூட்டுவனவாக அமைந்துள்ளன. ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் செய்யப்பட்ட அழகு மிகு தெய்வச் சிலைகள் நிரம்பிய கலைக்கூடத்தில் உள்ள பொருள்கள் சோழ அரசு பரவியிருந்த பல்வேறு இடங்களிலிருந்தும் 1951 - ஆம் ஆண்டில் திரட்டப்பட்டவை.



தஞ்சை அரண்மனையில் உள்ள கலைக் கூடத்தில் கருங்கற் சிலைப் பகுதி, வெண்கலச் சிலைப் பகுதி என இருபகுதிகள் உள்ளன. கலையழகு மிக்க கருங்கற்சிலைகள் 110 வைக்கப் பட்டுள்ளன. வெண்கலச் சிலைப்பகுதியில் பல நாட்டினரும், பார்த்துப் பாராட்டிய 165 சிலைகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகளின் கருத்தைக் கவரத்தக்க வகையில் உள்ள இந்தக் கலைக்கூடத்தில் தஞ்சைக்கே உரிய கலையழகு மிக்க வேறு சில பொருள்களும் இடம் பெற்றுள்ளன.

"திருவாரூர் தேர் அழகு!" என்று புகழப்படும் தேர் இதுதான்! தென்னகத்தின் பெரிய தேர்களில் ஒன்றான இதன் எடை 200 டன்! இத்தேரில் எஃகுச் சக்கரங்களும், ஐடிராலிக் முறை நிறுத்தும் சாதனமும் (பிரேக்) பொருத்தப்பட்டுள்ளன. இத்தேர், எளிதாக இழுக்கப்படுவதற்காகப் பின்னாலிருந்து புல்டோசரினாலும் டிராக்டர்களினாலும் தள்ளப்படுகின்றது. ஏறத்தாழ இருபது ஆண்டுக் காலமாக ஓடாதிருந்த இத்தேர் இன்றைய தமிழ்நாடு அரசின் முயற்சியால் ஓடியது. அமெரிக்க நாட்டுப் பொறியாளர் குழு கொடுத்த மாதிரியில், தேரோடும் நான்கு தெருக்களையும் தமிழ்நாடு அரசு அமைத்துக் கொடுத்துள்ளது. சென்ற இரண்டு ஆண்டுகளில் இத்தேரினை இழுத்துச் செல்வதில் இருந்த சங்கடங்கள் இந்த ஆண்டில் இல்லை. இதற்குக் காரணம் தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறையினர், ஆராய்ச்சியின் அடிப்படையில் தேரோடும் தெருக்களைச் செப்பனிட்டுக் கொடுத்ததேயாகும். இத்தேரில் திருவாரூர் தியாகராஜ சுவாமியை வைத்து இழுத்துச் செல்லப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் ஆண்டு தோறும் திரண்டு வருகின்றனர்.



ஓடாத தேர் ஓடியது!



திருவாரூர் கமலாலயம்

## எம்மதமும் சம்மதமே!

தெய்வ மணம் கமழ்வது தஞ்சை மாவட்டம்! ஆயினும் அங்கே மத வேறுபாடு இல்லை! எம்மதமும் சம்மதமே என்ற கொள்கையே நிலவுகிறது.

திருவாரூர் தேர்த் திருவிழாவிலும், கமலாலயத் தெப்பத் திருவிழாவிலும், தஞ்சை மாரியம்மன் கோயில் விழாவிலும், மற்றும் பல இந்துக் கோயில்களின் விழாக்களிலும் கிறித்துவர்களையும், முகம்மதியர்களையும் பார்க்க முடிகிறது!



நாகூர் தர்க்கா

# அன்னை வேளாங்கண்ணி மாதா கோயில்



அன்னை வேளாங்கண்ணி கோயிலில் வழிபடும் இந்து, முகம்மதியர்களின் தொகை எண்ணற்றது.

நாகூர் தர்க்காவில் இந்துக்களும், கிறித்துவர்களும் தொழுகை நடத்துகிறார்கள். இந்துக்கோயில்களில் உள்ள "முடி இறக்கும் வேண்டுதல்" இன்றும் இங்கு நடைபெறுகிறது.

பண்டைத் தமிழகத்தில் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற முறை இருந்து வந்தது என்பதை, இன்று தஞ்சை மாவட்டத்தில் நிலவும் "எம்மதமும் சம்மதமே" என்ற கொள்கை உண்மையென நிரூபிப்பதாக உள்ளது.

# மகிழ்ச்சியளிக்கும் மனோரா



உல்லாசப் பயணிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக உள்ளது மனோரா என்னும் இந்த உப்பரிகை. பட்டுக்கோட்டையில் இருந்து 10 மைல் தெற்கேயுள்ள சரபேந்திர ராஜன் பட்டினத்தில் கடலுக்கு அருகில் கட்டப்பட்டுள்ள மனோரா, தொலைவில் இருந்து பார்ப்பதற்கு ஒரு கலங்கரை விளக்கம்போல் தோன்றுகிறது.

“இங்கிலீஷ் சாதியார் தங்கள் ஆயுதங்களினால் அடைந்த ஜெய சந்தோஷங்களையும், போனபார்ட்டியின் தாழ்த்தப்படுதலையும் நினைவு கூர்வதற்காக, இங்கிலீஷ் துரைத்தனத்தின் சினேகிதரும், படைத்துணைவருமாகிய தஞ்சாவூர் சீமை மகாராஜா சத்ரபதி சரபோஜி மகாராஜா அவர்கள் இந்த உப்பரிகையைக் கட்டி வைத்தார். சக வருஷம் ௲க அ க ச” என்று எழுதப்பட்ட கல்வெட்டு மனோராவில் உள்ளது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டும் காணப்படுகிறது. 1814-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட மனோராவில் 9 மாடிகள் (அடுக்குகள்) உள்ளன. ஏறத்தாழ 140 அடி உயரமுள்ள மனோராவின் உச்சியை அடைவதற்கு, வளைந்து வளைந்து செல்லக்கூடிய குறுகலான படிகள் அமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு மாடியிலிருந்தும் வெளியே நோக்குவதற்குப் பலகணிகள் உள்ளன.

கலைத் திறனோடு கட்டப்பட்டுள்ள மனோராவின் உள் சுவரைத் தொட்டுப் பார்த்தால், எவ்வளவு வழவழப்பாக அமைந்துள்ளது தெரியுமா? எழில் மிகு மனோரா ஒரு சிறு கோட்டையாகவும் அமைந்துள்ளது. மனோராவைச் சுற்றிலும் வட்ட வடிவமாகக் கட்டப்பட்டுள்ள மதிற்சுவர்களுடன் கூடிய “அகழி” உள்ளது. அகழிகளில் அக்காலத்தில் முதலைகள் வளர்க்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அகழியைத் தாண்டுவதற்கு முன்பு, தொங்கும் பாலம் அமைக்கப்பட்டிருந்த அறிகுறிகள் காணப்படுகின்றன. தற்பொழுது மரப்பாலம் அமைக்கப் பட்டுள்ளது. அகழியையொட்டி இருபுறமும் குகைக் கட்டடங்கள் போன்ற வளைவு மாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. குதிரை லாயங்களும் காணப்படுகின்றன. மனோராவின் அருகில் உள்ள தென்னந்தோப்புகள் மனோராவிற்கு மேலும் எழில் சேர்க்கின்றன.

கோடைக் காலத்திலும் மனோராவில் குளிர்ச்சியாக இருக்கிறது. மனோராவின் கடைசி மாடம் திறந்த வெளியாக இருப்பதால், அதிலிருந்து கடலைப் பார்க்கும்பொழுது எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது! காலையில் எழும் உதயசூரியனையும், மாலையில் விழும் சூரியனையும் மனோராவிலிருந்து பார்ப்பது காணற்கரிய காட்சியாகும்!


இற்றைக்குச் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சோழ நாட்டை ஆண்டு வந்த கரிகாலன், காடு கொன்று நாடாக்கி, குளந் தொட்டு வளம் பெருக்கினான். காவிரியின் இரு மருங்கும் பெருங் கரை அமைத்தான். அவன் அமைத்த கல்லணை, காவிரியின் நீரினை வாய்க்கால்களின் வழியே செலுத்தி உழவுத் தொழிலை விழுமியதாக்கியது. தமிழ்நாடு முழுவதிலும் தன் ஆட்சியை நிறுவிய பின், கரிகாலன் வடநாடு நோக்கித் தன் படையைச் செலுத்தினான். இமயமலை வரை
வெற்றிக்கொடி நாட்டிய கரிகாலன், இமயத்தின் மீது தன் அடையாளமாகிய புலியைப் பொறித்துத் திரும்பினான். அதன் பின், கப்பற்படையினைச் செலுத்தி ஈழத்தை வென்று மீண்டான். ஈழத்திலிருந்து கைதிகளைக் கொண்டு வந்து கல்லணையைக் கட்டியதுடன், காவிரிக்குக் கரையெடுக்கவும் செய்தான். அதற்குக் கைம்மாறாக ஈழத்திற்கு அரிசியை அனுப்பி வைத்தான் என்று பழந்தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன.



## தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம்

காந்தியடிகளின் கனவை நனவாக்கும் தமிழ்நாடு அரசு, காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவையொட்டி, 1969-ஆம் ஆண்டில் தில்லையாடியில் அமைத்துள்ள நினைவுச் சின்னங்கள் இவை. ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு, தில்லையாடிக்கு வந்திருந்த காந்தியடிகள் எந்த இடத்தில் அமர்ந்து பேசினரோ, அந்த இடத்தில் கமல மலர் குவிந்தது போல், கல்தூண் ஒன்று அமைக்கப் பட்டுள்ளதையும், தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் தமிழர்களின் பங்குபற்றி விளக்கிடும் உயிர் ஓவியங்கள் கொண்ட வள்ளியம்மை நினைவு மண்டபத்தையும் இங்குக் காணுகின்றீர்கள். இந்நினைவுச் சின்னங்களை 13-8-1971 அன்று தமிழ் நாடு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அன்று அண்ணல் அறப்போராட்டத்தைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கிய போது, அவர் உடனிருந்து உற்றுழி உதவியவர்கள் தமிழர்கள். இன்று, காந்தியடிகளின் கனவை நனவாக்கிக் காட்டுகிறவர்களும் தமிழ் நில மக்களே என்பதை உலகத்திற்கு உணர்த்துவதாக உள்ளன இந்நினைவுச் சின்னங்கள்.

# என் இந்தக் காதல்?

ஓங்கி விழுந்த அந்த ஒரு அறையிலேயே தேன்மொழியின் ஆப்பிள் கன்னம் அப்பமாக உப்பிவிட்டது; சூட்டுக் கோல் போட்ட மாதிரி மாதவனின் ஐந்துவிரல்களும் அதில் அழுந்திப் பதிந்து விட்டன. கண்கள் இரண்டுமே கூடத் தெறித்து விழுந்து விடுவது போலத் திகிலுற்றுச் சுழன்றன.

என்றாலும் தன்னுடைய கணவனின் ஆத்திர வெறியைக் கண்டு தேன்மொழி அஞ்சி நடுங்கவில்லை; அவளுடைய நாவும் அடங்கவில்லை.

"என்னை அடித்தே நொறுக்கினாலும், என்னை நெரித்தே கொன்று போட்டாலும் உன் அக்காளுக்கு வந்திருக்கிற பெருவியாதி 'கரும வினை'தான் கிறது இல்லாமல் போய் விடுமா?''.

—ஆங்காரமாகக் கூச்சலிட்டாள் அவள்.

## 20. சூறைக் காற்று!

"உனக்கு எவ்வளவு திமிர் இருந்தால், உன் நாக்கு இப்படி நீளும்?''—என்று மீண்டும் ஓர் அறை கொடுத்தான் அவன்.

"உனக்கு மட்டும் கை நீளலாம்; எனக்கு மட்டும் நாக்கு நீளக் கூடாதா?''

—பிசிறு விழுந்த குரலில் விட்டுக் கொடுக்காமல் கத்தினள் தேன்மொழி.

எந்த மரியாதை பறிபோய் விட்டதே என்று மாதவன் இரண்டாவது அறை கொடுத்தானே, அந்த மரியாதையை அவள் மேலும் மேலும் நார் நாராகக் கிழித்துப் போட்டு விட்டாள்; அவனுடைய நாடி நரம்புகளெல்லாம் துடியாய்த் துடித்தன—படமெடுத்துச் சீறின.

பெண்களை 'மெல்லியல்'—என்றெல்லாம் பேசி மகிழ்கின்றன நம் தமிழ் இலக்கியங்கள்; அந்த அழகிய சொல்லுக்கேற்ப அவர்களுடைய ஒவ்வோர் அங்கமும் மென்மையானதே என்பதும் உண்மையே. ஆனாலும் அவர்களுடைய நாவோ ..................?

ஆண்களைத் திருப்பித் தாக்க முடியாத பலவீனத்துக்கெல்லாம் சேர்த்து வைத்து எவ்வளவு கூர்மையாக—கொடுமையாக—மிருகத்தனமாகவே அது குத்திக் குதறக் கூடியது என்பதை மாதவன் இப்போதுதான் நன்றாகப் புரிந்து கொண்டான்.

அவனது கைகள் இரண்டும் துறுதுறுத்தன, அவளை அடித்து நொறுக்குவதற்கு.

ஆனால், அவனுடைய தாய் குறுக்கே வந்து நின்றுவிட்டாள். "உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன். அவளைக் கைதொட்டு அடிக்கிற வேலையை இந்த நிமிசத்தோட விட்டுடு; இல்லேன்னா நம்மோட மானம்—மரியாதையெல்லாம் தூரத்திலே தான் பறந்து போகும். எவ்வளவோ பொறுமைசாலியான நீயே இப்படி ஆத்திரப்படலாமா? ..............''

—என்று கேட்டாள் அவள்.

"என் அக்காளை இவ்வளவு கேவலமாக நெஞ்சு ஒடியப் பேசிய பிறகும் நான் பொறுமையோடுதான் இருக்கணுமா? ஒருத்தரைக் கேலி செய்வதற்கும், கிழறுப்பாய்ப் பேசுகிறதுக்கும் ஒரு வரம்பு இல்லையா?

அ. முனுமலையான்

வரையறை இல்லையா? என்னை எவ்வளவு மரியாதைக் குறைவாக அவள் பேசினாலும் நான் கவலைப் படவில்லை. ஆனால், என் அக்காளைப் பற்றி அப்படிச் சொன்னதற்கு அவள் மன்னிப்புக் கேட்டே ஆகணும். அது மட்டும் இல்லே; என் அக்காளைத் தூக்கிக் கொண்டு போய் அவளேதான் குளிப்பாட்டணும்.''

—மாதவன் தன் தாயை நோக்கி இப்படிக் கண்டிப்பாகக் கூறியதும்,

"ஓகோகோ ......''

"இந்த மிரட்டல் எல்லாம் என்கிட்டே பலிக்காது. உங்கள் இரண்டு பேருக்குந்தான் ஏதோ தலையெழுத்து—அழுகிப்போன உடம்பையெல்லாம் கட்டிக் கொண்டு அழணும் என்று! எனக்கு அப்படி ஒண்ணும் இல்லே! பெருவியாதி பிடித்தவளையெல்லாம் தொட்டுத் தூக்குறதுக்காக என் அப்பாவும் அம்மாவும் என்னை இங்கே பெற்றுப் போடலே! அதுக்காக இந்தச் சொத்துச் சுகங்களையெல்லாம் அவங்க சேர்த்தும் வைக்கலே! நான் மட்டும் இல்லே; வேறே எந்தப் பெண்தான் மனசு வந்து அந்த நாற்றமெடுத்த உடம்பைத் தொட்டுத் தூக்குவாள்?''

"நாக்கிலே நரம்பில்லாமல் பேசாதே? உன்னைப் போலவே தான் எல்லாப் பெண்களுமே இரக்கமில்லாத அரக்கிகள் என்று எண்ணிக்கொண்டாயா? தாய்மைக்குப் பெருமையே சகிப்புணர்ச்சிதாண்டி. அந்தச் சகிப்புணர்ச்சியே இல்லாத ஒரு சப்பாத்திக் கள்ளியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்

# சரியான பம்பை எப்படித் தேர்ந்தெடுப்பீர்கள்?

குறைந்த விலை................அதிக இயக்கச் செலவு

சற்றே அதிகமான விலை...ஆனால் குறைந்த இயக்கச் செலவு

STUSA 772



# கிர்லோஸ்கர் 'KE' பம்பு

பம்பு வாங்கும்போது, கிர்லோஸ்கர் பம்பையே தேர்ந்தெடுப்பீர்!

பம்பு வாங்கும்போது, அதன் விலையைவிட, அதை இயக்குவதற்கு எவ்வளவு செலவாகும் என்று பார்க்கவேண்டும்; ஏனெனில், இது தினப்படி செலவாகும் ஒரு பம்பின் விலையைப் பார்க்கும்போது மலிவாக இருந்தாலும், தினப்படி அதை இயக்குவதற்கு ஆகும் எண்ணெய் அல்லது மின்சாரச் செலவு அளவுக்கு மிஞ்சி அதிகமாக இருந்தால், வருட முடிவில் கணக்குப் பார்க்கும்போது, அந்தப் பம்பினால் எக்கச்சக்கமான செலவு என்பது தெரியவருகிறது.

- இந்தக் கணக்கின்படி பார்த்தால் கிர்லோஸ்கர் KE பம்பு மிகவும் லாபகரமானது.
- இந்தப் பம்பின் செயல்திறன் மிகவும் உயர்ந்ததாக இருப்பதால் இதற்காகும் மின்சாரச் செலவோ, எண்ணெய்ச் செலவோ மிகக் குறைவு.
- கிர்லோஸ்கர் KE பம்பு குறைந்த நேரத்தில் போதுமான தண்ணீரை இறைக்கிறது; எனவே கூலிச செலவிலும் மிச்சமாகிறது.
- எனவே, உண்மையில் கணக்குப் பிரகாரம் பார்த்தால், கிர்லோஸ்கர் KE பம்பு மிக நயமானது.

Kirloskar

கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிட்.
உத்யோக பவன், திலக் ரோடு, பூனா-2.

® Registered users of the Trade Mark

பிராஞ்சு ஆபீஸ்: கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிமிடெட், 7/3, பட்டுலாஸ் ரோடு, சென்னை-2.

டேனே. அதற்காக் உண்மை யிலேயே நான் வெட்கப்படுகி றேண்டி! வெட்கப்படுகிறேன். என் அக்காளைத் தொட்டுத் தூக்க ஒருத்தியை மட்டும் இல்லேடி! ஆயிரம் பெண்களையே இங்கே கொண்டு வந்து நிறுத்துவேன்! தெரியுமா ?''

—அறைகூவலே விடுத்தான் மாதவன்.

'' அய்யோ பாவம்! ஆயிரம் பெண்களுக்காக அப்படி அலை யாய் அலைந்து காலை ஏன் ஒடித்துக் கொள்ளணும்? ஒரே ஒருத்தியைக் கொண்டு வந்து தூக்கச் சொன்னாலே போதுமே! அவ்வளவு சகிப்புணர்ச்சியுள்ள மங்கையர்த் திலகம் எவள்தான் என்கிறதை நானும் என் கண் ணால் பார்த்துக்குவேனே!''

—எகத்தாளமாகச் சிரித்து, எதிர்ச் சவாலும் விடுத்தாள் தேன்மொழி.

''உன்னுடைய பணத் திமிரி னாலேதான் இப்படி அகங்காரமா சிரிக்கிறே இல்லே! என்னை அவமானப்படுத்திட்டோம் என் றும் சிரிக்கிறே இல்லே! உன்னு டைய இந்தத் திமிர்ச்சிரிப்புக் காகவாவது எவள் காலிலேயா வது விழுந்து என் அக்காளைத் தூக்குவதற்கு அழைத்து வரு கிறேனா, இல்லையா என்று பார்!''

—பற்களை 'நறநற' வென்று கடித்துக் கொண்டு கூறிய மாதவன், வெளிவாசலை நோக்கி அடிவைத்து போது—

இரண்டு பெண்கள் முறுவல் தவழும் முகத்துடன் படிகளில் ஏறி அவனை நோக்கி வந்தனர்; கரங்களைக் கூப்பி வணக்கமும் புரிந்தனர்.

''வாங்க, டாக்டர். உங்களை யும் தாமரைக் கண்ணியையும் அழைத்து வருவதற்குத்தான் நான் இப்போது புறப்பட்டுக் கொண்டிருந்தேன்.''

—என்று பூங்கொடியை நோக்கிக் கூறினான் மாதவன்.

''வேடிக்கையாக இருக்கிறதே! நீங்கள் நினைத்தபடியே நாங்கள் இரண்டுபேருமே சொல்லிவைத்த மாதிரி வந்து விட்டோமே! ஆமாம், எதற்காக எங்களை அழைக்க நினைத்தீர்கள்?''

''என் அக்காளைத் தூக்கிப் போய்க் குளிப்பாட்ட வேண் டும் என்று என் அம்மா ஆசைப் பட்டார்கள். ஆனால், அவர் களால் தூக்க முடியாது. அதற் குத்தான்......

'' ஓ! இதுக்குத்தானா? இதோ நானும் தாமரைக்கண்ணியுமே குளிப்பாட்டி விட்டுவிடுகிறோம்.''

—என்றவாறே வள்ளியம்மை படுத்துக் கிடந்த அறையை நோக்கி அடியெடுத்து வைத் தாள் பூங்கொடி. தாமரைக் கண்ணியும் அவளைப் பின் தொடர்ந்து சென்றாள்.

''உங்களுக்கென்ன தலைவிதியா டாக்டர், இந்தக் கருமாந்த ரத்தையெல்லாம் கை தொட் டுத் தூக்கணும் என்று? அந்த ஆள் சொல்லிவிட்டார் என்ப தற்காக உடனே ஓடிப்போய்த் தூக்கணுமா?''

—தேன்மொழியின் இந்த வார்த்தைகளைக் கேட்டுத் திடுக் கிட்டுப் போனாள் பூங்கொடி.

'' என்ன தேன்மொழி, நீங் களா இப்படி நிதானம் இழந்து பேசுவது? அதுவும் உங்களைப் போல் படித்தவர்களே நோயா ளிகளுக்குப் பரிவு காட்டாமல் வெறுக்கலாமா? அப்படிப் பரிவு காட்டுகிறவர்களையும் தடுக்கலாமா?''



—டாக்டர் இவ்வாறு இடித்துக் கூறியதும் தேன்மொழிக்கு அவமானமாகப் போய்விட்டது போலும். அவளுடைய ஆத்திரம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிவிட்டது.

''எங்கள் குடும்ப டாக்டராயிற்றே என்கிற பற்றுதலினாலே தான், நீங்கள் அந்தப் பெரு நோய்க்காரியைத் தொடவேண்டாம் என்று சொன்னேனே அல்லாமல், வேறே எதுக்காகவும் இல்லே; நாளைக்கு அந்தக் கொடிய நோய் உங்களையும் தொற்றிக் கொண்டால் பிறகு யாராவது உங்களைத் திரும்பிப் பார்ப்பார்களா? அந்த நல்ல எண்ணத்தோடு நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வந்தால், நீங்க அவங்க முன்னாலேயே என்னை அவமானப் படுத்திப் பேசுறீங்களே? சரி சரி; உங்களோட தலையெழுத்தை நானா மாற்ற முடியும்? யாராவது எக்கேடாவது கெட்டுப் போங்களேன்.''

—அனல் பொறிகளைக் கக்கியவாறே, அந்த இடத்தை விட்டு அகன்று, மாடியை நோக்கி விரைந்து சென்றாள் தேன்மொழி.

பூங்கொடி வாயடைத்துப் போய் அப்படியே கல்லாய்ச் சமைந்து நின்று விட்டாள்.

அந்தப் பெரிய மாளிகை வீட்டில் வள்ளியம்மை என்கிற நோயாளிப் பிறவியை மையமாக வைத்து ஒரு கொடிய சூறுவளியே வீசிக்கொண்டிருக்கிறது என்பதை அப்போது தான் அந்த டாக்டரால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

''நீங்கள் வற்புறுத்திய போதெல்லாம் இந்த வீட்டிற்கு வர முடியாது என்று மறுத்தேனே, அது ஏன் என்று இப்போதாவது உங்களுக்குத் தெரிகிறதா, டாக்டர்? நீங்கள் ஒரு நோயாளிக்கு இரக்கப்படுவதையே தன்னை அவமானப் படுத்தி விட்டதாகத் தவறாகப் பேசி விட்டுப் போகிறாளே! ஆனால், நீங்கள் வருவதற்கு முன்னாலே, என் அக்காளுக்கு வந்திருப்பது 'கரும வினைதான்' —'கரும வினைதான்'—என்று திரும்பத் திரும்பச் சொல்லிச் சொல்லி எங்கள் நெஞ்சையெல்லாம் எவ்வளவு திருகி

**முப்பெரும் தமிழ்ப் பெரியார்கள்**

தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்த முயன்ற முப்பெரும் புலவர்களான உ. வே. சாமிநாத ஐயரும், திரு. வி. கலியாணசுந்தரனாரும், மறைமலை அடிகளாரும் பிறந்தது தஞ்சை மாவட்டமே! உ. வே. சா. உத்தமதானபுரத்திலும், திரு. வி. க. திருவாரூரிலும், மறைமலை அடிகளார் நாகப்பட்டினத்திலும் பிறந்தவர்கள்.

எடுத்து விட்டாள்—துடிதுடிக்க வைத்து விட்டாள்—தெரியுமா, டாக்டர்? எங்கள் தன்மானத்தையே எவ்வளவு மோசமாகக் கேவலப் படுத்திக் கிழித்துப் போட்டு விட்டாள் தெரியுமா, டாக்டர்? இதைவிட எங்கள் உணவிலேயே நஞ்சை வைத்து எங்களை அவள் கொன்றே போட்டிருக்கலாம், டாக்டர்! கொன்றே போட்டிருக்கலாம்!''

அவனது அந்த ஆங்காரக் குமுறல், அவனுடைய தாய், தமக்கை, தாமரைக்கண்ணி—இவர்களை மட்டும் தேம்பியழச் செய்யவில்லை; டாக்டர், பூங்கொடியையும் கண்கலங்க வைத்துவிட்டது.

எனினும், புடவைத் தலைப்பால் தன் விழிகளைத் துடைத்துக் கொண்ட அவள், ''சரி, மாதவன், தேன்மொழியின் சிறுபிள்ளைத்தனமான வார்த்தைகளுக்கெல்லாம் நாம் அதிகமாக மதிப்புக் கொடுக்கத் தேவையில்லை. அவள் ஓர் 'உணர்ச்சிக் குழந்தை'—என்பதை அவளுடைய அப்பாவே உங்களுக்குச் சொல்லவில்லையா?

''..ம். நாம் இப்போது உங்கள் அக்காளைக் கவனிப்போம்.''

—என்றாள் ஆறுதலாக.

பிறகு, தாமரைக்கண்ணியின் துணையோடு வள்ளியம்மையைக் தூக்கிப் போய்க் குளிப்பாட்டுவதில் ஈடுபட்டாள்.

* * * *

மாடிக்கு வந்த தேன்மொழி வெறிபிடித்தவளைப் போலத் தன் அறையினுள்ளேயே உலவினாள்.

டாக்டர் பூங்கொடியும் தாமரைக்கண்ணியும், முகஞ்சுளிக்காமல் வள்ளியம்மையைத் தொட்டுத் தூக்கத் துணிவார்கள் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை; அவர்களுடைய சகிப்புணர்ச்சியை அவளால் நம்பவே முடியவில்லை. மாதவனை எப்படியாவது திருப்திப் படுத்தினால் சரி என்று தங்கள் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு தான் அவர்கள் அந்தத் தொழு நோய்க்காரியைத் தொட்டிருக்க வேண்டும் என்றும் அவளுக்கு விந்தையான முறையில் தோன்றியது.

சற்றுமுன் நடந்தநிகழ்ச்சிக்குப் பிறகு மாதவன் தன்னை ஒரு பொருட்டாகவே மதிக்கமாட்டான் என்று அந்தப் பேதைக்கு உறுதியாகப் பட்டுவிட்டது; அதோடு, தன்னை எப்படியும் பணிய வைத்துவிட வேண்டும் என்கிற வெறியில் அவனுடைய அக்காளைத் தூக்கத்தான் வேண்டும் என்று தன்னை விரட்டி, மிரட்டி, அடக்கி, ஒடுக்குவதற்கும் அவன் தயங்கவும் மாட்டான் என்கிற பயமும் கண்டுவிட்டது தேன்மொழிக்கு. அத்தகைய அடக்குமுறைக்கு—அடிமைத் தனத்திற்கு—நாற்றமெடுத்த உடம்பையெல்லாம் தூக்கிச் சுமக்க வேண்டிய நரக வாழ்க்கைக்குத்—தான் ஏன் ஆளாக வேண்டும் என்கிற ஆணவமும் அவள் மனத்தினுள்ளே மதங்கொண்டு துள்ளியது.

அதன் விளைவு..?

சிங்கப்பூரிலிருக்கும் தன் தந்தைக்கு, நடந்தவற்றை—நடக்கப் போகிறவற்றை—விளக்கமாக எழுதிவிடுவது என்னும் முடிவுக்கு வந்துவிட்டாள் அவள்.

சிறிது நேரத்தில் டாக்டர் பூங்கொடி மாடிக்கு வந்தாள். தான் வந்ததைக் கூடக் கவனிக்காமல் எழுதிக் கொண்டிருக்கும் தேன்மொழியின் பின்னால் போய் நின்றாள்.

''ஆமாம், என்ன இப்படி அவசரம் அவசரமாக எழுதுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''என் அப்பாவுக்குக் கடிதம் எழுதுகிறேன். இங்கே நடந்ததெல்லாம் அவருக்கும் தெரிய

வேண்டாமா?'' திரும்பிப் பார்க்காமல், தன் எழுதுகோலை ஓட்டியவாறே கூறினாள் அவள்.

''தேன்மொழி, நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள். உங்கள் அப்பாவுக்கு இங்கே நடந்ததைப் பற்றியெல்லாம் தெரிவிப்பது நல்லதே இல்லை. உங்களுடைய வாழ்க்கையைப் பற்றி உங்கள்—எதிர்காலத்தைப் பற்றி—அவர் எப்படியெல்லாம் கற்பனை செய்து கொண்டிருக்கிறார் தெரியுமா?''

''இனிமேலே எனக்கும் ஓர் இன்பமயமான வாழ்க்கை—ஒளி நிறைந்த எதிர்காலம்—உண்டு என்று உண்மையிலேயே நீங்கள் நம்புகிறீர்களா டாக்டர்? என்னைப் பொறுத்தவரையிலே எல்லாமே தீர்ந்துபோச்சு; ஆமா, எல்லாமே தீர்ந்துபோச்சு! அதனாலேதான் 'என்னைப் போலவே கற்பனையிலேயே மிதந்து கெட்டுப் போகாதீங்க; இனிமேலாவது கண்ணைத் திறந்து உண்மைகளைப் பாருங்க' என்று எச்சரிக்கை செய்யத்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.''

''ஆமா, இப்போ என்ன நடந்து விட்டது என்று இப்படி நிதானம் இழந்து பேசுறீங்க—எழுதுறீங்க?''

''ஏன் இங்கே என்ன நடக்கவில்லை? இன்னும் என்னதான் நடக்க வேண்டும்? என் கன்னம் இரண்டுமே இரத்த விளாறுக் கொப்புளிக்கும் படியா இதோ முரட்டுத்தனமா அறைந்திருக்கிறாரே, இது கூட உங்கள் கண்ணுக்குப் படலையா? நானும் பி.ஏ., வரை படித்திருக்கிறேன் என்கிற மதிப்புக்கூட இல்லாமல் என்னை அவர் கை நீட்டி அடிக்கலாமா? இன்றைக்கு என் கன்னத்திலே அறைந்தவர், நாளைக்கு என் கழுத்தையே நெரிக்கமாட்டார் என்று என்ன நிச்சயம்?''

''கணவன்—மனைவிக்குள்ளே அடிதடி, அறை, உதை—இவையெல்லாம் சர்வ சாதாரணம். தேன்மொழி! நீங்களும் ஆத்திர மூட்டும்படியா ஏதாவது சொல்லக்கூடாத வார்த்தைகளைச் சொல்லியிருக்கலாம்; மனைவி தானே என்கிற உரிமை உணர்விலே அவரும் அறைந்திருக்கலாம். அதை வைத்துக் கொண்டே அவரைக் கொலைகாரராகவே பெரிதுபடுத்தி மனத்தை அலட்டிக் கொள்வது முறையாகுமா?''

''உங்களுக்கு அவரைப்பற்றி தெரியாது டாக்டர்; தெரியாது! பார்ப்பதற்குத்தான் அவர் பசு; ஆனால், உண்மையிலேயே படு பயங்கரமான நாகப்பாம்பு அவர்! அவரைப்போல மூர்க்கத்தனமான ஆளை-முன்கோபியை—பிடிவாதக்காரரை — எல்லாவற்றுக்கும் மேலே அகம்பாவம் உள்ளவரை—நீங்கள் பார்க்கவே முடியாது. தான் தான் கவுதம புத்தரோட தத்துப்பிள்ளை என்கிற நினைப்பு; ஆனால் நடக்கிறதோ புத்தருக்கு நேர்மாறுதான். வேறே ஒன்றும் வேண்டாம். அவரையும் அவர் அம்மாவையுந்தானே ஒரு மரியாதைக்கு இங்கே வந்து குடியிருக்கச் சொன்னோம். அவர் தன்னுடை நோயாளி அக்காளையும் இங்கே கூட்டிக் கொண்டு வரலாமா? இப்படி நடு பங்களாவிலே வந்து நடமாட விடலாமா? அவளும் இங்கே உள்ள வசதிகளையெல்லாம் அனுபவிக்கட்டுமே என்று அவர் பேராசைப்படலாமா?''

''சரி; நடக்கவே முடியாத தன் அக்காளைத் தனியாகத்தான் எப்படி அவர் குடிவைக்க முடியும்?''

''ஏன் இங்கே எங்களுடைய தோட்டத்து மூலையிலே இருக்கிற 'அவுட் அவுசிலே' தங்க வைக்கிறது! வேண்டுமானால், சாப்பாட்டை இங்கிருந்து கொண்டுபோய்க் கொடுக்கிறது. அதை விட்டு விட்டு இங்கேயே அவளைப் பலபேரும் பார்க்கும் படியா எப்படிப் படுக்க வைக்கிறது? எத்தனையோ பெரிய மனிதர்கள்—நாகரீகமானவர்கள்—எல்லாரும் இங்கே வந்து போகிறார்கள். அவர்கள் இவளுடைய அசிங்கமான உருவத்தைப் பார்த்தால் எவ்வளவு அருவருப்பு அடைவார்கள்; பிறகு இந்தப் பங்களா பக்கம் வருவதற்கே யோசிக்கமாட்டார்களா? இவருடைய அக்காள் ஒருத்திக்காகப் பெரிய இடங்களோட தொடர்புகளையெல்லாம் நாங்கள் விட்டுவிட வேண்டுமா? சரி, அதுதான் போகட்டும். இவருடைய அக்காளை நான் தூக்கித்தான் ஆகவேண்டும் என்று இவர் எப்படி என்னை வற்புறுத்தலாம்? இவருக்குத்தான் நான் மனைவி; இவர் அக்காளுக்குமா நான் மனைவி? நீங்களும் தாமரைக்கண்ணியும் நோயாளிகளைத் தூக்கி எடுக்கிறதையே தொழிலாகக் கொண்டவர்கள்—அவளைத் தூக்குவீர்கள். உங்களைப்போல மருத்துவத் துறையைச் சேராமல் இருக்கிற சாதாரணப் பொதுமக்களிலே நூற்றுக்கு ஒருத்தராவது இப்படித் தொழு நோயாளிகளைத் தொட்டுத் தூக்குவார்களா மனம் சகித்து? அதையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் என் கிட்டே மட்டும் ஏன் இப்படி வம்பு பண்ணணும்—என் மனசை ஒடிக்கணும்?''

''தன்னைப் போலவே தன் மனைவியும் சகிப்பு உணர்ச்சி உள்ளவளா மாறணும் என்று ஒரு கணவர் விரும்புகிறதிலும் தவறு இல்லை அல்லவா?''

''அதற்காகத் தானாகக் கனியாத காயைத் தடி கொண்டு அடிக்கிறதா? அந்த மாதிரி அழுகிப் போன உடம்பையெல்லாம் என்னாலே தொட முடியாது என்றால் என்னை விட்டுவிட வேண்டியதுதானே! நான் ஒன்றும் ஏசுநாதரைப் போலவோ காந்தியாரைப் போலவோ, தொழுநோயாளிகளையெல்லாம் தொட்டுச் சிகிச்சை அளிக்கப் போவதாக அவர் மாதிரி நான் பீற்றிக் கொள்ளவில்லையே! எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால், தின்னப் போகிற சோற்றிலே செந்தேள்விழுந்து கிடக்கிற மாதிரி, இந்த மனித சமுதாய

### மொத்தத்தில் பாதி

தெய்வ மணம் பரப்பும் திருக்கோயில்கள் தஞ்சை மாவட்டத்தில் ஏராளம்! ஏராளம்! சின்னஞ் சிறிய ஊர்களிலும், விண்ணை முட்டும் கோபுரங்களுடன் கூடிய கோயில்கள் இருக்கின்றன. அக்கோயில்கள் பாடல் பெற்றவையாகவும், கலையழகு மிக்கவையாகவும் உள்ளன. தமிழ்நாட்டில் இருக்கும் கோயில்களில் பாதி தஞ்சை மாவட்டத்தில் உள்ளன.

யத்தையே கெடுக்கிற தொழு நோயாளிகளையெல்லாம் சுட்டுத் தள்ளி விடுவேன், சுட்டு!''

''ஆனாலும் தேன்மொழி, உங்களுக்கு இவ்வளவு கொடுமையான மனம் இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. மனித உயிர்களை இத்துணைக் கேவலமாக —கிள்ளுக் கீரையாக —நீங்கள் மதிக்கலாமா?''

''பலனே இல்லாத அதுவும் அருவருப்பான கொடூரமான மனித உருவங்கள் இருந்தால் என்ன? தொலைந்தால்தான் என்ன!''

''சரிசரி; இப்போது உங்களுக்கு இருக்கிற ஆத்திரத்திலே என்னையே கூடச் சுட்டாலும் சுட்டு விடுவீர்கள்!''—என்று நகைத்தவாறே கூறிய பூங்கொடி மேலும் தொடர்ந்தாள். ''அது கிடக்கட்டும்; இப்போது உங்கள் அப்பாவுக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்திவிடுங்கள். உங்களுடைய சின்னக் குடும்பச் சண்டையையெல்லாம் சிங்கப்பூர் வரை எட்டவிட்டு அவருடைய மனத்தையும் ஏன் நீங்கள் புண்படுத்த வேண்டும்?''

''இது ஒன்றும் சின்னக் குடும்பச் சண்டை இல்லை, டாக்டர். இது என்னுடைய பெரிய வாழ்க்கைச் சிக்கல்தான்; எப்போதுமே அந்த ஆளுக்குத் தன் அக்காளும், அம்மாவும் தான் உயர்த்தியே ஒழிய என்னைப் பற்றித் துளிக்கூட அவருக்கு அக்கறையே கிடையாது. ஒரு பெண்ணோடை மன உணர்வுகளை மதித்து நடக்கிற அளவுக்கு அவருக்குப் பெருந்தன்மையும் கிடையாது. சின்ன வயதிலேயே எலியும் தவளையும் கதை படித்திருக்கிறோமே, அப்படித்தான் என்னுடைய வாழ்க்கையும் அமைந்து விட்டது. இனிமேலே உடைந்து போன கண்ணாடி வளையலை ஒட்ட வைக்க முடியுமா? எப்போ என்னைக் கை நீட்டி அடித்தாரோ, அவர் அக்காளைத் தூக்கத்தான் வேண்டும் என்று மிரட்டினாரோ அப்போதே என் மனம் ஒடிந்து விட்டது. இந்தப் போராட்டம் இன்றோடு ஒழியும் என்று எனக்குத் தோணலே. அவருடைய முரட்டுப் பிடிவாதத்தைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு நாளும், ஏன் காலாகாலத்திற்கும் இந்தப் பெரு வியாதிக்காரியைத் தூக்கத்தான் வேண்டும் என்று சித்திர வதையே செய்வார். அப்படியெல்லாம் அவதிப்பட்டுச் சாக வேண்டும் என்று எனக்கு என்ன அவசியம்?''

''அது ஒன்றும் தொற்று நோய் இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?''

''அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை; அந்த அருவருப்பை என்னால் சகிக்க முடியாது.''

''சரி, உங்கள் அப்பாவே மாதவன் சொற்படிதான் நீங்கள் நடக்க வேண்டும் என்று கண்டித்து விட்டால் என்ன செய்வீங்க?''

''அவர் அப்படிக் கண்டிக்கவே மாட்டார். என்னைப் போலவே, அவரும் தொழுநோயாளிகளைக் கண்டால் தூர விலகி ஓடுகிறவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.''

''அது போகட்டும்; உங்கள் அப்பா தான் தேடிய சொத்துக்கள் அனைத்தையும் மாதவன் பெயருக்கே எழுதி வைத்து விட்டால் கூட உங்கள் கணவரை நீங்கள் வெறுத்துவிடுவீர்களா?''

''அப்படியே சொத்தே இல்லாமல் பிச்சையெடுக்கும்படியாகவே ஆனால்தான் என்ன? அதற்காகத் தன் அக்காளைத் தூக்கத்தான் வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிற மாதவனோடு நான் இனிமேல் வாழவே மாட்டேன்.''

ஆங்காரத்துடன் கூச்சலிட்டாள் தேன்மொழி.

''இப்படியெல்லாம் ஆத்திரப்பட்டு அவசர முடிவுக்கு வரக் கூடாது தேன்மொழி! இப்போது நான் எதற்கு இங்கே வந்தேன் தெரியுமா? உங்கள் அப்பா மாதவன் பெயருக்கு எழுதியுள்ள 'உயிலை' (இறுதி முறியைக்) கொடுத்து விட்டுப் போகத்தான்.''

''என்ன! மாதவன் பெயருக்கு உயிலா?''

''ஆமாம், அவர் பெயருக்குத்தான் 'உயில்'! ஆனால் அந்தச் சொத்துக்களைத் தரும காரியங்களுக்குத் தான் அவர் செல விடலாம் என்றும் வரையறுத்திருக்கிறார்.''

''எனக்கு அப்போதே தெரியுமே! என் அப்பாவின் மனத்தை மாற்றி எங்கள் சொத்துக்களை யெல்லாம் இந்த ஆள் எப்படியும் கொள்ளையடித்து விடுவார் என்று—எனக்கு அப்போதே தெரியுமே!''

—வெறி பிடித்தாற் போலக் கத்திய அவளுடைய வாயை டாக்டர் பூங்கொடி பொத்தினாள்.

''மாதவனைப் பற்றி வேறு எந்தக் குறையை வேண்டுமானாலும் சொல்லுங்கள்; ஆனால், உங்கள் சொத்துக்கு ஆசைப்பட்டார் என்று மட்டும் சொல்லாதீர்கள். தான் செய்கிற ஒவ்வொரு செலவுக்குமே அவர் கணக்கு எழுதி வைத்திருக்கிறார். தனக்கு உங்கள் அப்பா என்ன ஊதியம் போட்டுப் பொறுப்பாளர் பதவியை எழுத்து மூலம் ஒப்படைத்தாரோ, அந்தத் தொகையை மிஞ்சி ஒரு சல்லிக் காசைக் கூடத் தான் எடுத்துக் கொண்டதில்லை, என்று மாதவன் என்னிடமே ஒரு முறை கூறியிருக்கிறார். ஆனால், உங்கள்

## குடைமிளகாயும் முந்திரிப் பருப்பும்

தஞ்சாவூர் குடை மிளகாய் மிகவும் புகழ் பெற்றது. அது போலவே, கந்தர்வக்கோட்டை முந்திரிப் பருப்பும் புகழ் பெற்றது. இப்பொருள்கள் அங்கு மிகுதியாக விற்கப்படுகின்றன.

அப்பா, பெண்களுக்குச் சொத்து இருந்தால் அவர்கள் தங்கள் கணவனை மதிக்க மாட்டார்கள் என்கிற கருத்துக் கொண்டவர். இதைப் பற்றி எனக்கு எழுதியிருக்கும் கடிதத்திலும் குறிப்பிட்டு, அதனால்தான் மாதவனை என் சொத்துக்களுக்குச் சொந்தக்காரர் ஆக்கியிருக்கிறேன், என்றும் காரணம் கூறியிருக்கிறார். அதோடு, அவர் ஏன் இவ்வளவு அவசரப்பட்டு 'உயில்' எழுதினார் தெரியுமா? அதைத் தெரிந்து கொண்டீர்களானால், பிறகு வள்ளியம்மையைப் போன்றவர்களை நீங்கள் வெறுக்க மாட்டீர்கள்; உங்கள் கணவரை விட்டுப் பிரிவதற்கு நீங்கள் நினைக்கவும் மாட்டீர்கள்!''

''நீங்கள் என்ன டாக்டர் சொல்கிறீர்கள்?''

''உங்கள் அப்பாவுக்கும் அதே தொழு நோய் கண்டிருக்கிறதாம்!'' இப்போது சொல்லுங்கள்; உங்கள் அப்பா இங்கே வந்தால் அவரைத் தொட்டுத் தூக்குவீர்களா? இல்லையா?

''அய்யய்யோ! டாக்டர்!''

—அப்படியே தலையில் அடித்துக் கொண்டு அலறி விழுந்தாள் தேன்மொழி.

டாக்டர் பூங்கொடி அவளைத் தூக்கி நிமர்த்துவதற்குள்—

தாமரைக் கண்ணி மேலே ஓடோடி வந்தாள்.

''டாக்டரம்மா! டாக்டரம்மா! அவர் தன் அக்காளையும் அம்மாவையும் அழைத்துக் கொண்டு போகிறார் அம்மா''

—என்று படபடப்புடன் கூறினாள்.

தன்னுடைய தாய் விசும்பி விசும்பி அழுதவாறே தன்னைப் பின் தொடர்ந்து வர, தன் அருமை அக்காளைத் தன் முதுகிலே சுமந்தவாறே வெளி வாசலை நோக்கி நடந்து கொண்டிருந்தான் மாதவன்.

'காகித ஓடம் கடலலை மீது போவது போலே மூவரும் போவோம்... ...'

—என்று கலைஞர் எழுதிய திரைப்படப் பாடலை வானொலிப் பெட்டி அழுதவாறே வழிய விட்டது; அவர்களை வழியனுப்பி வைத்தது.

அவர்கள் பின்னாலேயே ஓடினாள் பூங்கொடி!

''மிஸ்டர் மாதவன்! உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். இந்த வீட்டை விட்டுத் தயவு செய்து போகாதீர்கள். பேரின்ப முத்துக்கு இந்தச் செய்தி எட்டினால் அவர் உயிரையே விட்டு விடுவார்.''

மாதவன் அழுது வற்றிப் போன தன் கண்களால் பூங்கொடியையே ஏற இறங்கப் பார்த்தான்.

> **முதல் கத்தோலிக்கத் தேவாலயம்**
>
> தமிழ்நாட்டில் முதன் முதலாகக் கத்தோலிக்கத் தேவாலயம் கட்டப்பட்ட இடம் தரங்கம்பாடி. அந்தத் தேவாலயம் 300 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

''உங்கள் முன்னாலேயே அவளை நான் அறைந்து விட்டதற்காக மன்னிப்புக் கேட்கத் தான் அவள் அறைப்பக்கம் சிறிது நேரத்திற்கு முன்னாலே வந்தேன். ஆனால்... அவள்... எலியும் தவளையும்... உடைந்த வளையல்... என்றெல்லாம் என்னை விட்டுப் பிரிவதற்காகப் பேசினாளே அந்த ஏறுமாறான பேச்சுகளைக் கூட என்னால் மறந்து விடமுடியும், டாக்டர்! ஆனால்... அவளுடைய சொத்துக்களையெல்லாம் எப்படியும் கொள்ளையடித்து விடுவேன் என்று வாய் கூசாமல் கூறினாளே! அதை எப்படி டாக்டர் மறப்பேன்? எப்படி டாக்டர் மறப்பேன்?... அந்த வார்த்தையைக் கேட்டவுடனேயே நான் கீழே இறங்கி வந்து விட்டேன். இனிமேலும் என் மானத்தை இழந்து இந்த வீட்டிலே நான் இருக்கலாமா? அதை விட நாங்கள் மூன்று பேருமே தூக்கு போட்டுக் கொண்டு தொங்கிவிட வேண்டாமா?''

—சின்னக் குழந்தை போலச் செருமிச் செருமி அழத் தொடங்கிவிட்டான் மாதவன்.

''நம்முடைய மனச்சாட்சி தான் நமக்கு வழிகாட்டி—தெய்வம்—எல்லாமே ஒழிய மற்றவர்களைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? உணர்ச்சி வசப்பட்டு ஆத்திர வெறியிலே வெளிப்படும் அவதூறுகளையும் அபாண்டப் பழிகளையும் நாம் ஏன் பொருட்படுத்த வேண்டும்?... அழாதீர்கள், மாதவன்! அழாதீர்கள்!''

—என்று தானும் அழுதவாறே கூறினாள் பூங்கொடி.

அதே சமயம்,

''அய்யோ! டாக்டரம்மா!''—என்று சமையற்காரி சண்பகம் உயிரைக் கொடுத்து அலறினாள்.

பூங்கொடியும், தாமரைக் கண்ணியும் மேலே மாடிக்கு ஓடினார்கள்.

அங்கே...?

தேன்மொழி என்னும் 'உணர்ச்சிக் குழந்தை' தன்னை மறந்து மயங்கிக் கிடந்தது!

'ஏன் இந்தக் காதல்?'—என்று கேளாமல் கேட்பது போல் தன் சிவந்த இதழ்கள் பிளந்த அதே நிலையிலேயே அது விழுந்து கிடந்தது.

சொர்க்கம் என்னும் தங்கத் தொட்டிலில் தன் அன்னையே வந்து தாலாட்டுவது போலக் கண்ணை மூடிக் கொண்டு மீளாத் துயிலிலும் மூழ்கித் திடீரென்று வீசிய சூறாவளிக் காற்றில் உதிர்ந்த மலராகவும் அது வாடிக் கிடந்தது.

(முற்றும்)




தஞ்சை மாவட்டத்தின் உணவு உற்பத்தி ஆண்டிற்கு ஆண்டு கூடி வருவதற்கு, தஞ்சை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றி வரும் அரும் பணிகளும் பெருந்துணையாக இருந்துள்ளன என்றால் மிகையல்ல.

தஞ்சை மாவட்ட உழவர்களுக்குத் தேவையான குறுகிய காலக் கடனையும், நடுத்தர காலக் கடனையும் வழங்குவதில் தஞ்சை மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய அங்கம் வகித்து வருகின்றன.

ஏழை எளிய உழவர்கள், முன்பெல்லாம் மிராசுதார் அல்லது லேவாதேவிக்காரர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி வயலை உழுது, பயிரிட்டு, அறுத்து, அடித்து, கண்டு முதலைக் களத்து மேட்டிலேயே அளந்து விட்டு விட்டு, வெறுங்கையோடு அல்லது கருக்காய் நெல்லோடு வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

அந்த வேதனையான காட்சிகள் இப்பொழுது நடைபெறவில்லை. சென்ற ஐந்து ஆண்டுக் காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கோடி கோடியாகக் குறுகிய காலக் கடனும், நடுத்தரக் காலக் கடனும் கொடுக்கப்பட்டு வருவதால், தஞ்சை மாவட்ட ஏழை எளிய உழவர்கள் கடன் சுமை குறைந்து, நிம்மதியாக வாழ்கின்றார்கள் என்றே கூறலாம்.

இயற்கை என்னதான் உதவி செய்தாலும், சாகுபடி செய்வதற்குத் தேவையான கடன் உதவி, காலத்தில் கிடைக்காவிட்டால், வேளாண்மை உற்பத்தி பெருகாது என்பது பொருளாதார மேதைகளின் கருத்தாகும். அக்கருத்தின் அடிப்படையிலேயே கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகச் சென்ற 5 ஆண்டுகளாகத் தஞ்சை மாவட்டத்தில் அதிக அளவுக் கடனுதவி செய்யப்பட்டு வருகிறது.

விதைகள், பூச்சி மருந்துகள், இரசாயன உரங்கள் வாங்குவதற்கும், சாகுபடி செலவிற்கும் குறுகிய காலக் கடன் உதவி செய்யப் படுகிறது. குறுகியகாலக் கடனை ஓராண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்தி விட வேண்டும்.

உழவு மாடுகள், வேளாண்மைக் கருவிகள் ஆகியவை வாங்குவதற்கு நடுத்தர காலக் கடன் உதவி வழங்கப்படுகிறது. நடுத்தர காலக் கடனை 3 முதல் 5 ஆண்டிற்குள் திருப்பிச் செலுத்தி விட வேண்டும்.

தஞ்சையிலும், குடந்தையிலும் உள்ள இரு மாவட்டக் கூட்டுறவு மைய வங்கிகள், அவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள 574 கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலமாகக் குறுகிய காலக் கடன்களையும், நடுத்தர காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்பில் கிராமக் கூட்டுறவு வேளாண்மைக் கடன் சங்கங்கள்தான் கடைக்காலாகவும், ஒருங்கிணைப்புக் கருவியாகவும் விளங்குகின்றன. தஞ்சை மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஏறத்தாழ 1,50,000 பேர் குறுகிய காலக் கடன், நடுத்தர காலக் கடன் உதவியினைப் பெற்றுப் பயனடைகின்றனர்.

சென்ற 5 ஆண்டுகளில் தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன், நடுத்தரக் காலக் கடன் ஆகியவற்றின் விவரம் வருமாறு :—

**குறுகிய காலக் கடன் கொடுத்தது**

| ஆண்டு | கோடி ரூபாய் |
|---|---|
| 1967–68 | 3·779 |
| 1968–69 | 4·220 |
| 1969–70 | 4·968 |
| 1970–71 | 5·768 |
| 1971–72 | 7·892 |

**நடுத்தர காலக் கடன் கொடுத்தது**

| ஆண்டு | இலட்சம் ரூபாய் |
|---|---|
| 1967–68 | 14·82 |
| 1968–69 | 26·41 |
| 1969–70 | 11·79 |
| 1970–71 | 11·22 |
| 1971–72 | 31·09 |

கடந்த 5 ஆண்டுகளில் தஞ்சை மாவட்டத்தில் இவ்விரு கடன் வகையிலும் சேர்த்து மொத்தம் 27·58 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் (1972–73) கீழே குறிப்பிட்டுள்ளபடி குறுகிய கால, மற்றும் நடுத்தர காலக் கடன் உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறுகியகாலக் கடன்— ரூ. 8·50 கோடி.

நடுத்தர காலக் கடன்— ரூபாய் 25 இலட்சம்.

இக்கடன் உதவிகளைப் பெற்று, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குமாறு தஞ்சை மாவட்ட உழவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

# அமெரிக்கா செல்லும் அம்பத்தூர் சைக்கிள்!

சென்னைக்கு 12 மைல் தொலைவிலுள்ள அம்பத்தூரில் 1949-ம் ஆண்டு நவம்பர்த் திங்களில் டிஐ சைக்கிள் கம்பெனி உருவாக ஆரம்பித்தது. இதற்குக் காரணமாக இருந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் யுனைட்டெட் கிங்டத்தைச் சார்ந்த திரு சர். ஐவான் ஏ. ஆர். ஸ்டெட்போர்டும் செட்டிநாட்டைச் சேர்ந்த திரு ஏ. எம். எம். முருகப்பச் செட்டியாரும் ஆவர்.

1951-ல் இத்தொழிற்சாலைப் பணி முற்றுப்பெற்று அடுத்த ஆண்டிலேயே 36,000 சைக்கிள்கள் இங்குச் செய்யப்பட்டு வெளிவந்தன. இரண்டாவது நிலையம் தொடங்கப்பட்ட பின்னர், 1955-ல் இங்கிருந்து 89,000 சைக்கிள்கள் வெளிவந்தன.

அம்பத்தூரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த 'டிஐ சைக்கிள்' உற்பத்தி நிலையம் சில ஆண்டுகளுக்குள்ளாகவே தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரியதாகவும், நவீனக் கருவிகளும், அமைப்பும் உடையதாகவும் விளங்கி இன்று இந்தியாவிற்கே பெருமை தரும் தமிழகத் தொழிற்சாலையாக வளர்ந்துள்ளது.

தொடக்கத்தில் இந்நிறுவனம் 'ஹெர்குலிஸ்' சைக்கிளைத்தான் உற்பத்தி செய்தது; பின் 59-ல் 'பிஎஸ்ஏ' அரிஸ்டோகிரோட் சைக்கிள்களையும் தயாரித்தது.

1960 - ஆம் ஆண்டில் 10 இலட்சம் சைக்கிளை உருவாக்கிய இத்தொழிற்சாலையிலிருந்து 1963-ஆம் ஆண்டு டிசம்பர் 19-ஆம் தேதிக்குள் இருபது இலட்சம் சைக்கிள்கள் வெளிவந்தன. 1970 - ஆம் ஆண்டில் 40 இலட்சம் சைக்கிள்கள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டன எனின் இத்தொழிலின் முன்னேற்றம் வியக்கத்தக்க ஒன்றல்லவா? இந்தியாவில் செய்யப்பட்ட மொத்தச் சைக்கிள்களின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்கு. இப்போது ஆண்டு தோறும் ஹெர்குலிஸ், பிலிப்ஸ், பிஎஸ்ஏ என்னும் பல்வேறு வகையான 4 இலட்சம் சைக்கிள்கள் இங்குச் செய்யப்படுகின்றன.

டிஐ சைக்கிள்கள் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இது 1967-ல் ஆரம்பித்தது. ஏற்றுமதிக்கென்றே 'கிராண்டு செம்பியம்', கோகினூர், 'ராயல் பிரின்ஸ்' 'டிரேக்ஸ்' எனும் பெயரிட்ட வண்டிகள் இங்கிருந்து ஆக்கப்பட்டு மத்தியக் கிழக்கு ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஆசியக் கண்டங்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகள், லத்தீன் அமெரிக்கா போன்ற 20 அயல்நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

1968–69-ல் அதிக ஏற்றுமதி செய்து அரசின் விருதுபெற்றதும் இந்நிறுவனமே. 'பிராம்படன்' என்னும் புகழ் பெற்ற சைக்கிள் இணைப்புகள் இங்குதான் தயார் செய்யப்படுகிறது. ஒலிம்பிக் எனும் சைக்கிள் சாடில்கள் (Bicycle saddles) இந்நிலையத்தில் உருவாகின்றன.

டிஐ மில்லர் லிமிடெட் கம்பெனி, மில்லர் டைனமோ விளக்குகளையும், ஸ்கூட்டருக்குரிய விளக்குகளையும் தயாரிக்கிறது. ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம், சைக்கிள் விளக்குகளையும் அறுபதாயிரம் ஸ்கூட்டர் விளக்குகளையும் இது உற்பத்தி செய்கிறது.



மேலும் டிஐ டைமண்டு செயின் லிமிடெட், இந்தியாவிலேயே ரோலர் சங்கிலியை (Roller Chain) உற்பத்தி செய்வதில் முதலிடம் பெற்று விளங்குகிறது.

சைக்கிளுக்கு வேண்டிய சங்கிலிகள் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, நார்வே, மேற்கு செர்மன், ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றிற்கு ஏற்றுமதியாகின்றன.

# முகத்தின் அழகு கண்ணாடியில் தெரியும்



"கல்யாணத்துக்கு நேரமாச்சு ........... இன்னுமா அலங்காரம் முடியலே ?"

"இதோ, ஒரு நொடியிலே வந்துடறேன்."

"ஒரு நொடின்னு நீ சொல்லி ஒரு மணி நேரமாச்சு ........ அப்படி என்னதான் கண்ணாடியில் அலங்காரமோ?"

இப்படிக் கண்ணாடியின் முன்னே நின்று கொண்டு மணிக் கணக்கில் தம் அழகைப் பார்க்கும் பெண்ணையும், ஏன் ஆண்களையும் கூட நாம் பார்க்கிறோம். அழகுக்கு அழகு செய்யத் துணையாய் இருப்பது இந்த அருமைக் கண்ணாடியே அல்லவா ?

கிண்டித் தொழிற்பேட்டை !

எத்தனை எத்தனைத் தொழில்களுக்கு அது உறைவிடமாக விளங்குகிறது! தமிழ்நாடு அரசின் பெரும் உதவியினால் அங்குத் தொழிற்கூடங்கள் பல்கிப் பெருகியுள்ளன. குறைந்த வாடகையில் அரசு அளித்துள்ள இடத்தில் அமைந்திருக்கும் தொழிற் கூடங்களில் "பில்கோ" கண்ணாடித் தொழிற்சாலையும் ஒன்று.

"மிகச் சிறிய அளவிலே, சிறிய இடத்திலே துவக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை இன்று பெருமளவில் வளர்ந்திருக்கிறதென்றால் அதற்குக் காரணம், தக்க சமயத்தில் அரசு தந்த உதவிதான்" என்கிறார் இதன் உரிமையாளர் திரு கே. நடராசன்.

தென்னகத்தில் முகம் பார்க்கும் கண்ணாடித் தொழிற்சாலையை, முதன் முதலாக இயந்திர மயமாக ஆக்கிய பெருமை இவர்களையே சாரும். பெல்ஜியம், ஜெர்மன், ஹாலந்து போன்ற நாடுகளில் கண்ணாடி பற்றிய தொழில் நுணுக்கங்களைக் கற்றறிந்த திரு என். தேவேந்திரன், இதன் உரிமையாளரின் மகன். இவர் அந்நாட்டில் தொழில் நுணுக்கங்களை மட்டுமல்ல, தொழில் சம்பந்தமான இயந்திரங்களைச் செய்யும் முறையையும் கற்று வந்து, இப்போது அத்தகைய இயந்திரங்களை எவர் உதவியுமில்லாமல் தாமே செய்திருக்கிறார். இதனால் அந்நியச் செலாவணி மிச்சமில்லையா ?

'பில்கோ' என்ற பெயர் எப்படி வந்தது ? கண்ணாடி என்று சொல்லும்போதே பெல்ஜியம் தான் நினைவுக்கு வரும். பெல்ஜியத்தில் 'எர்கோ' என்னும் பெயரில் கண்ணாடி புகழ் பெற்று விளங்கியதாம். இறக்குமதிக் கட்டுப்பாடு வந்ததால், அதேபோல் தரத்திலும், உழைப்பிலும் தகுதி மிக்க கண்ணாடிகளைத் தயாரிக்க இந்நிறுவனம் முன் வந்தது. 'எர்கோ' என்ற உச்சரிப்பு வரும்படி 'பில்கோ' என்று பெயர் வைத்துவிட்டார்கள். அவ்வளவுதான்!

இத் தொழிற்சாலையில் ஐம்பது பேர் பணியாற்றுகிறார்கள். இயந்திரச் சாதனங்கள் வாங்குவதற்காகத் தமிழ்நாடு அரசு கடன் தந்து உதவியுள்ளதைக் குறிப்பிடவேண்டும். ஒரு பிரிவு (Single Shift) வேலையின் மூலம் ஆண்டுக்கு 40 ஆயிரம் சதுர அடியிலிருந்து இன்று 70 ஆயிரம் சதுர அடி வரை கண்ணாடிகள் தயாரிக்கின்றனர். இன்னும் பல பிரிவுகள் வைத்துப் பணி புரிந்தால், ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் சதுர அடிகள் வரை கண்ணாடிகள் உற்பத்தி செய்யலாம். அதற்கான இயந்திர வசதிகள் இங்கு உள்ளன. இங்கு என்னென்ன கண்ணாடிகள் தயாராகின்றன ?

பலவித வடிவங்களில் முகம் பார்க்கும் கண்ணாடிகள், மேசை, பீரோவில் பதிக்கும் கண்ணாடிகள் முதலியவைகள் தயாரிக்கப்படுகின்றன. சில முகம் பார்க்கும் கண்ணாடிகளில் பூவேலைப்பாடுகளும் அழகாகச் செய்யப்படுகின்றன. அரசு அலுவலகங்கள், சென்னை இரயில் பெட்டித் தொழிற்சாலை, படப்பிடிப்பு நிலையங்கள் முதலானவற்றுக்கு இக்கண்ணாடிகள் பயன்படுகின்றன. தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கருநாடகம், மகாராட்டிரம் முதலான மாநிலங்களுக்கும், இலங்கைக்கும் இக்கண்ணாடிகள் அனுப்பப்படுகின்றன.

இவர்கள் வெறும் கண்ணாடிகளை மட்டும் பெல்ஜியத்திலிருந்து தருவிக்கின்றனர். அவைகளை இயந்திரங்களின் துணை கொண்டு பட்டை தீட்டி, மெருகேற்றி, 'ரசம்' பூசுகிறார்கள். 'ரசம்' பூசுவது என்பது கண்ணாடிக்குப் பின்னால் இருக்கும் சிவப்பு வண்ணம் என்று பலர் நினைத்துக் கொள்ளுகிறார்கள். அது தவறு. வெள்ளி கலந்த இரசாயனப் பொருள்களைக் கண்ணாடியின் ஒரு பக்கம் பூசிக் காய வைக்கிறார்கள். அது கெடாமலிருக்க அதன் மீது தாமிரப் பூச்சு பூசுகின்றனர்; அதையும் பாதுகாக்கக்காவி வண்ணத்தை அதன் மீது பூசிக் காய வைக்கின்றனர். இந்த

முறைக்கு 'வெள்ளிப் பூச்சு' என்று பெயர் பாதரசப் பூச்சு அல்ல.

இலங்கையில் நடந்த தொழிற் கண் காட்சியில் பாராட்டுதல்கள் பெற்ற இந் நிறுவனத்தின் எதிர் காலத் திட்டம், கார்களுக்கான கண்ணாடி செய்வதாகும். கண்ணாடியில் எது நல்ல கண்ணாடி ?

கண்ணாடியில் இருவகை உண்டு. அவை : 1. பிளேட் கிளாஸ் 2. ஷீட் கிளாஸ். முன்னது மேடு பள்ளமில்லாமல் ஒரே சமமாக இருக்கும்; மேலை நாட்டிலிருந்து வருவது. பின்னது மேடு பள்ளங்களாக இருக்கும். உள்ளூரில் தயாராகும் கண்ணாடி இது. இது உருவத்தைச் சரியாகக் காட்டாது. இதிலிருந்தே கண்ணாடியின் தன்மையைத் தெரிந்து கொள்ளலாம்.




உறுதியும், தரமும் மிக்க இக் கண்ணாடித் தொழில் மேலும் வளருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. சொந்தமாகத் தொழிற் சாலைகளைக் கட்டிக் கொள்ள வசதியாகத் தமிழ்நாடு அரசு, தொழிற் கூடங்களுக்குக் கிண்டித் தொழிற் பேட்டையில் இடம் ஒதுக்கியுள்ளது. அதில் ஒரு ஏக்கர் இடம் இத்தொழிலுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

'' தொழில் வளர்ச்சிக்காக அரசு குறைந்த விலையில் எங்களுக்கு இந்த இடத்தை ஒதுக்கியுள்ளது. இதே இடம் வெளியில் ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்தால் தான் கிடைக்கும். இப்படி அரசு எல்லா வகையிலும் எங்களுக்கு உதவி செய்வதை நாங்கள் மனமாரப் பாராட்டுகிறோம் '' என்கிறார் இதன் உரிமையாளர்.


# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந் நிலையம்தான் முதலாவது.

**சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ**
வீடுகள், ஓட்டல்கள், பலவேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திரம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.






**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் 'உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினல், பாலிவாலென்ட் ஃபினல் கலவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தர வல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்.,
நெய்வேலி—1**

FDSNLC946TM

''தமிழ் நாட்டில் இரண்டு இலட்சம் ஏக்கரில் சூரியகாந்தி பயிரிடுவதற்கானதிட்டம்வகுக்கப் பட்டுள்ளது என்று மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் திரு மன்னை ப. நாராயண சாமி அவர்கள் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 25-ஆம் நாளன்று சட்ட மன்றத்தில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்து பேசுகையில், குறிப்பிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளதைப் பார்த்தீர்களா?''

—இவ்வாறு கேட்டுக் கொண்டே இளைஞர் அணி இளங்கோ, ஊராட்சி மன்றத் தலைவரின் அருகில் வந்தார்.

''வாங்க தம்பி! உட்காருங்க. அந்தச் செய்தியைப் படித்து விட்டுத்தான், சூரிய காந்தி பயிரிடுவது பற்றி உங்களுக்கு ஏதேனும் தெரிந்திருக்கும் என்று எண்ணி உங்களைத் தேடினேன். நீங்கள் கிடைக்கவில்லை'' என்றார் ஊராட்சி மன்றத் தலைவர்.

''நம்ம ஊர் உழவர் விவாதக் குழுத் தலைவர் தங்கப்பன் நேற்று இரவு திருச்சி வானொலி நிலையப் பண்ணைச் செய்தி ஒலிபரப்பில், இரண்டு இலட்சம் ஏக்கரில் சூரிய காந்தி பயிரிடும் திட்டம் பற்றிக் கேள்விப்பட்டதிலிருந்து, சூரியகாந்தி பயிரிடுவது பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ளத் துடித்துக் கொண்டிருக்கிறார். எனக்குச் சூரியகாந்தி பயிரிடும் முறை பற்றிய முழு விவரம் தெரியாது. அதனால் காலையிலேயே எழுந்து, அது பற்றிய முழு விவரங்களையும் அறிந்து வருவதற்காக, நம்ம ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் தூயமணி அவர்களிடம் சென்றேன். இப்பத்தான் திரும்பி வந்தேன்'' என்றார், இளங்கோ.

''சூரியகாந்தி பற்றிய விவரம் தெரிந்து வந்தீர்களா?'' என்று ஆர்வத்துடன் கேட்டார் ஊராட்சி மன்றத் தலைவர்.

''ஓரளவுக்குத்தான் தெரிந்து கொள்ள முடிந்தது. தூயமணி அவர்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையருடன் இன்று காலை 8 மணிக்கே 'கேம்ப்' போய் விட்டார். அதனால் முழு விவரமும் தெரிந்து கொள்ள முடியவில்லை. இன்று மாலை 2 மணிக்குப் பக்கத்து ஊர் பரமசிவம் வயலில் சூரியகாந்தி விளக்கப் பாத்தி அமைக்கத் தூயமணி வருகிறார். அதை நேரடியாகப் பார்த்து வர நானும், தங்கப்பன் அவர்களும் புறப்படுகிறோம். நீங்களும் வந்தால் சூரியகாந்தி பற்றிய எல்லா விவரங்களையும் தூயமணி அவர்களிடம் கேட்டறிந்து வந்து, நீங்களும் சூரியகாந்தி பயிரிட்டுப் பார்க்கலாமே!'' என்றார் இளங்கோ.




''துணை வேளாண்மை அலுவலர் தூயமணி வருகிறார் என்றால், 'பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரிதான்!' நம்ம ஐயத்தையெல்லாம் தீர்த்து விளக்கமாகச் சொல்வார். அதனால் நானும் உங்களுடன் வருகிறேன். எப்போ புறப்படுகிறீர்கள்?'' என்றார் ஊராட்சி மன்றத் தலைவர்.

''இப்பொழுது மணி 1-40 ஆகிறது. தங்கப்பன் சைக்கிள் எடுத்துவரப் போயுள்ளார். அவர் வந்ததும் புறப்பட வேண்டியதுதான்'' என்றார் இளங்கோ.

''அப்படியானால் என்னுடைய சைக்கிளையும் எடுத்து வந்துவிடுகிறேன். இங்கேயே இருங்கள்'' என்று கூறிவிட்டு, ஊராட்சி மன்றத் தலைவர் தன் வீட்டைநோக்கி விரைந்தார். சற்று நேரத்தில் சைக்கிள்களுடன் தங்கப்பனும், மற்றும் 4 பேரும், ஊராட்சி மன்றத் தலைவரும் வந்தனர்.

ஏழு பேரும் சைக்கிளில் பக்கத்து ஊரை நோக்கிப் புறப்பட்டனர். சூரியகாந்தி பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்ற பேரார்வத்தில் 5 மைல் தூரத்தை 15 நிமிடத்தில் கடந்து பக்கத்து ஊர் பரமசிவம் வயலை அடைந்தனர். அங்கு ஒரு கூட்டமே கூடியிருந்தது.

அதே நேரத்தில் தூயமணி, சைக்கிளில் அங்கு வந்து சேர்ந்தார். அவருக்கு முன்பே அங்குக் காத்திருந்தவர்களைக் கண்டு தூயமணி வியப்படைந்து எல்லாருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டு, பரமசிவத்தைப் பார்த்து, ''நான் சொல்லியபடி எல்லாம் தயாராக வைத்துள்ளீர்களா?'' என்றார்.

''எல்லாம் தயாராக இருக்குதுங்க. ஒரு அரை மணி நேரம் வெய்யிலில் வந்த களைப்புத் தீர ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அதற்குள் கொஞ்சம் வெய்யில் தாழ்ந்து விடும். அப்புறம் விளக்கத் தளையில் செய்ய வேண்டியதைச் செய்யலாம்.'' என்றார்.

''ஓய்வெல்லாம் தேவையில்லைங்க!'' என்றார் தூயமணி. ''உங்களுக்குத் தேவையில்லாமல் இருக்கலாம்! ஆனால், எங்களுக்

குத் தேவை சார்! சைக்கிளில் வந்தது எங்களுக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. கொஞ்ச நேரம் சூரியகாந்தி பற்றிப் பேசிக் கொண்டிருப்போமே'' என்றார் ஊராட்சி மன்றத் தலைவர்.

''சரி'' என்றார் தூயமணி.

''இரண்டு இலட்சம் ஏக்கரில் சூரியகாந்தி பயிரிடும் திட்டம் பற்றி நம்ம வேளாண்மை அமைச்சர் கூறியுள்ளாரே! சூரிய காந்திக்குத் திடீரென்று இவ்வளவு முக்கியத்துவம் எப்படிங்க ஏற்பட்டது?'' என்றார் ஊராட்சி மன்றத் தலைவர்.

''தற்போது இந்தியாவில் தாவர எண்ணெய் (Vegetable oil) பற்றாக்குறை நிலவுகிறது. இதனாலேயே நல்லெண்ணெய், கடலை எண்ணெய் ஆகியவைகளின் விலை ஏறிப்போய்விட்டது. மக்கள் தொகைப் பெருக்கமும், தொழிற்சாலைகளின் மிகுந்த தேவையுமே தாவர எண்ணெய் பற்றாக்குறைக்குக் காரணமாகும். இப் பற்றாக்குறையைப் போக்கத் தற்சமயம் சூரியகாந்தி எண்ணெய், சோயாபீன் எண்ணெய் ஆகியவைகள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. 1966-67-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் வரை 59.54 கோடி ரூபாய்க்குச் சூரிய காந்தி, சோயாபீன் எண்ணெய்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த இறக்குமதியைத் தவிர்த்து, அந்நியச் செலாவணியை மீதப்படுத்த வேண்டுமென்பதற்காகவே சூரியகாந்தி பயிரிடுவதற்குரிய வாய்ப்பினை ஆராய இந்திய அரசு முடிவு செய்தது. அந்த முடிவினை ஒட்டி நடத்தப்பெற்ற ஆராய்ச்சிகளில் சூரியகாந்தி தமிழ் நாட்டிற்கு மிகவும் ஏற்றது என்பது தெளிவாகியுள்ளது. தமிழ் நாட்டில் நிலவும் தாவர எண்ணெய்ப் பற்றாக் குறையைப் போக்கி, தாவர எண்ணெய் விலையைக் குறைக்க வேண்டும் என்பதற்காகவே, தமிழ்நாடு அரசு 1972—73-ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏக்கர்களில் சூரிய காந்தி பயிரிடும் திட்டத்தை வகுத்துள்ளது என்று வேளாண்மை அமைச்சர் அறிவித்துள்ளார்'' என்றார் தூயமணி. அவர்களுடைய உரையாடல் தொடர்ந்தது.

''சூரியகாந்தி எண்ணெய் சமையலுக்கு ஏற்றதாக இருக்குமா சார்?'' என்றார் தங்கப்பன்.

'' நாம் கடலை எண்ணெய், நல்லெண்ணெய் ஆகியவைகளைச் சமையலுக்குப் பயன்படுத்துவது போலவே சூரியகாந்தி எண்ணெய்யைச் சமையலுக்குப் பயன்படுத்தலாம். சூரியகாந்தி எண்ணெய்யில் உள்ள சத்துக்களை மற்றத் தாவர எண்ணெய்களில் உள்ள சத்துக்களுடன் ஒப்பிட்டால் சூரியகாந்தி எண்ணெயின் தரம் உயர்ந்து காணப்படுகிறது. கொழுப்புச் சத்து சிறு அளவு கூட இதில் இல்லை.''

''சூரியகாந்தியின் வேறு உபயோகம் என்ன சார்?''

" ஐரோப்பிய நாடுகளில் சூரிய காந்திச் செடியிலிருந்து விதைக்காகப் பூக்களை அறுவடை செய்த பின்பு, செடிகளை வெட்டிக் காய வைத்து விறகாகப் பயன்படுத்துகிறார்கள். சிலர் சூரியகாந்தி விதையை உரித்துத் தோலை நீக்கி விட்டுக் கடலைப் பருப்பைப் போல் உண்ணுகிறார்கள். சூரிய காந்தி விதைகள் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் சத்துள்ள உணவாகப் பயன்படுகின்றன: வார்னீஷ், சோப்பு, மருந்துப் பொருள்கள் முதலியன தயாரிக்கவும் சூரியகாந்தி எண்ணெய் பயன்படுகிறது. அது போல் நம் நாட்டிலும் சூரியகாந்தியைப் பயன்படுத்தலாம்''

''சூரியகாந்தி பெரும்பரப்பில் பயிரிட ஏற்றதா சார்?''

''இந்தியாவில் இதுவரை, சூரியகாந்திச் செடியைப் பள்ளிக்கூடம், பூங்கா, வீட்டுத் தோட்டம் ஆகிய இடங்களில் மட்டும் வளர்த்து வந்தோமே தவிர, பெரும் பரப்பில் பயிர் செய்யவில்லை. அதனாலேயே உங்களுக்கு இந்த ஐயம் ஏற்படுகிறது. ஆனால் சோவியத் ரஷ்யா, பல்கேரியா, ருமேனியா, கனடா முதலிய நாடுகளில் சூரிய காந்தியை ஏப்ரல்-மே மாதம் முதல் செப்டம்பர்-அக்டோபர் மாதம் வரை பெரும் பரப்பில் பயிரிட்டு வருகிறார்கள். அந்த நாடுகளிலெல்லாம் சூரியகாந்தி விதைகளிலிருந்து எண்ணெய் எடுத்துப் பெரும் பயன் பெற்று வருகிறார்கள். பொதுவாக மேல்நாடுகளில் சூரியகாந்தி முக்கிய எண்ணெய் வித்துப் பயிராக விளங்குகிறது.''

''அந்த நாடுகளின் கால நிலைக்குச் சூரியகாந்தி ஏற்றதாக இருக்கலாம். நம் நாட்டிற்கு ஏற்றதாக இருக்குமா சார்?''

''ஆராய்ச்சி நடத்திப் பார்த்த பின்புதான், நம் நாட்டின் கால நிலைக்குச் சூரியகாந்தி ஏற்றது என்று கூறிச் சூரிய காந்தியைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. 1969-ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவிலிருந்து 4 சூரியகாந்தி ரகங்கள் வரவழைக்கப்பட்டன. அந் நான்கு ரகங்களையும், முன்பே அறிமுகமாயிருந்த 'சூரிய உதயம்' ( Sun Rise ) என்ற தேர்ந்த ரகத்தையும் 1969—70-ஆம் ஆண்டின் பின்பட்டத்தில் (ரபி) 13 ஆராய்ச்சி நிலையங்களில் சோதனையாகப் பயிரிட்டுப் பார்க்கப்பட்டன. இந்தச் சோதனைகளை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு ( Indian Council of Agricultural Research ) நடத்தியது.


தமிழரசு
சந்தா
ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்
விவரங்களுக்கு
நிருவாகி,
தமிழரசு அலுவலகம்
அரசினர் தோட்டம்,
சென்னை - 2

1970-71-ஆம் ஆண்டில் 11 மாநிலங்களில் உள்ள 31 ஆராய்ச்சி நிலையங்களில் சூரிய காந்திச் சோதனைகள் நடைபெற்றன. அச் சோதனைகளில் இருந்து சூரிய காந்தி இறைவையில் ஹெக்டேருக்கு 3.2 மெட்ரிக் டன் மகசூல் வரையும், மானாவாரியில் ஹெக்டேருக்கு 1.8 மெட்ரிக் டன் மகசூல் வரையும் கொடுக்கவல்லது என்பது புலனாகியது. இவ்வாறு ஆராய்ச்சி செய்து, தெளிந்த பின்பே சூரிய காந்தி பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.''

''தமிழ்நாட்டில் சூரியகாந்தி பற்றிய ஆராய்ச்சி நடத்தப் பெற்றதா? அதன் முடிவு என்ன? விவரமாகச் சொல்லுங்க சார்?'' என்றார் ஊராட்சி மன்றத் தலைவர்.

''கோயம்புத்தூரில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலைய மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் 1970-ஆம் ஆண்டு முன் பட்டத்தில் (கரீப்) சூரிய காந்தியை இறைவையாகப் பயிரிட்டதில் 89 நாட்களில் ஹெக்டேருக்கு 3.2 மெட்ரிக் டன் மகசூல் கிடைத்துள்ளது.

''பல்வகைப் பயனளிக்கும் பயிராகச் சூரியகாந்தி விளங்குவதால், சூரியகாந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்திப் பரவச் செய்திடத் தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. திருநெல்வேலி மாவட்டம், கோவில் பட்டியில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தொடர்ந்து சூரியகாந்திப் பரிசோதனை நடந்து வருகிறது. அந்த ஆராய்ச்சி நிலையத்தில் 26 அயல் நாட்டுச் சூரிய காந்தி ரகங்கள் பயிரிட்டுப் பார்க்கப்பட்டன. நல்ல மகசூல் கொடுக்கும் என்று நம்பப்பட்ட 5 ரஷ்ய ரகங்களையும், ஒரு கனடா நாட்டு ரகத்தையும் 1970-1971-ஆம் ஆண்டுகளில் கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலும், திருநெல்வேலி மாவட்ட உழவர்களின் வயலிலும் பயிரிட்டு, மகசூல் ஒப்பியல் பரிசோதனைகள் செய்யப்பட்டன. அவைகளில் இ.சி. 68414 என்ற ரஷ்ய ரகம், மற்றவைகளைவிட மிகவும் சிறந்தது என்பது தெளிவாகியது. இந்த ரகத்தை விரைவில் 'கே-1' (கோவில்பட்டி-1) சூரிய காந்தி என்ற பெயரில் வெளியிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.



''இ.சி. 68414 என்ற சூரிய காந்தி ரகம் கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இறைவையில் ஹெக்டேருக்கு 2,257 கிலோவும், மானாவாரியில் ஹெக்டேருக்கு 451 முதல் 657 கிலோவும் மகசூல் கொடுத்துள்ளது. திருநெல்வேலி மாவட்ட உழவர்களின் வயலில் நடத்தப் பெற்ற பரிசோதனைகளில் இந்த ரகம் இறைவையில் ஹெக்டேருக்கு 2,962 கிலோ வரை மகசூல் அளித்துள்ளது. இந்த ரகத்தின் வயது இறைவையில் 74 முதல் 85 நாட்களாகவும், மானாவாரியில் 90 முதல் 100 நாட்களாகவும் உள்ளன. இந்த ரகச் சூரியகாந்தி விதைகளில் 46.71 சத அளவு எண்ணெய் அடங்கியுள்ளது. இந்த ரகத்தை மானாவாரியாகப் பயிரிட்டால், ஒரு ஹெக்டேரில் இருந்து 307 கிலோ எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும். இதே ரகத்தை இறைவையாகப் பயிரிட்டால் ஒரு ஹெக்டேரிலிருந்து 1,044 கிலோ எண்ணெய் உற்பத்தி செய்ய இயலும். இந்த அளவு எண்ணெய் உற்பத்தியை, நிலக்கடலைப் பயிரிடுவதால் கிடைக்கும் எண்ணெய் அளவுடன் ஒப்பிட்டால், ஒரு ஹெக்டர் சூரிய காந்தி பயிரிடுவதால் கிடைக்கும் எண்ணெய், இரண்டு



ஹெக்டேர் நிலக்கடலை பயிரிடுவதால் கிடைக்கும் எண்ணெய்க்குச் சமமாக இருப்பது தெரிய வருகிறது. திருந்திய சாகுபடி முறைகளினாலும், பயிர் மேம்படுத்தும் முறைகளினாலும் சூரியகாந்தியின் எண்ணெய் கொடுக்கும் திறனை, நிலக்கடலையின் எண்ணெய் கொடுக்கும் திறனைவிடச் சுமார் 2½ முதல் 3 மடங்காக உயர்த்தும் நாள் வெகு தூரத்தில் இல்லை'' என்றார் தூயமணி.

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால், எண்ணெய்ப் பற்றாக்குறை தீர, சூரியகாந்தி பயிரிடுவதே நல்வழி என்பது தெளிவாகிறது'' என்றார் தங்கப்பன்.

''எண்ணெய்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்குரிய உயரிய வழி, ஒரே வழி, சூரியகாந்தி பயிரிடுவது தானுங்க. அதுமட்டுமில்லைங்க! நிலக்கடலை பயிரிடுவதைவிட, சூரியகாந்தி பயிரிடுவது மிகவும் சிக்கனமாதும், சீக்கிரத்தில் பயன் கொடுக்கக் கூடியதுமான வழியாக உள்ளதுங்க'' என்றார் தூயமணி.

''சூரியகாந்தி பயிரிடுவது சிக்கனமானது ; சீக்கிரத்தில் பயன் கொடுக்கக் கூடியது என்று சொல்கிறீர்களே. அதைக் கொஞ்சம் தெளிவாக்குங்க'' என்று கூறினார் மற்றொருவர் ;

''சூரியகாந்தி ஹெக்டேருக்கு இறைவையில் உச்ச அளவாக 3.2 மெட்ரிக் டன் மகசூலும், மானாவாரியில் உச்ச அளவாக 1·8 டன்மகசூல் வரையும்கொடுக்க வல்லது. சராசரியாக கணக்கிட்டால் சூரியகாந்தி ஹெக்டேருக்கு 1,500 கிலோவுக்குக் குறையாமல் மகசூல் கொடுக்கும். ஆனால், தற்பொழுது தமிழ் நாட்டில் ஹெக்டேருக்குச் சராசரியாக 888 கிலோ நிலக்கடலை தான் விளைகிறது. சூரியகாந்தியின் மகசூல் கொடுக்கும் திறன் அதிகமாக இருப்பது போலவே, எண்ணெய் கொடுக்கும் திறனும் அதிகமாக உள்ளது. இ.சி. 68414 சூரியகாந்தியின் விதையில் 46.71 சதம் எண்ணெய் உள்ளது. இந்த அளவினை ஆராய்ச்சி மூலம் ரஷ்யாவில் உள்ளது போல 50 சதம் உயர்த்த முடியும். ஆனால், நிலக்கடலையில் (தோலுடன்) 30 முதல் 35 சத எண்ணெய்தான் உள்ளது. எனவே, சூரியகாந்தி பயிரிடுவதால் அதிக மகசூலும், அதிக எண்ணெய்யும் கிடைப்பதால், சூரியகாந்தி பயிரிடுவது நிலக்கடலை பயிரிடுவதைவிடச் சிக்கனமானது என்பது தெளிவாகிறது.

''மேலும் சூரியகாந்தியில், பூச்சியால் ஏற்படும் தீங்குகள் குறைவு. நிலக்கடலையில் பூச்சி நோய்களினால் ஏற்படும் சேதம்அதிகம். சூரியகாந்தி பயிரிட ஹெக்டேருக்கு 12 கிலோ விதை போதும். ஆனால், நிலக்கடலை பயிரிட ஹெக்டேருக்கு125 கிலோ விதைப் பயறு தேவைப்படும். இவைகளிலிருந்தும் சூரியகாந்தி பயிரிடுவது சிக்கனமானது என்பது விளங்குகிறது.

''சூரியகாந்தியின் வயது குறைவு. சூரியகாந்தி இறைவையில் 86 நாட்களுக்குள்ளும், மானாவாரியில் 100 நாட்களுக்குள்ளும் அறுவடையாகிவிடும். ஆனால், நிலக்கடலையின் வயது அதிகம். குத்துரக நிலக்கடலை 105 நாட்களிலும், கொடிரக நிலக்கடலை 135 நாட்களிலும் அறுவடைக்கு வரும். நிலக்கடலையின் வயதைவிடச் சூரியகாந்தியின் வயது குறைவாக இருப்பதனால்தான் சீக்கிரம் பயனளிக்கக் கூடியது என்று கூறினேன். இதனால் நீர்ப்பாசனச் செலவும் குறைவதுடன் பல போகப் பயிர் முறைக்கும் வழி ஏற்படும்'' என்று கூறினார் தூயமணி. அதன் பிறகு அனைவரையும் விளக்கத்தளைக்கு அழைத்துச் சென்று விளக்கமளித்தார்.

''சூரியகாந்தியை வணிக முறையில் பயிரிடும் முறையை உழவர்களுக்கு விளக்குவதற்காகவே விளக்கத் தளைகள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு தளையும் அரை ஏக்கர் பரப்பில் அமைக்கப் படுகிறது. விளக்கத்தளை ஒவ்வொன்றுக்கும் வேளாண்மைத் துறை மூலம் ரூபாய் 150 மானியம் வழங்கப் படுகிறது. 1971-72-ஆம் ஆண்டு முன்பட்டத்தில் தமிழ் நாட்டில், 180 விளக்கத்தளைகள் மானுவாரியில் அமைக்கப்பட்டன. பின் பட்டத்தில் 160 தளைகள் இறைவையில் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு விளக்கத்தளைகள் அமைப்பதற்குத் தமிழ்நாடு அரசு அண்மையில் ரூ. 52,000 செலவு செய்ய அனுமதி அளித்துள்ளது. அதில் ஒன்றுதான் இங்குப் பரமசிவம் வயலில் அமைக்கப்படுகிறது. இத்தளையைப் பார்க்கும் சுற்றுப்புற உழவர்கள், சொந்த முயற்சியில் சூரியகாந்தி பயிரிட முன்வர வேண்டும்'' என்று கூறிவிட்டுச் சாகுபடிமுறைபற்றிக் கூறத் தொடங்கினுர் தூயமணி.

''சூரியகாந்தியைப் பல்வேறு மண்வகைகளிலும் பயிரிடலாம். ஆனால், மண் களர் தன்மை கொண்டதாகவோ, அமிலத் தன்மை கொண்டதாகவோ, தண்ணீர் வடியும் தன்மையற்றதாகவோ இருக்கக் கூடாது. நிலத்தை நன்கு உழுது, கட்டிகளை உடைத்து விட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 8 வண்டி தொழு எரு, 16 கிலோ தழைச்சத்து (80 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 35 கிலோ யூரியா,) 32 கிலோ மணிச்சத்து (200 கிலோ சூப்பர் பாஸ்பேட்,) 32 கிலோ சாம்பல் சத்து (51 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்) ஆகியவைகளை இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு செய்ய வேண்டும். பின்பு வயலை நீர்ப்பாசனம் செய்வதற்கு ஏற்றாற்போல் பாத்திகளாக அமைத்துக்கொள்ளவும். பாத்திகளில் விதைகளை வரிசை வரிசையாக ஊன்ற வேண்டும். வரிசைக்கு வரிசை 2 அடி இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 1 அடி இடைவெளியும் விட்டு, 2 அங்குலம் முதல் 3 அங்குல ஆழத்தில் விதைகளை ஊன்ற வேண்டும். ஒரு ஏக்கருக்கு 5 கிலோ விதை தேவைப்படும்'' என்று கூறி விட்டு விதைகளை ஊன்றிக்காட்டினுர். அதேபோல் மற்றவர்களும் செய்தனர். விதை ஊன்றிய பின்பு தண்ணீர் விடப்பட்டது.

''களையெடுப்பது, நீர்ப்பாசனம், அறுவடை பற்றியும் கூறிவிடுங்கள்'' என்றார் பரமசிவம்.

''விதை ஊன்றிய 4-ஆம் நாள் முளை நீர் விடவேண்டும். 10-ஆம் நாள் முதற்களை எடுக்க வேண்டும். செடிகள் 4 முதல் 6 இலைகள் இருக்கும் நிலையில் 2-ஆம் முறை களை எடுத்தல் அவசியம். மண்ணின் ஈரத்திற்கு ஏற்ப 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை வீதம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பூப் பூக்கும் கால சமயத்தில் கடைசி நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். அதன் பின் நீர்ப்பாசனம் தேவையில்லை. பூக்கள் முதிரும் நிலையில் பறவைகளால் சேதமுறாமல் பாதுகாக்கவேண்டும். சூரியகாந்திப் பூவின் மையப்பகுதி மஞ்சள்-பழுப்பு நிறமாக மாறியவுடன் அறுவடை செய்ய வேண்டும். பூக்களை மட்டும் தனியே அறுத்துச் சூரிய ஒளியில் காய வைத்து, பின்பு அடித்து விதைகளைப் பிரிக்க வேண்டும். விதைகளை நன்கு காயவைத்துச் சேமிக்க வேண்டும். அல்லது எண்ணெய் எடுப்பதற்குப் பயன்படுத்தலாம். நான் அவ்வப்பொழுது வந்து பார்த்துச்செய்ய வேண்டியதைச் சொல்கிறேன். கவலைப்படாதீர்கள்'' என்றார் தூயமணி.

ஊராட்சி மன்றத் தலைவரும், தங்கப்பனும் மற்றும் சில உழவர்களும் சொந்தச் செலவிலேயே சூரியகாந்தி பயிரிட விருப்பம் தெரிவித்துச் சூரியகாந்தி விதை கேட்டனர். அவர்களுக்கெல்லாம் விரைவில் சூரியகாந்தி விதை கொடுப்பதாக உறுதியளித்தார் தூயமணி.

''மணி 4.00 ஆகிவிட்டது. நான் இப்போழுதே புறப்பட்டால் தான் இருட்டுவதற்குள் அலுவலகம் செல்ல முடியும். அலுவலக வேலை நிறைய இருக்கு'' என்றார் தூயமணி.

''அப்போ சரிங்க. போய் விட்டு வாங்க'' என்று அனைவரும் அன்புடன் தூயமணியை அனுப்பி வைத்தனர். அவர் சைக்கிளில் அலுவலகம் நோக்கிப் பறந்துகொண்டிருந்தார்.

ஊராட்சி மன்றத் தலைவரும், தங்கப்பனும், இளங்கோவும், மற்றவர்களும் தெரியாததைத் தெரிந்துகொண்ட புதிய தெம்பில் சைக்கிளை வேகமாக மிதித்துக் கொண்டிருந்தனர். கடைசியாக விளக்கத்தளை அமைத்த உழவர் பரமசிவம் ஒளிமயமான எதிர்காலம் தனக்கு வர இருப்பதை எண்ணி மகிழ்ச்சியுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.

## முட்டையைத் தேர்ந்தெடுக்கும் கருவி

பெரிய கோழிப்பண்ணைகளில் இருந்து நாள்தோறும் இலட்சக் கணக்கான முட்டைகள் மக்கள் பயனுக்காகஅனுப்பப்படுகின்றன இவற்றில் சில கெட்டிருக்கலாம்; இன்னும் சில முட்டைகள் பதர் போல் உள்ளே ஒன்றும் இல்லாமல் இருக்கலாம்; இவற்றையெலாம் நீக்கி நல்ல கனமான முட்டைகளைப் பிரித்தெடுக்க ஒரு இயந்திரம் பயன்படுகிறது. இந்த இயந்திரத்தை இங்கிலாந்து நிறுவனம் ஒன்று உருவாக்குகின்றது.

வரிசைக்கு 15 முட்டைகள் வீதம் கன்வேயர்கள் மூலம் ஒரு அறையிலிருந்து அடுத்த அறைக்கு அனுப்பப்படும் அந்த நேரத்தில், குறையுள்ள முட்டைகளை அவற்றின் எடையிலிருந்து இந்த இயந்திரம் கண்டுபிடித்துப் பிரித்து விடுகிறது. நல்ல கனமான முட்டைகள் மட்டும் அடுத்த அறைக்குச் செல்கிறது. முட்டைகளை ஆறு வகையாகப் பிரித்து எடுக்கக் கூடியது இந்த இயந்திரம். ஒருமணி நேரத்தில் பத்தாயிரத்துக்கும் அதிகமான முட்டைகளை ரகம் வாரியாக இது பிரிக்கும்.

# குவலயம் காணாத குடியிருப்புச் சட்டம்!

அரசு நிலங்களை வீட்டுமனைகளுக்காகப் பட்டாவாக்கிக் கொடுக்கும் திட்டம் தீவிரமாகச் செயல்பட்டு, அதன் மூலம் சென்ற ஐந்தாண்டுகளில் மட்டும் 28,653 பேர்களுக்கு மனைப் பட்டா வழங்கி விட்ட போதிலும், ஏற்கெனவே தனியார் பட்டா நிலங்களில் வீடுகட்டிக் குடியிருந்து வரும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான உழவர்களுக்கு அவரவர்கள் குடியிருக்கும் இடத்தையும், வீட்டையும் பட்டாவாக்கிக் கொடுத்து, அந்த உழவர்களை வீட்டு மனைக்கு முழுப் பாத்தியமானவர்களாக்க வேண்டிய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கருதி முக்கியமான ஒரு சமுதாயச் சீர் திருத்தச் சட்டத்தைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ளது. இதுவே 1971 - ஆம் ஆண்டின் தமிழ்நாடு குடியிருப்புச் (உடைமையை உரிமையாக்கும்) சட்டம் ஆகும் [Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Act, 1971].

இச்சட்டத்தின்படி 19-6-71 அன்று ஓர் உழவனோ அல்லது வேளாண்மைத் தொழிலாளியோ குத்தகைக்காரர் என்ற முறையிலோ, உரிமம் பெற்றவர் என்ற நிலையிலோ நிலச்சுவான்தாருக்குச் சொந்தமான எந்த ஓர் இடத்திலும், அவர் உபயோகித்து வரும் மனைக்கட்டும், அதன்மேல் உள்ள, கட்டடமும் 15-1-72 முதல் அவரவர் உடைமையாகக் கருதப்படும். அந்த இடத்தை அவர்கள் உடைமையாக்கி, அதற்கான பட்டாக்கள் வழங்கத் தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால், அந்த நிலத்தின் மீது தன் உரிமையை இழக்க நேரும் நிலச்சுவான்தாருக்கு இச்சட்டத்தில் நிர்ணயிக்கப்படும் தொகை கொடுக்கப்படும்.

இந்தச் சட்டத்தின் மூலம், இது வரை—கணக்கு எடுத்த வரையில் தஞ்சை மாவட்டத்தில் 1,09,580 பேர்கள் பயனடைவர். தான் நன்றாக வாழ, தன் குத்தகைதாரரும் வாழ வழி செய்திடல் வேண்டும் என்ற பெரு நோக்குக் கொண்ட பல நிலச்சுவான்தார்களை அரசு அலுவலர்கள் அணுகி, அவர்களுடைய உடைமையான நிலங்களில் குடியிருந்துவரும் உழவர்கள் சார்பாக, அந்த நிலங்களில் மீதான தங்கள் உரிமையை விட்டுக்கொடுக்கக் கோரிய போது, அவர்கள் மனமொப்பித் தங்கள் உரிமையை விட்டுக் கொடுத்துள்ளார்கள். தங்களுக்கு ஈட்டுத் தொகை மூலம் கிடைக்கும் தொகையை அவர்கள் பெரிதாக எண்ணவில்லை என்பது அவர்களின் பெருந்தன்மையையே காட்டுகிறது. இதன்படி, சென்ற சில மாதங்களில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல நிலச்சுவான்தாரர்கள் சுமார் 5,000 குடியிருப்பு மனைகளை இனாமாக விட்டுக் கொடுக்க முன்வந்துள்ளார்கள்.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான குடியிருப்பு நிலமற்றவர்களைப் பட்டாதாரர்களாக்கும் இப்புதிய சட்டத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 27-2-1972 அன்று துவக்கி வைத்து, 5,000 நிலமற்ற உழவர்களுக்கு மனைப் பட்டா வழங்கினார்கள். இந்த வரலாறு காணாச் சிறப்பு நிகழ்ச்சிக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் தலைமை யேற்றார்கள்.

இலட்சத்துக்கும் அதிகமான உழவர்களுக்கு மனைப் பட்டாவை உரிமையாக்கும் பணியை வெகு விரைவில் முடிக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.



# தாயாகும் தஞ்சை நிலம்!

— இளங்கோ

படியளந்த பரந்தாமன் பள்ளி கொண்டு
பஞ்சணையில் படுத்தாலும் பஞ்ச மின்றிப்
படியளந்து கொண்டிருக்கும் பந்த நல்லூர் ;
பசுமைமிகு புரட்சியினல் சிக்கல் தீர்த்தே
அடியளந்த அண்ணவின் தாளில் வெற்றி
அணிவித்த சாவடியாம் ; இந்நாள் எங்கும்
குடியளந்து குறைநீக்கும் கொள்கை முன்னேன்
கோச்சோழன் மனுநீதி கண்ட தெங்கே ?

சோறுடைய வளநாடு : பட்ட ணத்தார்
தோடர்தோப்புத் துறையுள்ள நாஞ்சில் நாடு :
நீறுடைய நுதலோடு பட்டி னத்தார்
நிலையாமை தெளிவித்த திருவெண் காடு ;
ஆறுடைய புனல்பொன்னி ஐயா ருகி,
ஆடுதுறை சிறக்கின்ற மன்னன் பந்தல் :
நூறுடைய வயதான கலைக்கல் லூரி
நுங்கினிய தமிழாயக் கிடங்கல் தஞ்சை !

காவிரியில் கல்லணையை அமைத்த வேந்தன்
கலம்விட்ட பூம்புகாரின் பெருமை யெல்லாம்
பாவரியின் சொல்லணையில் அடங்கிப் போமோ ?
பரம்பரையின் போராற்றல் மங்கிப் போமோ ?
சாவரினும், தன்மான இயக்கக் கொள்கை
தழைப்பிக்கும் அழகிரிகள் இங்கே உண்டு :
நோய்வரினும் கடன்முடிக்கும் நடரா சர்கள்
நூலோர்கள் மொழிகாக்க நிரம்ப உண்டே !

குடியானர் தம்தோழர் ஆகி, எட்டுக்
குடியுமின்று மாங்குடியாய் மாவூர் ஆகும்
படியாளும் இசைக்கலைஞர் பாடி வீடாம் :
பாவலர்க்கும், நாவலர்க்கும் பாச றையாம் ;
முடியாலம் முறைசெய்தோன் அமைச்சன் போலே
முழுத்துணையாம் கவியாசான் உலவும், மன்னர்
குடியாள மயங்கியஎம் தஞ்சை தன்னைக்
கொண்டதனுல் கொண்டதுசீர் தமிழர் நாடே !



மழையுண்டு; மலையுண்டா என்றால் சற்றும்
மலைப்பதில்லை; சாமிமலை இங்கே உண்டு;
கழையுண்டு; காடுண்டா என்றால் கோடிக்
கரைதழுவும் மறைக்காடும் உண்டு; நாகை
நிழலுண்ட நாகூரில் நெய்தல் உண்டு;
நிறைகுடந்தை கூறைநாட்டில் நெய்தல் உண்டு;
எழிலுண்ட மணல்மேடு, பூந்தோட் டங்கள்
இருக்கின்ற நன்னிலமே எங்கள் தஞ்சை!

குற்றாலம் பாபநாசம் கூட உண்டு;
கோட்டைகளும் பேட்டைகளும் குறைச்சல் இல்லை
உற்றாரும் மங்கலத்தில் கலந்து விட்டால்
ஓம்புகின்ற விருந்தங்கே கொள்ளி டந்தான்;
கற்றாரில் தலைஞாயி றான கம்பன்.
அரணதாங்கி நின்றதெங்கே? கான மேகம்
சிற்றூர்கண் திருக்கடையூர் போன தெங்கே?
திருக்குவளை மலர்தஞ்சை எங்கள் ஊரே!

படையாகத் தமிழ்க்கடலில் ஓடம் போக்கிப்
பிரதாபர் சரித்திரத்தைப் பெற்ற வர்யார்?
மடையேறிக் கயல்பாயும் வயல்கள் சூழ்ந்த
மயிலாடு துறைவாழ்ந்த நற்சீர் காழி
நடையாளர் நம்வேத நாய கர்தான்;
நல்லமுதல் அச்சகத்தின் கோடிக்கால் எங்கே?
அடையாளம் ஆகுபோறை யாறு கொண்ட
அணைக்கரையாம் வெண்தாங்கம் பாடி யன்றோ!

இடுகிறபேர் ஊருணியாம் சர்தார் வேத
இரத்தினமும் முடிகொண்டான் ஆன தெங்கே?
நடுநிலையார், நாகப்பன் வள்ளி யம்மை
நாராயண சாமியெல்லாம் தவழ்ந்த தெங்கே?
விடுதலையாம் செம்பொன்னூர் கோவில் கட்ட.
விழுப்புண்கள் தனையேற்ற உரத்த நாடு;
கெடுதலையே காணாத தில்லை யாடி
கிளர்ந்தெழுந்த திருவாரூர் எங்கள் ஊரே!

# ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கிய சாதனைகள்!

தஞ்சை மாவட்டத்தில் 36 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில், பல்வேறு பயன்தரு நல்ல பணிகள் செய்யப்பட்டுள்ளன. அவைகளின் தொகுப்பு தஞ்சை மாவட்டத்தின் வளர்ச்சியைத் தெள்ளிதின் விளக்குவதாக அமைந்துள்ளது.

1. கிராம வேலைத் திட்டத்தின் (Village Works programme) கீழ் நடைபெற்றுள்ள பணிகள்.

**இணைப்புச் சாலைகள் :**

| ஆண்டு | | | ஏற்படுத்திய சாலைகள் (எண்ணிக்கை) | செலவான தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 365 | 12,67,080 |
| 1968–69 | .. | .. | 291 | 7,04,600 |
| 1969–70 | .. | .. | 312 | 10,81,000 |
| 1970–71 | .. | .. | 297 | 10,55,988 |
| 1971–72 | .. | .. | 304 | 10,75,988 |

**சாதாரண குடிநீர்க் கிணறுகள் அமைத்தல்**

| ஆண்டு | | | அமைக்கப்பட்ட கிணறுகள் (எண்ணிக்கை) | செலவான தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 189 | 5,48,590 |
| 1968–69 | .. | .. | 156 | 5,38,200 |
| 1969–70 | .. | .. | 141 | 4,39,500 |
| 1970–71 | .. | .. | 104 | 4,79,988 |
| 1971–72 | .. | .. | 132 | 4,79,988 |

**குழாய்த் தண்ணீர் வசதி அமைத்தல்**

| ஆண்டு | | | அமைக்கப்பட்ட எண்ணிக்கை | செலவான தொகை. (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 60 | 4,42,300 |
| 1968–69 | .. | .. | 41 | 3,87,000 |
| 1969–70 | .. | .. | 55 | 6,90,240 |
| 1970–71 | .. | .. | 32 | 7,65,108 |
| 1971–72 | .. | .. | 52 | 7,20,000 |

**பள்ளிக்கூடக் கட்டடம் கட்டுதல்**

| ஆண்டு | | | கட்டப்பட்ட பள்ளிக்கூடக் கட்டடங்கள் | செலவான தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 51 | 5,51,820 |
| 1968–69 | .. | .. | 38 | 3,00,800 |
| 1969–70 | .. | .. | 44 | 5,16,106 |
| 1970–71 | .. | .. | 49 | 5,18,796 |
| 1971–72 | .. | .. | 47 | 5,18,796 |

**சிறப்புக் கிராம வேலைத் திட்டம்**

இத் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் 1970–71, 1971–72-ஆம் ஆண்டுகளில் முறையே ரூபாய் 9,50,000, ரூபாய் 3,20,000 செலவிடப்பட்டுள்ளது.

2. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடங்களுக்கு விஞ்ஞானக் கருவிகள் வழங்கும் மானியத் திட்டம்.

| ஆண்டு | | | கொடுக்கப்பட்ட மானியத் தொகை (ரூபாய்) | பயனடைந்த பள்ளிக்கூடம் (எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 35,300 | 113 |
| 1968–69 | .. | .. | 35,300 | 113 |
| 1969–70 | .. | .. | 35,300 | 113 |
| 1970–71 | .. | .. | 35,300 | 113 |
| 1971–72 | .. | .. | 72,200 | 152 |

3. தீவிர உரமிடும் திட்டத்தின் (Intensive Manuring Scheme) கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை:

| ஆண்டு | | | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபாய்) | பயனடைந்தவர்கள் (எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 22,56,377 | 5,641 |
| 1968–69 | .. | .. | 28,97,200 | 7,246 |
| 1969–70 | .. | .. | 45,99,750 | 11,499 |
| 1970–71 | .. | .. | 62,98,090 | 15,745 |
| 1971–72 | .. | .. | 59,32,000 | 14,830 |

4. நில மேம்பாட்டுக் கடன் மற்றும் வேளாண்மைக் கடன் சட்டத்தின் கீழ் மாட்டுக் கொட்டகை கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகை.

| ஆண்டு | | | கடனுதவி வழங்கிய தொகை (ரூபாய்) | பயனடைந்தவர்கள் (எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 2,50,000 | 5,000 |
| 1968–69 | .. | .. | 3,25,000 | 6,500 |
| 1969–70 | .. | .. | 1,00,000 | 2,000 |
| 1970–71 | .. | .. | 1,00,000 | 2,000 |
| 1971–72 | .. | .. | 1,50,000 | 3,000 |

5. வேளாண்மைக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ள விவரங்கள்.

| ஆண்டு | | | | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | .. | 8 |
| 1968–69 | .. | .. | .. | 7 |
| 1969–70 | .. | .. | .. | 9 |
| 1970–71 | .. | .. | .. | 8 |
| 1971–72 | .. | .. | .. | 10 |

6. கால்நடை மருந்தகங்களுக்குச் செய்யப்பட்டுள்ள கூடுதல் வசதிகள் மற்றும் கால்நடை மருந்தகங்கள் கட்டுதல்.

| ஆண்டு | | கூடுதல் வசதி எண்ணிக்கை | கால்நடை மருந்தகம் (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 1967–68 | .. | 12 | 4 |
| 1968–69 | .. | 8 | 3 |
| 1969–70 | .. | 7 | 2 |
| 1970–71 | .. | 7 | இல்லை |
| 1971–72 | .. | 10 | ,, |

7. கால்நடை உதவி மருத்துவர்களுக்காக 1970–71-ஆம் ஆண்டில் ஒரு குடியிருப்பும், 1971–72-ஆம் ஆண்டில் மூன்று குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன.

8. (1) சிரமணித் தொண்டர்களின் மூலம் நடைபெற்ற வேலைகளுக்குச் செலவிடப்பட்டுள்ள தொகை.

| ஆண்டு | | | ரூபாய் |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 73,000 |
| 1968–69 | .. | .. | 87,500 |
| 1969–70 | .. | .. | 92,500 |
| 1970–71 | .. | .. | 1,90,664 |
| 1971–72 | .. | .. | 1,54,000 |

(2) சிரமணித் தொண்டர்களினால் சென்ற ஐந்து ஆண்டில் செய்யப்பட்ட வேலை விவரம்.

1. கட்டப்பட்ட பள்ளிக்கூடங்கள்—50
(2) அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள் —195
(3) தூர் எடுக்கப்பட்ட குளங்கள்—196
(4) இதர வேலைகள் —35





9. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட வேலைகள்—1969–70-ஆம் ஆண்டு.

| வேலையின் பெயர் | எண்ணிக்கை | செலவு (ரூபாய்) |
|---|---|---|
| 1. குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் தோண்டப்பட்ட கிணறுகள். | 1,117 | 19,22,295 |
| 2. சிறு பாசனத் திட்டத்தின் கீழ் பழுது பார்க்கப்பட்ட ஏரிகள் மற்றும் சமுதாயக் கிணறுகள். | 402 | 21,76,996 |
| 3. சாலை அமைத்தல் | 218 | 15,84,948 |
| 4. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள். | 11 | 94,303 |
| 5. மண்வளப் பாதுகாப்புத் திட்ட வேலைகள். | 4 | 29,340 |
| 6. தக்காவிக் கடன் திட்டத்தின் கீழ் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்தல். | .. | 2,25,000 |

1970–71

மேற்கூறப்பட்ட திட்ட வேலைகளை முடிப்பதற்காக 1970–71-ஆம் ஆண்டில் ரூபாய் 2,71,638 செலவிடப்பட்டுள்ளது.

1971–72

முந்திய ஆண்டு துவக்கப்பட்ட வேலைகளை முடிப்பதற்காக 1971–72-ஆம் ஆண்டில் ரூபாய் 3,34,000 செலவிடப்பட்டது. அத்துடன் கீழ்க்கண்ட வேலைகளுக்காகவும் ரூபாய் 5,00,000 செலவிடப்பட்டுள்ளது :

| வேலையின் பெயர் | எண்ணிக்கை | பயன் (கிலோ மீட்டர் சாலை) |
|---|---|---|
| சாலை அமைத்தல் .. | 5 | 15 |
| சாலைக்குக் கப்பி போடுதல். | 11 | 39·8 |
| சாலைகளை அகலப்படுத்துதல். | 4 | 17·4 |
| தார் போடுதல் .. | 3 | 7·3 |
| | | எண்ணிக்கை |
| கல்வர்ட்டுகள் கட்டுதல் | 9 | 10 |
| குழாய்க் கிணறுகள் அமைத்தல். | 10 | 10 |

இவ்வாறு பல்வேறு வேலைகள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்றுள்ளன.



ஆராய்ச்சி மணி
கதை: இளவல்
படம்: கோபண்ணா
M.B., B.S.
எல்லாம் எனக்குத் தெரியும்! உங்கமாதிரி
எனக்கு வேண்டிய எல்லாரும் சொல்றாங்க..
இப்படியே விட்டுக்கொண்டு போனா என்னைக்
இரண்டிலே ஒன்று இன்னைக்கு பார்த்துடறேன்
நீங்க இப்படி ஆத்திரப் படுவீங்கன்னு தெரிஞ்சிருந்தா நான் சொல்லியிருக்கவே மாட்டேன்
இல்லே டாக்டர்! மணியாலே நாளுக்கு நாள் எனக்கு வேதனை தான் அதிகமாயிட்டிருக்கு
சார்... உங்க மகன் மணி என்னை சைக்கிளோடு கீழே பிடிச்சுத் தள்ளிட்டான் சார்...
ஏன்பா என்கிட்டே சொல்றீங்க... அவனை நீங்கள்ளாம் சேர்ந்து உதைங்க. அப்பதான் அடங்குவான். அது சரி சைக்கிளை கடையிலே ரிப்பேருக்குக் கொடுத்து எவ்வளவு பணம்னு கேட்டுவாங்க...
அப்பா இந்தக் காமிராவை மணி உடைச்சு வச்சிருக்கான் பாருங்கப்பா!...
அம்மா கயல்விழி என்கிட்டே எதையும் சொல்லாதே. முதல்லே போய் வாசல் கதவை மூடு. மணியை வீட்டுக்குள் விடாதே! அவன் எங்காவது தொலையட்டும்!
மணி எங்கே அப்பா சாப்பிடுவான்? அவன்தான் தப்பு செய்தாலும்.....


இருக்கிற பொழுது என்னை அமைதிபடுத்தறது
உனக்கு வழக்கமாப் போச்சு. இன்னைக்கு
ஒரே முடிவாச் சொல்றேன், அவனை வீட்டுக்குள்
விடாதே!
கதவைச் சாத்து. ஜன்னல்களையும் மூடு!
டொக்.. டொக்....
அக்கா கதவைத்திற!
அப்பா உன்னை வீட்டுக்குள் விடக்கூடாதுன்னு சொல்லி இருக்காங்க அப்பா உன்மேலே கோபமா இருக்காங்க...
உள்ளே போகணுமே என்ன செய்யறது!
அருமையான ஐடியா! அப்படித்தான் செய்யணும்!

(தொட

# தஞ்சை மக்களின் தாராளமனப்பான்மை!

எல்லாப் பணிகளுக்கும் அரசே செலவிட வேண்டும் என்று எண்ணுமல், தங்களால் ஆன அளவுக்கு நிதி கொடுத்து அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக நிற்பவர்கள் தஞ்சை மக்கள் என்பது உலகறிந்த உண்மையாகும். தஞ்சை மக்கள் தாராளமாக நிதி கொடுத்து உதவுவதால் பல்வேறு பயனுள்ள பணிகளைச் செய்து முடிக்க இயலுகிறது. தஞ்சை மக்களின் தாராள மனப்பான்மை, மற்ற மாவட்ட மக்களுக்கும் ஊக்கம் ஊட்டுவதாக இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில், அரசு ஆணை பெற்று 1970–72 ஆண்டுகளில் பொது நன்மைக்காக நன்கொடை மூலம் திரட்டிய நிதியின் விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

| விவரம் | ரூபாய் |
|---|---|
| 1. 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிகழ்த்திய கலை நிகழ்ச்சி மூலம். | 9,42,000 |
| 2. மாயூரம் ஞானம்பிகை அரசு பெண்கள் கலைக்கல்லூரியில் பட்டப்படிப்பு வகுப்புகள் துவக்கிட | 2,70,000 |
| 3. மன்னை ராஜகோபாலசாமி அரசு கலைக்கல்லூரி துவக்கிட | 6,08,000 |
| 4. திருவாரூர் கலைஞர் கருணாநிதி கலைக்கல்லூரி துவக்கிட | 6,25,000 |
| 5. திருவாரூர் அரசு மருத்துவ மனைக் கட்டடம் கட்ட | 25,000 |
| 6. 1970-ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ள நிவாரணத்திற்கு | 3,56,000 |
| 7. பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கு | 3,33,000 |
| மொத்தம் .. | 31,59,000 |

**தஞ்சாவூர் மாவட்டத்தில் 1970–72 ஆண்டுகளில் நன்கொடை மூலம் திரட்டப்பட்ட நிதியின் செலவினங்கள்.**

| | ரூபாய். |
|---|---|
| 1. மாயூரம் ஞானம்பிகை அரசு பெண்கள் கலைக் கல்லூரியில் பட்டப் படிப்பு வகுப்புகள் துவக்கிட (1971 ஜூன் மாதம் துவக்கப் பெற்றது). | 5,20,000 |
| 2. மன்னை ராஜகோபாலசாமி கலைக் கல்லூரி துவக்கிட (1971 ஜூலை மாதம் துவக்கப்பெற்றது). | 7,30,000 |
| 3. திருவாரூர் கலைஞர் கருணாநிதி கலைக் கல்லூரி துவக்கிட (1970 ஜூலை மாதம் துவக்கப் பெற்றது ; கட்டட வேலை விரைவில் முடியும்). | 8,96,000 |
| 4. தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவமனையில் தாய்-சேய் நல விடுதி கட்டுவதற்காக (அரசு உதவியுடன் நடைபெறும் கட்டட வேலை). | 2,50,000 |
| 5. நாகை தாய்–சேய் நல விடுதி மருத்துவமனை கட்டுவதற்காக (அரசு நிதி உதவியுடன் நடைபெறும் கட்டட வேலை) | 50,000 |
| 6. வெள்ள நிவாரணமாக 32,347 குடும்பங்களுக்கு வேட்டி சேலை வழங்க (1970 அக்டோபர் நவம்பர் மாதங்களில்) | 3,80,000 |
| 7. பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கு (முதலமைச்சர் நிதிக்கு அனுப்ப பெற்றது) | 3,33,000 |
| மொத்தம் .. | 31,59,000 |

இதுபோல் மற்ற மாவட்டங்களிலும் உள்ள பொதுமக்கள் தங்களால் இயன்ற அளவுக்கு நிதி கொடுத்து அரசின் முயற்சிகளுக்கு ஊக்கமூட்டினல் நாடு நலம் பெறும்.

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள்



# வேலை வாய்ப்பு விளம்பரங்கள்.

## தூத்துக்குடி நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப்புள்ளிகள் 16–5–1972 அன்று மாலை 4 மணிவரை ஆணையரின் நேர்முக உதவியாளரால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4·30 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

| | மதிப்புப் பட்டியல் தொகை. | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 தெற்கு காட்டன் ரோடு சந்திப்பிலிருந்து தந்தி ஆபீஸ் ரோடுவரை உள்ள ரோட்டிற்கு 3 அங்குல கன மெக்காடம் ரோடு போட்டு அதன் மேல் ரோடுபோட. | 27,300 | 310 |
| 2 தந்தி ஆபீஸ்ரோடு சந்திப்பிலிருந்து தெற்குச் சம்பந்தமூர்த்தி சந்திப்பு வரை உள்ள ரோட்டிற்கு 3 அங்குல கன மெக்காடம் ரோடு போட்டு அதன் மேல் ரோடுபோட. | 30,000 | 345 |
| 3 தெற்குச் சம்பந்தமூர்த்தி சந்திப்பிலிருந்து ஜின் பாக்டரி ரோடு வரை உள்ள ரோட்டிற்கு 3 அங்குல கன மெக்காடம் ரோடு போட்டு அதன்மேல் ரோடுபோட. | 23,200 | 265 |
| 4 ஜின் பாக்டரி ரோடு சந்திப்பிலிருந்து தேவர்புரம், பாளையங்கோட்டை ரோடு சந்திப்பு வரை உள்ள ரோட்டிற்கு 3 அங்குல கன மெக்காடம் ரோடு போட்டு அதன்மேல் ரோடுபோட. | 32,400 | 375 |

இவ்வேலைகளுக்கு ஒப்பந்த நமூனா கிடைக்கும் கடைசி நாள் 14-5-1972 மாலை 3 மணி.

**கே. என். கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ., பி.இ.,**
பொறியர்.

(த. 29)

## தூத்துக்குடி நகராட்சி

1972–73-ம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட சாலைகளுக்குப் பாரமரிப்பு செய்யும் வேலைக்குக் கல் சரல் மணல் முதலியன சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகள் 18–5–1972 அன்று மாலை 4 மணிவரை ஆணையரின் நேர்முக உதவியாளரால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4·30-க்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

| | | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. நகரின் வடகிழக்குப் பகுதி சாலைகளுக்கு | .. | 330 |
| 2. நகரின் வடமேற்குப் பகுதி சாலைகளுக்கு | .. | 330 |
| 3. நகரின் வடமேற்குப் பகுதி சாலைகளுக்கு | .. | 320 |
| 4. நகரின் தென்மேற்குப் பகுதி சாலைகளுக்கு | .. | 320 |

**கே. என். கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ., பி.இ.,**
பொறியர்.

(த. 34)

## ஏல விற்பனை

## காஞ்சிபுரம் நகராட்சி

காஞ்சிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான 10 இரும்பு பங்குகளைத் தனித்தனியே தினசரி கட்டண விகித அடிப்படையில் 20-5-1972 முதல் அல்லது பங்க் உபயோகிக்கத் தகுதியாகும் தேதியிலிருந்து மறு ஆணை வரும் வரையில் பயன்படுத்திக்கொள்ளும் உரிமையை 17-5-1972-ம் தேதி புதன் கிழமை காலை 10-00 மணிக்குக் காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில் அனைவரும் அறிய ஏலம் விடப்படும்.

பிற தகவல்களுக்கும் ஏலக் கட்டுப்பாடுகட்கும் நகராட்சி ஆணையருக்கு எழுதியோ அல்லது நேரிலோ தெரிந்து கொள்ளலாம்.

**த. ஆ. சிவசுப்ரமணியன், பி.ஏ.,**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்.
(த. 32)

## தருமபுரி நகராட்சி

கீழ்க்கண்ட நகராட்சி வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ் கையொப்பமிட்டவரால் 11-5-1972-ம் தேதி வியாழக் கிழமை மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகிறது. இதர விவரங்களை நேரிலோ அல்லது அஞ்சலிலோ கோரிப் பெறலாம்.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | மொத்த மதிப்பீட்டுத் தொகை. | செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | |
| 1. சாலைவிநாயகர் கோவில் வீதியில் நகராட்சித் துவக்கப்பள்ளிக்கு முன்னால் 4 கடைகள் கட்டுதல். | 14,500 | மதிப்பீட்டில் 5 சதவீதம். |

**எஸ். காளியப்பன், எம்.ஏ.,**
ஆணையர்.

(த. 31)

## கோவை நகராட்சி

குழாய்க் கிணறுகளில் அமைக்கத் தேவைப்படும் 10 டர்பைன் பம்பு செட்டுகள் வழங்கிட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோவை நகராட்சி ஆணையரால் 16-5-1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அதே தினம் மாலை 3·30 மணிக்கு நகராட்சி பொதுப்பணி பொறியரால் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி விவரங்கள் அடங்கிய நமூனா ரூ. 3-12 செலுத்திப் பொறியாளரிடம் பெற்றுக்கொள்ளப்படும்.

**ஆணையர்.**

(த. 30)

## வேலை வாய்ப்பு

### அரசுப் பணியாளர்த் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு பொதுச் சார்நிலைப் பணியிலுள்ள தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில், "தொல் பொருளியல் ஆய்வாளர்—அகழ்வாளர்" பதவி ஒன்றினை நிரப்புவதற்கு விண்ணப்பப் படிவங்கள் 23—5—1972 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூ. 400—15—475—20—575—25—650.

வயது: 1—7—1972-ல் 30 வயதிற்குக் கீழ்ப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

தகுதி—எந்தப் பல்கலைக் கழகத்திலாவது அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திலாவது முதல் வகுப்பிலோ அன்றி இரண்டாவது வகுப்பிலோ தொல் பொருளியலில் முதுநிலைப் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைச்சாதி வகுப்பினர், பின் தங்கிய வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு கிடையாது. தங்கக்கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர் மகன்கள், மணமாகாத மகள்கள், 1—1—1963-ல் அல்லது அதற்குப் பிறகு, முழுநேர அடிப் படையில் அண்டர் ஆபிஸர், இன்ஸ்ட்ரக்டர், அல்லது சார்ஜன்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணி புரிந்த முன்னாள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராகயிருந்தால் வயது விஷயத்தில் சலுகை உண்டு. இராணுவம், தரைப்படை, விமானப்படை ஆகியவைகளிலிருந்து கலைப்பினால் அனுப்பப்பட்டவர்கள் 1—7—1972-ல் 40 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பின்வயதுவரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும். 1—1—1964ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விஷயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விவரங்களையும், "தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்", சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ. மீ. உள்ள தன் முகவரி எழுதிய 30 காசு நூல்—அஞ்சல் வில்லையும் 0.05 காசு அகதிகள் நிவாரண வில்லையும் (0.30+0.5) காசு ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

(த. 7.)

## வேலை வாய்ப்பு

### தொழில் வணிகத் துறை

மைய அலுவலகத் தொழில் ஆய்வாளர் Textile Inspector பதவி ஒன்றிற்குத் தகுதி பெற்றவர்களிடமிருந்து சான்றொப்பம் மிட்ட சான்றிதழ்களின் நகல்களுடன் கூடிய விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. (இப்போது, தற்காலிகமாகச் சென்னையிலிருந்து திருச்சி மாவட்டத்திலுள்ள கோலக்குடியில் நெசவுப் பயிற்சி நிலையம் மாற்றப்பட்டுள்ளது) சம்பளம் ரூ. 400. சம்பள ஏற்ற முறை 400—15—475—20—575—25—650 உடன் விதிமுறைகளின்படி மற்றப்படிகள் அனைத்தும் உண்டு. கீழே தொடரப்பட்டுள்ள தகுதிகள் உடையவர்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

1. தமிழ்நாடு அரசு மற்றும் சார்நிலைப் பணிகளுக்குரிய பொது விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி குறைந்தபட்சப் பொதுக்கல்வித் தகுதியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. சென்னைப் பல்கலைக்கழகத்தில் நெசவுத் தொழில் நுட்ப இயலில் இளங்கலை (தொழில் நுட்பம்) வகுப்பில் பட்டம் பெற்றிருக்க வேண்டும், அல்லது பம்பாய் விக்டோரியா ஜுபிலி நெசவுத் தொழில் நுட்ப நிலையத்திலோ, அன்றிக் கோவை பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ்., தருமத் தொழில் நிலையத்திலோ, அன்றி சென்னைத் தொழில்நுட்ப இயல் "டிப்ளமோ" தேர்வுக் கழகத்திலோ, நெசவுத் தயாரிப்பில் "டிப்ளமா" பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

3. பட்டம் பெற்றிருப்பவர்கள் Composite பருத்தி ஆலையில் இரண்டு ஆண்டுக்குக் குறையாத செயல் முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். டிப்ளமா பெற்றிருப்பவர்கள் மூன்று ஆண்டுக்குக் குறையாத செயல் முறை அனுபவம் Composite பருத்தி ஆலையிலும், ஒரு ஆண்டுக்குக் குறையாத செயல் முறை அனுபவம் கைத்தறி நெசவுத் தொழிற்சாலையிலும் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு:—நியமன அதிகாரியின் விருப்பத்திற்கேற்பக் கீழ்க்கண்டவைகளில் அனுபவம் உள்ளவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும்.

1. கம்பளி (Sunhemp) பயன்படுத்திச் சமுக்காளம் போன்றவைகள் செய்தல்.

2. வெண்மையாக்கல், வண்ணமேற்றல், காலிகோ அச்சேற்றல்.

3. பருத்தி, பட்டு, கம்பளி தவிர பிற நெசவு நெய்தல்.

வயது: 1—7—1972-ல் 30 வயது முடிந்தவர்களாக இருக்கக்கூடாது.

குறிப்பு: தமிழில் போதுமான அளவு படிக்க, எழுத பேசத் தெரிந்திருக்க வேண்டும்.

விண்ணப்பத்தாரர்கள் பெயர், இருப்பிட முகவரி, தொழில் நுட்பம், மற்றும் பொதுக்கல்வி, அனுபவம் மற்றும் ஏனையவற்றை விளக்கமாகக் குறிப்பிட்டு, இயக்குநர், தொழில் வணிகத்துறை, சேப்பாக்கம் சென்னை-5 என்ற முகவரிக்கு 10—5—1972 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கும்படி அனுப்ப வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். நேர்முகத் தேர்விற்கு வருவோர்க்குப் பயணப்படிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

இயக்குநர்,
தொழில் வணிகத் துறை.

(த. 8)

## ஏல விற்பனை

### வனத் துறை

### அரசினர் மரக் கிடங்கு பொள்ளாச்சி

சுமார் 800 கனமீட்டர் முதல் 1,000 கனமீட்டர் வரை (ஈட்டி, தேக்கு கரிமருது, தடசு, பில்ல மருது மற்றும் பலஜாதி) மரங்கள் ஆகியவைகளை 5-5-1972 மற்றும் 21—6—1972 தேதிகளில் தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்கள் சார்பாகத் தென் கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்தரவு பெற்றவர்களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடைபெறும்.

மற்ற விவரங்கட்குப் பொள்ளாச்சியிலுள்ள தமிழ்நாடு அரசு மரக் கிடங்கின் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

பூ. க. பொன்னுசாமி,
மாவட்ட வன அலுவலர்
தென் கோவை கோட்டம்.

(த. 22)

## ஒப்பந்தப் புள்ளி

### இராமநாதபுர நகராட்சி

கீழ்கண்டுள்ள வேலைகளுக்கு 10—5—1972 மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்டுள்ள ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகிறது. இது சம்பந்தமான விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

| எண்ணும் வேலையின் பெயரும் | மதிப்பீட்டு தொகை | காப்புத் தொகை | ஷெட்யூல் விலை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பேருந்து நிலையத்தில் பேருந்துகள் செல்லும் பாதையில் கருங்கல் பரத்த. | 15,400 | 362 | 10·35 |
| 2 வாரச்சந்தையில் காய்கறிக் கடைகள் கட்டுவதற்கு. | 30,000 | 660 | 10.35 |
| 3 நகராட்சி அலுவலக உபயோகத்திற்குத் தேவையான பீலிகளும் இதர சாமான்களும் சப்ளை செய்வதற்கு. | 2,000 | 50 | 1.00 |
| 4 நகர்மன்ற மின் விளக்குகளுக்கு தேவையான குழல் விளக்குகளும் இதர சாமான்களும் சப்ளை செய்ய | 4,000 | 100 | 1.00 |

என். கோபால்சாமி,
ஆணையர்.

(த. 1)

## ஒப்பந்தப் புள்ளி

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 1 எச். டி. 72-73 நாள் 6-4-1972.

வேலையின் பெயர் ஆழ்குழாய்க் கிணறில் 170 அடி பாய்ச்சும் விசையுடன் கூடிய மணிக்கு 50 காலன் சக்தியுள்ள "வெர்டிக்கல் டர்பைன் பம்புசெட்" ஒன்று நிறுவுவதற்கு வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக நிலநீர்க்கோட்ட நிருவாகப் பொறியாளர் நில நீர்க்கோட்டம், எண் 5, வெங்க நாராயண ரோடு, தி. நகர், சென்னை-17, அவர்களால் மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேலே குறித்துள்ள அலுவலகத்தில் 10-5-1972 அன்று மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் நிருவாகப் பொறியாளர் அவர்களால் மேலே குறிப்பிட்டுள்ள அவருடைய அலுவலகத்தில் 10-5-1972 அன்று மாலை 3-05 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் படிவம்—எப். எம். சி. பகுதி 1-ன் 9-வது படிவம்.

முன்வைப்புத் தொகை—ரூ. 500.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை—விலை ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) விற்பனை வரி ரூ. 0·20 (ரூபாய் இருபது காசுகள் மட்டும்.)

வேலை முடிக்க வேண்டிய காலம்—1 மாதம்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில்—14—4—1972 முதல் 19—5—1972— முடிய அலுவலக நேரங்களில் கிடைக்கும்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை எந்தச் சூழ்நிலையிலும் திருப்பி அளிக்க இயலாது. அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் Puplic Works remittances III—Other Remittances என்ற தலைப்பிட்டு, நிருவாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் XII Sales Tax (b) Receipts under sales tax Act என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்படவேண்டும்.

மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ப. நடராசன்,
நிருவாகப் பொறியாளர்.

(த. 9)

## கல்வி

### தொழில்நுட்பக் கல்வித்துறை

அரசு தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளியில் சேருதல்.

கீழ்க்கண்ட தொழில் நுட்பக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் சேருவதற்கு அந்தந்தக் கல்லூரி முதல்வர்களால் 1-6-1972 மாலை 5 மணிவரை விண்ணப்பப்பாரங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. மத்திய தொழில் நுட்பக் கல்லூரி, சென்னை-20.
2. அரசு தொழில் நுட்பக் கல்லூரி, மதுரை-2.
3. அரசு தொழில் நுட்பக் கல்லூரி, கோவை-14.
4. அரசு தொழில் நுட்பக் கல்லூரி, வேலூர்-2.
5. அரசு தொழில் நுட்பக் கல்லூரி, நாகர்கோயில்.
6. அரசு தொழில் நுட்பக் கல்லூரி, தூத்துக்குடி.
7. அரசு தொழில் நுட்பக் கல்லூரி, திருச்சி-15.
8. அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி, காரைக்குடி.

தனியார் தொழில் நுட்பக் கல்லூரி.

9. பக்தவத்சலம் தொழில் நுட்பக் கல்லூரி, காஞ்சிபுரம்.
10. வலிவலம்தேசிகர் தொழில் நுட்பக் கல்லூரி, நாகப்பட்டினம்.
11. இராசகோபால் தொழில் நுட்பக் கல்லூரி, குடியாத்தம்.

தமிழகத்து மாணவர்கள் மட்டும் இத்தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் சேருவதற்குத் தகுதியுடையவர்கள்.

மேற்கூறப்பட்ட படிப்பில் சேருவதற்கான மனுக்கள் விதிகள் மற்ற ஒழுங்கு முறைகள் அடங்கிய நமூனக்கள் மேற்கூறப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரிகளின் முதல்வர்களிடம் எழுதிக் குறுக்குக் கோடிடப்பட்ட ரூ. 1 அஞ்சல் ஆணையை (1-5-1972-ஆம் தேதிக்கு முந்தியதாக இருக்கக்கூடாது) மேற் கூறப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்கள் பெறும் வகையில் செலுத்தித் தன் விலாசமிட்டு 22 செ.மீ. 9½ செ. மீ. உள்ள உறையில் 20 காசு 5 காசு அகதிகள் வில்லையும் ஒட்டி உடன் வைத்து அனுப்பிப் பெறலாம்.

குறிப்பு :—மத்தியத் தொழில் நுட்பக் கல்லூரி, சென்னை-2 உடன் இணைக்கப்பட்ட அரசு தொழில் நுட்ப உயர் நிலைப்பள்ளியில் சலவைத் தொழில் பயிற்சிக் கற்றுக் தரப்படுகிறது. பயிற்சி பெற விரும்புவோர் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தினை மேற்கூறப்பட்டக் கல்லூரி முதல்வரிடம் பெற்றுக் நிறைவு செய்து அனுப்பலாம்.

சலவைத் தொழிலாளர் வகுப்பினைச் சேர்ந்தோர்க்குப் பள்ளியில் சேருவதற்குச் சலுகை அளிக்கப்படும்.

4. குறைந்த அளவு கல்வித் தகுதி—முன்னால் மூன்றும் படிவத்தில் தேர்ச்சி அல்லது இந்நாள் எட்டாம் வகுப்புத் தேர்ச்சி.

குறிப்பு :—1. பதினொரும் வகுப்பில் சேரத் தகுதி பெற்ற அனைவரும் இப்பள்ளியில் சேரத்தகுதியுடையவர்கள்.

முன்னோடித் தொழிற் பயிற்சி வகுப்பில் (Pre-Vocational Training) தேர்ச்சி பெற்றோருக்குப் பள்ளியில் சேருவதற்குச் சலுகை அளிக்கப்படும்.

5. வயது :1-7-1971-ல் 13-வது முடிந்தவராகவும் 17 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

6. பயிற்சிக் கட்டணம் :தொழில் நுட்ப உயர் நிலைப்பள்ளியில் சேர்ந்திடும் மாணவர்களிடம் பயிற்சிக் கட்டணம் விதிக்கப்பட மாட்டாது.

7. உதவித் தொகை :தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்திடும் மாணவர்களில் 50 விழுக்காடு மாணவர்களுக்குக் கீழ்க்கண்டபடி உதவித் தொகை வழங்கப்படும்.

1. முதல் இரண்டாண்டு வகுப்புக்களில் பயிலும் மாணவர்களுக்குத் தலா மாதம் ரூ. 20 வீதமும்.

2. மூன்றும் ஆண்டு வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்குத் தலாமாதம் ரூ. 30 வீதமும் வழங்கப்படும்.

8. விண்ணப்பதாரர்கள், தான் விண்ணப்பித்திருந்த கல்லூரி முதல்வரால் நேர்க்காணல் பேட்டிக்குக்கலந்து கொள்ள அழைக்கப்பட்டால், தன்னுடைய சொந்தச் செலவிலேயே அந்தந்தக் கல்லூரிக்கு வந்து செல்ல வேண்டும்.

குறிப்பு :—தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளியில் படித்துத் தேர்ச்சிப் பெற்ற மாணவர்கள், சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களின் மெட்ரிகுலேஷன் படிப்பிற்குச் சமமான அங்கீகாரம் பெற்றவர்கள்.

2. தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளியில் படித்துத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், கலைக்கல்லூரிகளின் பல்கலைக்கழகப் பிரிவிலும் சேரத் தகுதி பெற்றவர்கள்.

3. தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளியில் படித்துத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், தொழிற் கூடத்தில் (Skilled operatives) களாக நியமிக்கத் தகுதியுடையவர்கள்.

9. விண்ணப்ப மனுக்கள் தாங்கள் சேரவிரும்பும் கல்லூரி முதல்வர்களுக்கு அவர்கள் பதவிப் பெயரிலேயே அனுப்பப்படவேண்டும்.

(த. 11)

## ஒப்பந்தப் புள்ளி

### குளச்சல் நகராட்சி

1972-73-ம் வருடத்திற்கு எழுது பொருட்கள் சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 17—5—1972 தேதி மாலை 4 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். இதர விவரங்களுக்கு ஒப்பந்த நிபந்தனைகளுக்கும் விண்ணப்பிக்கவும்.

ஆணையர்.

(த-14)

## முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

# TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

### தொழில்

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக் கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனுமல், டிசிசி கம்பிகள்

### விவசாயம்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை) பேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

### அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பிங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

### ஏற்றுமதி

- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்காணும் வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி உறைகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையாளர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 12—5—1972-ம் தேதி மாலை 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4—30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி பத்திரம் விதி முறைகள் வேண்டுவோர் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்) விற்பனை வரி ரூ. 3½ சத வீதமும் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திச் செலுத்துச் சீட்டுடன் நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 11—5—1972 தேதி முடிய பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு நகராட்சி மராமத்துப் பொறியாளரிடம் அலுவலக நேரங்களில் விசாரிக்கவும்.

| கட்டின் நடப்பு எண்ணும் வேலை விவரமும். | மதிப் பீட்டுத் தொகை. | முன் வைப்புத் தொகை. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| இ1/2319/71. நாச்சிமுத்து கவுண்டர் வீதிக்கு (பல்லடம் ரோடு சந்திப்பிலிருந்து கோவை ரோடு வரை) தார் கான்கிரீட் போடுதல். | 31,547 | 789 | 2 மாதம் |
| இ1/6759/62. திரு நீலகண்டர் வீதிக்கு (கோட்டூர் ரோடு சந்திப்பிலிருந்து ஏ. பி. டி. ரோடு சந்திப்பு வரையிலும் தென் வடல் துண்டு பாகத்திற்கும்) தார் கான்கிரீட் போடுதல். | 26,117 | 653 | ,, |

**பி. கே. முகம்மது அலி,**
ஆணையர்.

(த-21)

## வேலைவாய்ப்பு

### செங்கை மருத்துவக் கல்லூரி

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மகளிர் விடுதிக்கு இரண்டாம்நிலை இல்லக்காப்பாளர் பதவி ஒன்றிற்கு 31—5—1972 வரை வரை தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. சம்பள விகிதம் 200—5—250—10—300 உடன் வழக்கமான அப்பதவிக்குரிய படிகள் கொடுக்கப்படும். வயது, கல்வித் தகுதி ஆகியன கீழ்க் கண்டவாறு வேண்டப்படுகின்றன.

தகுதி :—(ஏ) அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலோ—இந்தியன் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் இல்லற அறிவியல் பாடத்தினை (Domestic science) விருப்பப் பாடமாக வைத்துத் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(பி) 1929 திருத்தி அமைக்கப்பட்ட உயர் கல்வித் திட்டத்தின் கீழ் பள்ளி இறுதிக் கல்வி வகுப்பில் இல்லற அறிவியல் பாடத்தினைப் பிரிவு "சி" யில் எடுத்துத் தேர்ச்சி பெற்றுப் புகுமுக வகுப்பில் சேரும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(சி) 1948 திருத்தியமைக்கப்பட்ட உயர் கல்வித் திட்டத்தின் கீழ் மனை இயல் (Home-Science) சிறப்புப் பாடமாகக் கொண்டு பள்ளி இறுதிக் கல்வித் தேர்வில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்.

வயது :—பதவி நியமனத்தன்று 25 வயதிற்குக் குறையாதவராகவும் 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

சான்றிதழ்களின் நகல்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பப் படவேண்டும். நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவோருக்குப் பயணப்படியோ, மற்றப்படிகளோ தரப்பட மாட்டாது. தங்கள், உணவு வசதி ஆகியவகைகள் இவர்கள் சொந்தச் செலவிலேயே செய்து கொள்ள வேண்டும்.

மேற்கொண்டு விவரமேதும் வேண்டுவோர், போதுமான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட உறையுடன், முதல்வர், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு என்ற முகவரியுடன் தொடர்பு கொள்க.

**முதல்வர்,**
**செங்கற்பட்டு மருத்துவக்கல்லூரி,**
செங்கற்பட்டு.

(த-19)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப் பணித்துறை

### செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர்—செங்கற்பட்டில் பெண்கள் தங்கும் விடுதிக்கான கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பில், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 18—5—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 4,600.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூ. 20·70 விற்பனை வரி 3½ சத வீதம் சேர்த்து.

முடிக்க வேண்டிய காலம் ஒப்பந்தப் புள்ளி—6 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 3—5—1972 தேதி முதல் 16—5—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில்

"P.W.D. Remittances III-other Remittances,"

என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் **"XII Sales tax (B) receipts under state sales tax act—General sales tax act."**

என்ற தலைப்பின் கீழ் செலுத்தப் படவேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் "ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர் பொ. ப. து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநிலக் கடன் பத்திரங்களும், மின் வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சத வீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**ஆர். செல்வராஜன்,**
மேற்பார்வைப்பொறியாளர், பொ. ப. து., செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த-18)

## ஒப்பந்தப் புள்ளி

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள் கோட்டப் பொறியாளர், , (நெ. கி. பி.) தஞ்சாவூர் அவர்கள் பனகல்கட்டடத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 10—5—1972 பிற்பகல் 3–00 மணி (அலுவலகக் கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வர். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3–30 மணிக்குத் திறக்கப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | கட்டுத்தொகை | ஒப்பந்தப்புள்ளி கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|

வேலையின் பெயர்—தெலுங்கன் குடிக்காடு வடசேரி சாலையில் மைல் 6/6–ல் கண்ணனாற்றின் குறுக்கே மூழ்கு பாலம் கட்டுதல்.
கட்டுத்தொகை—ரூ. 3,870.

ஒப்பந்தப்புளள்ளி கிடைக்கும் விலாசம்—கோட்டப் பொறியாளர் (நெ. கி. ப.) தஞ்சாவூர்.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவரி உட்பட ரூ. 20·75 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம், (நெ. கி. ப.) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 1—5—1972–ல் இருந்து 9—5—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியன வற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரபட மாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெ. கி. ப.) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூடெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருடத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருடம் தேசியத் தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரிய பத்திரங்களும் ஷெடியூல் பாங்குகளால் வழங்கப்படும்பாங்க் காரண டிகளும், டிமாண்டு டிராப்டுகளும் டெபாசிட் ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரன்டிகள் சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பேங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பணவைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. அண்ணாமலை,
கோட்டப்பொறியாளர், (நெ.கி.ப.) தஞ்சாவூர்.

(த. 5)

## ஒப்பந்தப் புள்ளி

## பொதுப்பணித்துறை

செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம்

வேலூர்–1.

வேலையின் பெயர் : செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் ஆராய்ச்சி கட்டடத்தில் கூடுதல் மாடிக் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேற் குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு–வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 18—5—1972 மாலை 3–00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதேநாள் மாலை 3–15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலை யில் செங்கற்பட்டு–வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்தமுறை—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை—ரூ. 6,500.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூ. 20.70 விற்பனை வரி 3½ சதவீதம் சேர்த்து.

முடிக்கவேண்டிய காலம் ஒப்பந்தப்புள்ளி—எட்டு மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 3—5—1972 தேதி முதல் 16—5—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களுக்கான விலைத்தொகை, ரூ. 20–00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் **P.W.D.—Remittances, III—Other Remittances** என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடக்கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "**XII Sales-Tax (b) Receipts, under State Sales-Tax Act—General Sales-Tax** என்ற தலைப்பின்கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசீயச் சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால்ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் " ஷெடியூல்டு பாங்குகளின் " டிமாண்டு டிராப்டுகள் செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசு கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசீயச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந் தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுக் கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆர். செல்வராஜன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 17)

## ஒப்பந்தப் புள்ளி

## பொதுப்பணித்துறை

செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்டம்,

வேலூர்–1.

வேலையின் பெயர் :—வடார்க்காடு மாவட்டம் செங்கத்தில் புதிய அரசினர் மருத்துவ மனைக்கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால் 18—5—1972 மாலை 3–00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3–15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர் கள் முன்னிலையில் செங்கற்பட்டு—வடஆர்க்காெ டுபருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 9,200.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூ. 51–75 விற்பனை வரி 3½ சத வீதம் சேர்த்து.

முடிக்கவேண்டிய காலம் ஒப்பந்தப்புள்ளி—10 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 3–5–1972 தேதி முதல் 16–5–1972 தேதி வரை விற்பனைக்குக்

கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 50-00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் P.W.D.—Remittances, III—Other Remittances என்ற தலைப்பின் கீழ் "நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை திருவண்ணாமலைக் கோட்டம், திருவண்ணாமலை, என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 1-75 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) Receipts, Under State Sales Act-General Sales Tax" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்தில் விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால்ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் "ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை திருவண்ணாமலைக் கோட்டம், திருவண்ணாமலை, அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசு கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப்பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுக் கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆர். செல்வராஜன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 16)

---

## ஒப்பந்தப்புள்ளி

## பொதுப்பணித்துறை
## செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர் :—செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான மருத்துவ மனைக்கு "எல்" வடிவமுள்ள கட்டடமும் குடும்பக்கட்டுப்பாடு திட்டக் கட்டடங்களும் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 18—5—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டப் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
முன் வைப்புத் தொகை—ரூ. 12,600.
ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூ. 51-75
விற்பனை வரி 3½ சதவீதம் சேர்த்து.
முடிக்கவேண்டிய காலம் ஒப்பந்தப்புள்ளி—10 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 3—5—1972 தேதி முதல் 16—5—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 50-00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P.W.D. Remittances, III—Other Remittances", என்றதலைப்பின் கீழ் "நிருவாகப் பொறியாளர்," பொதுப்பணித்துறை கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 1-75 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) Receipts, under State Sales Tax Act—General Sales—Tax" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப் படவேண்டும். மேற்படி கருவூல செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் "ஷெடியூல் பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசு கடன் பத்திரங்களும்,மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆர். செல்வராஜன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 15)

---

## வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

நெசவாளர், பொற்கொல்லர் மற்றும் மாதிரி உருவமைப்புச் செய்பவர், முதலியோருக்கு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஜூன், 1972-ல் தொடங்கும் பகுதி நேரப் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளுதல் சம்பந்தமாக.

கைத்தறி நெசவு, நகை செய்தல்மற்றும் மாதிரி உருவமைத்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களிடமிருந்து கீழ்க்கண்ட அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அவைகளுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் பிரிவுகளில் 15-6-1972-ல் இருந்து துவக்கப்பட இருக்கின்ற பகுதி நேரம் பயிற்சியில் சேருவதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயர் | தொழிற் பிரிவின் பெயர் |
|---|---|
| 1 சேலம் மற்றும் பேட்டை (திருநெல்வேலி). | 1 பொறிப்பகுதி பொருத்துபவர் மற்றும் கடைசல் பிடிப்பவர் 2 கருமான் மற்றும் பொறிப்பகுதி பொருத்துபவர். |
| 2 மதுரை மற்றும் திருச்சி .. .. | 1 கருமான் மற்றும் பொறிப் பகுதி பொருத்துபவர். |
| | 2 செம்பு வேலையாள் மற்றும் தகர வேலையாள். (உலோகத் தகடு வேலையாள்). |

தொழிற் பிரிவுகளின் பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகளாக இருக்கும். எல்லா வேலை நாட்களிலும் மாலையில் 6 மணியிலிருந்து 9 மணி வரையிலும் மூன்று மணி நேரங்கள் வகுப்புகள் நடத்தப்படும்.

பயிற்சியில் சேருவதற்கான தகுதிகள்

விண்ணப்பதாரர் கல்வி அறிவு உள்ளவராகவும் தமிழ் பேசவும் எழுதப் படிக்கத் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும்.

பயிற்சி அளித்தல் இலவசம். ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் உதவித் தொகை வழங்கப்படும்.

பயிற்சிகளில் சேர விரும்புவோர் இதர விவரங்களையும்,விண்ணப்பங்களையும் சம்பந்தப்பட்ட அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்களிடமிருந்து அல்லது மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்களிடமிருந்து நேரிலோ அல்லது முகவரியிடப்பட்ட அஞ்சல் தலை ஒட்டப்பட்ட உறையுடன் விண்ணபித்தோ பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வருக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-5-1972.

இயக்குநர்,
வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
சென்னை-5.

(த. 13)

Your deposits with

**THE TAMIL NADU STATE CO-OPERATIVE BANK LTD., MADRAS**

**Assist the bank to finance agriculture and agro-industries which form the backbone of the Nation's economy.**

***Schedule of Rates.***

| | *Per cent per annum.* |
|---|---|
| Current Account | 0·50 |
| Savings Bank account (on monthly minimum balances) | 4·00 |
| **SEASON DEPOSITS—Rs. 1,000 and over** | |
| 15 days | 3·00 |
| 46 days | 3·00 |
| **FIXED DEPOSITS—Rs. 100 and over** | |
| 91 days | 4·75 |
| 6 months | 5·25 |
| 12 months | 6·25 |
| 24 ,, | 6·75 |
| 36 ,, | 7·25 |
| 60 months and over | 7· |

*Additional*—1/2 per cent per annum for deposits of *Charitable, Religious, and Educational Institutions.*
*Interest Paid Monthly* on Rs. 1,000 and over and for periods of one year and over.

**RECURRING DEPOSITS—**

Rs. 5 per month in

| Months | | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Yields | Rs. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

*Local Branches*—Mylapore, Egmore, Triplicane, T. Nagar, Gandhinagar, Shenoynagar, Greenways Road, Kellys, Santhome, Mylapore Tank, Shastrinagar, Anna Salai (Kamadhenu), Ashok Nagar, Anna Nagar, Anna Salai (Anna Silai).

Opening shortly: Nungambakkam and Jawaharnagar.

R. KANAKASABAI,
*Chairman.*

P. N. T. CHARY,
*Secretary.*

**காலக் கண்ணாடி**

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய '[illegible]' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

உயர் ரகத்தைக் குறிக்கும் வாட்டர் மார்க்



## மின்சார வாரியம்

### கே—2.

தமிழ்நாடு மின்சார வாரியம்—சுருளியாறு நீர் மின் திட்டம்—குறிப்பிடுகை எண் SUR—6B, சுருளியாறு கீழ் முகாமில் நிரந்தர 2 இ டைப் (2E Type) கட்டடம் கட்டுவது.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், வாரியத்தின் சார்பிலும் மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளுடன், ஒப்பந்ததாரரின் பெயரும் மேலுறையில் எழுதப்பட்டு, மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களைக் கீழே கையொப்பமிட்டவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்ட தேதியில் பிற்பகல் 3–00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4–00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

குறிப்பிடுகை எண் :—SUR6B.

வேலையின் பெயர் :—சுருளியாறு கீழ் முகாமில் நிரந்தர 2இ கட்டடம் கட்டுவது (இரண்டு பிளாக்குகள்—பிளாக் நம்பர் 1 அண்டு 2)

ஒப்பந்தப் பிரதியின் விலை (விற்பனை வரி உட்பட) :—ரூ. 10·35.

கட்டுத் தொகை :—ரூ. 2,400.

ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளப்படும் கடைசி தேதி :—2—6—1972

2. ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 10·35 (ரூபாய் பத்தும் காசு முப்பத்தி ஐந்து மட்டும்), விற்பனை வரி உட்பட) வீதம் செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலோ அல்லது நிருவாகப் பொறியாளர், சிவில், சுருளியாறு மின் திட்டம், கூடலூர், மதுரை மாவட்டம் அவர்கள் அலுவலகத்திலோ ஒப்பந்தப் பிரதி பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தொகை எந்தக் காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

3. மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கட்டுத் தொகை (Earnest Money Deposit) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்து சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் காசோலைகள் (Cheques) ஏற்கப்படமாட்டா. கட்டுத் தொகையின்றி சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். டிமாண்ட் டிராப்ட் ( Demand Draft ) அனுப்புவதானால் ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்துக்கான கட்டுத் தொகையை ஒப்பந்தத்துடன் செலுத்தாமல் வேறு ஒப்பந்தத்துக்காக ஒப்பந்ததாரரால் கட்டப்பட்ட தொகையையோ வேறு தொகையையோ, ஈடு செய்யக் கோரும் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்துக்குரியவர், இவ்வலுவலகத்தில் குறிப்பிட்ட நாட்களுக்குள் பிணை வைப்புத் தொகையை (Security Deposit) செலுத்த வேண்டும். இப்பிணை வைப்புத் தொகைகட்டுத் தொகையுடன் சேர்ந்து வேலைக்கான மதிப்பில் 5% (ஐந்து சதவீதம்) இருக்கும். இந்த பிணை வைப்புத் தொகைக்கும் கட்டுத் தொகைக்கும் வட்டி தரப்பட மாட்டாது. இந்த மொத்த தொகையும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி திருப்திகரமாக வேலை முடிந்த பின் திருப்பித் தரப்படும். ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணை வைப்புத் தொகையைச் செலுத்தத் தவறினாலும் ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு ஒப்பந்தப்படி வேலை செய்வதிலிருந்து பின்வாங்கினாலும் கட்டுத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

5. அலுவலகத்தின் மனு பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களும் குறித்த காலம் தள்ளி வரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலே குறிப்பிட்ட வேலையை சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து வழங்குவதற்கோ அல்லது சில ஒப்பந்தங்களையோ எல்லா ஒப்பந்தங்களையுமோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்க கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமையுண்டு.

6. ஒப்பந்தப் பிரதிகளை சாதாரணத் தபாலிலேயே அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் காலதாமதம் ஏற்படினும் ஒப்பந்தப் பிரதிகள் தபாலில் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றுவதற்கு உரியதல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்.
கோதையாறு நீர் மின் திட்டம்,

34,எ, பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7

(த. 36)



## மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தின் பழுதடைந்த ஜீப் எம்.எஸ்.ஒய். 2162, 15—5—1972 மாலை 3 மணிக்கு, தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சி அலுவலரால் (1)தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். மேற்கண்ட ஜீப்பை பார்வையிட விரும்புபவர்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏல சம்பந்தமான விதிகளைக் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

த. செல்லையா,
மாவட்ட வளர்ச்சி அலுவலர்,
பனகல் கட்டடம், தஞ்சாவூர்.

(த. 33)



## குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர் :—தஞ்சாவூர் குடிநீர் வழங்கு முன்னேற்றத் திட்டம் இரண்டாம் நிலை (பகுதி-1) —மண்டலம் 2-Bக்குப் பகிர்வு முறை சி.ஐ. குழாய்கள் பதித்தல், இணைத்தல், தனி வால்வுகள் பொருத்துதல் முதலியன.

தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க் காணும் வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில், பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து அல்லது, அங்கீகரிக்கப்பட்ட அரசின் இதர துறைகளின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து, "மேற்பார்வைப் பொறியாளர், பொது நலப் பொறியியலகம், (பி.எச்.இ.) நெ. 52, கெங்கு ரெட்டிச் சாலை, எழும்பூர், சென்னை-8" அவர்களால், அவரது அலுவலகத்தில் 12—5—1972 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்று மாலை 3–30 மணிக்கு வருகையுற்றிருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், பொது நலப்பொறியியல் வட்டம் (P.H.E. circle) சென்னை—அவர்களால் திறந்துவைக்கப்படும்.

1. ஒப்பந்தப் படிவம்—கே. 2.

2. முன் பண வைப்புத் தொகை—ரூ. 1,925 (ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தைந்து ரூபாய் மட்டும்).

(ஒப்பந்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி முன் வைப்புத் தொகையை ஏற்றுக்கொள்ளக்கூடிய படிவமாகவோ, கருவூலச் செலுத்துச் சீட்டாகவோ இருத்தல் வேண்டும்.)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விலை ரூபாய் 10·35 (பத்து ரூபாய் முப்பத்தைந்து காசுகள்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விலையினை நிருவாகப் பொறியாளர், பொது நலப் பொறியியல் கோட்டம், தஞ்சை-25 அவர்கள் கணக்கில் வரவு வைக்கும்படி அனுப்ப வேண்டும்.

T. Deposits—and Advances—I. Deposits bearing Interest Other Deposits—TWAD Board - funds - I Receipt - G. iii Other Remittances - and for Sales tax—D.Misc. I—General Sales tax—in separate chalans.

4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் கிடைக்கும் இடம், நிருவாகப் பொறியாளர், (பொ.ந.பொ.) பொது நலப் பொறியியல் கோட்டம், 28, ராஜாஜி தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர்.

(விண்ணப்பத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்கான தொகையினை நேரிலோ, பண விடை அஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்).

5. பணியினை முடிப்பதற்குரிய கால அளவு.— ஆறு மாதங்கள்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொது நலப் பொறியாளர், கோட்டம்,
சென்னை-8.

(த.28)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

### கே—2.

தமிழ்நாடு மின்சார வாரியம்—சுருளியாறு நீர் மின் திட்டம் —குறிப்பிடுகை எண் SUR 7பி-சுருளியாறு கீழ் முகாமில் நிரந்தர (எஇ டைப்) (AE type) கட்டடம் கட்டுவது.

1. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், வாரியத்தின் சார்பிலும் மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளுடன் ஒப்பந்ததாரரின் பெயரும், மேலுரையில் எழுதப்பட்டு, மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் அவரது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்ட தேதியில் பிற்பகல் 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4-00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன் திறக்கப்படும்.

குறிப்பிடுகை எண் :— SUR 7-பி.

வேலையின் பெயர் :—சுருளியாறு கீழ் முகாமில் நிரந்தர எஇ டைப் கட்டடம் ஒரு பிளாக் கட்டுவது (பிளாக் 1).

ஒப்பந்தப் பிரதியின் விலை (விற்பனை வரி உட்பட) :—ரூ. 10·35.

கட்டுத் தொகை :—ரூ. 1,000.

ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளப்படும் கடைசி தேதி :—2—6—1972.

2. ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 10·35 (ரூபாய் பத்தும் காசு முப்பத்தி ஐந்து மட்டும் விற்பனை வரி உட்பட) வீதம் செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலோ அல்லது நிருவாகப் பொறியாளர், சிவில், சுருளியாறு மின் திட்டம், கூடலூர், மதுரை மாவட்டம் அவர்கள் அலுவலகத்திலோ ஒப்பந்தப் பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தொகை எந்தக் காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

3. மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கட்டுத் தொகை (Earnest money deposit) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச் சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்படவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் காசோலைகள் (cheques) ஏற்கப்படமாட்டா. கட்டுத் தொகையின்றி சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். டிமாண்ட் டிராப்ட் ( Demand draft ) அனுப்புவதினால் ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப்படவேண்டும். இந்த ஒப்பந்தத்துக்கான கட்டுத் தொகையை ஒப்பந்தத்துடன் செலுத்தாமல் வேறு ஒப்பந்தத்துக்காக ஒப்பந்ததாரரால் கட்டப்பட்ட தொகையையோ, வேறு தொகையையோ ஈடு செய்யக் கோரும் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்துக்குரியவர் இவ்வலுவலகத்தில் குறிப்பிட்ட நாட்களுக்குப்பிணை வைப்புத் தொகையை (Security deposit ) செலுத்த வேண்டும். இப்பிணை வைப்புத் தொகை கட்டுத் தொகையுடன் சேர்ந்து வேலைக்கான மதிப்பில் 5% (ஐந்து சதவீதம்) இருக்கும். இந்த பிணை வைப்புத் தொகைக்கும் கட்டுத் தொகைக்கும் வட்டி தரப்படமாட்டாது. இந்த மொத்தத் தொகையும் ஒப்பந்தாரர் ஒப்பந்ததப்படி திருப்திகரமாக வேலை முடித்த பின் திருப்பித்தரப்படும். ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணை வைப்புத் தொகையைச் செலுத்தத் தவறினாலும் ஒப்பந்தம் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு ஒப்பந்தப்படி வேலை செய்வதிலிருந்து பின்வாங்கினாலும் கட்டுத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

5. இவ்வலுவலகத்தின் மனு பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களும் குறித்த காலம் தள்ளி வரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. மேலே குறிப்பிட்ட வேலையை சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து வழங்குவதற்கோ அல்லது சில ஒப்பந்தங்களையோ எல்லா ஒப்பந்தங்களேயுமோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமையுண்டு.

6. ஒப்பந்தப் பிரதிகளைச் சாதாரணத் தபாலிலேயே அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் கால தாமதம் ஏற்படினும் ஒப்பந்தப் பிரதிகள் தபாலில் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றுவதற்கு உரியதல்ல.

34-எ, பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம்.

(த. 35)

## ஏல விற்பனை

### மாவட்ட வளர்ச்சி அலுவலர் அலுவலகம்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட மூன்று ஊராட்சி ஒன்றியங்களின் பழுதடைந்த ஜீப்புகள் 1972 மே மாதம் 22ஆம் தேதி அன்று பிற்பகல் 3-00 மணிக்குத் தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சி அலுவலரால் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பனகல் கட்டடத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும்.

குத்தாலம்—எம்.எஸ்.ஒய். 6303.

கும்பகோணம்—எம்.எஸ்.ஒய். 2165.

திருப்பனந்தாள்—எம்.எஸ்.ஒய். 2167.

மேற்கண்ட ஜீப்புகளைப் பார்வையிட விரும்புவர்கள், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏல சம்பந்தமான விதிகளை கீழே குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

க. மீனாட்சி சுந்தரம்,
மாவட்ட வளர்ச்சி அலுவலர்,
பனகல் கட்டடம், தஞ்சாவூர்.

(த. 23)

## ஏல விற்பனை

### வனத் துறை

இவ்வலுவலக 3—1—1970-ம் தேதி ஏல விளம்பர நிபந்தனைப்படி இக்கோட்டத்தைச் சேர்ந்த உபயோகிக்கப்பட்ட 1949-ம் வருட மாடல் செவர்லட் லாரி எம். எஸ். இஸட். 6148 எங்கு, எந்த நிலையில் தற்போது உள்ளதோ, அந்த நிலையில் விற்பனை செய்வதற்காகக் கீழே குறிப்பிடப் பட்டுள்ள தேதி, இடத்தில் திருச்சிராப்பள்ளி கோட்ட மாவட்ட வன அலுவலராலாவது அல்லது அவரது உத்தரவின் கீழ் வேறு அதிகாரியாலாவது பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

இதர விவரங்களுக்கு மாவட்ட வன அலுவலகம், எண். 1 லாசன்ஸ் ரோடு, கண்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி-1 அல்லது வன சரக அலுவலகம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மேற்கண்ட லாரியை புதுக்கோட்டை வனத்துறை சிப்பந்திகளின் காலனியில், புதுக்கோட்டை வனச் சரக அலுவலரின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

ஏலம் நடத்தும் இடம் :—வனச் சரக அலுவலகம், புதுக்கோட்டை.

ஏலத்தேதியும் நேரமும் :—11—5—1972 காலை 11 மணி.

மாவட்ட வன அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

(இ·10)

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

சென்னைவட்டம் சென்னை-25.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 17-5-1972 அன்று மாலை 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும் | முன்வைப்புத் தொகை | ஒப்பந்த நமூனா கிடைக்குமிடம் |
|---|---|---|
| 1. விருத்தாசலம் பரங்கிப்பேட்டை சாலையில் கி. மீ. 25.8-இல் (மைல் 16/1-ல்) உள்ள பலவீனமான பாலத்தை புதுப்பித்தல். | 5,200 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) அலுவலகம், கடலூர். |

ஒப்பந்தங்கள் 17-5-1972 அன்றே மாலை 3.15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைப்படங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர் அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ரூ. 51.75 செலுத்தி 8-5-1972 முதல் 16-5-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை) கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை) கடலூர் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான "ரிசர்வ்" வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ. கி.)

(த. 40)

## மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியம்—சுருளியாறு நீர் மின்திட்டம்—குறிப்பிடுகை எண் SUR 8—"சுருளியாறு கீழ் முகாமில் சுருளியாறு மின் நிலையத்திற்கு ஆர். எல்—447 மீட்டர் வரை, மண் தோண்டுதல்"

1. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், வாரியத்தின் சார்பிலும் மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளுடன் ஒப்பந்ததாரரின் பெயரும், மேலுறையில் எழுதப்பட்டு, மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை கீழே கையொப்பமிட்டடுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்ட தேதியில் பிற்பகல் 3·00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4·00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

| குறிப்பிடுகை எண் (1) | வேலையின் பெயர் (2) | ஒப்பந்தப் பிரதியின் விலை (விற்பனை வரி உட்பட) (3) | கட்டுத் தொகை (4) | ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் கடைசி தேதி (5) |
|---|---|---|---|---|
| SUR8 | சுருளியாறு மின் திட்டம், சுருளியாறு கீழ்முகாமில் சுருளியாறு மின் நிலையத்திற்கு ஆர். எல்—447 மீட்டர் வரை மண் தோண்டுதல். | 10·35 | 2300 | 2-6-72 |

2. ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 10·35 (ரூபாய் பத்தும் காசு முப்பத்து ஐந்து மட்டும்) விற்பனை வரி உட்பட வீதம் செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலோ அல்லது நிருவாக பொறியாளர் சிவில், சுருளியாறு மின் திட்டம், கூடலூர், மதுரை மாவட்டம் அவர்கள் அலுவலகத்திலோ ஒப்பந்தப் பிரதி பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தொகை எந்தக் காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

3. மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான கட்டுத்தொகை ( Earnest Money Deposit ) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச் சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் காசோலைகள் ( Cheques ) ஏற்கப்படமாட்டா; கட்டுத்தொகையின்றிச் சமர்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும் டிமாண்ட் டிராப்ட் ( Demand Draft ) அனுப்புவதானால், ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப் படவேண்டும். இந்த ஒப்பந்தத்துக்கான கட்டுத் தொகையை ஒப்பந்தத்துடன் செலுத்தாமல், வேறு ஒப்பந்தத்துக்காக ஒப்பந்ததாரால் கட்டப்பட்ட தொகையையோ வேறு தொகையையோ ஈடு செய்யக் கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்துக்குரியவர் இவ்வலுவலகத்தில் குறிப்பிட்ட நாட்களுக்குள் பிணை வைப்புத் தொகையை ( Security Deposit ) செலுத்த வேண்டும். பிணை வைப்புத் தொகை கட்டுத் தொகையுடன் சேர்ந்து வேலைக்கான மதிப்பில் 5% (ஐந்து சதவீதம்) இருக்கும். இந்த பிணை வைப்புத் தொகைக்கும் கட்டுத்தொகைக்கும் வட்டி தரப்படமாட்டாது. இந்த மொத்தத் தொகையையும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி திருப்திகரமாக வேலை முடிந்தபின் திருப்பித்தரப்படும். ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணை வைப்புத் தொகையைச் செலுத்த தவறினாலும் ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு ஒப்பந்தப்படி வேலை செய்தவதிலிருந்து பின் வாங்கினாலும் கட்டுத் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

5. இவ்வலுவலகத்தில் மனுபாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களும் குறித்த காலம் தள்ளிவரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலே குறிப்பிட்ட வேலையைச் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து வழங்குவதற்கோ அல்லது சில ஒப்பந்தங்களையோ, எல்லா ஒப்பந்தங்களையுமோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமையுண்டு.

6. ஒப்பந்தப் பிரதிகளை சாதாரண அஞ்சலிலே அனுப்பப்படும். அஞ்சல் போக்குவரத்தில் காலதாமதம் ஏற்படினும் ஒப்பந்தப் பிரிதிகள் அஞ்சலில் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றுவதற்கு உரியதல்ல,

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர்மின் திட்டம்.

34-எ. பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7
(த. 39)

## மீன்துறை

என்னூரில் இத்துறைக்குச் சொந்தமான உறைபனி நிலையத்தை (Freezing Plant) குத்தகைக்கு விடுவதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தத்தில் 15—5—1972 பிற்பகல் 2-00 மணி வரை சென்னை மீன்துறை இயக்குநரால் ஏற்றுக் கொள்ளப்படும். இதகுறித்த விவரங்களை மீன்துறை இயக்குநரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மீன்துறை இயக்குநர்.

நிருவாக அலுவலக கட்டடங்கள்,
சென்னை-6.

(த·6)

## இடமாற்றம்

### மின் வாரியம்

157, அண்ணுச்சாலை, சென்னை-2 முகவரியில் பல்வேறு கட்டடங்களில் செயல்பட்டு வந்த அரசுத் தலைமை மின் ஆய்வாளர் அலுவலகமும், சென்னை மின் ஆய்வாளர் அலுவலகமும் 20—4—1972 முதல் 18-ஏ, உட்ஸ் சாலை (இரண்டாம் மாடி) சென்னை-2 என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுச் செயல்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆயினும் "மின்தர இயல் ஆய்வகமும்" ஆய்வகத்திற்கு நேரடிப் பொறுப்பாளரான உதவி மின் ஆய்வாளர் அலுவலகமும் கட்டட எண். 6/157, அண்ணு சாலை சென்னை-2 என்ற முகவரியிலேயே தொடர்ந்து செயல்படும்.

அரசு தலைமை மின் ஆய்வாளர்.

(த.27)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

விளக்க விவரம் எண். SOE-5

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகத் தமிழ்நாடு மின்சாரவாரியத்துக்கு உபயோகப்படக்கூடிய பலதரப் பொருட்களை எண்ணூார் இரயில் நிலையம், எண்ணூார் அனல் மின்திட்ட இரயில்வே சைடிங் ஆகியவற்றிலிருந்து சென்னை-57-ல் உள்ள எண்ணூார் அனல்மின்சார நிலையத்தின் சரக்கு நிலையத்திற்கும் மின்சார நிலையத்தின் பகுதிகளுக்கும் போக்கு வரவு ஏற்றிச் செல்ல. வேலைக்கான முத்திரையிட்ட தனித் தனி விலை ஒப்பந்தங்கள் கீழே கையொப்பமிட்டவரால் (TENDERS) 20—5—1972 அன்று பகல் 1-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகளின் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 10-00 (ரூபாய் பத்து) ஆகும். மேற்படி ஒப்பந்தப் புள்ளி விவரம் பிரதிகள் (Tender Specification Copies) வேண்டுவோர் பிரதிஒன்றுக்கு ரூ.10-00 வீதம் துணைத்தலைமைக்கணக்கர் (இயக்குதல்) எண்ணூார் அனல் மின்சார நிலையம், சென்னை-57. Deputy Chief Accountant Opern, Ennore Thermal Power Station, Madras-57) என்ற முகவரிக்குப் பணஅஞ்சல் (Money Order) மூலமாகவோ அல்லது நேரிலோ செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது. இத்தொகையை பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும் தேவையான பிரதிக்குரிய விளக்க விவர எண்ணையும் (Specification) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமே அனுப்பப்படும். அவை உரியவருக்கு சேர்க்கப்படாவிட்டால் அதற்கு மின்சாரவாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத்தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலை ஒப்பந்ததாரர்களுக்கிடையே ஆணையைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்துக்கும் ரூ. 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) பிணைத் தொகையாகக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் நேரில் செலுத்தி அதற்கான இரசீதை விலை ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும். மேற்படி ரசீது இல்லாத விலை ஒப்பந்தங்களும் உரிய தாள்களில் சேர்க்கப்படாத விலை ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 20—5—1972 அன்று மாலை 4-00 மணியளவில் வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளின் முன்னிலையில் அடியில் கையொப்பமிட்டுள்ளவரால் அவருடைய அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
இயக்குதல்,
எண்ணூார் அனல் மின்சார
நிலையம், எண்ணூார், சென்னை-57.

(த.26)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை
### பாம்பன் வட்டம்.

ந. க. எண். 5214/72/ வ-3. தேதி 14-4-72

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் அலுவலகத்தில் 10—5—1972 மாலை 3-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வ. எண். | வேலை விவரம். | கட்டுத் தொகை. | நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| 1 | முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் இ. மீ. 41/4 (மைல் 25/6. 7-ல்) பாலம் கட்டுதல். | 9,000 | தனிக்கோட்டப் பொறியாளர் (நெ.) திருமானூர் பாலவேலை, தஞ்சாவூர். |
| 2 | முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் இ. மீ. 67/0 (மைல் 41/7) பாலம் கட்டுதல். | 7,300 | மேற்படி |

ஒப்பந்தப் புள்ளிகள் 10—5—1972 அன்றே மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைத் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருமானூர் பாலவேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூபாய் 25·90 செலுத்தி 1972 மே மாதம் 2ஆம் தேதி முதல் 1972 மே மாதம் 9ஆம் தேதி வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 25)

## முந்திரிக்கொட்டை ஏல விளம்பரம்

### வனத்துறை
### திருச்சி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி, வனப் பிரிவில் 1972-ம் வருடம் துறைத்தனத்தாரால் சேகரம் செய்யப்படும் முந்திரிக்கொட்டை திருச்சிராப்பள்ளி மாவட்ட வன அலுவலரால் அல்லது அவரது உத்திரவின்கீழ் வேறு அதிகாரியால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பகிரங்கமாய் ஏலம் விடப்படும்.

மாவட்ட வன அலுவலர் நெ. 1, லாசன்ஸ்ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி-1 அல்லது வனச் சரக அலுவலர், அரியலூர் அல்லது புதுக்கோட்டை என்ற விலாசத்துக்கு எழுதியோ, நேரில் தொடர்பு கொண்டோ ஏல விதிகள் அடங்கிய விளம்பரத்தின் நகல் பெற்றுக் கொள்ளலாம்.

அட்டவணை.

| ஏலம் நடக்குமிடம். | ஏலத்தேதி. | உத்தேச அளவு. டன். |
|---|---|---|
| உடையார்பாளையம் .. .. | 4—5—1972 | 100 |
| | 14—5—1972 | 100 |
| | 24—5—1972 | 50 |
| | 4—6—1972 | 50 |
| | 4—6—1972 | 50 |
| புதுக்கோட்டை .. .. .. | 11—5—1972 | 20 |
| | 1—6—1972 | 20 |

எஸ். சிவசைலம்,
மாவட்ட வன அலுவலர், திருச்சி.

(த. 59)

## நெடுஞ்சாலே கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலே வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலே வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 17—5—1972 மாலே 3 மணி வரை கீழ்க்கண்ட வேலேக்குப் பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலேயின் பெயர். | கட்டுத் தொகை |
|---|---|
| | ரூ. |
| 1 தேசிய நெடுஞ்சாலே எண் 45 சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலேயில் மைல் 113/4-ல் கட்டும் பாலத்திற்கு வடக்குப் பக்கம் அணுகு சாலே அமைத்தல். | 2,180 |
| 2 தேசிய நெடுஞ்சாலே எண் 45 சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலேயில் மைல் 113/4-ல் கட்டும் பாலத்திற்கு தெற்குப் பக்கம் அணுகு சாலே அமைத்தல். | 2,080 |

ஒப்பந்தப் புள்ளிகள் 17—5—1972 அன்றே மாலே 3–15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள், வரைப்படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலே கோட்டம் 2, கிண்டி, சென்னை-25 அலுவலகத்தில் 9—5—1972 முதல் 16—5—1972 முடிய, விற்பனே வரியுட்பட ரூ. 25·88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலே கோட்டம் 2, கிண்டி அதிகார எல்லேக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலுள்ளும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலேப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலே கோட்டம்-2 கிண்டி பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கிப் பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனேக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

தி.மு.ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

(த. 77)

---

## நெடுஞ்சாலே கிராமப் பொறியியல் துறை

தேசிய நெடுஞ்சாலே வேலேகள் (மதுரை மாவட்டம்)

கீழே குறிப்பிட்டுள்ள வேலேக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களே மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலே), மதுரை-2 நெ. 11, ஒளவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அலுவலகத்தில் 10—5—1972-ம் தேதி (புதன் கிழமை) அன்று பிற்பகல் 3–30 (அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று அதே பிற்பகல் 3–35-க்குத் திறக்கப்படும்.

| வேலேயின் பெயர் | கட்டுத்தொகை டெபாசிட் | ஒப்பந்தம் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம் |
|---|---|---|
| தேசிய நெடுஞ்சாலே எண் 45-ல் உள்ள கி.மீ. 350/8 (மைல் 214/4)-ல் பெரிய பாலம் ஒன்று புதுப்பித்துக் கட்டுதல். | 11,600 | கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலே கோட்டம்-2, திருச்சி-1. |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனே வரி உட்பட ரூ. 20·70 விதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலே) கோட்டம்-2, திருச்சி-1, விலாசத்திருலிந்து 3—5—1972 முதல் 9—5—1972 வரையிலான வேலே நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனே விவர நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப்பெறலாம்.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலே) அதிகார எல்லேக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலிலும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலேப்பில் செலுத்தியதற்கான செலானே ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருடத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிளும் 12 வருட தேசியத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் மாநில தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரன்டிகளும் டிமாண்டு டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத்தொகைகாக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளேச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ப. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
மதுரை-2.

(த. 76)

---

## திருநெல்வேலி நகராட்சி

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலேக்கு நெல்லே நகர்மன்ற ஆணேயர் அவர்களால் 30—5—1972 அன்று மாலே 4-00 மணி வரை நெல்லே நகர்மன்ற அலுவலகத்தில் வைத்துப் பெற்றுக்கொள்ளப்படும். இதர விவரங்களுக்கு பொறியர் அவர்களிடம் அறியவும்.

எஸ்டி.எண். 342/71–72, தண்ணீர் விநியோக திட்டத்திலுள்ள குளோரினெட்டர் இயந்திரத்திற்கு உபரிச் சாமான்கள் சப்ளே செய்ய— கட்டுத் தொகை ரூ. 185.

தெ. ரா. கனகசபாபதி,
ஆணேயர்,
நெல்லே நகர் மன்றம்.

திருநெல்வேலி

(த. 49)

---

## சேலம் நகராட்சி

அம்மாப்பேட்டை பேலன்சிங் டேங்கிற்கு அருகில் ஸ்பெஷல் ஆபீசருக்காக கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு மின்சார ஒயரிங் வேலேகள் செய்வதற்கும், அலங்கார மின் விளக்குகள் அமைப்பதற்கும் முத்திரையிடப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் ஆணேயரின் நேர்முகத் துணேவர் அவர்களால் 12—5—1972-ம் தேதி மாலே 3 மணிக்குள் பெற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்கு நகராட்சி பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளவும்.

எ. எஸ். குப்புசாமி,
ஆணேயர்.

(த. 50)

---

## குற்றுல நகரியம்

(திருநெல்வேலி மாவட்டம்)

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் குற்றுல நகரிய நிருவாக அதிகாரியால் 17—5—1972-ம் தேதி மாலே 4-00 மணி வரையில் குற்றுல நகரிய மருத்துவ விடுதிக்குத் தேவையான மருந்துகள் வதற்கு பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் ரூ. 100 ஒப்பந்தப் புள்ளி கட்டுத் தொகையாகச் செலுத்த வேண்டும். 17—5—1972-ம் தேதி மாலே 4-30 மணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிகள் அணேத்தும் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலேயில் திறக்கப்படும். தேவையான மருந்துகளின் பட்டியல் மற்ற விவரங்களும் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சா. நா. பழனிச்சாமி, பி.ஏ.பி.எல்.,
திருவாக அதிகாரி.

(த. 46)



காந்தியடிகள் கனவை நனவாக்கி
தமிழ் நாடு வழிகாட்டுகிறது!
கதர் - கதர்ப்பட்டு
சோப்பு - தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை வெண்கலப்
பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்
கதர் - கிராமத் தொழில்கள்
வளர்ச்சியும் முன்னேற்றமும்
விவசாயிகளுக்கு
ஊதியத்துடன் கூடிய
வேலைவாய்ப்பளிக்கின்றன
யீடு: கதர்- கிராமத் தொழில் துறை, உ.சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணா சாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியாளரால் வரும் மூன்று வருடத்திற்கு, பல்லவா போக்கு வரத்துக் கழகத்தால், கீழ்க்கண்ட பணிமனைகளில் கடைகள் குத்தகைக்கு விடப்படும்.

கடை நம்பர் 2—மந்தைவெளி பேருந்து நிலையம். பலசரக்கு வியாபாரம் ( General Merchants ).

கடை நம்பர் 3—பெரம்பூர் பேருந்து நிலையம். துணி வகை ரகங்கள் விற்பது ( Textiles )

முத்திரையிடப்பட்ட உறைகளில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2 அவர்களால், ஒப்பந்தங்கள் 15–5–1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் அதே நாள் 15–5–1972 மாலை 3·30 மணிக்குத் திறக்கப் படும். ஒப்பந்த விதிமுறைகள் கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில், எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1·04 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 38)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணா சாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்குவரத்துக்கழகம், சென்னை-2, சார்பில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அவர்களால் வரும் மூன்று வருடத்திற்கு, "தங்கசாலை பேருந்து நிலையத்திலுள்ள" பங்க் ஒன்று, காபி அண்ட் தேனீர் பானங்கள் வியாபாரம் செய்வதற்காக, குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட உறைகளில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 என்று குறிப்பிடப்பட வேண்டும். ஒப்பந்தங்கள் 12-5-1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள், அதே நாள் 12–5–1972 மாலை 3·30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள் கட்டடப் பொறி யாளர் அலுவலகத்தில், எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1·04 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த.37)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—கட்டடங்கள் வடார்க்காடு மாவட்டம் வாலாஜா பேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 18—5—1972 வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. 18—5—1972 மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாள் மாலை 3-15 மணி அளவில் அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 3—5—1972 முதல் 16—5—1972 வரை அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் எதுமில்லை.

ஆர். செல்வராஜன்,

மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து., செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த. 3)

## ஒப்பந்தப் புள்ளி

### பாளையங்கோட்டை நகராட்சி

நகர்மன்ற பள்ளிக்குத் தேவைப்படும் மேசைகள், நாற்காலிகள் இரும்பு அலமாரி, பெஞ்சு, உட்காரும் பலகை, மறைவுதட்டி, மேப் ஸ்டாண்டு முதலியன வழங்கிட ஆணையர் அவர்களால் 15—5—1972-ம் தேதி மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட தாரணைகள் டிபாசிட் தொகை ரூ. 285 உடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றையத் தினம் மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். தாரணையின் மொத்த மதிப்பு ரூ. 5,650 தாரணை ஷெட்யூல் மற்றும் இதர விவரங்களை அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஜி. கே. அருணசலம்,

ஆணையர் பொறுப்பு.

(த. 2)

## ஏல விற்பனை

### வனத்துறை

மதுரை தெற்கு வனக்கோட்டம். மதுரை-20.

மதுரை தெற்கு வனக்கோட்டத்திய 1972–73-ம் வருடத்திய சில்லரை மகசூல் யூனிட்டுகளும், மூங்கில் கப்புகளும், மதுரை தெற்கு வனக்கோட்ட வன அலுவலகத்தில் 29—5—1972-ல் காலை 10-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மேல் விவரங்களுக்கு இவ்வலுவலகத்திற்கு அல்லது சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பம் செய்யவும்.

இரா. செல்லையா,

மாவட்ட வன அலுவலர்.

(த. 12)

## ஒப்பந்தப் புள்ளி

### தூத்துக்குடி நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் 15—5—1972 மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு உடைக்கப்படும். நகர மன்றத்திற்கு ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிட உரிமை உண்டு. மற்றும் விவரங் களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

| வேலை விவரம். | கட்டுத் தொகை. ரூ. | பை. |
|---|---|---|
| (1) சேர்மேன் சிவசாமி பூங்காவில் வாசக சாலை கட்ட. | 165 | 00 |
| (2) குருஸ் பர்னாந்துபுரம் பூங்காவில் வாசகசாலை கட்ட | 165 | 00 |

கே. என். கிருஷ்ணமூர்த்தி பி.ஏ.,பி.ஈ.,

பொறியர்.

(த. 20)

## ஏலம்

### கால்நடை பராமரிப்புத்துறை, சென்னை.

இத்துறையைச்சேர்ந்த ஓர் வில்லீஸ் ஜீப் வாகனம் எம்.எஸ்.எக்ஸ். 4493 1972-ம் வருடம் மே மாதம் 15-ம் தேதியன்று காலை 11 மணியளவில் மதுரையில் அரசினர் வட்டார வாகனப் பொறியாளர் பட்டறையில் பகிரங்க ஏலம் விடப்படும். ஏலம் கோர விரும்புவோர்கள் மேற்படி வாகனத்தை அலுவலக நேரத்தில் வாகனப் பொறியாளரின் அனுமதி பெற்றுப் பார்வையிடலாம்.

மற்ற விவரங்களுக்கு அடியிற் கையொப்பமிட்டுள்ளவரை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சையத் முஷ்தாக் உசேன்,

உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) திண்டுக்கல்.

(த. 51)

## மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்

பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், த.பெ. 55, திருச்சி-1.

ஒப்பந்தப் புள்ளி நீட்டிப்பு.

திருச்சி மாவட்டம்—குளத்தூர் தாலுக்கா—குடுமியாமலையில் உள்ள அண்ணா பண்ணையில் அமைந்திருக்கும் கலைஞர் கருணாநிதி விவசாய ஆராய்ச்சிக் கூடத்திற்காக நிர்வாகத்திற்கான கட்டடம் கட்டுதல் (மேல்தளம் மட்டும்).

முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான கடைசி தேதி 18—5—1972 வரை நீட்டிக்கப் படுகிறது. ஒப்பந்தப்பத்திரங்கள் 18—5—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். 18—5—1972 மாலை 3-30 மணி அளவில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி விவரப் பத்திரங்கள் 5—5—1972 முதல் விற்பனைக்குக் கிடைக்கும். மற்ற விதிமுறைகள் இவ்வலுவலக எண். வ6/5889/72-2, தேதி 4—3—1972-ல் கண்டபடி ஆகும்.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சி வட்டமேற்பார்வைப் பொறியாளர்.

(த. 61)

## தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட இடங்களிலுள்ள—அரசாங்கத் திற்குச் சொந்தமான உபயோகமில்லாத சாக்குகள் விற்பனை செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில், மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் தஞ்சாவூர் என்ற விலாசமிட்டு 30—5—1972 மாலை 2-00 மணி முடிய வரவேற்கப்படுகின்றன. அவை களை அதே நாளில் மாலை 3-00 மணிக்கு ஆஜரில் உள்ள ஏலதாரர்கள் அல்லது அவர்களுடைய ஏஜெண்டுகள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்த விதி முறைகள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மற்ற இம்மாவட்டத்திலுள்ள வட்ட வழங்கு அலுவலர் அலுவலகங்களி லும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| | | |
|---|---|---|
| 1 | கோபால் செட்டியார், ரைஸ் மில், சாக்கோட்டை | 3,770 |
| 2 | கோபால் செட்டியார் ரைஸ் மில், பேரளம் | 22,750 |
| 3 | கோபால் செட்டியார் ரைஸ் மில், மருங்கூர் | 6,200 |
| 4 | மத்திய சேமிப்புக் கிடங்கு, தஞ்சாவூர் | 3,500 |
| 5 | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு, தஞ்சாவூர் | 1,492 |
| 6 | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு, தஞ்சாவூர் | 5,529 |

மாவட்ட வருவாய் அலுவலர்.

(த. 48)

## தூத்துக்குடி நகரமன்றம்

வல்லநாட்டில் ஆற்றுப்படுகையில் தடுப்பு அமைப்பதற்காகத் தேவை யான 3,000 காலி சிமிண்ட் சாக்கு சப்ளை செய்வதற்கான ஒப்பந்த ஆணையர் அவர்களின் நேர்முக உதவியாளரால் 16-5-1972 மாலை 4 மணிவரை மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டு அன்று மாலை 4-30-க்குத் திறக்கப்படும். மேற்படி வகைக்கு சப்ளை செய்ய விலைப்புள்ளி கொடுப்பவர்கள் ரூ. 75 பொறுப்புத் தொகை கட்டி, கட்டிய அத்தாட்சியை விலைப்புள்ளியுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

சி. சங்கரலிங்கம், பி. ஏ.,
ஆணையர்.

(த.72)

## விளம்பரம்

மத்தகிரி பேரூராட்சி விஸ்தீர்ணத்திற்குள் உள்ள வீடுகளுக்கு மூலதன மதிப்பில் நிர்ணயம் செய்திருந்த வீட்டுவரியை 1-4-1972 முதல் வருடாந்திர வாடகை மதிப்பில் நிர்ணயம் செய்ய இருப்பதனால், இது பிரசுரமான முப்பது நாட்களுக்குள் அப்ஜக்ஷன்கள் இருந்தால் நிருவாக அதிகாரி, மத்தகிரி பேரூராட்சி அவர்களுக்கு அப்ஜக்ஷன் கொடுத்துக் கொள்ளலாம்.

நிருவாக அலுவலர்.

பேரூராட்சி அலுவலகம்,
மத்திகிரி.

(த.70)

## வீட்டுவசதி வாரியம்
## சென்னை வடக்குக் கோட்டம்

கோப்பு எண். எம். என். 1/1272/72 நாள்: 10-4-1972.

பணியின் பெயர் ஒப்பந்ததாரரின் பெயர் ஆகியன உரிய படிவத்தில் குறிப்பிடப்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், அறிஞர் அண்ணா நகரில் நடுத்தர வருமானம் உள்ள பிரிவிற்குத் தனித்தனியாக மொத்த மதிப்பீடு 1,54,700 ரூபாயில் 4 வீடுகள் கட்ட ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக 10-5-1972 பிற்பகல் 2-30 மணி வரை கீழே கையொப்பமிட்டுள்ள நிருவாகப் பொறியாளரால் வரவேற்கப்படுகின்றன. (மனை எண். 4424, 4946, 2314, 1499) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 10-5-1972 பிற்பகல் 2-35 மணிக்கு வருகை தரும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

மேல் விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி அட்டவணைகள், இன்னபிற வேண்டு வோர் 20-4-1972லிருந்து அலுவலக வேலை நாட்களில் காலை 1-30 முதல் பிற்பகல் 2-30 மணி வரை தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், வடக்குக் கோட்ட நிருவாகப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. மணி,
நிருவாகப் பொறியாளர். (எம். என்.)

(த. 68)

## பல்லவா போக்குவரத்துக் கழகம்
## (தமிழ்நாடு அரசு நிறுவனம்)

785-பி4-72, நாள்: 12-4-1972.

முத்திரையிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் அலுவலக எழுதுபொருள் கள் வழங்குவதற்காக 4-5-1972 பிற்பகல் 3 மணிக்குக் கீழ்க்கண்ட விண் ணப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி வரையறை, தெளிவான விளக்கங்கள், மற்ற விவரங்களை அலுவலக நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை செயலாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

போக்கு வரத்து இல்லம்,
அண்ணாசாலை,
சென்னை-2.

நிருவாக இயக்குநர்.

(த. 69)

## பல்லவா போக்குவரத்துக் கழகம்,
## அண்ணா சாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2, சார்பில் கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அவர்களால் வரும் மூன்று வருடத்திற்கு மந்தைவெளி பேருந்து நிலையத்திலுள்ள கடை நெ. 3-ஐ, குத்தகைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் 16-5-1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அந்தக் கடையில் வியாபாரம் நடத்தப்படுவது "புதிய பழங்கள் மேலும் காய்கறிகள் விற்றல்". ஒப்பந்தத்திற்கான விதிகள், நிபந்தனைப் பத்திரங்கள் முதலியவற்றை, கட்டடப் பொறியாளர் போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1·04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தங் கள் அதே நாளில் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும் எக் காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 56)

## விவசாயத் துறை

1972-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதிய தமிழரசு பக்கம் 69-ல் பவர் டிரில்லுக்குத் தேவையான, 60 குதிரை ஓட்ட 6 சிலிண்டர் இண்டஸ்டிரியல் டீசல் எஞ்சின் வழங்க வரவேற்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளி காலம் 20—4—1972 முதல் 20—5—1972 மாலை 3 மணிவரை நீட்டிக்க லாகிறது.

விவசாயக் கோட்டப் பொறியாளர்,
1-பி கடற்கரைச் சாலை.
கடலூர்-1.

(த. 47)


மே 16
தமிழரசு
இதழில்.
சோம. மகாதேவன்
எழுதும்
உண்மையின் சந்நிதி
கிராமியத் தொடர்கதை
துவங்குகிறது

## தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து "மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி தொழில் வணிகத் துறை" அவர்களால் 11-5-1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளியினுடைய ரசீது கிடைக்க வேண்டிய கடைசி நாள் 11-5-1972. அதே நாள் 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2, அவர்களால் திறந்து வைக்கப்படும்.

| வேலையின் பெயர். | முன் வைப்புத் தொகை. | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. | பணியை முடிக்கும் காலம். | ஆவணம் கிடைக்கும் நாள். | ஒப்பந்தப் புள்ளி ரசீதினைப் பெறக் கடைசி நாள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. புதுக்கோட்டை, தொழிற் தோட்டத்திலிருக்கும், தொழிற்பேட்டைப் பகுதி, ஜி-பிரிவு, 2 எண்ணினுடைய கட்டுமானம். | ரூ. 4,200 | 10.40 | 6 மாதங்கள். | 26- 4-1972 | 11- 5-1972 |
| 2. புதுக்கோட்டை, தொழிற் தோட்டத்திலிருக்கும்,, தொழிற்பேட்டைப் பகுதி ஜே. பிரிவு-2 எண்ணினுடைய கட்டுமானம். | ரூ. 2,600 | 10.40 | 6 மாதங்கள். | 26- 4-1972 | 11- 5-1972 |

1. ஒப்பந்தப் புள்ளிப் படிவம்—மொத்தத் தொகை.

2. ஒப்பந்தப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்) திருச்சிகோட்டம், 63, ரெங்கநாதபுரம், புத்தூர், திருச்சி, அவர்களின் அலுவலக அலுவல் நேரங்களில் மேலே குறிப்பிட்டுள்ளபடி 26-4-1972-லிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

3. ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்களின் விலை, விற்பனை வரி உட்பட தொகையான 10.40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது). அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries other receipts என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்) திருச்சி கோட்டம், 63, ரெங்கநாதபுரம், புத்தூர், திருச்சி-1 அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. முன் வைப்புத் தொகை சலான் வடிவிலோ, கால் டிபாசிட் ரசீது வடிவிலோ ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்ட்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும் முன் வைப்புத் தொகை, நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்) திருச்சி கோட்டம், அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக்கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடமை யாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத்தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் முன்வைப்புத் தொகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றவராகயிருத்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பகுதி.

(த. 41)

## தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், கீழே தொடரப்பட்டுள்ள வேலையை, மேற்கொள்வதற்காக, தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, "மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை" அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள 12-5-1972 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், "மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை" அவர்களால் திறந்து வைக்கப்படும்.

| வேலையின் பெயர். | முன்வைப்புத் தொகை. | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை | பணியை முடிக்கும் காலம் | ஆவணம் கிடைக்கும் நாள் | ஒப்பந்தப் ரசீதைப் பெறக் கடைசி நாள |
|---|---|---|---|---|---|
| 1. சேலம் தொழிற் பேட்டையில் "ஜி" டைப் பணி மனைகள் இரண்டு கட்டுதல். | ரூ. 4,200 | ரூ. 10.40 | 6 மாதங்கள் | 26- 4-1972 | 12- 5-1972 |
| 2. சேலம் தொழில் பேட்டையில் "ஜே" டைப் பணி மனைகள் இரண்டு கட்டுதல் | ரூ. 2,600 | ரூ. 10.40 | 6 மாதங்கள் | 26—6—1972 | 12—5—1972 |

1. ஒப்பந்தப்படிவம்—மொத்தத் தொகை.

2. ஒப்பந்தப்புள்ளிகள் " நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்) வேலூர் கோட்டம், 4, தியாகராஜபுரம், வேலூர், (வட ஆர்க்காடு) அவர்களின் அலுவலக அலுவல் நேரங்களில் மேலே குறிப்பிட்டுள்ளபடி 26-4-1972-லிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

3. ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை, விற்பனை வரி உட்பட தொகையான ரூ. 10.40-ஐ (எக்காரணம் கொண்டும் திரும்பத் தரப்பட மாட்டாது) அரசு கருவூலத்திலோ, அல்லது இந்தியன் ரிசர்வ் வங்கியிலோ, XXIX Industries other receipts என்ற தலைப்பில் "நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்) வேலூர் கோட்டம், 4, தியாகராஜபுரம், வேலூர், (வட ஆர்க்காடு) அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. முன் வைப்புத் தொகை செலான் வடிவிலோ, கால் டிபாசிட் வடிவிலோ ரசீது ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்ட்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை, "நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்) வேலூர்க் கோட்டம், 4, தியாகராசபுரம், வேலூர் (வட ஆர்க்காடு) அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியக் கழகக் கடன் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும், சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தில், தெரிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடமை ஆக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும்கூடக் கட்டுத்தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் வைப்புத் தொகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்றுண்டு அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.

பி. மாதவ்,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பகுதி.

(த. 75.)

## பொதுப்பணித் துறை

சென்னை-செங்கற்பட்டு வட்டம்.

வேலையின் பெயர்—சென்னை அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைபகுதிக் கட்டடத்தின் (Surgical Block) மூன்றாவது மாடியின் மேல் கூடுதலாக மூன்று மாடிகள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20-5-1972 மாலை 3-00 மணி வரை மேற்பார்வைப் பொறியாளர் சென்னை-செங்கை மாவட்டம், சென்னை-5 அவர்களால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாளில் மாலை 3-15 மணிக்கு அங்கே வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 10-5-1972 முதல் 19-5-1972 முடிய எல்லா அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| 1 ஒப்பந்த வடிவம் | .. .. .. | மொத்தத்தொகை. |
| 2 கட்டுத் தொகை | .. .. .. | ரூ. 25,000. |
| 3 வேலையை முடிப்பதற்கான காலம் | .. | 12 மாதங்கள். |
| 4 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை | .. | ரூ. 40-ம் விற்பனை வரி 3½ சத வீதம். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை திருப்பித் தரமாட்டாது. "P. W. D. Remittances—III other Remittances என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் பொ. ப. து. கட்டடக் கோட்டம் எண் 2 அவர்கள் கணக்கில் கருவூலத்திலோ ரிசர்வ் பாங்கியிலோ கட்ட வேண்டும். விற்பனை வரி 3½ சதவீதம் அதே சலானில் "XII Sales tax-b Receipt under State Sales tax Act–General Sales tax" என்ற தலைப்பில் கருவூலத்திலோ ரிசர்வ் பாங்கியிலோ கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான மனுக்கள் மேற்கண்ட சலான்களின் அசலுடன் அனுப்பப்பட வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கை வட்டம் அவர்கள் எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையோ (அல்லது) ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ நிராகரிக்கும் உரிமை பெற்றுள்ளார்.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை-செங்கை வட்டம் சென்னை-5 அவர்கள் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அறிந்து கொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 64)

---

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—செங்கற்பட்டிலுள்ள தலைமை மருத்துவ மனையில் வெளியிலிருந்து வந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் கட்டடத்திற்கு மேல், பயிற்சி பெறும் மாணவர்கள் தங்கும் விடுதிக்கான கட்டடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 18—5—1972 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 18—5—1972 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாள் மாலை 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 16—5—1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

ஆர். செல்வராசன்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த-4)

---

## உடுமலைப்பேட்டை நகராட்சி

இந்நகராட்சிக்குத் தேவையான எழுதுபொருள்கள் (Stationery articles ) விநியோகம் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி 17—5—1972-ம் தேதி மாலை 4·00 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். இதர விவரங்களுக்கு ஆணையர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும். கட்டுத் தொகை ரூ. 50 செலுத்தப்படல் வேண்டும்.

சொ. இரத்தினகிரி,
ஆணையர்.

உடுமலைப்பேட்டை

(த. 71)

---

## பொதுப்பணித் துறை

### செங்கற்பட்டு--வடஆர்க்காடு பெருவட்டம் வேலூர்-1.

வேலையின் பெயர் — வட ஆர்க்காடு மாவட்டம்—திருப்பத்தூர் அரசினர் மருத்துவமனையில் 32 படுக்கைகள் கொண்ட பகுதியும் " எக்ஸ்ரே " கூடமும் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்காளல் 25—5—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு —வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூபாய் 3,900.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூபாய் 20·00, விற்பனை வரி 3½ சதவீதம்.

ஒப்பந்தப் புள்ளி முடிக்க வேண்டிய காலம் —6 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலக நேரங்களில் 10—5—1972 தேதி முதல் 23—5—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20·00 (அது அந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது.) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் " P.W.D. remittances III—Other remittances " என்ற தலைப்பின் கீழ் " நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) receipts, Under State Sales Tax Act—General Sales tax " என்ற தலைப்பின்கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் " டிமாண்ட் டிராப்டாகவோ " ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத்தொகைக்காகக் கொடுக்கப்படும் ஷெடியூல்டு பாங்குகளின் " டிமாண்ட் டிராப்டுகள் " செயற் பொறியாளர், பொ.ப.து., கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத்தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆர். செல்வராசன்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து., செங்கற்பட்டு—
வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த-66)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணாசாலை, சென்னை-2.

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மேலாளர் (தொழில் நுட்பம்) பல்லவா போக்கு வரத்துக்கழகம், சென்னை-2, அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள மேலாளர் (தொழில் நுட்பம்) அவர்கள் அலுவலகத்தில் 19-5-1972 அன்று மாலை 3-00 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. | ஒப்பந்தப் பாரங்கள் விற்பனைவரி உட்பட. | முடிக்கும் காலம். |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| சென்னை—மத்தியப் பணிமனையில் கான்கிரீட் தளம் அமைத்தல். | 6,900 | 20·80 | 4 மாதங்கள். |

ஒப்பந்தம்—மொத்தத் தொகை.

ஒப்பந்தங்கள் மேலாளர் (தொழில் நுட்பம்) பல்லவா போக்கு வரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் மேற்கூறிய அதே தேதியில் 19-5-1972 மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப்பத்திரங்கள், நமூனுக்கள், வரை படங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர் பல்லவா போக்கு வரத்துக்கழகம் சென்னை-2ல் உள்ள அலுவலகத்தில், மேற்கூறிய தொகையைக்கட்டி, கீழ்க்கண்ட தேதிகளில் (1-5-1972 முதல் 18-5-1972 முடிய) எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை, “நிதிநிலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரி பல்லவா போக்குவரத்துக்கழகம், சென்னை-2 அவர்களுக்குச் செலுத்தி, செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றித் வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

பி. ஆர். சுப்பிரமணியம்,
மேலாளர் (தொழில் நுட்பம்).

(த. 63)

## ஏல விற்பனை

### உணவுப் பொருள் வழங்குதுறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும் அவர் சார்பாக 18 டன் அரிசி (பதினெட்டு) 10-5-1972 அன்று இ.டி. மில்ஸ் காம்பவுண்டு அரசு கிடங்கு (கோடவுன்) குனே, சென்னை 7-ல் உணவுப் பொருள் வழங்கு உதவி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒரு அலுவலரால் பொது ஏலத்திற்கு விற்கப்படும்.

விற்பதற்கான அரிசியின் அளவு, வகைப்பற்றிய விவரங்கள், நிபந்தனைகள் உணவுப் பொருள் வழங்கு உதவி ஆணையர் அலுவலகம் இ.டி. மில்ஸ், குனே, சென்னை-7ல் ரூ. 5·20 செலுத்தி பெறலாம். தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

உதவி ஆணையாளர்,
உணவுப் பொருள் வழங்குதுறை,
சென்னை 7.

(த. 58)

## ஒப்பந்தப் புள்ளி

### வனப் பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை “உணவுப் பொறியாளர் திருச்சி” அவர்கள் தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

“சோபனபுரம் மேல் செங்காட்டுப்பட்டி 6-ஆம் பிரிவுக்கான மேம்பாட்டு வேலைகள் துறையூர் வனச்சரகம் திருச்சி கோட்டம்” கட்டுத் தொகை (இ.எம்.டி.) ரூ. 643 ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளவும் திறக்கவும் கடைசி நாள் 22-5-1972 நேரம் முறையே மாலை 3-00 மணி 3-05 மணி.

(2) ஒப்பந்தப் பத்திரங்களை “வனப் பொறியாளர், எ. ராயல் ரோடு, கன்டோன்மெண்ட், திருச்சி-1” என்ற முகவரியிலிருந்து ரூ. 1-04 பணமாகவோ அல்லது பண ஆணை மூலமாகவோ செலுத்தி விண்ணப்பத்தின் பேரில் 25-4-72 முதல் 20-5-72 முடிய எல்லா வேலை நாட்களிலும் அலுவலக வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வி. பா. துரைராஜ்,
வனப்பொறியாளர்.

திருச்சி
(த. 57)

## காவல் துறை

1972-73 ஆண்டில் மேல்பாக்கம் அரசினர் ஏழைகள் பாதுகாப்பு முகாமுக்கு (Government Care Camp, Melpakkam) விறகு, எலும்பில்லாத ஆட்டு இறைச்சி, ரொட்டி, ஊறுகாய்க்கு தேவையான காய்கள் (எலுமிச்சங்காய், மாங்காய், நார்த்தங்காய், நெல்லிக்காய்) முதலியன சப்ளை செய்வதற்கான ஒப்பந்தம்.

(1) 1972-73 ஆண்டில் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்கு அரசினர் ஏழைகள் பாதுகாப்பு முகாம், மேல்பாக்கத்திற்கு (ஆவடி அருகில்) விறகு, எலும்பில்லாத ஆட்டு இறைச்சி, ரொட்டி, ஊறுகாய்க்கு தேவையான காய்கள் (எலுமிச்சங்காய், மாங்காய், நார்த்தங்காய், நெல்லிக்காய்) முதலியன சப்ளை செய்வதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

(2) இந்த ஒப்பந்தங்கள் போலீஸ் சூப்பிரண்டெண்ட் பெயர் விலாசத்திற்கு) (திரு. எம். இராமதாசு, பி.எ., மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், செங்கை மாவட்டம் (கிழக்கு) பரங்கிமலை, சென்னை-16) அவர்களுக்கு விலாசமிட்டு அவரிடத்தில் 10-5-1972 அன்று பிற்பகல் 2 மணிக்கு சேருமாறு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தம் அனுப்பும் உறையின் மீது “1972-73-க்கு விறகு மற்றும் பிற பொருள்கள் சப்ளை செய்வதற்கான ஒப்பந்தம் என்று குறிப்பிட வேண்டும்.

(3) பொருள்களின் ஜாபிதாவுடன் கூடிய ஒப்பந்தம் மற்றும் கான்டிராக்ட் பாரங்களை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், பரங்கிமலை, சென்னை-16 விலாசத்திலிருந்து எல்லா வேலை நாட்களிலும் காலை 10-30 மணியிலிருந்து மாலை 4-00 மணி வரை பெறலாம். 2-5-72 அன்றோ அல்லது அதற்கு பிறகோ கருவூலம் அல்லது அரசாங்க பாங்கி இவை ஒன்றில் “XIX Police Miscellaneous receipts—Cost of Tender Form for supply of Ration articles” என்ற தலைப்பில் ரூ. 5-ம் மற்றும் தனியாக விற்பனை வரிக்காக 0·13 காசும் செலுத்தி பெற்ற இரண்டு செலான்களை தாக்கல் செய்த பிறகு ஒப்பந்தப் பாரங்கள் வழங்கப்படும். இந்த தொகைகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் திருப்பித் தரப்படமாட்டாது. மாவட்ட போலீஸ் அலுவலகத்தில் ரொக்கம் எதும் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

காவல் கண்காணிப்பாளர்,
செங்கை மாவட்டம் கிழக்கு.

(த. 53)

## போடி நாயக்கனூர் நகராட்சி

கீழே குறிப்பிட்டிருக்கும் வேலைகளுக்கு தனித்தனியாக ஒவ்வொரு வேலைக்கும் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972 மே மாதம் 10-ம் தேதி புதன்கிழமை மாலை 4-00 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணி அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும். வேலைகளின் விவரங்களுக்கும் கட்டுத் தொகை விவரங்களுக்கும் இவ்வலுவலகத்திலிருந்து நேரிலோ அல்லது தபால் மூலமோ தெரிந்து கொள்ளலாம். ஷெடியூல் ஒப்பந்தப் பாரங்கள் நகராட்சி கருவூலத்தில் ரூ. 2 செலுத்தி 9-5-1972-ம் தேதிக்குள் பெற்றுக்கொள்ளலாம்.

1 கட்டட வேலைகள்—ஆறு. மதிப்பீட்டு தொகை ரூ. 44,500.

2 தார்சிபடியாத சாலைகள் அமைத்தல், சிறிய பால வேலைகள்—பதினாறு. மதிப்பீட்டு தொகை ரூ. 48,000.

3 உர டிப்போவில் முள் கம்பி வேலி அமைத்தல், சுகாதார பிரிவுக்குச் சிமெண்ட் குப்பை தொட்டிகள் செய்தல்—இரண்டு. மதிப்பீட்டு தொகை ரூ. 13,000.

பி. பகவதிமுத்து, பி.ஏ.,
ஆணையர்,

(த. 43)

## வேலை வாய்ப்பு

### அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழே குறிப்பிட்டுள்ள பதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் 6-6-1972 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

தமிழ்நாடு தொழில் சார்நிலைப் பணியிலுள்ள தொழில் கூட்டுறவில் (தொழிற் கூட்டுறவுக் கிளையில்) 25 மேற்பார்வையாளர்களுக்கு வேலை யளித்தல்.

சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 275–10–375–15–450.
வயது :—1–7–1972 அன்று 27 வயதிற்குக் குறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

தகுதி :—எந்த ஒரு பல்கலைக் கழகத்திலோ, அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திலோ பி.காம். அல்லது பி.ஏ., அல்லது பி.எஸ்.ஸி., பட்டம் பெற்றிருத்தல் வேண்டும், அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஓ.எல். பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

பின் தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச் சாதி வகுப்பினர், ஆகியோர் விஷயத்தில் வயது வரம்பு கிடையாது. தங்கக்கட்டுப் பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற் கொல்லர்களின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1–1-1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர், இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணி புரிந்த முன்னாள் தேசீய மாணவர் படையைச் சேர்ந்தவராக யிருந்தால் வயது விஷயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற் படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1–7–1972 அன்று 40 வயதிற்கு குறைவானவர்கள் 1–1–1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் விஷயத்திலும், இலங்கை, பர்மா நாடுகளிலிருந்த திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், பிற விவரங்களையும் "செயலாளர்" தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ள தன்முகவரி எழுதிய (0.30 காசு நூல் அஞ்சல் வில்லை 0.5 காசு அகதிகள் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப் பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 74)

### அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு கல்வி பொதுச்சார்நிலை பணியிலுள்ள, அரசினர் கலைக் கல்லூரிகளில் கீழே தொடரப்பட்டுள்ள பதவிகளின் வேலைக்காக 7–6–1972 மாலை 5 மணி வரை விண்ணப்பப்படிவங்கள் வரவேற்கப் படுகின்றன.

1. துணைப் பேராசிரியர்கள் (காலியிடங்கள்—356).
(கணக்கு—58, பொருளாதாரம்—31, தமிழ்—10, பௌதீகம்—20, இரசாயனம்—25, வரலாறு—56, தாவரயியல்—3, ஆங்கிலம்—105, தெலுங்கு—3, வணிகம்—22, பூகோளம்—18, அரசியல்—2, தர்க்க இயல்—2, உருது—1.

சம்பளம் :—மாதம் ஒன்றுக்கு ரூபாய் 475–25–650–30–800.

வயது :—1–7–1972 அன்று 30 வயதிற்கு மேற்படாதவர்களாக இருக்க வேண்டும்.

தகுதிகள் :—சென்னைப் பல்கலைக் கழகத்திலோ அல்லது மதுரைப் பல்கலைக் கழகத்திலோ அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலோ முதுகலைப் பட்டத்திலோ அல்லது ஆனர்ஸ் பட்டத்திலோ அல்லது அதற்கு ஒப்பான பாடங்கள் அல்லது மொழியில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (தர்க்க இயல் துணைப் பேராசிரியர் பதவிக்கு, தத்துவப் பிரிவில், முது கலைப் பட்டத்திலோ அல்லது ஆனர்ஸ் பட்டத்திலோ, முதல் வகுப்பிலோ அல்லத் இரண்டாம் வகுப்பிலோ தேர்ச்சி பெற்றிருப்பது போதுமானது).

2. டியூட்டர்கள், டெமான்ஸ்டிரேட்டர்கள் (விளக்குநர்கள்). (காலி இடங்கள்—410). தமிழ்—62, ஆங்கிலம்—134, வரலாறு—3, பொருளாதாரம்—2, கணிதம்—1, பௌதீகம்—56, இரசாயனம்—52, தாவரயியல்—32, வணிகயியல்—3, வீரியயியல்—42, உளவியல்—2, மனை இயல்—2, பூகோளம்—13, புள்ளியியல்—5, சமூகயியல்—1).

சம்பளம் :—மாதமொன்றுக்கு ரூபாய் 400–15–475–20–575–25–650.

வயது :—1–7–1972-ல் 30 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் கூடாது.

தகுதி :—சென்னை, மதுரை, அண்ணாமலை. ஆகிய ஏதாவது ஒரு பல்கலைக் கழகத்தில் சம்பந்தப்பட்ட பாடத்தில் அல்லது மொழியியல் எம்.ஏ., எம்.எஸ்ஸி., அல்லது ஆனர்ஸ் பட்டத்தில் முதல் வகுப்பிலோ அல்லது இரண்டாவது வகுப்பிலோ தேர்ச்சியுற்றிருக்க வேண்டும்.

பின் தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப் பட்ட மலைச் சாதி வகுப்பினர், ஆகியோர் விஷயத்தில் வயது வரம்பு கிடையாது. அங்கஹீனமுற்றவர்கள் விஷயத்தில் வயது வரம்பு 10 ஆண்டு வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1–1–1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர், இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ் ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக யிருந்தால் வயது விஷயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கப்பற் படை, விமானப் படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப் பட்டதால் வந்தவர்கள் 1–7–1972 அன்று 40 வயதிற்கு குறைவான வர்கள், 1–1–1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானி லிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விஷயத்திலும், இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத் திலும், வயது வரம்பு உட்பட, தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், மற்ற விவரங்களையும் செயலாளர், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் சென்னை-2 என்ற முகவரிக்கு, பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய (0.30 காசு நூல் அஞ்சல் வில்லை, 0.5 காசு அகதிகள் நிவாரண நூல் அஞ்சல் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மேற் கூறியபடி உறை யில்லாத எந்த விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(த. எக்ஸ்)

## ஏல விற்பனை

### வனத்துறை

1972-ம் ஆண்டு மே மாதம் 8-ம் தேதி காலை 10–00 மணியிலிருந்து மேட்டுப் பாளையம் அரசினர் மரக் கிடங்கில், மத்திய கோவை மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவல ராலோ கீழ்க்காணும் தடி மாத்துண்டுகள் பொது ஏலத்தில் விடப்படும்.

கன மீட்டரில்.

| | | |
|---|---|---|
| 1. | தேக்கு .. .. .. | 353.130 |
| 2. | ஈட்டி .. .. .. | 119.485 |
| 3. | கருமருது .. .. | 2.714 |
| 4. | வேங்கை .. .. | 33.712 |
| 5. | வெண தேக்கு .. .. | 16.206 |
| 6. | அயினி .. .. .. | 5.460 |
| 7. | அல்பில்சு .. .. | 16.247 |
| 8. | மற்றவைகள் .. .. | 4.836 |

மற்ற விவரங்களுக்கு மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை கோவை–18 அல்லது வனச் சரக அலுவலர், அரசினர் மரக் கிடங்கு, மேட்டுப்பாளையத்திற்கோ எழுதிப் பெறவும்.

எம் ஏ அப்துல்கரீம்,
மாவட்ட வன அலுவலர்.
மத்திய கோவை.

(த. 78)

## ஒப்பந்தப் புள்ளி

### சேலம் நகராட்சி

1972–73-ம் ஆண்டிற்கு சேலம் நகராட்சி பொது சுகாதாரத்துறைக்கு உணவு மாதிரி பரிசோதனைக்கு அனுப்புவதற்காகப் பார்மலின், அரக்கு கண்ணாடி புட்டிகள் (கார்க்குகளுடன்) சப்ளை செய்ய மூடி முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12–5–1972-ம் தேதி மாலை 4 மணி வரை வரவேற்கப்படும். இதர விவரங்களுக்கு சுகாதார அதிகாரி அவர்களை அணுகவும்.

ஆணையர்.

(த. 79)




தமிழ்நாடு ஆந்திர பிரதேசம், பம்பாய், டில்லி. கல்கத்தா, பஞ்சாப்பிற்கு முக்கிய ஸ்டாக்கிஸ்டுகள் :

M/s. ஆர். ஆர் பார்மசெட்டிகல் டிஸ்டிரிபியூட்டர்ஸ் 19, சுங்குராமச் செட்டித் தெரு, அஞ்சல் பெட்டி எண் 1966, சென்னை-1.

M/s. மோர் கெமிஸ்ட்ஸ் & டிரக்கிஸ்ட்ஸ், பசீர் பாக் லேடி ஹைதாரி கிளப் எதிரில், ஹைதராபாத். M/s. அக்பாலிஸ் அக்பாலி இப்ராஹிம்ஜி (மருந்துக் கடை*, 12, சர் பி எம். சாலை, பம்பாய்-1, M/s. கோஸ்டிரக் பிரைவேட் லிமிடெட், 16/4, அசப் அலி புதுடில்லி-1, M/s. கேசவ்லால் கந்தோரியா & கம்பெனி, 167, பழைய சைனா பசார் தெரு, (போலோனாத்தத் கட்டடம்), கல்கத்தா-1, M/s கோஸ்டிரக் பிரைவேட் லிமிடெட், 50, செக்டார்-17, சண்டிகார்-2.



பல்லவா போக்குவரத்துக் கழகம்,

போக்குவரத்து இல்லம்,

சென்னை-2.

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மேலாளர் (தொழில் நுட்பம்) அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் அண்ணா சாலை, சென்னை 2-ல் உள்ள மேலாளர் (தொழில் நுட்பம்) அவர்கள் அலுவலகத்தில் 30–5–72 அன்று மாலை 3-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

வேலை விவரம்—சென்னை—சைதாப்பேட்டையிலுள்ள துணை பணிமனை மற்றும் பேருந்து நிலையத்தில் தார் சாலை மற்றும் முள்கம்பி வேலி அமைத்தல்..

முன்வைப்புத் தொகை—ரூ. 2,625.

ஒப்பந்தப் பாரத்தின் விலை (விற்பனை வரி உட்பட)—ரூ. 15–55

முடிக்கும் காலம்—ஒரு மாதம்.

ஒப்பந்தம்—மொத்தத் தொகை.

ஒப்பந்தங்கள், மேலாளர் (தொழில் நுட்பம்) பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் மேலே குறிப்பிட்ட அதே தேதியில் அதாவது 30–5–72 மாலை 3-15-க்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள் வரைபடங்கள் முதலியவற்றை நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2ல் உள்ள அலுவலகத்தில் 8–5–72 முதல் 29–5–72 முடிய மேலே குறிப்பிட்ட தொகையைக் கட்டி பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை "நிதிநிலை கட்டுப்பாடு அதிகாரி" அவர்கள் அலுவலகத்தில் செலுத்தி, செலுத்திய சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

பி. ஆர். சுப்பிரமணியம்,
மேலாளர் (தொழில் நுட்பம்).

(த. 55)

## மின்சார வாரியம்

சாற்று எண். டி.ஆர்.பி. 1/72-73.

திருச்சி மின் திட்டப் மேற்பார்வை மின் பொறியாளரால் 7—5—1972-ம் தேதி பிற்பகல் 1-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட குத்தகை நிபந்தனைச் சீட்டுகள் (Sealed Tenders) கீழ்க்கண்ட வேலைக்காக கோரப்படுகின்றன.

"திருச்சி மின் திட்ட எல்லைக்குள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு 7.32 மீட்டர், 8·23 மீட்டர் மற்றும் 9·14 மீட்டர் கான்கிரீட்டு கம்பங்களை ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளக்கூடிய தேதியிலிருந்து 1 வருடத்திற்குக் கொண்டு சேர்த்தல்".

குத்தகை விவரங்கள், குத்தகை நிபந்தனைத் தாள்கள்(Tender Conditions) பிரதி ஒன்றுக்கு ரூ. 5.00 (ரூபாய் ஐந்து மட்டும்) திருப்பித் தரத் தக்கதல்ல) பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ திருச்சி மின் இயக்கத் திட்டத் தலைமைக் கணக்காயர் (செலவினம்) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 2—5—1972. குத்தகை விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய தாள்கள் சாதாரண அஞ்சல் மூலமாக மட்டும் (அஞ்சல் செய்யப்பட்ட அடையாளம்) பெற்று அனுப்பப்படும். அஞ்சல் தவறினாலோ அல்லது உரிய காலத்தில் தாள்கள் கிடைக்காது போனாலோ மின்சார வாரியம் பொறுப்பேற்காது. குத்தகை விவரம் மற்ற நிபந்தனைகள் அடங்கிய தாள்கள் மாற்றித் தரத்தக்கதல்ல. 205" அல்லது அதற்குமேல் பாடியுடன் குறைந்தது 3 சொந்த லாரிகள் இல்லாத ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட ஒப்பந்ததாரர்களிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். குத்தகை தாள்கள் வந்திருக்கும் குத்தகைதாரர்கள் முன்னிலையில் 7—5—1972-ம் தேதி பிற்பகல் 3-00 மணி அளவில் திறக்கப்படும். குத்தகைகள் 28—5—1972-ம் தேதியிலிருந்து 4—5—1972-ம் தேதிவரை விற்பனைக்குக் கிடைக்கும்.

மேற்பார்வை மின் பொறியாளர்,
திருச்சி மின் திட்டம்,
மன்னார்புரம், திருச்சி-1.

(த.65)

---

## பொறியியல் பணித்துறை

வேலையின் பெயர் : சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் உள்ள இருதய நோய் இயல் பகுதிக்காக குளிர்ச் சாதன அமைப்புக்கான கட்டடம் தரைமட்டத்துக்கு மேல் கட்டுதல்.

தமிழக ஆளுநர்க்காகவும் அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் சென்னை- செங்கை வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் 10-5-1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அன்று மாலை 3-15 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கற்பட்டு வட்டம் அவர்களால் ஒப்பந்தப் பத்திரங்கள் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—முழுத்தொகை.
2. முன்பிணைப்புத் தொகை—ரூ. 2,500.
3. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 20-ம் விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவீதம்.
4. முடிக்கவேண்டிய காலம்—3 மாதங்கள்.
5. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர்சென்னை செங்கை வட்டம் அலுவலகத்தில் கிடைக்கும் காலம்; 2-5-1972 முதல் 9-5-1972 வரை.
6. ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்—10-5-1972.
7. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை—"P.W.D. RemittancesIII other Remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் கட்டடக் கோட்ட எண் 2, சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கிலும், ஒப்பந்தப் பத்திரங்களுக்குரிய விற்பனை வரி "Sales tax—b. Receipts under State Sales tax Act — General Sales tax" என்ற தலைப்பிலும் அரசாங்கக் கருவூலங்களிலோ (அ) ரிசர்வ் பாங்கியிலோ கட்டப்பட வேண்டும். மேற்கண்ட பணம் கட்டியதற்கான சலானைக் கொடுத்த பின்னர்தான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களின் விலைப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

8. மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கை வட்டம் அவர்கள் ஒப்பந்தப் பத்திரங்களைத் தனியாகவோ மொத்தமாகவோ எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை தனக்கே தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

9. மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கை வட்டம் சேப்பாக்கம் சென்னை அவர்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை, செங்கை வட்டம்.

(த. 60)

---

## பொறியியல் பணித்துறை

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, திருச்சி வட்டம், த. பெ. 55, திருச்சிராப்பள்ளி அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின் படி பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1. வேலையின் பெயர் .. | திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம் அரியலூர் அரசு கலைக் கல்லூரியில், பி.எஸ்.வி (தாவர இயல்) பி. ஏ. (ஆங்கிலம்) பிரிவு வகுப்புகளுக்குக் கட்டடம் கட்டுதல். |
| 2. ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித்தேதி மற்றும் நேரம். | 25—5—1972, மாலை 3.00 மணி |
| 3. பிணைப்பொறுப்புத்தொகை. | ரூ. 6,000 (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) |
| 4. ஒப்பந்த முறை .. .. | மொத்தத்தொகை. |
| 5. முடிக்கவேண்டிய காலம். | பத்து மாதங்கள். |
| 6. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. | ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்). |
| 7. விற்பனை வரி .. .. | ரூ. 0.88 (எண்பத்தெட்டு காசு மட்டும்). |
| 8. ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கும் தொடங்கும் தேதி. | 12—5—1972. |
| 9. விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம். | 25—5—1972-மாலை 3.30 மணி. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில்

"XXXVII Public Works—State Revenue Miscellaneous" மற்றும் "XII Sales Tax (b) Receipts under the States Sales Tax, Act—General Sales Tax" என்ற தலைப்புகளின்கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்தச் சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமையுண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்
மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்,
பொறியியல் பணித்துறை, திருச்சிராப்பள்ளி
மாவட்டம், திருச்சிராப்பள்ளி-1.

(த. 52)

## பயிற்சி

## தொழில் நுட்பத் துறை

1972–73 நடப்புக் காலத்தில் நடத்தப்படும் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப நிலயங்களில், அதற்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்திட்டத்தினைப் பயின்று, உரிய காலத்தில் டிப்ளமோ படிப்பதற்கு 27–5–1972 வரை அந்தந்த தொழில் நுட்பக் கல்லூரியின் முதல்வர்களால் விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன.

| தொழில் நுட்பக் கல்லூரியின் பெயர். | நடத்தப்படும் பாடத்திட்டங்கள். |
|---|---|
| 1 மத்திய தொழில் நுட்பக் கல்லூரி, அடையாறு, சென்னை-20. | சிவில், மெக்கானிக்கல் எலெக்டிரிக்கல். |
| தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்லூரி, மதுரை-2. | |
| 3 அரசு தொழில் நுட்பக் கல்லூரி, வேலூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). | |
| 4 அரசு தொழில் நுட்பக் கல்லூரி, திருச்சி-15. | மெக்கானிக்கல் எலெக்டிரிக்கல். |

2. மேலே குறிப்பிட்டுள்ள கல்லூரிகளுக்கு விண்ணப்பம் செய்வதற்கு அந்தந்தக் கல்லூரி முதல்வர்களிடமிருந்து விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பம் செய்ய விரும்பும் கல்லூரி முதல்வர்களின் தலைப்பில் ரூபாய் 1 குறுக்கே கோடிட்ட அஞ்சல் ஆணையையும், சுய விலாசமிட்ட 22 செ.மீ. 9·5 செ.மீ. நீளமுள்ள 50 காசு வில்லையும் அதனுடன் 5 காசு அகதிகள் வில்லையும் ஒட்டிய உறையையும் அனுப்ப வேண்டும். அஞ்சல் ஆணை 1–5–1972 முன்பு வாங்கியதாகயிருக்கக் கூடாது.

3. இப்பாட திட்டத்தின் காலம் நான்கு ஆண்டுகள். பொறியியல், தொழில் நுட்பம், பட்டறை இவைகளில் வேலையில் இருப்பவர்கள் தான் இதில் சேர விண்ணப்பிக்கலாம். பகுதி நேரப்பாடத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள், அரை நேரப் பயிற்சி அடிப்படையில், மாலை நேரத்தில் தொழில் நுட்ப நிலயங்களுக்கு வருகை தர வேண்டும்.

4. சேருவதற்கு குறைந்த பட்ச கல்வித் தகுதி.

ஏ. தமிழ்நாடு மாநில தொழில் நுட்பக் கல்வி பயிற்சிக் கழகத்தால் நடத்தப்படுகின்ற தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளியில், இறுதியாண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(அல்லது)

எஸ்.எஸ்.எல்.சி-யில் அல்ஜிபிராவும் ஜியோமெட்ரியும் அன்றி பௌதீகமோ, அன்றி இரசாயனமோ அன்றி பொறியியலோ எடுத்துத் தேர்ச்சிபெற்று பல்கலைக் கழகப்பாடத் திட்டத்தில் சேர்வதற்குத் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும்.

(அல்லது)

பொறியியல் துறையில் பணியாற்றி இருக்கவேண்டும். மேலும் குறிப்பிட்ட பொறியியல் துறையில் மூன்றாண்டுக்குக் குறையாத செயல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ;

உடன்,

பி. பொறியியல் துறையில் உள்ளபடி பணியாளராகவும் அக்குறிப்பிடப்பட்ட பொறியியல் துறையில், மூன்றாண்டுகளுக்குக் குறையாத செயல் முறை அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு :—1. தேவையென குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிக்கு மேல் படிப்பு உள்ளவர்கள் கூட (பி) யில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்தவர்களாக இருக்க வேண்டும்.

2. விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பத்தாளர்களில், குறிப்பாக தொழில்களில் பணியாற்றிவரும் விண்ணப்பத்தாரர்கள், இத்திட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றவும், இதனுடன் நல்ல முறையில் ஒத்துழைக்கவும், காரணமாக இருப்பார்களாகையால் அவர்களுக்கென்று சலுகை அளிக்கப்படும்.

5. வயது—வயது வரம்பில்லை.

6. அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனம் துறைகளில், பொறியியல் தொடர்பாகப் பணிபுரிபவர்கள், பகுதி நேர வகுப்பில் சேருவதற்குத் தகுதி படைத்தவர்கள். அப்படிப் பணிபுரிபவர்கள் அந்தந்த நிறுவனத்தாரிடமிருந்து நிரந்தர வேலையின் தன்மை, நடத்தை, ஒழுக்கம், ஆகியவைகள் பற்றி சான்றிதழ்கள் வாங்கி இணைத்து அனுப்பப்படவேண்டும். விண்ணப்பப் படிவங்களை பணிபுரியும் நிறுவனத்தின் மூலம் அனுப்ப வேண்டும்.

7. சேர்க்கப்பட்ட மாணவர்களிடமிருந்து ஒரு ஆண்டின் முதல் பகுதியின் படிப்பிற்கான கட்டணமாக ரூ. 140-ம், சிறப்புக் கட்டணமாக ரூ. 40-ம் பின்னிட்ட 6 மாதத்திற்குப் படிப்புக் கட்டணம் ரூ. 70-ம் சிறப்புக் கட்டணம் ரூ. 20-ம் வசூலிக்கப்படும்.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்.

சென்னை-25.

(த. 67)

## ஒப்பந்தப் புள்ளி

## பொள்ளாச்சி நகரமன்ற மின்துறை

பொள்ளாச்சி நகரமன்ற மின்துறைக்கு 27 அடி நீளமுள்ள சிமெண்ட் காங்கிரீட் கம்பங்கள் சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகரமன்ற ஆணையர் அவர்களால் 20–5–1972 மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றன. நிபந்தனை முதலானவை மின் பொறியர், பொள்ளாச்சி நகராட்சி அவர்களிடமிருந்து விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 45)

## பயிற்சி

## சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி

வேப்பேரி, சென்னை-7.

தோல் உறித்து சுத்தமான இறைச்சி உற்பத்தி செய்வது மற்றும் மாமிசங்களை பயன்படுத்துவது பற்றி இதே தொழிலாக கொண்டவர்கள் 1972-ம் ஆண்டில் 3-வது அணி போதனை பயிற்சியில் சேர்த்தல்.

ஆடு மாடுகளை வெட்டும் தொட்டியில் பணிபுரியும் கசாப்புக்காரர்கள் மற்றும் தோலை உறிப்பதை தொழிலாக நடத்த விரும்புபவர்களுக்கு, சுத்த இறைச்சி உற்பத்தி, தோலை உறித்தல் மற்றும் மாமிசங்களை பயன் படுத்துதல் ஆகிய கலையில் சென்னை மருத்துவக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படும்.

மேற்படி சேர்க்கைக்கான குறிப்பிட்ட படிவங்களை இயக்குநர், கால்நடை மருத்துவக் கல்வியும் ஆராய்ச்சியும் மற்றும் முதல்வர், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி, சென்னை–7 அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை கீழ் கையொப்பமிட்டவருக்கு முகவரியிட்டு (பதவியின் பெயருக்குத்தான் முகவரி செய்ய வேண்டும்) 10–5–1972 தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும்.

மேற்படி பயிற்சியில் சேரும் விண்ணப்பதாரர்களுக்கு பிராந்திய மொழியில் ஏதேனும் ஒன்று எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். மற்றும் 15–5–1972 அன்று 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஏற்கெனவே பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்கக்கூடாது.

இந்த பயிற்சியின் காலம் 5 மாதங்கள் ஆகும். உரிமம் (லைசன்ஸ்) உள்ள கசாப்புக்காரர்களுக்குப் பயிற்சி காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 உதவித் தொகையும், புதிதாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 உதவித் தொகையும் கொடுக்கப்படும்.

வை. இரத்தினசபாபதி,
இயக்குநர்.

(த. 54)

## ஏல விளம்பரம்

தருமபுரி மாவட்டம், ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் 9—5—1972 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 10.00 மணி அளவில் சிந்திக் காளைகள், சிந்திக் காளைக் கன்றுகள், கலப்பு இனக் காளைகள், கலப்பு இனக் காளைக் கன்றுகள், சிந்தி பசுக்கள், சிந்தி கிடாரிகள், சிந்தி கிடாரிக் கன்றுகள், கலப்பு இனப் பசுக்கள், கலப்பு இனக் கிடாரிகள் மற்றும் கலப்பு இனக் கிடாரிக் கன்றுகள் முதலியன அடங்கிய மொத்தம் 120 (நூற்றி இருபது) கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விடப்பட இருக்கின்றன.

ஏலம் பற்றிய விதி முறைகளைக் குஞ்சு பொரிப்பு அலுவலருடன் கண்காணிப்பாளர், மாவட்டக் கால்நடைப் பண்ணை ஒசூர், தருமபுரி மாவட்டம் என்ற விலாசத்தில் நேரிலோ அல்லது பதில் எழுதப் போதிய உறையுடன் கூடிய தபால் வில்லைகளுடனே விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்கண்ட கால்நடைகளை எந்த வேலை நாட்களிலும் பண்ணையின் வேலை நேரங்களில் நேரில் வந்து பார்வையிடலாம்.

கண்காணிப்பாளர்,
மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர்.

(த. 44)

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம்
# சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு — 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



தமிழ்நாடு அரசு
சிறு சேமிப்பு இயக்க
வெளியிடப் பெற்ற

## மறு ஏல விளம்பரம்

## கோவை நகராட்சி

நகராட்சிக்குச் சொந்தமான ஆர். எஸ். புரம் திவான் பகதூர் ரோட்டில் உள்ள கடைகளின் மேல் மாடியில் காலியாக உள்ள 12-ம் அறையில் 31—3—1975 வரை வியாபாரம் செய்யும் உரிமையை 15—5—1972-ந் தேதி காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலம் கூறுமுன் கட்ட வேண்டிய டிபாசிட் தொகை ரூ. 250. சால்வன்ஸ் இல்லாதவர்கள் டிபாசிட்டை இரட்டிப்பாகக் கட்டி ஏலம் கூறவும். மற்ற நிபந்தனைகளை அலுவலகத்தில் நேரில் தெரிந்து கொள்ளவும்.

ஆணையர்

அ. 931.

## வேலை வாய்ப்பு

## அரசுப் பணியாளர் தேர்வுப் பயிற்சிக் கழகம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு 8—6—1972 அன்று மாலை 5 மணிவரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### 1. ஒரு உதவி ஆராய்ச்சியாளர் பதவி (விலங்கியல்)

(சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 350—15—500—20—600——25—650)

தகுதி—பி.எஸ்ஸி (ஆனர்ஸ்) பட்டமோ அல்லது பி.எஸ்ஸி. அல்லது எம்.எஸ்ஸியில் விலங்கியலை முக்கியப் பாடமாகக் கொண்ட முதுகலைப் பட்டமோ வேண்டும்.

வயது—1—7—1972 அன்று 27 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

### 2. மூன்று உதவி ஆராய்ச்சியாளர் பதவிகள் (இரசாயனம்)

(சம்பளம்—மாதமொன்றுக்கு ரூ. 350—15—500—20—600—25—650)

தகுதிகள்—பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்) பட்டமோ அல்லது பி.எஸ்ஸியில் முதல் வகுப்பிலோ அல்லது எம்.ஏ. அல்லது எம்.எஸ்ஸியில் இரசாயனத்தை முக்கிய பாடமாகக் கொண்ட முதுகலைப் பட்டமோ வேண்டும்.

வயது—1—7—1972 அன்று 27 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

### 3. ஒரு மீன்பண்ணை ஆய்வாளர் பதவி.

(சம்பளம் :—மாதமொன்றுக்கு ரூபாய் 350—15—500—20—600—25—650)

தகுதி—

(1) பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்) பட்டமோ அல்லது பி.எஸ்ஸி பட்டத்தில் முதல் வகுப்பிலோ அல்லது எம்.ஏ. அல்லது எம்.எஸ்ஸி.யில் விலங்கியலை முக்கியமாகக் கொண்ட பட்டமோ பெற்றிருக்க வேண்டும்.

(2) (ஏ) பி.ஏ., அல்லது பி.எஸ்ஸி.யில் விலங்கியல், தாவரவியல், இரசாயனம் அல்லது பௌதிகம் இவைகளை முக்கியப் பாடமாகக் கொண்ட இளங்கலைப் பட்டமோ பெற்றிருத்தல் வேண்டும்.

(பி) அகில இந்திய மீன் பண்ணைப் பயிற்சிப் படிப்பினைச் சென்றமைக்குரிய சான்றிதழ்களோ அல்லது இந்திய அரசால் நடத்தப்படுகின்ற கடல் பிரிவு மீன்பண்ணை வகுப்புகளிலோ, அல்லது கடலல்லாத உள்நாட்டு மீன்பண்ணைப் படிப்புகளிலோ வெற்றிகரமாகத் தேர்ச்சி பெற்றமைக்குரிய சான்றிதழ்களோ வேண்டும்.

(3) வெளி வேலைகளுக்குத் தேவையான அமைப்புத் திறமையும், உடல் நலத் தகுதியும் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(5) பம்பாயிலுள்ள மத்திய மீன்பண்ணை நிலையத்தில், மீன் விஞ்ஞானத்தில், டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

வயது—1—7—1972 அன்று 27 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

### 4. நூலகர் பதவி ஒன்றிற்கு

(சம்பளம் :—மாதமொன்றுக்கு ரூபாய் 250—10—400).

தகுதி—(1) பி.ஏ., அல்லது பி.எஸ்ஸி. விலங்கியலை முக்கியப் பாடமாகவோ அல்லது துணைப்பாடமாகவோ கொண்ட பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(2) நூலகப் படிப்பில் டிப்ளமா அல்லது நூலகத்துறையில் ஒரு ஆண்டுக்குக் குறையாத செயல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது—1—7—1972 அன்று 25 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

### 5. மீன்பண்ணை உதவி ஆய்வாளர்களுக்கான எட்டுப் பதவிகள்.

(சம்பளம் :—மாதமொன்றுக்கு ரூபாய் 250—10—400)

தகுதி—(1) இந்திய அரசினால் நடத்தப்படுகின்ற கடல் பிரிவு மீன்பண்ணை வகுப்புகளிலோ அல்லது, கடல் பிரிவு தவிர மற்ற உள்நாட்டு மீன்பண்ணை வகுப்புகளிலோ வெற்றிகரமாகத் தேர்ச்சி பெற்றமைக்குரிய சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டும்.

(2) தமிழ்நாடு மாநிலத்திலுள்ள தொழிற் பயிற்சிக் கல்லூரியில், கப்பலோட்டுதல் பாடத்திலும், மீன்பண்ணைத் தொழில் நுட்பத்திலும், டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

(3) (ஏ) பி.ஏ., அல்லது பி.எஸ்ஸி. விலங்கியலை சிறப்புப் பாடமாகவோ அன்றித் துணைப் பாடமாகவோ எடுத்து, பட்டம் பெற்றிருக்க வேண்டும். வெளியே வேலைகளுக்குத் தேவையான அமைப்புத் திறமையும் உடல் நலத் தகுதியும் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(4) பம்பாயிலுள்ள மீன்பண்ணைக் கல்விப் பிரிவினுடைய மத்திய நிலையத்தில் மீன்பண்ணை விஞ்ஞானப் படிப்பில் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

வயது—(1) தமிழ்நாடு மாநிலத்திலுள்ள தொழிற் பயிற்சிக் கல்லூரியில், கப்பலோட்டுதல் பாடத்திலும், மீன்பண்ணைத் தொழில் நுட்பத்திலும், டிப்ளமா பெற்றவர்கள், இந்திய அரசால் நடத்தப்படுகின்ற கடல் பிரிவு மீன்பண்ணை வகுப்புகளிலோ, அல்லது கடல் பிரிவு தவிர முழுமையான உள்நாட்டு மீன்பண்ணைப் படிப்புகளிலோ வெற்றி பெற்றதற்குரிய முழுமையான சான்றிதழ்கள் பெற்றவர்கள், 1—7—1972 அன்று 27 வயதிற்கு மேற்படாதவர்காளகவும்,

(2) மற்றவர்கள் 1—7—1972 அன்று 25 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

### 6. இரண்டு கடல் பிரிவு முதலாள் (போர்மேன்) பதவிகள்

(சம்பளம் :——மாதமொன்றுக்கு ரூபாய் 325—15—475—20—575—25—600)

(பொறியியல் பட்டதாரிகளுக்கு ஆரம்பிக்கப்படும் மாதச் சம்பளம் ரூ. 400)

தகுதி.—(1) எந்த ஒரு பல்கலைக் கழகத்திலோ அல்லது பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலோ, இயந்திரப் பொறியியல் (மெக்கானிக்கல் இஞ்சினியரிங்) பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது பெனாரஸ் பல்கலைக் கழகத்தில் பி.எஸ்ஸி. (பொறியியல்) பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(2) கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியில், இயந்திரப் பொறியியல் டிப்ளமா பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(3) தமிழ்நாடு மாநிலத் தொழில் நுட்பக் கல்வி பயிற்சி வாரியத்திலோ அல்லது அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்திலோ, அல்லது தொழிற் பட்டறையில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத செயல் அனுபவமிக்க வாரியத்திலோ அல்லது டீசல் இன்ஜின்ஸ் இயக்குகின்ற வேலையிலோ, மெக்கானிக்கல் பொறியியல் டிப்ளமா பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(4) அல்லது பம்பாயிலுள்ள மத்திய மீன்பண்ணைக் கல்வி நிறுவனத்தில், மீன்பண்ணை விஞ்ஞானத்தில் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

வயது :—1—7—1972 அன்று 35 வயதிற்கு மேற்படாதவர்களாக இருக்க வேண்டும்.

### தமிழ்நாடு கல்விச் சார்நிலைப் பணியில், கணிதத்தில், பௌதிகத்தில், இரசாயனத்தில், தாவரவியலில், விலங்கியலில், வரலாற்றில் மற்றும் பூகோளத்தில் 1,875 பள்ளி உதவியாளர்கள் நியமனங்கள்.

(சம்பளம்—மாதமென்றுக்கு ரூபாய் 275—10—375—15—450)

தகுதி—சென்னை, மதுரை, பல்கலைக் கழகத்திலோ அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலோ மேலே குறிப்பிட்டுள்ள பாடப் பிரிவில் பி.ஏ., அல்லது பி.எஸ்ஸி., பட்டம் பெற்றிருப்பவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) விண்ணப்பிக்கும் பட்டதாரிகள், பட்டப் படிப்பில் தமிழ், தெலுங்கு, மலையாளம், அல்லது உருது மொழிகளில் ஏதேனும் ஒன்றினைப் படித்தவர்களாக இருக்க வேண்டும்.

குறிப்பு:—பொருளாதாரத்திலும், சமூக விஞ்ஞானத்திலும் பட்டம் பெற்றவர்கள் தமிழ் மொழியில் வரலாறு அல்லது பூகோளத்தில் கல்வி உதவியாளராகப் பணியாற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், வரலாறு, பூகோளத்தில் பட்டம் பெற்றவர்கள் போதுமான எண்ணிக்கைக்குக் குறைவாக இருந்தால்தான் மேற்கூறியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சமூக விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றவர்கள் விருப்பப் பாடமாக வரலாறு அல்லது பூகோளம் எடுத்திருக்க வேண்டும்.

வயது—பி.டி. அல்லது பி.இடி. பட்டம் பெற்றவர்கள் 1—7—1972 அன்று 30 வயதிற்கு மேற்படாதவராகவும், மற்றவர்கள் 1—7—1972 அன்று 25 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அங்கவீனமுற்றவர்களுக்கு வயது விஷயத்தில் 10 ஆண்டுகள்வரை தளர்த்தப்படும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வித் தகுதி பெற்றுள்ள பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விஷயத்தில் வயது வரம்பு கிடையாது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினருக்கு உயர்பட்ச வயது வரம்பிலிருந்து 5 வருடங்கள் தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள் 1—1—1963-ல் அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜெண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னால் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து விலக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—7—1972 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்களாக இருப்பதற்குச் சலுகை அளிப்பதோடு தகுதிகளும் தளர்த்தப்படும். 1—1—1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட, தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு படிவங்களையும், இதர விவரங்களையும், "செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்", சென்னை-2 என்ற முகவரிக்குப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய (0.35 காசு நூல் அஞ்சல் வில்லை 0.05 காசு அகதிகள் நிவாரண அஞ்சல்வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 81)

---

## ஒப்பந்தப் புள்ளி

---

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர்க்காகவும், அவர்களின் சார்பாகவும், கீழே கையொப்பமிட்டவரால், கீழ்க்காணும் பிரிவுகளுக்குப் பொருட்கள், ஒவ்வொன்றுக்கும் அதனதன் எதிரே குறிப்பிட்டுள்ள தேதியன்று பிற்பகல் 3 மணிவரை, மூடி முத்திரையிடப்பட்ட விலைவாசிகள், (Quotation) அடங்கிய நகல்கள் வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண்ணும் அளவும். | வரவேண்டிய நாள் (மாலை 3 மணி வரை). |
|---|---|
| (1) 1. 250 கே.வி.ஏ. 11 கே.வி./416 வோல்ட்ஸ் 3 பேஸ் 50 cycs விநியோக டிரான்ஸ்பார்மர் Indoor type) பொதுவான தர அளவிலுள்ளதும் HT X LT ஆகிய இரு பக்கங்களிலும் டிரைபர் கேட்டிங் பாக்ஸ் இணைக்கப்பட்டதும் எண்ணெய் நிரப்பியதும். | 6—5—1972. |
| (2) 1. HJ ஆயில் சுவிட்ச் பியூஸில் வரும் பக்கம், வெளிச் செலும் பக்கம் ஆகியவற்றில் டிரைபர் கேட்டிங் காக்ஸ் இணைக்கப்பட்ட 250 KVA டிரான்ஸ்பார்மரைக் கட்டுப்படுத்தக் கூடிய 250 KVA சக்தியுள்ள 11 கே.வி. ஆயில் சுவிட்ச் பீடியூஸ். | ஷை |
| (3) 2. 400 Amps LTOCB, 25 MVA சக்தியுள்ளது வெளியே இருக்கக்கூடிய அமைப்புள்ளது—மேல் பழவும், வோல்ட் விடுவிப்பு இல்லாததும், உட்பக்கம் வருவதற்கு எல்டி டிரைபர் கேட்டிங் பாக்ஸ் இணைக்கப்பட்டதும் சுவிட்சு பானல் போர்டு இணைப்பதற்கு வசதியாக உள்ளதும் தரையில் நிறுத்தக் கூடிய டைப்பில் உள்ளதுமான அம்மீட்டர், வோல்ட் மீட்டர் உடையதுமானது. | ஷை |
| (4) 10 NOS 250 வாட்ஸ் கட் ஆப் டைப் எம்.வி. விளக்கு தெரு விளக்காக—பாலிஸ்டர் நிரப்பப்பட்டு, சோக் கண்டென்சர் இணைக்கப்பட்டது—போர்பெக்ஸ் உறையுடன் 250 WHPMV சக்தியுள்ள விளக்கு—250 வோல்ட்ஸ் 50 cycs வழங்குவதற்குப் பொருத்தமானது. | ஷை |
| (5) 3000 MTS 4 கோர் 16 சதுர மில்லி மீட்டர் LTPVC. VG கேபில் அலுமினியம் கண்டக்டர் 1100 வோல்ட்ஸ் இந்திய தர நிர்ணயத்தின் குறிப்புகளுக்குட்பட்டது. | ஷை |

நிபந்தனைகள் :—

1. கையிருப்பு உள்ளவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.
2. கட்டண விகிதம், அந்த இடத்திலுள்ள அனைத்து வரிகள், கொடுப்புச் செலவு உள்ளடக்கி இருக்க வேண்டும்.
3. விண்ணப்பத்துடன் விலைப்பட்டியல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
4. விலைவாசி விவரங்கள் உறையின் மேல்..................க்கான விலைவாசி விவரங்கள்......................தேதி என குறிப்பிட்டிருக்க வேண்டும்.
5. விலைவாசி விவரங்களின் சம்பந்தப்பட்ட மாதிரி விலைவாசி விவரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. தனித் தனியாக ஒவ்வொரு வகைக்கும் விலைவாசி விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மின் பொறியாளர்,
சென்னை-5.

(த. 80)

---

## ஒப்பந்தப் புள்ளி

---

### பொதுப்பணித் துறை
### இராமநாதபுரம் வட்டம், மதுரை.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும் அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட பணிக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, இராமநாதபுரம் வட்டம், மதுரை-1, அவர்களால் 17—5—1972 மாலை 4-00 மணிவரைக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 4-30 மணிக்கு, அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, இராமநாதபுரம் வட்டம், மதுரை-1 அவர்களால் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்—இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் பி. இராமசந்திரபுரத்தில் அரசினர் மாணவர் விடுதி கட்டடங்கள் கட்டுதல்.

ஒப்பந்தமுறை—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை—ரூ. 2,800. இரண்டாயிரத்து எண்ணூறு ரூபாய்கள்).

முடிக்க வேண்டிய காலம்—9 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடத்துடன்—ரூ. 20.70 விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவிகிதம் சேர்த்து.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், "மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, இராமநாதபுரம் வட்டம், மதுரை-1 அவர்களது அலுவலகத்தில், அலுவலக அலுவல் நேரங்களில் 8—5—1972லிருந்து விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பட்டியலின் விண்ணப்பப் படிவங்களின் ரசீதினைப் பெற கடைசி நாளாகிய 15—5—1972க்குப் பிறகு வருகின்ற ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத்தொகை (அத்தொகை எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்பட மாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில், "P. W. D. III other Remittances" என்ற தலைப்பின்கீழ், "நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை விருதுநகர் கோட்டம், விருதுநகர்" என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனைவரி 0.70-ஐ தனியாகக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Sales tax b, receipts under state Sales tax Act General Sales tax." என்ற தலைப்பின்கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி சீட்டுகளை (சலானைப்) பெற்ற பிறகு தான் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

4. குறிப்பிடப்பட்டுள்ள துறையினால் வழங்கப்படுகின்ற ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களும் ஒப்பந்தப் புள்ளிகள், முழு முகவரி, தொகை, தேதி, செலான் எண் வேலையின் பெயர் இவைகளுடன் "ஒப்பந்தப் புள்ளி" என்று குறிக்கப்பட்டுள்ள மூடிமுத்திரையிடப்பட்ட உறையில் சமர்ப்பிக்க வேண்டும்.

5. முன் வைப்புத்தொகைச் செல்லான் வடிவிலோ மற்றும் அரசாங்க வழக்கத்திலுள்ள விதி முறைகளை நன்குக் கவனித்த பிறகு அங்கீகரிக்கப்பட்ட பணம் செலுத்தும் வழிகளிலோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் மேற்கொண்டு பாதுகாப்பு முன்வைப்புத் தொகையாக ரூ. 2,800 (இரண்டாயிரத்து எண்ணூறு) அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும் சமயத்தில் மேற்பார்வைப் பொறியாளரால் குறிப்பிடப்படும் தொகையைத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் கட்ட வேண்டியிருப்பதுடன் ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பிலுள்ள விதிமுறைகளின்படி பணியினைத் திருப்திகரமாக முடித்துத் தருவதாக ஓர் நிபந்தனையை மேற்கொள்ள வேண்டும்.

7. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையோ அல்லது எந்த விதிமுறைகளையோ மறுப்பதற்கு மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, இராமநாதபுரம் வட்டம், மதுரை-1 அவர்களுக்கு அதிகாரமுண்டு.

கண்காணிப்பாளர்.

(த. 42)

## மின்சார வாரியம்

### எண்ணூர் அனல் மின் திட்டம்.

குறிப்பு எண் : AEP 96 & 97.

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் "தமிழ்நாடு மின்சார வாரியம்" அனல் மின் திட்டம் குறிப்பு எண் AEP 96, & 97 Supply of cables, screws etc. எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழே கையொப்பமிட்டவரால் குறிப்பிட்ட தேதியில் மாலை 3-30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. தேவையான பொருள்கள் அவற்றின் அளவு, குறிப்பு எண் விவரம், முன் பணம் முதலியன கீழே தரப்பட்டுள்ளன.

| S.No. | Description. | Speen No. | Earnest money Deposit. | Cost of tender Set. | Due on. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | Aluminium Welding Cable, 600 Amps Capacity. | AEP 96 | Rs. 1,200 | Rs. 5 | 19—5—72. |
| 2. | Mo Mild Steel Self tapping Screws, Pan head 3/4 in long, 8 gauge. | AEP 97 | Rs. 1,000 | Rs. 5 | 19—5—72. |

3. ஒப்பந்தப் பத்திரங்களை கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து 1972 ஏப்ரல் மாதம் 20-ஆம் தேதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. முறையினரைச் சார்ந்த நமூனாக்களில்லாத ஒப்பந்தங்களும், இறுதி தேதிக்கும், நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் எதாவது ஒன்றையோ அல்லது எல்லா வற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவோ ஏற்றுக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமை உடையவர்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்.

(அ. 14)

## ஒப்பந்தப்புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியல் பணித்துறை தேசீய

நெடுஞ்சாலை வேலைகள் (மதுரை கோட்டம்).

தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காக, அவர்களுடைய சார்பில், கீழே குறிப்பிட்டுள்ள வரிசை எண். 1-லிருந்து 3-வரையுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள், கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை, மதுரை 2-பி.டி. இராசன் சாலை, மதுரை-2, விலாசத்திலுள்ள அலுவலகத்தில் 17—5—1972-ம் தேதி புதன் கிழமை பிற்பகல் 3-30 மணி (அலுவலக கடியாரபடி) வரையிலும், மேலும் 4-ம், 5-ம் வரிசை எண்களில் உள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள் உதவி பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, திருநெல்வேலி நீர். 1, அன்பத்தெரு முருகன் குறிச்சி, திருநெல்வேலி-2 விலாசத்திலுள்ள உட்கோட்ட அலுவலகத்தில் 19—5—1972-ம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 3-30 மணி (அலுவலக கடியாரப்படி) வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டு அதே நாளில் பிற்பகல் 3-35 மணிக்குக் கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, மதுரை அவர்களால் அதே அலுவலகங்களில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | கட்டுத் தொகை. | ஒப்பந்த நமூனாக்கள் கிடைக்குமிடம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 மதுரை–கன்னியாகுமரி கி.மீ. 37/6-41/6-ல் உள்ள சாலையை அகலப்படுத்தி பலப்படுத்தல். | 10,800 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை மதுரை-2 அலுவலகம். |
| 2 ஷ கி.மீ. 41/6-42/0-ம 46/8-50). சாலையை அகலப்படுத்தி பலப் படுத்தல் | 10,600 | ,, |
| 3 ஷ கி.மீ. 50/0-55/0 சாலையை அகலப்படுத்தி பலப் படுத்தல். | 10,750 | ,, |
| 4 மதுரை–கன்னியாகுமரி கி.மீ. 125-129 சாலையை அகலப்படுத்தி பலப் படுத்தல் | 8,350 | உதவிப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திருநெல்வேலி (அலுவலகம். |
| 5 ஷ கி.மீ. 129-134. சாலையை அகலப்படுத்திப் பலப் படுத்தல் | 10,650 | .. |

ஒப்பந்த நிபந்தனை, விவர நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியன அடங்கிய ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ 20·70 வீதம் செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதின் மூலம், வரிசை எண். 1-லிருந்து 3-வரையுள்ள வேலைகளுக்காகக் கோட்டப் பொறியாளர் தேசீய நெடுஞ்சாலை மதுரை-2-ல் உள்ள அலுவலகத்தில் 10—5—1972 முதல் 16—5—1972 வரையிலும், வரிசை என்.. 4-ம், 5-ம் வேலைகளுக்காக உதவிப் பொறியாளர் தேசீய நெடுஞ்சாலை திருநெல்வேலி-2-ல் உள்ள அலுவலகத்தில் 12—5—1972 முதல் 18—5—1972 வரையிலும் எல்லா அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மாற்றிய வடிவமைப்பு கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை கோட்டப் பொறியாளர் தேசீய நெடுஞ்சாலை, மதுரை அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில்செலுத்தியதற்கானசெலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இதுதவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசீயத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு சட்டப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு கேரண்டிகளும், [illegible] டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும் பொழுது [illegible] ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன் வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

கு. பெருமாள்,
கோட்டப் பொறியாளர் (தே. நெ.) மதுரை-1.

(த-62).

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அரசு, அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.